கலைக்கதிர்
பொங்கல் இதழ்
1955

உணவு உற்பத்தியின் முன்னணியில் நிற்பவை

DPF பம்புகள்

'DPF' பம்புகளின்
விசேஷ அம்சங்கள்

குறைந்த செலவில்
அதிக தண்ணீர்
★ நீடித்த உழைப்பு
★ நிசப்தமான ஓட்டம்
★ குறைந்தகவனிப்பு



மோட்டாருடன் இணைக்கப்பட்ட
DPF பம்பு



பால் பேரிங்குகள்
பொருத்தப்பட்ட 'DPF'
பம்புகள் 2" முதல் 6"
வரை எல்லா சைஸ்
களிலும் கிடைக்கும்.

DPF பெல்ட் டிரைவ் பம்பு

தண்டாயுதபாணி பவுண்டரி லிட்.,

பாப்பநாயக்கன்பாளையம்,
கோயமுத்தூர்.

போன்: 219

தந்தி: மோட்டார்பம்பு.

நல்ல விதைப் பருத்தி விதையும், மாட்டுத் தீவனத்திற்குப் பருத்தி விதையும், குடியானவர்களுக்கும், வியாபாரிகளுக்கும் நியாயமான விலைகளில் சப்ளை செய்கிறோம்,

உரத்திற்கும், மாட்டு உணவிற்கும் ஏற்ற எக்ஸ்பெல்லர் கடலைப் புண்ணுக்கு சரசமான விலைக்கு விவசாயிகளுக்கும் தாராளமாய்க் கொடுக்கப்படும்.

நவீன முறையில் தயார் செய்து சுத்தம் செய்யப்பட்ட திடமான கடலெண்ணெய் நம் தேசம் பூராவிற்கும் சப்ளை செய்வதுமல்லாமல், அயல் நாடுகளின் தேவைக்கும் கணிசமான முறையில் குறித்த காலத்தில் ஏற்றுமதி செய்கிறோம். இதர விபரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

உணவு தானியம், கரும்பு, பருத்தி ஆகியவைகளின் உற்பத்திப் பெருக்கத்திற்கு மிக அத்யாவசியமாய் வேண்டப்படும் உரமாகிய எக்ஸ்பெல்லர் நிலக்கடலைப் புண்ணுக்கு தயார் செய்கிறோம். கணிசமான அளவில் எல்லோருக்கும் சப்ளை செய்ய ஏற்பாடு செய்கிறோம்.



ஸ்ரீ ரங்கவிலாஸ் ஜின்னிங் & ஆயில் மில்ஸ்

பாப்பநாய்க்கன்பாளையம்

போன் நெ. 51 தந்தி "ஆயில்மில்ஸ்"

தபால் பெட்டி நெ.151 கோயமுத்தூர்

ஆல் இந்தியா ஜெனரல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்.

தலைமை ஆபீஸ்: பம்பாய்.

• • •

போனஸ் வழங்கும் ஸ்தாபனம்.

நிதிகள்: (31-12-53ல்) சுமார் ரூ. **1,00,00,000** (Rs. 99,55,958)

• • •

ஆயுள் ★ நெருப்பு ★ கப்பல் ★ மோட்டார்

முதலிய சகல இன்ஷ்யூரன்ஸ்களும் வழங்குகிறோம்.

• • •

தென்னிந்திய டிவிஷனல் ஆபீஸ்:

ஆல் இந்தியா ஜெனரல் பில்டிங்,
கோயமுத்தூர்.

P. V. K. சண்முகம் B. A.,
டிவிஷனல் மானேஜர்.

சென்னை கிளை: 29, லிங்கிசெட்டி தெரு, சென்னை-1.

• • •

தென்னிந்தியாவில் இதர காரியாலயங்கள்:

ஆதோனி, பெங்களூர், கொச்சி, மதுரை, மங்களூர், பாலாய்,
ராஜமகேந்திரம், சேலம், தஞ்சாவூர், தூத்துக்குடி,
வேலூர் முதலியன.

தமிழ்ப் பெருமக்களுக்கு எங்கள் காணிக்கை

238

படம்: திரு. ஏ. வி. ராமமூர்த்தி.

கலைக்கதிர்

பொங்கல் இதழ்

மலர்—7 ★ ஜனவரி—1955 ★ இதழ்—1

ஆசிரியர்:

ஜி. ஆர். தாமோதரன்,

B. Sc. Elec., B. Sc. Mech. (Durham), A. M. I. E. E. (London), M. P.

இந்த இதழில்: 238

நுழைவாயில்	ஆசிரியர்	2
விஞ்ஞானப் பித்தர்கள்	திரு. ஜி. ஆர். தாமோதரன்	4
வாழ்வு	,, 'மூர்த்தி'	8
தற்செயலாக...	,, கே. கண்ணபிரான்	12
கிழக்கும் மேற்கும்	,, சுத்தானந்தபாரதி	16
தேமதுரத் தமிழோசை	,, சேதுப்பிள்ளை	17
தருமன் சால்பு	,, ச. சோமசுந்தர பாரதியார்	19
நற்செயல்	,, டாக்டர் மு. வ.	22
குழந்தையின் உள்ளமும் உணவும்	,, டாக்டர் ராஜம்மாள்	28
எழுத்தின் வரலாறு	,, டாக்டர் அ. சி. செட்டியார்	32
பொன் வளையல்	,, அ. ச. ஞானசம்பந்தம்	35
அணுயுகம் பிறந்த நாள்	,, 'யூசிஸ்'	40
மேதையின் கர்வம்	,, 'சுகி'	44
கற்காலத் தமிழர்	,, டாக்டர் ஆரோக்கியசாமி	49
கம்ப ராமாயணப் பதிப்பு	,, ஜி. சுப்பிரமணிய பிள்ளை	53
வாழ்க்கைக்குச் சமயம் அவசியமா?	,, சுவாமி சித்பவாநந்தர்	59
கல்லும் சொல்லாதோ கவி	,, கு. ராஜவேலு	64
சங்கத் தமிழ்ச் சோலை	,, 'வேலன்'	70
பதிகமும் காவியமும்	,, போ. குருசாமி	72
உள்ளத்தின் உண்மை	,, தா. ஏ. சண்முகம்	79
இன்பம் எங்கே?	,, பொன்னுசாமி	82
மறுவளர்ச்சி	,, ப. இராமலிங்கம்	85
பாவையின் உயிர்ப்பு	,, 'அறிவடிவன்'	92
கடற்செல்வம்	,, இருசப்பிள்ளை	97
முழு நிலவு	,, மாப்பஸான்: அகிலன்	101
வேடிக்கைக் கணக்கு	,, சபா. குமாரசாமி	106
வினாக்களும் விடைகளும்		108

கலைக்கதிர்' இதழில் வெளியிடும் கட்டுரை, கதை முதலியவற்றின் கருத்துகட்கு அவற்றை எழுதிய நேயர்களே பொறுப்புடையவர்கள்.

விலை ரூபாய் ஒன்று.

84275

நுழைவாயில்

வானம் வெளுக்கவில்லை; வையம் கண் திறக்கவில்லை. கும்மிருட்டு நேரம்; குளிர் கொட்டும் காலை; அதிகாலை. காலைக் குளிரின் இன்பத்தைக் கம்பளியால் சிறைசெய்து கட்டிளங் காளையர் முடக்கிச் சுருண்டு மோனநிலையில் தவமிருக்கும் நேரம். அந்தக் கும்மிருட்டிலே குளிரை மதிக்காமல் — சேவலுக்கும் சேவலாய்ச் சென்றான் ஒரு மனிதன். கிழக்கு வெளுக்கவில்லை. இவன் செய்யும் ஒலிகேட்டு வானத்துப் பெண்ணாள் மூடியிருந்த இருட் போர்வையை நீக்கினாள்; கிழக்கு வெளுத்தது. கதிரவன் எழுந்தான்; காய்ந்தான்; ஓய்ந்தான். மேலைத் திசையிலே மேவி மறைந்துவிட்டான். ஆனால் அவன் — அந்த உழவன் இப்போது தான் திரும்புகிறான். அவனுக்குக் காலை இல்லை; நண்பகல் இல்லை; மாலையும் இல்லை; காலதத்துவம் என்பது அவனைப் பொறுத்த வரையில் ஒரே ஒரு பொருளைத்தான் உடையது. உழைப்பு; பேருழைப்பு; கடும் உழைப்பு. களைப்பாறுவான், மேலும் உழைப்பதற்காக. அந்த உழவர் பெருமகனின் உள்ளத்தே உவகை பெருக்கெடுக்கப் பொங்கலிட்டுக் குரவையிட்டுக் கொள்ளை மகிழ்ச்சி கொள்ளும் கோலத் திருநாள் இன்றைய பொங்கல் நன்னாள். ஏராளர் திருநாள் இது; ஏராளன் கைநோக்கி வாழும் உலகின் திருநாள். உழவரால் வாழும் உலகம் அவனோடு சேர்ந்து கொண்டாடும் ஒப்பற்ற திருநாள் இது.

உழவன் தன் ஊதியம் கருதுகின்றானா? இல்லை. உழைப்பிலே பொழுது போக்குகிறான். உழைப்பிலே தளிர்த்து, உழைப்பிலே தழைத்து, உழைப்பிலே கதிர் சாய்த்து, அவன் உழைப்பிலே நிறைவு கொள்கிறாள் நிலமென்னும் நல்லாள். கதிர் சாய்த்துக் கவின் கொழிக்க விளங்கும் கழனி; அந்தக் காட்சிலே சொக்கிச் சொக்கிக் கூத்தாடுகிறான். அந்தக் களியாட்டமே இந்தப் பொங்கல் திருவிழா.

தன் உழைப்புக்கு உறுதுணையாக இருந்த கதிரவனை நினைக்கிறான்; காளைகளை நினைக்கிறான். நன்றியுணர்ச்சி அவன் நெஞ்சிலே நிரம்பி வழிகிறது; வழிபாடு மேற்கொள்கிறான். இதுதான் இன்றைய பொங்கல் நிகழ்ச்சி.........

பொங்கலோ...... பொங்கல்!

தமிழகம் விஞ்ஞானத் துறையிலே விழிப்புப் பெறவில்லை. இன்னும் அத்துறையில் கிழக்கு வெளுக்கவில்லை. எதிர்காலத்தை எண்ணிப் பார்த்தேன். உள்ளத்தே ஓர் ஒலி எழுந்தது. அது கவி பாரதியாரின் கட்டளை. அந்த ஒலியால் உந்தப்பட்டு ஆறு ஆண்டுகளுக்கு முன் இந்தத் தமிழ்க் கழனியிலே இறங்கினேன். தமிழ்த் துறையிலே உழைத்தேன்; உழைக்கின்றேன். உழைப்பு வீண்போகவில்லை. தமிழ்க் கழனியிலே விஞ்ஞானம் செழிக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. கழனி திருத்தினேன், விதை விதைத்தேன், நீர் பாய்ச்சினேன், களை எடுத்தேன்... இன்னும் உழைக்கிறேன். பயிர் தழைத்துப் பசுமையாக இருக்கிறது. ஆங்காங்கே கதிர்கள் தலைசாய்த்து நிற்கின்றன. உள்ளத்தில் உவகை பொங்குகிறது. ஆறு ஆண்டுகளில் பெற்ற பயன் என்ன? எண்ணிப் பார்க்கிறேன். பொருள் ஊதியமா? இல்லை. அது இந்த உழைப்பிலே கிடைக்காது. பின்னே என்ன பயன்? ஆறு ஆண்டுகளில் வெளிவந்த இதழ்களை நெட்டோட்டமாகப் பார்க்கிறேன். தமிழ்க் கழனியில் பசுமை தட்டுப்படுகிறது. இடையிடையே மலர்கள்; ஆங்காங்கே நறுஞ்சுவைக் கனிகள். இவை உள்ளத்துக்கு ஒரு நிறைவைத் தருகின்றன. அந்த நிறைவின் விளைவே இந்தப் பொங்கல் மலர்.

தமிழ்ச் சோலை வளம் பெறவும், தமிழ்க் கழனிப் பயிர் செழிக்கவும் நான் மேற்கொண்ட இந்த ஊதியம் கருதாத உழைப்பிலே எனக்குத் துணை நின்றார் பலர்; ஆசிரியர் குழுவினர், எழுத்தாளர்கள், விளம்பரதாரர்கள், ஓவியர்கள் என்று எத்தனையோ பேர்கள். உழவனுக்கு வான்மழை போல—வானில் உலவும் கதிரவன்போலக் கலைக்கதிர் வாசகர்களாகிய தமிழ்ப் பெரு மக்களே கலைக்கதிர்ப் பயிருக்கு உயிரூட்டம் தருகின்றார்கள். தமிழ்ப் பெரு மக்களின் ஆதரவு இல்லையென்றால், எங்கள் உழைப்பால்மட்டும் விளைவு ஏற்படாது. உழவனின் உழைப்புக்கு ஏற்ற கண்டுமுதல் வேண்டுமாயின் வானம் பொழிய வேண்டும்; கதிரவன் அருள வேண்டும்.

வான்முகில் வழாது பெய்க!

மலிவளம் சுரக்க!

தமிழ் விஞ்ஞான நூல்கள் பெருக!

பொங்கலோ... பொங்கல்!

— ஜி. ஆர். தாமோதரன்.

விஞ்ஞானப் பித்தர்கள்

திரு. ஜி. ஆர். தாமோதரன்

★

தம் இதயத்தை யெல்லாம் கவர்ந்து விட்ட காளத்தியப்பரின் கண்களி லிருந்து குருதி வழிவதைக் கண்டார் திண்ணனுர். பதறிக் கதறினர். அங்கு மிங்கும் ஓடினுர். என்னென்னவோ பச்சிலேகள் கொண்டு வந்து பிழிந்தார்; பயன் காண வில்லே. 'சதைக்குச் சதை' என்று ஏதோ ஒரு பழமொழி நினேவிலே எழுந்தது. 'சரி, கண்ணுக்குக் கண்' என்று சொல்லிற்று நெஞ்சம். தம் கண்ணேயே பெயர்த்து எடுத்துக் காளத்தியப்பருக்கு அப்பினுர். நின்றது செந்நீர்! திண்ணனுருக்குத் தம் வலி தெரியவில்லே. ஒரே மகிழ்ச்சி; களிக் கூத்து ஆடினுர். அதோடு நின்றதா? திடீரென்று காளத்தியப்பரின் இன்னெரு கண்ணி லிருந்தும் செந்நீர் வழியத் தொடங்கிற்று. கண்ட திண்ணனுர் கவலேப்படவில்லே—செந்நீரை நிறுத்த வழிதான் தெரியுமே என்ற நினேப்பில், தமது மற்றக் கண்ணேயும் பெயர்த்தெடுக்க முனேந்தார்............ இப்படிப் போகிறது கண்ணப்பரின் கதை.

வாதாபிப் போர் வென்ற பரஞ்சோதியார் சிவனடியாருக்குப் பிள்ளேக் கறி பரிமாறினுர்—இது சிறுத்தொண்டன் கதை.

திருமால் திருப்பணியில் ஈடுபட்ட ஒரு பாகவதர் பாம்புக்கும் அஞ்சவில்லே. அது தீண்டநேரின் ''அது வலிதானுல் அங்கே (வைகுண்டத்தில்) கைங்கரியம்; இது வலிதானுல் இங்கே கைங்கரியம்'' என்று சொன்னுர்.

மேலே சொன்ன நிகழ்ச்சிக ளெல்லாம் நடந்திருக்குமா? நடந்திருக்க முடியுமா? எனக்குத் தெரியாது. இவையெல்லாம் கதைகள்; புராணக் கதைகள்.

* * *

ஷெல்லி என்பவன் சிறந்த கவிஞன்; ஆங்கில மொழியின் மாண்பு உள்ளளவும், இலக்கிய உலகம் ஷெல்லியை மறவாது. 'சிறுபிள்ளேத் தன'மாகச் சீர்திருத்தக் கட்டுரை எழுதிவிட்டான் ஷெல்லி. சமய வாதிகளுக்கு ஒரு சம்மட்டிபோல அமைந்தது அந்தக் கட்டுரை. அவன் காலம் அத்தகைய கருத்துக்களே ஏற்க முடியாத காலம். காலம் பழிவாங்கி விட்டது. ''கல்லூரியில் இடமில்லே; வெளியே போ'' என்றது கலேமகளின் உறைவிடம். ''வீட்டில் இடமில்லே; ஓடிப் போ'' என்றது அன்புப் பண்ணே. ''சொத்திலே பங்கில்லே'' என்றது தந்தையின் உரிமை. இத்தனேயையும் பொருட்படுத்த வில்லே அந்த இளங்கவிஞன். கொள்கை பெரிதென்றுன். பெருஞ் செல்வனின் செல்வ மகனுகப் பிறந்தவன் வாழ்வதற்குத் திண்டாடினுன்.

இது புராணமன்று; வரலாறு, வாழ்க்கை வரலாறு.

* * *

இரண்டாம் உலகப் போர் நடந்தபோது ஜப்பானியர் வியப்பான ஒரு கருவியைக் கையாண்டனர். மனித டார்ப்பிடோ என்று அதைச் சொன்னுர்கள். டார்ப்பிடோ பகைவரின் கப்பலைத் தாக்கி வெடிக்கும் போது, அந்த டார்ப்பிடோக்குள் இருக்கும் ஜப்பானியனும் சாவது உறுதி. இத்தகைய மனித டார்ப்பிடோக்களுக்காகத் 'தற்கொலைப் படை' ஒன்று ஜப்பானியரிடம் இருந்தது. 'பகைவனுடைய அழிவுக்கு நானும் காரணமாக இருந்தேன்' என்ற நினைவோடு சாவதற்காக அந்தப் படையிலேயும் சேர்ந்தனர் ஜப்பானியர்.

இது செய்தித் தாள்களில் நாம் படித்த உண்மை.

* * *

இன்னும் இதுபோல எத்தனையோ பேர்களைச் சொல்லலாம். செல்வச் செழிப்பிலே திளைத்திருந்த சிதம்பரனுரைச் செக்கிழுக்க வைத்தது எது? கட்டிளங் காளைப் பருவத்தில் கொடி பிடித்து, அதை விடாமல் இறுகப் பிடித்துக் குண்டாந் தடிக்கு இரையானுனே, குமரன் — அவனை அப்படி உந்திச் செலுத்தியது எது? வெள்ளையர் படைச் சாகசத்தையும் பீரங்கி துப்பாக்கிகளையும் கண்டு அஞ்சாமல், அடிபட்ட அரவுபோல் சீறி எழுந்து, அநியாயமாகப் புளியமரத்தில் தொங்கினுன் கட்டபொம்மன். அப்படி அவனைத் தொங்க வைத்தது எது? லட்சியம், லட்சியம், வாழ்க்கைக்கு எனக் கொண்ட லட்சியம்.

* * *

மேலே கண்ட புராணம், வரலாறு, செய்தி...... யாவும் எதைப் புலப்படுத்துகின்றன? குறிக்கோள் ஒன்றை உறுதியாகப் பற்றிக்கொண்டவன், தன் கோட்பாட்டுக்காக எதையும் செய்யத் துணிவான். தான், தனது என்ற அகப்பற்றும் புறப்பற்றும் குறிக்கோளிலே இரண்டறக் கலந்து நிற்பதால், லட்சிய புருஷர்களாகிய பெருமக்கள் எதையும் செய்வார்கள்.

இந்த உண்மை மனித இனத்தை வாழ வைத்த சட்டம்; உலகிற்கு வளம் ஊட்டிய கருத்து.

* * *

விஞ்ஞானிகளும் இந்தச் சட்டத்திற்கு உட்பட்டவர்களே. மனித இனத்தின் நன்மைக்காக என்றில்லாவிடினும், தாங்கள் மேற்கொண்ட குறிக்கோள் நிறைவேறுவதற்காக எத்தகைய தியாகத்தையும் விஞ்ஞானிகள் செய்யத் தவறியதில்லை. சரித்திர உணர்ச்சி தலைகாட்டிய நாளிலிருந்து இன்றுவரை, விஞ்ஞானிகளிடையே இத்தகைய தியாகிகள் பலர்.

தாம் கண்ட உண்மையை வெளிப் படுத்தினுர் புரூனே (Brunoe) என்ற பெருமகன். சமய வெறியின் முன்னுல் அவர் கண்ட விஞ்ஞான நெறி நிற்பதைச் சமயத் தலைவர்கள் விரும்பவில்லை. அன்று அவர்கள் வைத்தது சட்டம். புரூனேவை உயிரோடு கட்டிவைத்து எரித்தார்கள். தாம் கண்ட உண்மையை இனிப் பரப்புவதில்லை என்று உறுதி கூறியிருந்தால், புரூனே செத்திருக்க வேண்டியதில்லை. ஆனுல், அந்த ஆதிகால விஞ்ஞானிக்கு உண்மை காண்பதிலும் அதைப் பரப்புவதிலும் இருந்த பற்று, தம் உயிரினிடத்து இல்லை. உயிரை விட்டார்; குறிக்கோளை நிலை நாட்டினுர்.

* * *

கலிலேயோ என்ற பழங்கால விஞ்ஞானி முதன் முதலில் தொலை நோக்கி (டெலஸ்

கோப்) கண்டுபிடித்தவர். தம்முடைய தொலைநோக்காடி வாயிலாகக் கண்ட உண்மையைத் தயங்காமல் வெளியிட்டார். 'சூரியன் மையமாக இருக்கிறது; பூமி அதைச் சுற்றி வருகிறது' என்ற கொப்பர்னிகஸின் கொள்கையை ஆதரித்தார். இன்று பள்ளிப் பையனும் நம்பிவிடுகின்ற இந்த உண்மை, கலிலேயோவின் காலத்துச் சமயத்தின் ஆணிவேரையே பதம் பார்க்கக் கூடியதாக இருந்தது. சமய வாதிகள் விட்டார்களா? சட்டம்தான் அவரை விட்டுவைத்ததா? சட்டத்தைக் கருவியாகக் கொண்டது சமயம். கலிலேயோ துன்பக் களத்திலே துவண்டார். இறுதியில் தலையைப் பறிகொடுத்தார்.

* * *

துத்த நாகமும் அக்கினித் திராவகமும் கலப்பதால் வருவதைக் காலசத் தீயதை (நைட்ரஸ் ஆக்ஸைட்) என்று கூறுவார்கள். இந்த நைட்ரஸ் ஆக்ஸைடின் இயல்பு இத்தகையது என்று கண்டுபிடிக்க முதலில் எவ்வளவு துணிச்சல் இருந்திருக்க வேண்டுமென்பதை எண்ணிப் பாருங்கள். அக்கினித் திராவகமும் துத்த நாகமும் கலப்பதால் வருவதை முகர்ந்தால் சிரிப்பு வருவது போல் இருக்கும். அதனால்தான் அதற்குச் சிரிப்புப் புகை (Laughing gas) என்று பெயர். அந்தச் சிரிப்புப் புகையைச் சிறிது முகர்ந்தால் சிரிப்பு; இன்னும் சற்று அதிகம் உறிஞ்சினால் பெருஞ் சிரிப்பு...... அப்புறம் மயக்கம் வரும். அதற்கு மேலும் சிரிப்புப் புகை உள்ளே புகுந்தால் மற்றவர்களுக்கு அழுகை வரும்—நைட்ரஸ் ஆக்ஸைடு அளவு கடந்தால் சாவுதான் முடிவு. இந்தக் காலசத் தீயதையைத் தாமே உறிஞ்சிப் பார்த்தார் சர். ஹம்ப்ரி டேவி என்ற புகழ்பெற்ற விஞ்ஞானி. எவ்வளவு உட்கொண்டால் மருத்துவத் துறைக்குப் பயன்படும் என்ற ஆராய்ச்சி பிறப்பதற்கு முன் அவர் முயற்சி தொடங்கியது. ஒரு வேளை தாம் இறக்க நேரிடும் என்பதையும் அவர் பொருட்படுத்த வில்லை. அந்த ஆவி உட்புகுந்தவுடன் அவரைப் படாதபாடு படுத்தி விட்டது. ஆடினர், பாடினர், சோதனைச் சாலையி லிருந்த மேசைகளின்மீ தெல்லாம் குதித்துக் குதித்து ஓடினர். தம் வசம் இழந்து, தம்மையே மறந்து சிரித்துக் கொண்டிருந்தார். இவ்வளவுக்கு மேல் போயிருந்தால் என்ன ஆகியிருக்கும் தெரியுமோ? சர் ஹம்ப்ரி டேவி உயிர்விட நேரிட்டிருக்கும். இந்த ஆபத்தான சோதனையை அவர் ஏன் மேற்கொண்டார் என்பதுதான் பெரு வியப்பை ஊட்டுகின்றது. நைட்ரஸ் ஆக்சைடின் மணம் எப்படி இருக்கும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பினர் அவர். நைட்ரஸ் ஆக்ஸைடு எப்படி உண்டாகிறது என்று தெரிந்தால் மட்டும் போதாது. அதனுடைய முழு விவரமும் தெரியவேண்டு மாயின், அதன் மணத்தையும் அறிந்துகொள்ள வேண்டும் என்பது சர். டேவியின் நினைப்பு. இதுதான் விஞ்ஞானிகளின் மனப்போக்கு. தாங்கள் ஈடுபட்டுள்ள ஆராய்ச்சியின் எல்லைக் கல்லைக் கண்டாலொழிய அவர்களுக்கு மனநிறைவு ஏற்படாது. இத்தகைய குறிக்கோள் வெறியிலேதான் சர். ஹம்ப்ரி டேவி மிகத் துணிச்சலான சோதனையில்—உயிரையும் பணயம் கேட்கக்கூடிய சோதனையில் ஈடுபட்டார்.

* * *

ஆப்பிரிக்காவின் சில பகுதிகளில் ஒரு வகையான கொடிய ஈ உள்ளது. செட்சி (Tsetse) என்பது அதன் பெயர். அந்த ஈக்களில் சுமார் இருபது வகைகள் உள்ளன. செட்சி ஈயால் கடிக்கப்பட்டால் தூக்க நோய் (sleeping sickness) வரும். வெறும் தூக்கமாக இருந்தால் கவலை இல்லை. வெறும் தூக்கமாகத் தொடங்கிக் கடைசியில் பெருந் தூக்கத்தில் கொண்டு விட்டு விடும். உகாண்டா என்ற பகுதியில் 1901–06 ஆகிய ஐந்து ஆண்டுகளில் மட்டும் சுமார் இரண்டு லட்சம் மனிதர்கள் இந்தத் தூக்க நோய்க்கு இரையானர்

கள். இதிலிருந்து இந்த நோயின் கொடுமையை ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம். ஒரு விஞ்ஞானி இந்த நோய்க்கு மாற்று மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்கினர். முதலில் தம் உடம்பிலேயே செட்சி ஈயின் நஞ்சை ஏற்றிக்கொண்டு தம் ஆராய்ச்சியைத் தொடங்கினர்.

* * *

கரியொருதீயதை என்ற கார்பன் மானுக்ஸைட் மிகக் கொடிய நஞ்சு என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனல், அதனல் என்னென்ன விளைவுகள் எவ்வெவ்வாறு ஏற்படுகின்றன என்று யாராலும் சொல்ல முடியாது. அந்த விவரங்க ளெல்லாம் தெளிவாகத் தெரிந்தா லொழியக் கரியொருதீயதைபற்றி முழுதும் அறிந்துவிட்டதாகச் சொல்ல முடியாதன்ரே? அந்த விளைவுகளையும் கண்டுபிடித்துவிட வேண்டும் என்ற பயங்கரமான எண்ணம் ஒரு விஞ்ஞானியின் உள்ளத்திலே எழுந்துவிட்டது. தயக்கம் காட்டவில்லை. கார்பன் மானுக்ஸைடைத் தாமே உட்கொண்டார்.

* * *

இப்படிப் பல பல நிகழ்ச்சிகள் விஞ்ஞான அரங்கிலே. எப்படியேனும் உண்மையைக் காணவேண்டும் என்ற வெறி இந்த விஞ்ஞானப் பித்தர்களுக்கு. உண்மை என்ற இலக்கை நோக்கி அவர்கள் ஓடும் நெட்டோட்டத்திலே தடைக் கல் கிடக்கலாம், மேடும் பள்ளமும் இருக்கலாம்...... முள் காலை உறுத்தலாம், கல் தடுக்கிக் கால் இடறி வீழலாம். ஆனல், இந்தத் தடைகளும் வீழ்ச்சிகளும் இலக்கை நோக்கிப் போகும் போக்கினை மாற்ற முடிவதில்லை. கல்லொடு கல் உராய்ந்து தீயைக் கண்டுபிடித்த ஆதி மனிதனி லிருந்து, ஹிட்லரின் ஆட்சி தம் தலைக்கு விலை வைத்தபோதும் குறிக்கோளைக் கைவிடாத ஐன்ஸ்டீன் வரையிலும் எல்லோரும் விஞ்ஞானப் பித்தால் தாக்கப்பட்ட வெறியர்களே! அந்தப் பித்தர்களின் வெறிதான் மாக்களின் நிலையிலிருந்து நம்மை மக்களாக மாற்றியுள்ளது.

"உண்டால் அம்மஇவ் வுலகம்......
... ...
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே"

மெக்னீஷியப் பெருக்கம்

நிலவியம் என்ற மெக்னீஷிய உலோகம் பொதுவாகக் கடல் நீரிலிருந்து தயாரிக்கப்படுகின்றது. கடல் நீரில் அளவிறந்த மெக்னீஷியம் உள்ளது. ஒவ்வோராண்டிலும் பத்துக்கோடி டன் வீதம் இன்னும் 4000 தலைமுறைக்குக் கடல் நீரிலிருந்து மெக்னீஷியம் எடுக்கப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். அப்போதுகூடக் கடலிலுள்ள மெக்னீஷியம் ஒன்றும் குறைந்து விடாது. கடலிலுள்ள மெக்னீஷியம் முழுவதையும் எடுத்து உலகின் நிலப் பகுதிமேலிட்டு மூடினல் 9 அடிக் கனம் இருக்குமாம்!

வாழ்வு

'மூர்த்தி'

★

மனிதன் யார்? இவன் மற்ற உயிரினங்களுடன் இக் கோளத்தில் வாழும் ஓர் அற்பப் பிராணி. இப் பூகோளம் பிரபஞ்சத்தில் ஒரு சிறு பகுதி. ஆகாயத்தில் பல நட்சத்திரக் கூட்டங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு நட்சத்திரமும் நமக்கு ஒளியைக் கொடுக்கும் சூரியனை விட மிக மிகப் பெரியது. இக் கோளம் இரண்டாம் தரமான நட்சத்திரமான சூரியனைச் சுற்றிச் சுற்றி வருகின்றது. இதனைப் போலவே சூரியனைச் சுற்றிவரும் கோளங்கள் ஒன்பது இருக்கின்றன. இன்னொரு கோளம் பத்தாவதாகச் சமீபத்தில் கண்டு அறியப்பட் டிருக்கிறது. இப்பிரபஞ்சத்தில் நம் சிந்தனைக்கும் எட்டாத பருமனையுடைய பல லட்சக் கணக்கான சூரியன்கள் சஞ்சரிப்பதை அறிகிறோம். எனினும் நம்முடைய சூரியன் மற்றவைகளைவிட மிகப் பெரியதாகக் காணப்படுகிறது. அருகில் இருக்கின்ற காரணத்தால் அவ்வாறு தோன்றுகிறது. அருகில் என்பது ஒன்பது கோடி மைல்களுக்கு அப்பால் உள்ளது. ஒளி ஒரு விநாடிக்கு 1,86,000 மைல் வீதம் வேகமாகச் செல்லும் சக்தியுடையது. இந்த வேகத்தில் நம் சூரியனுடைய ஒளி நம்மைச் சேர்வதற்கு 8 நிமிடங்கள் ஆகின்றன. எனவே காலையில் முதல் முதலாக நம் கண்களுக்குப் புலனாவதற்கு 8 நிமிடங்களுக்கு முன்பே சூரியன் வானத்தில் தோன்றி விடுகிறது. இந்த உண்மையைச் சோதிடர் அறிந்திருக்க வேண்டும். நம் சூரியனைவிட மிகப் பெரிய நட்சத்திரங்கள் மிகத் தொலைவில் இருக்கின்றன. அவைகளின் ஒளி இதே வேகத்தில் வந்தாலும் நம்மைச் சேர்வதற்கு லட்சக் கணக்கான ஆண்டுகள் ஆகின்றன. இதிலிருந்து அவை நம் கோளத்திலிருந்து எவ்வளவு தூரத்தி லிருக்கின்றன என்பதை ஊகித்தறிய வேண்டும். அவைகளின் தொலைவும் பருமனைப்போலச் சிந்தனைக்கு எட்டாத வாறு இருக்கின்றன. என்னே இந்த மாயப் பிரபஞ்சத்தின் விந்தை! விவரிக்கச் சொற்கள் போதா.

இவைகளிடையே நம்மைப் போன்ற உயிரினம் மிகக் கேவலமான படைப்பு. இத்தகைய உயிரினத்திற்கு ஏற்றவாறு பிரபஞ்சம் அமையவில்லை. இம் மாபெரும் பிரபஞ்சம் நம்மைப் போன்ற அற்பமான உயிரினங்களைத் தோற்றுவிக் கின்றது என்பதை நம்ப முடியாது. அவ்வாறு இருப்பின் உற்பத்தி செய்யும் பொறிக்குத் தகுதியான பொருள் உண்டாக்கப்பட் டிருக்கும்.

இந்த மாபெரும் பிரபஞ்சத்தில் ஒரே ஒரு கோளத்தில்தான் உயிரினங்கள் வாழ முடியு மென்பதை அறிகிறோம். அதுதான் நாம் வாழும் இப் பூகோளம். இங்கு வாழ்

வதைப் போலவே மற்றக் கோளங்களிலும் உயிரினங்கள் வாழ முடியுமென்பது இன்னும் நாம் கண்டறியாத புதிராகத்தான் இருக்கிறது. இந்தப் பூமியிலும் உயிரினங்கள் எல்லா இடங்களிலும் வாழ முடியாது. ஒரு குறிப்பிட்ட அளவு உயரத்திற்கு மேலும் நீரில் ஓர் அளவு ஆழத்திற்குக் கீழும் உயிரினங்கள் வாழமுடியாது. பல அண்ட கோளங்கள் அடங்கிய இந்த மா பெரும் பிரபஞ்சத்தில் உயிரினங்கள் வாழும் பகுதி மிக மிகச் சிறியதாக இருக்கின்றது.

இந்த உலகத்தில் நிலத்தை ஒட்டியே சமவெளியில் பல உயிரினங்கள் வாழ்கின்றன. மலைகளின்மீது செல்லச் செல்ல உயிரினங்களின் தொகுதி குறைந்து கொண்டே போகின்றது. சுமார் 8,700 அடி உயரமுள்ள நீலகிரி மலையில் வாழும் மக்களினமும் மற்ற உயிரினங்களும் சம வெளியில் வாழ்வதைவிட மிகக் குறைவு. தாவரங்களும் மரங்களும் அவ்வாறே உயரச் செல்லச் செல்ல குறைந்து கொண்டே போவதைக் காண்கிறோம். பொதுவாக 8000 அல்லது 9000 அடி மரங்களின் வாழ்க்கை எல்லையாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அமெரிக்காவிலும் நம் நாட்டிலும் 12000 அடி உயரத்திலும் மரங்கள் காணப் படுகின்றன. மேலே உயரச் செல்லச் செல்ல வளர்ச்சி குறைந்துள்ள குட்டை மரங்கள் புல்வெளிகள் இருக்கின்றன. இன்னும் அதிக உயரத்திற்கு மேல் கற்களும், பனிக் கட்டிகளுமே அல்லாமல் உயிரினங்கள் வாழ்வதில்லை. தாவர இனம் வாழும் எல்லைக்குமேல் விலங்கினம் வாழ்வதில்லை. ஆனால் சில விலங்கினங்கள் உயரமான மலை உச்சிகளில் சஞ்சரிக்கலாம். உணவிற்காகக் கீழே வரவேண்டி வரும். தென் அமெரிக்காவில் கோண்டார் (Condor) என்னும் பறவை 23000 அடி வரையில் பறந்து செல்கிறதாம். நம் இந்தியாவில் பெருங் கழுகுகள் எவரஸ்ட் மலையில் 25000 அடியில் சஞ்சரிக்கின்றன. ஐரோப்பாவில் ஆல்ப்ஸ் மலையில் காகம் 27000 அடி உயரத்தில் வாழ்கின்றது. எவரஸ்ட் மலையில் 29000 அடி உயரத்தில் வாத்துகள் வாழ்வதாகக் கூறப்படுகிறது. இமய மலைக்கு அப்பாலுள்ள திபெத்தில் மக்கள் 16000 அடி உயரத்தில் வாழ்கின்றனர். உலகத்தில் எப்பாகத்திலும் இதனைவிட உயரமான மலைப்பாங்கில் மக்களினம் வாழ்வதாக அறியப்படவில்லை. எனினும் மனிதன் எவ்வளவு உயரத்திற்குப் போக முடியுமோ அவ்வளவு உயரத்திற்குச் செல்ல முயன்று வருகிறான். 29,182 அடி உயரமுள்ள எவரஸ்ட் சிகரத்தை டென்சிங், ஹிலாரி என்ற இரு வீரர்கள் சமீபத்தில் எட்டிப் பிடித்திருக்கிறார்கள். காலால் நடந்து ஏறுவதற்கு எவரெஸ்ட் மலையை விட உயரமான மலை உலகத்தில் இல்லை. ஆகையால் பெலூனைக் கொண்டாவது தக்க சாதனங்களுடன் மேலே செல்ல பலமுறை வீரர்கள் முயன்றிருக்கின்றனர். இம்முயற்சியில் இன்றும் ஈடுபட்டிருக்கின்றனர். 1935-ம் ஆண்டில் ஆண்டர்சன், ஸ்டீவன்ஸ் என்ற இரு போர் வீரர்கள் இதுவரையில் மனிதனே செல்லாத 72,394 அடி உயரத்திற்குப் பெலூனில் சென்று வெற்றி கண்டிருக்கிறார்கள். கடல் மட்டத்திற்கு 18,000 அடி உயரத்திற்கு மேல் உயிரினங்கள் பெரும்பான்மையாக வாழ்வதில்லை என்றே முடிவாகக் கூறலாம்.

நிலத்திற்கு அடியில் எவ்வளவு தூரம் உயிரினங்கள் வாழ்கின்றன? ஆப்பிரிக்காவில் தங்கக் கனிகளில் சுமார் 8000 அடி வரையில் மனிதன் சென்றிருக்கிறான். கடலில் உயிரினங்கள் எவ்வளவு ஆழத்தில் வாழ்கின்றன? வில்லியம் பீப் (William Beebe) கடல் நீருக்குள் அரை மைல் ஆழத்திற்கு மேல் சென்று வெப்பமும் ஒளியுமற்ற ஆழ்ந்த கடல் நீருக்குள் உயிரினங்கள் எவ்வாறு வாழ்கின்றன என்ற பல உண்மைகளைக் கண்டிருக்கிறார். ஆழ் கட

லில் தாவர இனம் வாழவில்லை. ஆனால் விலங்கினம் வாழ்கிறது. திமிங்கலங்கள் ஒரு மைல் ஆழம் வரையில் செல்கின்றன. சில விலங்கினங்கள் 23,000 அடி ஆழத்திலும் வாழ்கின்றன. சுமார் 6 மைல் ஆழமுள்ள கடலில் 23,000 அடிக்குக் கீழ் உயிரினங்கள் வாழ்வது இன்னும் கண்டறியப்பட வில்லை.

இந்த உலகத்திற்குமேல் உயரத்தில் ஓர் வரம்பு வரையிலும், நீரினுள் ஆழத்தில் ஓர் வரம்பு வரையிலும்—இவற்றுக்கிடையே தான் உயிரினங்கள் வாழமுடியும். மேல் வரம்பும் கீழ் வரம்பும் 4மைல்களுக்குள்ளாகத்தான் இருக்கின்றன. நம் கோளத்தின் குறுக்களவு சுமார்8000மைல் இருக்கிறதாகக்கணக்கிடப்பட் டிருக்கிறது. 8000மைல்கள் குறுக்களவு கொண்ட இந் நிலவுலகத்தின்கண் உயிரினங்கள் நான்கு மைல்களுக்குள்ளாகத்தான் வாழ இயலுகின்றது. உயிரினங்கள் வாழும் இப்பரப்பு பிரபஞ்சத்துடன் ஒப்பிடும்போது மிகக் குறுகிய பாகமாக அமைகிறது. ஏன் மற்றப் பகுதிகளில் உயிரினங்கள் வாழமுடியாது ? *

உயிரினங்கள் வாழ்வதற்குப் பல பொருள்கள் தேவைப்படுகின்றன. தண்ணீர், ஒளி, பிராணவாயு, மிதமான வெப்பதட்ப நிலை, உணவு, இரசாயனப் பொருள்கள் இன்னோரன்ன அவசியமானவை. இவைகள் சூன்யமாக இருக்கும் பகுதிகளில் உயிரினம் வாழமுடியாது. உயிரினங்களின் வாழ்விற்கு இவை எவ்வாறு துணைபுரிகின்றன, ஏன் அவசியமானவை என்பதனை அறிய முற்படுவோம்.

பிராணவாயு ஒரு வகையான காற்று. காற்றில் ஐந்தில் ஒரு பங்காகக் கலந்திருக்கின்றது. இவ் வுலகில் அது எங்கும் வியாபித்திருக்கின்றது. கடல் மட்டத்தில் இப் பிராண வாயு வேண்டிய அளவு இருக்கின்றது. விலங்கினங்களும், தாவர இனங்களும் தேவைக்கும் மேலான அளவு ஏற்றுக் கொள்ளலாம். முழுமையும் பிராண வாயுவாக உள்ள காற்றினை நெடு நேரம் சுவாசித்தல் ஆபத்து. ஐந்தில் மூன்று பங்குவீதமாகப் பிராணவாயு நிலவும் பகுதிகளில் விலங்குகளும் தாவரங்களும் வாழ முடியும். பிராணவாயு மிகக் குறைவாக நிலவும் பகுதிகளிலும் சில உயிரினங்கள் வாழ முடியும். 18000 அடி உயரத்தில் பிராண வாயு கடல் மட்டத்தைக் காட்டிலும் பாதி அளவுதான் இருக்கிறது. அங்கும் சில உயிரினங்கள் இருக்கின்றன.

*இதனைப் பற்றிய கட்டுரை 'கலைக்கதிரில்' வந்துள்ளது.

சர்க்கரை உப்பு இவைகளைப் போலப் பிராணவாயு தண்ணீரில் கரையும். எனவே நீரில் வாழும் உயிரினங்கள் தண்ணீரில் கரைந்துள்ள பிராணவாயுவினை உட்கொள்ளுகின்றன. உப்புத் தண்ணீரிலும் வெதுவெதுப்பான தண்ணீரிலும் பிராண வாயு மிகக் குறைவாகவே கலந்திருக்கும். குளிர்ந்த நீரிலும் நல்ல தண்ணீரிலும் பிராணவாயு அதிகமாகக் கரைந்திருக்கும். உயிரினங்கள் வாழ்வதற்குப் பிராணவாயு வேண்டிய அளவு இருக்கவேண்டும். கடல் மட்டத்திற்கு மேலும் கீழுமாகக் குறுகிய பகுதியில் இவை கிடைக்கும்.

வெப்பதட்ப நிலையும் உயிரினங்களின் வாழ்க்கையைக் கட்டுப்படுத்துகிறது. நாம் நலமாக இருக்குங் காலங்களில் உடலின் வெப்பம் 98·4° இருப்பதாகக் காண்கிறோம். காய்ச்சல் அதிகமாக வந்தால் வெப்பம் 103° அல்லது 104° - க்கு உயரும். சூரியனுடைய வெப்பம் 10000° எனக் கணக்கிடப்பட் டிருக்கிறது. 6,7 மைல்களுக்கு அப்பாலுள்ள வெளியில் வெப்பம் 459° இருக்கிறது. இந்நிலவுலகில் சில பகுதிகளில் வெப்பம் 149° வரையில் உயர்கிறது. சில இடங்களில் குளிர்ச்சியின் காரணமாக வெப்ப நிலைக்கு 130° குறைவாகவும் இருக்கிறது. இத்தகைய அதிக வெப்பதட்ப நிலைகளில் உயரினம் வாழ முடியாது. 30°-க்கும் 100°க்கும் இடையே

யுள்ள பகுதிகளில் உயிரினங்கள் அதிக மாக வாழ்கின்றன.

தண்ணீர் உயிர் வாழ்வதற்கு மிக அவ சியமானது. தண்ணீர் மிகுதியாக இருக் கும் இடங்களில் உயிர்கள் செழிப்பாக வாழ்கின்றன. காற்றில் நீராவியிலும் குளங்களிலும், ஆறுகளிலும் கடலிலும் தண்ணீர் கிடைக்கின்றது. மழையும் பனி யும் நிலத்தின்கண் தண்ணீரை அவ்வப் போது சுரக்கின்றன.

உணவு வாழ்க்கைக்கு இன்றியமையா தது. தாவர இனங்கள் நிலத்திலும், காற்றி லும்தண்ணீரிலும் உள்ள மூலப்பொருள் களை ஏற்றுக்கொண்டு உணவாக மாற்று கின்றன. விலங்கினங்கள் தாவரங்களை நேராகவோ மறைமுகமாகவோ உணவாக உட்கொள்ளுகின்றன. எனவே தாவர இனங்கள் வாழும் பகுதிகளில்தான் விலங் கினம் வாழ முடியும்.

உயிரினங்களின் வாழ்க்கைக்கு மற் றொரு முக்கியமான கட்டுப்பாடு இருக் கிறது. அது நீரிலும் காற்றிலுமுள்ள **அழுத்தம்.** கடல் மட்டத்தில் ஒரு சதுர அங்குலத்திற்கு 15 பவுண்டு அழுத்தம் காற்றிலிருக்கிறது. இந்த அழுத்தம் நம் உடலைத் தாக்குகிறது. ஆனால் இந்த **அழுத்தத்தை** நம் உடல் உணர்வதில்லை. ஏனெனில் நம் உடலின் அழுத்தம் சம மாகவே இருக்கின்ற காரணத்தால். உய ரச் செல்ல் செல்லக் காற்றின் அழுத்தம் குறைந்துகொண்டே போகிறது. 18000 அடி உயரத்தில் காற்றின் அழுத்தம் பாதி அளவே இருக்கிறது. விமானங்களில் பறப்பவர்கள் காற்றின் அழுத்தம் குறை வதினால் விளையும் மாறுதல்களை உணர லாம். 30000 அடி உயாத்தில் பறக்கும் போது ஒரு வாக்கியம் பேசுவதற்குப் பல முறை மூச்சுவிடவேண்டி இருக்கும். பேச் சின் ஒலியிலும் மாறுபாடு தோன்றும். கட லில் ஆழமாகச் செல்லச்செல்ல அழுத்தம் அதிகரிக்கிறது. ஒரு சதுர அங்குலத் திற்குப் பல டன்கள் இருக்கிறது. உடலின் அழுத்தமும் வெளியிலுள்ள அழுத்தமும் சமமாக இருக்கும் பகுதிகளில் உயிரினங் கள் நலமாக வாழ இயலும்.

உயிரினங்கள் வாழ்கின்றன என்று கூறினால் அவ் வாழ்க்கையின் இலக்கணங் கள் என்ன? உயிரற்ற பொருள்களி லிருந்து அவைகளை எவ்வாறு வேறு படுத்துகிறோம்? எது ஒன்று சில குறிப் பிட்ட பணிகளை ஆற்றுகின்றதோ அதனை உயிரினம் என அழைக்கின்றோம். அப் பணிகளை ஆற்றாதவை உயிரற்றவை.

உயிரினம் உணவை உட்கொண்டு, செறித்து அப்பொருளைத் தன் வளர்ச்சிக் குப் பயன்படுத்திக் கொள்கிறது. அது வளர்கிறது. பிராணவாயுவைச் சுவாசிக் கிறது. உடலில் தோன்றும் கழிவுப் பொருள்களை வெளியே அகற்றுகிறது. உயிரினம் அசைந்து இயங்கும் பண்பை உடையது. விலங்கினமும், தாவர இன மும் இவை யாவற்றையும் ஆற்றுகின்றன. செடிகள், மரங்கள், விலங்குகளைப் போல் ஓரிடத்தி லிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்வதில்லை. எனினும் அசையும் பண் பினை உடையன. ஒளியின் பக்கம் இலை கள் திரும்புகின்றன. மொட்டுகள் மலர் களாக அரும்புகின்றன. வேர்கள் நிலத் துள் செல்கின்றன. விலங்கினமும், தாவர இனமும் தம் இனத்தைப் பெருக்குகின் றன. வெளியில் உள்ள சூழ்நிலையை அறிந்து மாறும் இயல்பினை உடையன. இவ்வாறு ஏழு பணிகளை தம்மிடையே ஆற்றுகின்றது ஒவ்வொரு உயிரினமும். இச் செயல்கள் உயிருடன் இயங்குவதற்கு இன்றியமையாததாக இருக்கின்றன:-

(1) செரித்தல். (2) வளர்ச்சி, (3) சுவா சித்தல், (4) கழித்தல், (5) சலனம். (6) இனப் பெருக்கம், (7) உணர்தல்.

தற்செயலாக..

திரு. கே. கண்ணபிரான்,
M. A., B. Sc. (Hons.)

★

சைனாவில் வெகு காலத்திற்கு முன்பு பன்றிகளை அடைத்துவைத் திருக்கும் குடிசை யொன்றில் தீப்பற்றிக் கொண்டதாம். அங்கு அடைபட்ட பன்றி நெருப்பில் வெந்து இறந்துவிட்டது. தீ அணைந்த பிறகு பன்றியின் உடலை வெளியேற்ற முயன்றானாம் அப்பன்றிக் குரியவன். பன்றியின் உடலைக் கையால் பற்றி இழுக்கும் பொழுது அது கையில் சுட்டுவிட்டது. உடனே தன் கையை வாயில் வைத்துக் கொண்டானாம். கையில் ஒட்டிக்கொண்டிருந்த பன்றியின் இறைச்சியை அவனையறியாமலே அவன் நாக்கு ருசி பார்த்து விட்டது. அது புதுவிதமான தாகவும், விரும்பத்தக்க தாகவும் உள்ள ஒரு சுவையாக இருந்தது அவனுக்கு. மறுமுறை பன்றியின் இறைச்சியை எடுத்துச் சுவைத்தான். பிறகு இம்மாதிரி செய்துகொண்டேயிருந்தான். இந்தச் சுவையைத் தன் தகப்பனுக்கும் சிறிது அறிமுகப்படுத்தி வைத்தான் அவன். தகப்பனும் மகனுமாக அந்தப் பன்றியின் இறைச்சி முழுவதையும் தின்று தீர்த்துவிட்டார்கள். அவனது பன்றிக் குடிசை பிறகு அடிக்கடி தீப்பிடித்துக்கொண்டது. அடிக்கடி பன்றிக் குடிசை தீப்பிடிப்பது பலருக்குப் புரியாத புதிரா யிருந்தது. நாளடைவில் அந்த வட்டாரத்தி லுள்ள பன்றிக் குடிசைகளெல்லாம் தீப்பிடித்துக்கொள்ள ஆரம்பித்தன. இம்மாதிரி யாகவே சீனர்கள் பன்றியின் இறைச்சியைத் தின்னக் கற்றுக்கொண்டனர் என்று ஒரு கதை. சுடுகின்ற கையை வாயில் வைத்துக்கொண்ட தற்செயல் நிகழ்ச்சி யொன்று புதியதொரு பழக்கத்தை ஏற்படுத்திவிட்டது குறிப்பிடத்தக்கது. பன்றியின் இறைச்சியைச் சுட்டுச் சாப்பிட்டறியாதவர்கள் தற்செயலாகக் கண்டுபிடித்த நிகழ்ச்சியின் விளைவாகச் சமையல் தொழிலிலே புதியதொரு முறை புகுந்துவிட்டது. இது எதிர்பாராத தற்செயல் நிகழ்ச்சி. இம்மாதிரியே பல சமயங்களில் தற்செயல் நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. அந் நிகழ்ச்சிகளினின்றும் மனித இனத்திற்குப் பயன்படுகின்ற பல கருத்துக்கள் வெளியாகி யிருக்கின்றன.

தற்கால மனித சமுதாயத்திற்கு இன்றியமையாத சாதனமான மின்சாரம் கண்டு பிடிக்கப்பட்ட விதம் ''தற்செயலாக'' என்றே சொல்லிவிடலாம். இத்தாலிய நாட்டைச் சேர்ந்த லூய்கி கால்வானி (Luigi Galvani) என்ற டாக்டர் ஒரு சமயம் தவளை ஒன்றை அறுத்து அதை ஆய்வதற்காக வைத்திருந்தார். அதுசமயம் அவரது மனைவி ஒரு சிறிய கத்தியால் அத்தவளையின் காலைத் தொட்டார். உடனே அத்தவளையின் கால் வெடுக்கென உதைந்தது. உயிரிழந்திருந்த தவளையின் கால் உதைப்பது கால்வானிக்கு விந்தையாகப் பட்டது.

தற்செயலாக நிகழ்ந்த இந் நிகழ்ச்சியின் காரணத்தை ஆராய்ந்தார். கால்வானி இரண்டு பொன் வகையாலான (metals) பொருள்களுடன், நரம்பு இணைந்து மின்சாரத்தைக் கடத்தும் ஒருவழியாக ஆகிவிட்டதால், அவ்வழியே பாய்ந்த மின்சாரமே அத்தவளையின் காலின் உதைப்புக்குக் காரணம் என்ற முடிவுகொண்டார் கால்வானி.

அலெக்சாண்டர் வோல்டா என்ற பேராசிரியர் இந்த நிகழ்ச்சியை மேலும் ஆராய்ந்தார். மின்சாரத்தைக் கடத்திச் செல்வதற்கு நரம்பு தேவை யில்லை யென்றும் ஈரமான தசையும்கூட மின்சாரத்தைச் செலுத்தும் ஆற்றல் வாய்ந்தது என்றும் அவர் கண்டார். பின்பு இரண்டு பொன்கள் ஒன்றுட னொன்று பொருந்தும்போது கூட மின்சாரம் உண்டாகிறது என்று கண்டார். இக்கருத்தையே மேலும் அபிவிருத்திசெய்து வோல்டா மின் கலத்தைக் (Voltaic Cell) கண்டுபிடித்தார். அவரது மின்கலத்தில் இரண்டு பொன்கள் இருக்கின்றன இரண்டும் ஒரு கலத்தில் நீரில் தொங்கும்படி அமைக்கப்பட் டிருக்கின்றன. நீரில் சிறிது காடி (acid)யை ஊற்றினுல் இவ்விரண்டு பொன்களின் இடையில் மின்சாரம் ஏற்படுவதை வோல்டா கண்டுபிடித்தார். இத்தகைய கலத்தின்மூலம் மின்சாரம் பெறப்பட்டது. இவ்வாறு மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்ட காலத்தில் (18-ம் நூற்ருண்டின் இறுதியிலும், 19-ம் நூற்ருண்டின் துவக்கத்திலும்) மின்சாரத்திற்கும், காந்தத்திற்கும் (magnetism) ஏதாவது உறவு உண்டா என ஆராயப் பலர் விழைந்தனர். மின்சாரத்திற்கும் காந்தத்திற்கும் உறவு உண்டு என்றும், மின்சாரத்தால் காந்தத்தைப் பெறலாம் என்றும் பலர் நம்பினர். மின்சாரம் செலுத்தப்படுகிற கம்பியொன்று காந்தக் கட்டை (Bar magnet) ஒன்றுக்குச் சமம் என்று பலரும் அப்பொழுது நம்பினர். இந்தக் கொள்கையை யொட்டி அவர்கள் ஓர் ஆய்வை நடத்தினர்.

ஒரு காந்த ஊசியைச் செங்குத்தான அச்சு ஒன்றில் நிறுத்திஞல் அக் காந்த ஊசி தெற்கு வடக்காக நிற்கும். ஆனுல் அதே காந்த ஊசியை வலிவு மிக்கதொரு காந்தக் கட்டையின்மேல் நிறுத்திஞல் அக் காந்தக் கட்டைக்கு நேராகவே காந்த ஊசியும் நிற்கும். காந்தக் கட்டையின் திசையைவிட்டு விலகிக் காந்த ஊசிதென் வடலாக நிற்க இயலாது. மின்சாரம் செலுத்தப்படுகிற கம்பியொன்றைக் கிழக்கு மேற்காக வைத்து அதன்மேல் காந்த ஊசி ஒன்றை நிறுத்தினர். கிழமேலாக இருக்கின்ற கம்பி (மின்சாரம் செலுத்தப்படுவதால் காந்தக்கட்டைக்குச் சமம் என்ற நம்பிக்கையால்) காந்த ஊசியையும் கிழக்குமேற்காகத் திருப்ப இயலும் என்று நம்பினர். ஆனுல் காந்த ஊசி தென்வடலாகவே நின்றது; சிறிதும் திரும்பவில்லை. ஆனுல் ஆய்வாளர்கள் கம்பியில் செல்லுகின்ற மின்சாரத்தின் வலிமை போதாதென்று நினைத்து மேலும் மேலும் அதிக வலுவுள்ள மின்சாரத்தைச் செலுத்தினர். ஆனுல் ஊசி சிறிதும் நகர்ந்து கொடுக்கவில்லை. இத்தகைய ஆய்வை ஒருநாள் தம் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துக்கொண் டிருந்த பேராசிரியர் ஹான்ஸ் க்றிஸ்டியன் எர்ஸ்டெட் (Hans Christian Oersted) என்பார் தற்செயலாக மின்சாரம் செலுத்தப்பட்ட கம்பியையும் தென் வடலாகக் காந்த ஊசியின்மேல் பிடித்தார். உடனே காந்த ஊசி திரும்பிவிட்டது. அவருக்கு விந்தையாக இருந்தது இந்நிகழ்ச்சி. உடனே நினைத்தார் எர்ஸ்டெட். கம்பியின் வழியே சென்ற மின்சாரம், மின்சாரம் எத்திசையில் செல்கின்றதோ அத்திசைக்குக் குறுக்கே காந்த விளைவை ஏற்படுத்துகிறது என அறிந்தார். இதன் விளைவாகக் கிழமேலாக நின்ற கம்பியின் வழியே

சென்ற மின்சாரத்தின் விளைவு தென்வடலாக இருந்தது. காந்த ஊசியும் தென் வடலாக இருந்தது. ஆகவே காந்த ஊசியின்மேல் ஒருவித விளைவும் ஏற்படவில்லை. தென்வடலாக இருந்த கம்பியின் வழியாகச் சென்ற மின்சாரத்தின் விளைவால் அக் கம்பியின் குறுக்கே காந்தப்புலம் ஒன்று தோன்றியது. இதனாலேயே காந்த ஊசி திரும்பியது என்பதைக் கண்டுபிடித்தார் எர்ஸ்டெட். இது தற்செயலாக நிகழ்ந்த நிகழ்ச்சி.

இதே நிகழ்ச்சியை மைக்கேல் பாரடே (Michael Faraday) மேலும் விருத்தி செய்து காந்தப் புலத்திலே கம்பிச் சுருளொன்றை வைத்து அக் கம்பிச் சுருளில் மின்சாரம் ஏறச் செய்தார். இதுவே மின் காந்தக் கிளர்வுக்கு (electromagnetic induction) அடிப்படையாக அமைந்தது. காந்தப் புலமொன்றில், கம்பிச் சுருளைச் சுற்றுவதால் அக்கம்பிச் சுருளில் மின்சாரம் ஏற்றப்படுகிறது. இக் கருத்தின்படி அருவியினின்றும் விழுகின்ற நீரின் ஆற்றலால் பெரிய சக்கரங்களைச் சுழலவைத்து, அச் சக்கரங்களில் கம்பிச் சுருள்களைப் பொருத்தி அச்சுருள்கள் காந்தப் புலத்தில் சுற்றவிடுகின்றனர். இம்முறைப் படியே மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது! இதே கொள்கையை ஒட்டிக் காந்தப் புலமொன்றில் இருக்கின்ற கம்பிச் சுருளின் வழியே மின்சாரத்தைச் செலுத்தினால் கம்பிச் சுருளோ, காந்தப் புலத்தை உண்டு பண்ணிய காந்தமோ,—எது சுற்றுமாறு அமைக்கப்பட் டிருக்கிறதோ,— அது சுற்றுகிறது. இதுவே மின்சாரத்தால் இயங்குகின்ற இயந்திரங்களின் உள் அமைப்பு.

லூயி பாஸ்டர் (Louis Pasteur) என்ற விஞ்ஞானி கோழிகளுக்கு ஏற்படுகிற காலராவைப்பற்றி ஆராய்ந்துகொண் டிருந்த போது தற்செயலாக ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது. அந் நிகழ்ச்சியினின்றும் மனித சமுதாயத்திற்குப் பெரிதும் நன்மை விளைந்தது. காலராவிற்குக் காரணமான நுண் உயிர்கள் நிறைந்த நீர்க் கலவையைக் கோழிக்குஞ்சுகளின் உடலினுள் செலுத்தி அதனால் என்ன விளைவு ஏற்படுகிற தென்று அறிவது ஆராய்ச்சியின் ஒரு முறை. ஒரு சமயம் மிகப் பழையதொரு கலவையைச் சில கோழிக் குஞ்சுகளின் உடலினுள் செலுத்தினார் பாஸ்டர். அக் கோழிக் குஞ்சுகள் இறந்துவிடும் என்று எதிர்பார்த்தார் பாஸ்டர். அதற்கு மாறாக அவை இறக்கவில்லை, சிறிது நாள் நோய்வாய்ப் பட்டிருந்து பின் பிழைத்துக்கொண்டன. உடல் நலமிக்க கோழிக் குஞ்சுகளின் உடலில் எவ்வளவு காலரா நோய்க் கிருமிகளை ஏற்றினால் அவை இறந்துவிடுமோ, அந்த அளவுக் கிருமிகளை இக் கோழிக் குஞ்சுகளின் உடலில் ஏற்றினார் பாஸ்டர். அவை இப்பொழுதும் இறக்கவில்லை. இதனின்றும் நாட்பட்ட கிருமிகளின் கலவையை ஓர் உடலில் செலுத்தினால் அக் கிருமியால் பரவும் நோயைத் தடுப்பதற்குண்டான தன்மையை அவ்வுடல் பெறுகின்றது என்ற உண்மையைக் கண்டுபிடித்தார் பாஸ்டர். இக் கொள்கையை யொட்டியே அம்மை குத்துகின்ற முறை கண்டுபிடிக்கப்பட்டது. லூயி பாஸ்டர் எதிர்பார்த்துச் செய்த சோதனையன்று இது. அவர் ஏதோ நினைத்துக்கொண்டு கோழிக் குஞ்சுகளுக்கு மருந்தை ஏற்ற, அவை எதிர்பார்த்தபடி இறந்துவிடாமல் பிழைத்துக் கொண்டது எதிர்பாரத நிகழ்ச்சியே.

தற்காலத்தில் மருத்துவத் துறையில் புரட்சிகரமான அளவில் புகுந்துவிட்ட பெனிஸிலின் கண்டுபிடிக்கப்பட்ட விதமே தற்செயல் நிகழ்ச்சியின்பாற் பட்டதே. டாக்டர் ப்ளெமிங் என்பார் ஒருவகைக் கிருமிகளைப் பற்றி ஆராய்ந்துகொண் டிருந்தார். கிருமிகளை ஒரு சிறிய தட்டில் வைத்து அவை வளர்வதற்குரிய பல பொருள்களையும் அவற்றுடன் வைத்து அக்கிருமிகளை வளர்த்தார். ஒரு தட்டில் ஒரு சமயம் குறிப்பிட்ட வட்டமான இடத்

தில் அக் கிருமிகள் வளர்ச்சியற்றும், இறந்துபோன நிலையிலும் இருப்பதைக் கண்டார். அவருக்கு அது விந்தையாகப் பட்டது. உடனே அதை ஆராய்ந்தார். அதன் பயனாக அவர், அக்கிருமிகள் இறந்து போனதற்குக் காரணம் காற்றிலே பறந்துவந்து அத்தட்டிலே விழுந்த பெனிஸிலின்தான் என்றுகண்டுபிடித்தார். அங்குத் தற்செயலாக பெனிஸிலின் விழுந்த இடத்தைச் சுற்றியுள்ள நோய்க் கிருமிகள் அனைத்தையும் கொன்றுவிட்டதைத் திட்டமாக அறிந்தார் டாக்டர் ப்ளெமிங் (Dr.Fleming). அன்றிருந்து பிறந்தது பெனிஸிலின் சஞ்சீவி.

இத்தகைய தற்செயல் நிகழ்ச்சிகளால் மனித சமுதாயத்திற்குப் பயன்படுகின்ற பல உண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் இத்தகைய விஞ்ஞானக் கருத்துக்கள் தற்செயல் நிகழ்ச்சிகளின் மூலமே கண்டுபிடிக்கப்பட்டன என்று கொள்வது பொருந்தாத தாகும். இத்தகைய ஆராய்ச்சி முடிவுகள் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் இவைகளை அறிய முயற்சிகளும் நடத்தப்பட்டன. அவைகள் கண்டுபிடிக்கப்பட்டது தேடிப்போன மருந்து காலடியில் கிடைத்ததுபோலவே யாகும்; தேடாத போது காலடியில் கிடைத்ததுபோலல்ல.

—ஓ—

'படக் காட்சி'

தமிழ்ப் பெருமக்களுக்கு	...
தெருக் காட்சிகள்	16
டாக்டர் பெர்மி	40
டாக்டர் கிருஷ்ணன்	41
மோகம் என்பது இதுதானோ? ...	48
விஞ்ஞானப் புதுமைகள்	58
காலத்தை வென்ற களிப்பு	78
வழிபாட்டுச் சுமை	...
வாழ்க்கைச் சுமை	...
பூமகளின் புன்னகை	79
பெண்மை அறம்	84
துருவ நட்சத்திரம்	100
பாறை பிளந்தது	101

கிழக்கும் மேற்கும்

யோகி சுத்தானந்த பாரதியார்

★

போகம் வளர்வது மேற்கினிலே — சுத்த
யோகம் வளரும் கிழக்கினிலே
யோகமும் போகமும் ஒன்றுபட்டால் — இன்பம்
ஓடிவரும் உயிர் நாடியிலே

ஞானம் பொலியும் கிழக்கினிலே — விஞ்
ஞானம் செழிப்பது மேற்கினிலே
ஞான ஒளியும்விஞ் ஞானமுங் கூடினால்
வானம் விளையாடும் வாழ்வினிலே

பொருள் செழிப்பது மேற்கினிலே — அருள்
பொங்கித் ததும்பும் கிழக்கினிலே
அருளும் பொருளும்அ ளாவிய வாழ்க்கையே
ஆனந்தத் தேனமு தாகிடுமே

சக்தி தழைப்பது மேற்கினிலே — உப
சாந்தம் தழைக்கும் கிழக்கினிலே
சக்தி யுடன்உப சாந்தமுங் கூடினால்
சண்டைக் கிடமில்லை எண்டிசையும்

முத்திக்கு முத்தி கிழக்கினிலே — புது
முயற்சிமுன் னேறுது மேற்கினிலே
முத்தியும் வீர முயற்சியும் கூடினால்
மூவுலகும் வெற்றி தாவிவரும்

குண்டு வெடிப்பது மேற்கினிலே — மனங்
குளிர வுரைப்பது கிழக்கினிலே
துண்டுசெய் சூழ்ச்சிகள் மேற்கினிலே — பரி
சுத்தாத்ம நேயங் கிழக்கினிலே

உலகறி வோங்கிடும் மேற்கினிலே — நல்ல
உள்ளறி வோங்கும் கிழக்கினிலே
உலகமும் உள்ளமும் ஒன்றுபட்டால் — உயிர்
ஒற்றுமை யாக நிலாவிடுமே

தேக சுகந்தரும் மேற்கினிலே — ஆத்ம
தியான சுகமாம் கிழக்கினிலே
தேக சுகமுடன் ஆத்ம சுகமுஞ்
செழித்தநல் வாழ்வு செயம்பெறுமே.

★

தெருக்
காட்சிகள்
1

தெருவிலே சமயம்

தெருக் காட்சிகள் 2








தெருவிலே வாணிபம்

தெருக்
காட்சிகள்
௫

தெருவிலே தொழில்



தெருவிலே இரத்தல்



தெருவிலே வேதனை

டங்கள்;
சந்தாமியான்.

தெருவிலே வாழ்க்கை

தேமதுரத் தமிழோசை

பேராசிரியர்—சொல்லின் செல்வர்—
ரா.பி. சேதுப்பிள்ளை, B.A., B.L.

'யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று பாடினார் பாரதியார். தேமதுரத் தமிழோசையிலே திளைத்தவர் அவர். அக் கவிஞர் கண்ட தமிழின் தனிப் பண்பாகிய இனிமையைத் தொன்றுதொட்டுப் பேணி வருகின்றது தமிழகம். தமிழ் மொழியின் சிறப்பெழுத்தாகிய 'ழ' கரத்தால் வரும் இன்பம் தமிழ் மக்களுக்கே உரிய தனிப் பெருஞ் செல்வம். உழவும் தொழிலும் செய்து, குழலும் யாழும் கேட்டு உயர்வுற்றிருந்தனர் பழந்தமிழர். 'இழும்' என்னும் மொழியால் விழுமிய பொருளை விளக்கும் அழகினைப் போற்றினார் தொல்காப்பியனார். அவர் மொழியைப் பொன்னே போல் போற்றிப் பழமுதிர் சோலையைப் பாடுகின்றார் நக்கீரர்.

இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே!

என்று திருமுருகாற்றுப்படையிலே பாடியருளினார் அப்புலவர் பெருமான். இவ்விரண்டு அடிகளில் எத்தனை 'ழ' கரம் எவ்வாறு அமைந்து செவிக்கின்பம் பயக்கின்றன என்பது கருதத்தக்க தாகும். பழமுதிர் சோலை என்னும் அழகிய மலைக்குரிய இறைவனை 'மலைகிழவோன்' என்று புகழ்கின்றார் கவிஞர். அந்த மலையில் உள்ள அழகிய அருவியை இழுமென இழிதரும் அருவி என்று எழுதிக் காட்டுகின்றார்.

அருவியில்லாத மலை கதிரொளியில்லாத வானம் போல் அழகற்றது என்று கருதுவர் தமிழ்க் கவிஞர். வடவேங்கடம் முதல் தென்குமரி வரையிலுள்ள தமிழ்நாட்டு மலைகளில் கண்ணையும் கருத்தையும் கவரும் அருவிகள் பல உண்டு. 'வீங்கு நீரருவி வேங்கடம்' என்று வடவேங்கட மலையைப் புகழ்ந்து போற்றினார் இளங்கோ வடிகள். 'தேனருவித் திரை யெழும்பி வானின் வழியொழுகும்' என்று திருக்குற்றால மலையின் அருவியைப் பாடினார் குறவஞ்சிக் கவிஞர். 'பழமுதிர் சோலை' என்னும் சோலைமலையிலே கண்ணுக்கினிய அருவி கறங்கி வழிந்து இறங்கி ஆறாகப் பாய்ந்து ஓடுகின்றது. 'சிலம்பாறு' என்பது அதன் பெயர். சிலம்பின் ஒலிபோல் செவிக்கின்பம் தரும் செவ்விய ஓசையை உடையது அந்த நதி. இத்தகைய சிலம்பாற்றின் அருவியை 'இழுமென இழிதரும் அருவி' என்று இனிமையாகப் பாடினார் நக்கீரர்.

இங்ஙனம் தொல்காப்பியர் கால முதல் பாரதியார் காலம் வரை, செந்தமிழ்ப் பாட்டிலும் உரையிலும் பயின்று செவிக்கின்பம் பயக்கும் சிறப்பு 'ழ' கரத்தைப்

புறக்கணிக்கப் புறப்பட்டுள்ளனர் சில தமிழறிஞர்! பொது 'ள' கரம் சிறப்பு 'ழ' கரமாகிய இரண்டையும் ஒன்ருக்கிச் செந்தமிழ் மொழியினைச் செப்பனிட வேண்டும் என்பது அன்னூர் கொள்கை! பாட்டுக்கொரு புலவராகிய பாரதியார் புகழ்ந்த முப்பெருங் கவிஞரும் செப்பமாகப் போற்றிய பெருமை சான்றது சிறப்பு 'ழ' கரம்.

'குழலினிது யாழினிது என்ப தம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்'

என்ற திருக்குறளில் மூன்று 'ழ' கரத்தை முறையாக அமைத்துத் தமிழின் ஒலி மாட்சியைக் காட்டுகின்ருர் திருவள்ளுவர். வள்ளுவர் வாக்கின் இனிமையை நுகர்ந்தார் இளங்கோவடிகள். கற்பரசியாகிய கண்ணகியின் பேச்சினிமையைப் பற்றிப் பாடும்பொழுது வள்ளுவர் தந்த சொல்லின்பத்தை வாரி வழங்குகின்ருர். செல்வச் செழுங்குடியிலே பிறந்த கண்ணகி இளங் கிளிகளைக் கையிலே வைத்துக்கொண்டு தமிழிலே பேசிக் கொஞ்சுகின்ருள். அவள் மொழிகளைக் கேட்ட கிளிகள் மகிழ்ச்சி கொள்வதற்கு மாருக வருத்தமுற்று வாடியிருக்கின்றன. 'கண்ணகியைப் போல் நாம் பேச முடியுமா? குழலும் யாழும் அமிழ்தும் குழைத்த அம் மழலை மொழிகளின் இனிமை நமக்கு வருமா?' என்று எண்ணி வருந்துகின்றன அக்கிள்ளைகள். இக்காட்சியைக் காட்டுகின்றது சிலப்பதிகாரம்.

'அளிய தாமே சிறுபசுங் கிளியே!
குழலும் யாழும் அமிழ்தும் குழைத்தநின்
மழலைக் கிளவிக்கு வருந்தின'

என்று பாடினூர் இளங்கோவடிகள். இவ்வடிகளில் ஐந்து 'ழ' கரம் அழகுற அமைந்து செவிக்கின்பம் பயக்கின்றது.

திருவள்ளுவரையும் இளங்கோவையும் பின்பற்றிச் செல்கின்ருர் கம்பர். இலங்கைமா நகரில் உள்ள மாடமாளிகைகளில் மங்கையர் சிறையாரும் மடக்கிளியைச் செங்கையில் வைத்துக்கொண்டு மொழிபயிற்றுகின்ருர்கள். அக்காட்சியைக் காட்டும் கவிதையில் சிலப்பதிகாரக் கிளியை நினைவிற்கொண்டு பாடுகின்ருர் கம்பர்.

'குழலும் வீணையும் யாழுமென்
றினையன குழைய
மழலை மென்மொழி கிளிக்கு விருந்
தளிக்கின்ற மகளிர்'

என்பது கம்பர் பாட்டு.

இவ்விரண்டு அடிகளிலும் ஐந்து சிறப்பு 'ழ' கரம் அடுத்து வந்து படிப்போர் செவியில் இன்பத் தேன் சொரிகின்றது.

இத்தகைய சீர்மை வாய்ந்த சிறப்பு 'ழ' கரத்தைச் சிதைத்து வழங்கும் சிறுமை தமிழ் நாட்டின் சில பகுதிகளில் உண்டு. சிதம்பரத்தில் திருவிழாவைத் 'தீருவிஷா' என்பர். சென்னைமா நகரத்தில் 'வழக்கம்' 'வயக்கம்' ஆகும்; பழக்கம் 'பயக்கம்' ஆகும். நல்ல தமிழ் வழங்கும் நாடு என்று புகழப்படுகின்ற பாண்டி நாட்டிலும் ஈழநாட்டிலும் பேச்சு நடையில் பொது 'ள' கரத்திற்கும் சிறப்பு 'ழ' கரத்திற்கும் வேற்றுமை செய்வது இல்லை. இக்குறைபாட்டைப் பொதுவாகத் தமிழ் நாட்டின் தலையிலேற்றிச் சிறப்பு 'ழ' கரத்தை ஒழிக்க முயல்வது சரியன்று. பேச்சுத் தமிழில் காணப்படுகின்ற குறைபாடுகளை எப்படிப் போக்குவது என்று சிந்தித்துச் சீர்திருத்தம் செய்தலே ஏற்றதாகும். தமிழ் நலம் பேணும் தலைவர்களும் அறிஞர்களும் சிறப்பு 'ழ' கரத்தைச் செப்பமாக உச்சரிப்பதற்கு ஓர் இயக்கத்தைத் தோற்றுவித்தல் வேண்டும். ஆசிரியர்கள் இளம் பிள்ளைகட்குத் தமிழ்ப்பாடம் பயிற்றும்போது சிறப்பு 'ழ' கரத்தைச் செம்மையாக உச்சரித்தல் வேண்டும். ஒலிமயக்கம் காணும் இடங்களில் உரிமையோடு திருத்துதல் வேண்டும். இத்தகைய நேரிய முறையைக் கைவிட்டுக் குறுக்கு வழிகளில் சீர்திருத்தம் செய்ய முயல்வது குழப்பம் விளைக்குமே யன்றி ஒரு நாளும் தமிழ் மொழிக்கு நயம் பயக்க மாட்டாது. தமிழ்ப் பாட்டிலும் உரையிலும் பயின்று வரும் சிறப்பு 'ழ' கரத்தின் இன்பத்தை நுகர்ந்த தமிழ் நாடு ஒரு நாளும் அதனைக் கைவிடாது என்பது திண்ணம்.

தருமன் சால்பு

நாவலர்-கணக்காயர்-
ச. சோமசுந்தர பாரதியார், M.A., B.L.

*

பாரதம் வட ஆரியர் காவியங்களுள் ஒன்று. அதை அவர் இதிகாசம் (பூர்வகதை) என்பர். அதில் தென்தமிழருக்கு எவ்விதத் தொடர்பும் கிடையாது. அதன் கதாபாத்திரர்பால் தமிழருக்கு இயற்கை விருப்போ இருக்க வேண்டாம். அவரவர் கொள்கை குறிக்கோள் நோக்கம் செய்கைகளால் சீர் தூக்கி மதிப்பதுவே அறிவும் அறனுமாகும். பண்டிதரும் பாமரரும் தருமனைப் புகழ்ந்தும் துரியோதனனை இகழ்ந்தும் வருகின்றனர். கதைப்பவர் கூற்றைமட்டும் ஆதரவாய் ஏற்றுக் கொண்டா லன்றி, அவரவர் செயலையும் இயலையும் உரைகல்லாய்க் கொண்டு மதிப்பின் அவ்விருவரைப் பற்றி வழக்கிலிருக்கும் கொள்கை சரியாய்க் காணவில்லை. ஆழ்ந்து சூழ்ந்து அலசி அளப்பின், கதை காட்டும் காட்சி வேறும், கதைப்பவர் போற்றும் மாட்சி வேறுமாய்த் தோன்றுகின்றன. ஆயினும் தமிழ்ப் புலவரும் ஆரிய ஆசிரியர் கூற்றை ஏற்று, தருமனைப் போற்றியும், சுயோதனனைத் தூற்றியும் வருகின்றனர். ஆதலால் இங்கு நாம் கதைதரும் காட்சியைச் சிந்தித்துப் புலவர் கூற்றைச் சீர்தூக்கி, உண்மையை ஓரளவு காணமுயல்வோம்.

சுயோதனன் குடிகளுக்கோ குலத்தவர்க்கோ, தொண்டருக்கோ தோழருக்கோ யாதும் தீது செய்யவில்லை; செய்ய விரும்பவுமில்லை. எனினும் தருமன்பால் பகைமை பூண்டான். அது தவருயின், அவனேடு வீடுமர் முதலிய குலத்தலைவரும், துரோணர் போன்ற ஆசிரியரும் சேரவும், தருமனேடு பகைத்துப் போரிடவும் துணிவானேன்? அவரனைவரும் அறம் திறம்பாச் சான்ருேர் என்றே போற்றப்படுகிருர். எங்கும் அவர் சொல்லும் செயலும் அவரைத் தீயன வெறுக்கும் தூயவ ரென்றே காட்டுகின்றன. அவரனைவரும் ஊரிலும் என்றும் சுயோதனனேடும் வாழ்ந்து, பின் போரிலும் அவன் சார்பாய்த் தருமனேடு பொருகின்றனர். அதற்குத் தக்க நியாயம் வேண்டுமெனத் தோன்றிற்று. அதனல் சிறிதூன்றிச் சிந்தித்து, உண்மையை ஆராய்ந்தேன். நான் கொண்ட முடிவைப் பல ஆண்டுகளுக்கு முன்னமே ''தருமர் தாயம்'' என்ருெரு கட்டுரையாய் எழுதி வெளியிட்டேன். அதை மறுத்து எனைத் திருத்த யாருமிதுவரை முன்வரவில்லை. ஆயினும் பண்டிதர் எவரும் 'அதுவே சரி' எனத் தழுவி எழுதவும் இல்லை. இப்போது இளைஞர் சிலர் தருமன்

பண்புகளைத் தெளிவாக விளக்கி ஒரு கட்டுரை எழுதும்படி வேண்டினர். அவர் பொருட்டு இதனை எழுத லாயினேன்.

''தருமன் குருநாட்டில் பாதிப்பங்கு வேண்டினான். சுயோதனன் அதை மறுத்தான். ஆதலால் பாரதப்போர் மூண்டது; பார் அழிந்தது;'' என்பது பண்டிதர் முதல் வாதம். வீடு—காடுபோல, நாடு ஒரு குடும்பத்தார் தம்முள் பங்கிடும் தாயச் சொத்தில்லை. அது அரசன் மூத்த வாரிசுக்கே முழுதுரிமை. பின் பிறந்தாருக் கெல்லாம் வாழ வகைமட்டு முண்டு; அதற்குமேல் எதுவுமில்லை. அறத்தொடு வழக்கும் அஃதே.

சுயோதனன் குருநாட்டரச னில்லை; அவன் தந்தை திருதிராட்டிரனே முடியுடை மன்னனாவான். அவன் கண் பார்வையில்லாக் கபோதி—குருடன். ஆகையால் நாட்டை அவன் மகன் சுயோதனன் அவனுளாய் ஆண்டுவந்தான்.

தருமன் சுயோதனன் சோதரனு மில்லை. அவன் இறந்த சிறியதந்தை பாண்டுவின் மகன். தருமனுக்கு நாட்டில் பங்குரிமை உண்டாயின், சுயோதனன் உடன்பிறந்தார் நூற்றுவருக்கும் தாயமுண்டாம். அவர் பங்கைக் கழியாமல், தருமன் நாட்டில் சரி பாதி கேட்ட தெப்படி? சரிபங்கு தருமனுக்கு நாட்டில் உண்டேல், வீடுமர், துரோணர் போன்ற சான்றோர் எல்லாரும் ஒன்று தருமனோடு சேரவேண்டும்; அன்றேல் ஒதுங்கிப் பொதுவாய் விலகல் வேண்டும். அறம் துறந்து, முறை திறம்பி, சுயோதனன் பொருட்டுப் போரில் அவன் சார்பாய்த் தருமனோடு பொருவாரா?

இனி, ''தருமனே குருகுலத்தார் அனைவருக்கும் வயதில் மூத்தோன்; அதனால் அரசுரிமை அவனுக்கு முதலில் உண்டு'' என்னில், வயது முதுமைக்காகமட்டும் அரசுரிமை தருவதில்லையே. பின் வழியில் முன் பிறந்தார், முன் வழியில் பின் பிறந்தோரின் நாட்டரசுச் சிறப்புரிமை பறித்தடைய அறமில்லை; வழக்குமில்லை. அரசனிறந்தால் வயதில் முதிய அவன் தம்பியர் இருக்க, இளையரான அவன் மக்களுள் மூத்தவனுக்கே அரசுரிமை இறங்குமன்றி, வயது முதுமைக்காக இறந்த அரசன் தம்பியர்க்கு இறங்காது; இருக்கும் திருதிராட்டிரனே அரசன். அவனிறந்தால், அவன் மக்கள் நூற்றுவருள் அப்போதிருப்பவருள் முதல்வனுக்கே அவன் அரசு வரும். தருமன் அவருக்குத் தம்பியுமில்லை. அரசனிருக்க, அவனுக்குப்பின் வரிசையாய் அவனரசுக்குரிய அவன் மக்கள் நூற்றுவரிருக்க, அவன் இறந்ததும் தம்பி பாண்டுவின் புதல்வனான தருமனுக்கு நாட்டில் சரிபாதி உரிமை ஏது? அரசனிருக்க, அவனிறந்தால் நாடாள அவன் முதல் புதல்வன் தானிருக்க, ஒருகால் தானிறக்க நேரினும் தனக்குப் பின் உரிமை உடையார் வரிசையாய் நூறுபேரிருக்க, உரிமை கொள்ளாமலும் கோராமலும் இறந்த சிறு தந்தை மகன் தருமன் நாட்டில் பங்கு கேட்டதெப்படி? இது தருமன் மண்வெறுப்பு. நிற்க, இனி அவன் பெண் வெறுப்பையும் ஒருவாறு கருதிப் பார்ப்போம்.

துருபத மன்னன் தன்னைப் போரில் வென்ற இளையனான அருச்சுனனுக்குத் தருதற்கென்றே தவம் செய்து கடவுளிடம் வரம் வாங்கித் துரோபதையைப் பெற்றான். அவள் மங்கைப் பருவம் அடைந்தவுடன். அவளை மணப்பதற்கு அருச்சுனனைக் காணவில்லை. உருக்கரந்து புறம் திரிந்த பாண்டவருள் ஒருவனான அவனைத் தேடத் துருபதன் ஒரு சூழ்ச்சி செய்தான்.

தனஞ்சயன் தவிரப் பிறர் எவரும் செய்யவொண்ணா வில்லாண்மை அருஞ்செயல் ஒன்றைக் குறிப்பிட்டு, அதனைப் புரிபவர்க்கே தன் மகளைத் தருவதாகச் சூள் வைத்தான். சூள் களத்தில் பார்ப்பனராய்

வேடம் பூண்டு வந்திருந்த ஐவருள் பார்த்தன் சூள் முடித்துப் பெண்ணை வென்றான். பின் அப்போலிப் பார்ப்பார் துரோபதையைத் தன் தாயிருக்கு மிடத்துக்கு அழைத்துச் சென்றார்கள். தருமன் அங்கு முதலிற் புகுந்து, தாம் ஒரு கனி கொணந்திருப்ப தாய்த் தாயிடம் சூதாகச் சொன்னான். 'கொணர்ந்தால்ஐவரும் பொதுவாய் அதனை உண்மின்' எனச் சொன்னாள். பிறகு தன் மக்கள் கொணர்ந்தது கனியன்று, கன்னி எனக் கண்டு, குந்தி நொந்து தான் சொன்னதற்கு வருந்துகையில், தருமன் தங்கள் எண்ணமும் அதுவேயாதலால், தாய்வாய்ச் சொல் வீணாகாமல் துரோபதி ஐவருக்கும் பொதுமனைவி ஆவதுவே முறையென்று கூறி, அவளைத் தனஞ்சயனோடு தானுங் கூட மணந்துகொண்டான். அப்பழியைப் பிறர் எவரும் குடிக்கிழிவென் றெடுத்துக் கூறி தடுக்கத் தருமனுக்கஞ்சித் துணியவில்லை. துணிந்திகழ்ந்த சுயோதனன் தருமனால் கொடியோன் என வெறுக்கப்பட்டான். பிறப்பாலும் வரத்தாலும், துருபதன் சூளாலும் தனஞ்சயன் தாளாலும் அவன் ஒருவனுக்கே உரிய துரோபதி ஒருத்தியைத் தருமன் சூழ்ச்சியால் தனக்கும் உரியளாய் ஆக்கிக்கொண்டான். ஒருத்தியைப் பலர் தமக்குப் பொது மனைவியாய்க் கொள்ளப் பொருத்தமான விதிவழக் கெதுவும் உண்டா? நாடறியப் பீடழிக்கும் அக் கொடிய கூட்டுறவைப் பழிபாவமஞ்சாமல் சதிசெய்து முடித்துக்கொண்ட தருமன் தன் நெஞ்சுரமும் துணிவும் என்னே! 'இப்படி மண்ணாசை பெண்ணாசை எனுமிரண்டு துறைகளிலும் தப்பான உள்ளமொடு, ஒப்பனைக்கு நல்லவனாய் நடந்தவனைத் 'தருமன்' என்பது' கருநிறத்தொருவனை 'வெள்ளையப்பன்' என்றும், நச்சரவை 'நல்லது' என்றும் சொல்லுவது போலாமன்றோ?

—ஓ—

தமிழகத்தின் அறிவுப் பணி முன்னணியில் முன்னிற்பது

கலைக்கதிர்

↓

ஆண்டுச் சந்தா ரூ 5-0-0

விவரங்கட்கு:

கலைக்கதிர் — பீளமேடு — கோவை.

நற்செயல்

மேடை ஏறிப் பேசுவதற்கு—விருப்பம்போல் பேசுவதற்கு — உரிமை; பேனா எடுத்து எழுதுவதற்கு—மனம்போன போக்கில் எழுதுவதற்கு—உரிமை; தேர்தல் காலத்தில் விரும்பியவர்க்கு வாக்குச்சீட்டு அளிக்க உரிமை: இந்த உரிமைகள் மட்டும் இருந்தால் போதாது. இவைகள் ஆயிரத்துக்கு ஒருவர் இருவர் விரும்பும் உரிமைகள்.

வயிறு வாடாமல் உண்பதற்கு உரிமை; மானம் கெடாமல் உடுத்துவதற்கு உரிமை; கவலை இல்லாமல் ஏதேனும் தொழில் தேடி உழைத்து வாழ்வதற்கு உரிமை: இவைகளே ஆயிரத்திற்குத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றென்பது பேர் விரும்பும் உரிமை.

இவற்றிற்கு அடுத்தபடியாகக் கற்றவர்கள், எழுத்தறிவுடையவர்கள் பொதுவாக விரும்பும் உரிமை என்ன என்றால், தாங்கள் வீட்டில் பேசும் மொழியிலேயே நாட்டு நடவடிக்கைகளை நடத்தும் உரிமை; தங்கள் தாயிடமிருந்து கற்ற மொழியிலேயே ஆசிரியரிடமிருந்து கற்று அறிவை வளர்க்கும் உரிமை; இன்னொருவர் மொழிக்குத் தலைவணங்காமல் தம் மொழியைக் காத்துக்கொள்ளும் உரிமை. இந்த உரிமைகள் சர்வாதிகார ஆட்சியில் கிடைத்தற்கு அரியவை. அந்தச் சர்வாதிகாரத் தலைவன் எந்த மொழி வாழவேண்டும் என்று எண்ணுகிறானோ, அந்த மொழி தவிர வேறு மொழி படிக்கவும் போற்றவும் அவனுடைய ஆட்சி இடம் தராது.

இந்த நாடு உரிமைபெற்ற நாடு. உணவு உடை வீடு தொழில் முதலியன பெற்று மக்கள் எல்லோரும் நலமாக வாழ்வதற்கு வழிகள் கோலப்படுகின்றன. இம்முயற்சி உடனடியாக வெற்றி தருவது அருமை; முயற்சி நிறைவேறுவதற்கு ஓரளவு காலம் வேண்டும்; பொருளும் வேண்டும்; பெரிய திட்டங்களும் வேண்டும்.

ஆனால், மக்கள் பேசும் மொழியிலே நடவடிக்கைகள் நிகழ்த்த, கல்லூரி முதலியவற்றில் அறிவை வளர்த்துக் கொள்ள, தம் மொழியைப் போற்றி வளர்த்துக்கொள்ள, பெரும் பணச் செலவு வேண்டா; ஐந்தாண்டு பத்தாண்டுத் திட்டங்கள் வேண்டா. தொடங்கிவைத்து வழிகாட்டினால் போதும்; தூண்டுகோலாக இருந்து ஊக்கமளித்தால் போதும்.

அரசியல் உரிமைபெற்ற இந்த நாட்டில் மக்கள் மொழியுரிமை எதிர்பார்த்தல் இயற்கை. உலகத்து நாடுகள் எல்லாம் இதற்கு வழிகாட்டியுள்ளன. ஆகையால் இந்த நாட்டு மக்களும் மற்ற நாட்டு மக்களைப் பார்த்து, மொழித் துறையில் உரிமையோடு வாழ விரும்புகிறார்கள்.

உலக விஞ்ஞானிகளின் மாநாடு நடக்கிறது. பல நாடுகளி லிருந்து விஞ்ஞானிகள் வந்து சேர்கிருர்கள். தம் தம் தாய் மொழியிலே பேசுகிருர்கள். உலகப் பொது மொழியான ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்புக்கள் நடைபெறுகின்றன. ஆங்கிலம் தெரிந்தாலும் அதில் பேசுவதால் தம் கருத்து தெளிவாகாது என உணர்ந்து, பிறர் உணராத தம் தாய் மொழியிலே பேசுவதைக் கடமையாகக் காட்டிச் செல்கிருர்கள்.

அண்மையில் நடைபெற்றது உலகக் காட்டியல் (Forestry) மாநாடு. உலக ஒற்றுமைக் கழகத்தின் (U. N. O.) காட்டியல் செயலாளர் வந்து பேசினுர். தம் தாய் மொழியாகிய பிரஞ்சு மொழியிலே பேசினுர். அந்தப் பேச்சு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. இவ்வாறு வேறு சிலரும் தம் தம் தாய் மொழியிலேயே பேசினர். மாநாடு இனிதுதான் நடந்து நிறைவேறியது.

ஆனுல் டில்லியில் பாராளுமன்றம் நடைபெறுகின்றது. இன்னும் பதினைந்து ஆண்டுகள் அங்கு ஆங்கிலத்திற்கும் இடம் உண்டு என்று ஐந்து ஆண்டுகளுக்கு முன் சட்டம் செய்யப்பட்டது. ஆயின் இன்று ஒருவர் இந்தியில் பேசுகிருர். இந்தி அறியாத தமிழரும் பிறரும் கேளாமல் கேட்டுக் கொண்டு, விளங்காமல் அமர்ந்திருக்க நேர்கின்றது. ஆங்கில மொழிபெயர்ப்பு வேண்டும் என்று (தமிழ் மொழிபெயர்ப்பு வேண்டும் என்று அல்ல) தமிழர் எதிர் பார்க்கின்றனர், ஏமாறுகின்றனர்; கேட்டுப் பார்க்கின்றனர், கோரிக்கை மறுக்கப்படுகின்றது.

கருத்தை வெளியிடும் உரிமை எவ்வளவு இன்றியமையாததோ, அதைவிட இன்றியமையாதது கருத்தை வெளியிடுவதற்கு ஏற்ற தாய் மொழியை வாயிலாகக் கொள்வது. இவ்வாறு நோக்கினுல் அங்கு உள்ள உறுப்பினர் ஒருவர் இந்தியில் பேச உரிமை உடையவரே. அதை மறுக்க எந்தத் தமிழர்க்கும் உரிமை இல்லை.

ஆனுல், தமிழர் இவ்வாறு தம் தாய் மொழியில் கருத்தை வெளியிட உரிமை பெற்றுள்ளனரா? ஆங்கிலம் தெரிந்திருந்தாலும், ஆங்கிலம் அந்நிய மொழி யாதலின், தமிழர் தம் கருத்தை அவ்வளவு நன்ருக அதில் உணர்த்த முடியாது. இந்த உண்மையைக் கருதினுல், ஒவ்வொரு தமிழரும் தம் மொழியிலேயே பேசுதல் கடமை என்பது தெளிவாகின்றது. வெளி நாட்டி லிருந்து சூ யென் லாய் போன்றவர் இந்தியாவிற்குவந்து பேசும்போது தம் தாய் மொழியில்தான் பேசுகின்றனர். அந்த மொழியே வானொலியிலும் பரப்பப்படுகின்றது. அதனேடு ஆங்கில மொழிபெயர்ப்பும் கேட்பதால், பொருளுணர முடிகின்றது. அவ்வாறே தமிழர் உரிமை பெற்று வாழும் நிலை உடையவர்க ளாயின், தம் தாய் மொழியிலே பேச இடம் இருக்க வேண்டும். அதை ஆங்கிலத்திலோ இந்தியிலோ மொழிபெயர்க்கவும் டில்லி பாராளு மன்றத்தில் ஏற்பாடு இருக்க வேண்டும். பல துறைகளில் பெருஞ் செலவு செய்து நாட்டைக் காக்கும் நிலையில் உள்ள மத்திய அரசாங்கம், உறுப்பு நாடுகளின் மொழியுரிமை காரணமாக-மொழிபெயர்ப்பு ஏற்பாடு காரணமாக- ஏற்படக்கூடிய சிறு செலவினங்களையும் தாங்குதல் வேண்டும்.

ஆனுல் தமிழர் இப்போது இந்த உரிமையைக் கேட்கவில்லை; தம் பெருந்தன்மையினுல், அல்லது சிறுபான்மை யுணர்ச்சியால், அல்லது கட்சிக் கட்டுப்பாட்டினுல் அமைதியாக இருக்கவேண்டியுள்ளது. ஆனுல் இதே நிலைமை நீடிக்கும் என்று கூறமுடியாது. காலம் மாறும். இந்த உரிமையையும் அடிப்படையாக வைத்து உறவு பேசவேண்டிய நிலைமையும் ஏற்படலாம்.

அது போகட்டும். அங்கு இந்தியில் பேசுவோரின் பேச்சுக்களை - அல்லது அந்தப் பேச்சுக்களின் கருத்துக்களை - அறிவதற்கு உறுப்பினர்க்கு உரிமை உண்டு; அதற்கு மொழிபெயர்ப்பு வேண்டும் என்று கேட்கவும் உரிமை உண்டு. இந்த உரிமை மறுக்கப்படுகிறது. இது வருந்தத்தக்கது.

தம்பி அண்ணனிடம் பங்கு கேட்க உரிமை இருக்கிறது. தன் பொறுமையால் அல்லது மறதியால், அல்லது அச்சத்தால், அதைப்பற்றிக் கவலைப்படாமல், இப்போது அண்ணனிடம் அவன் கேட்பது உணவு மட்டுமே. உணவும் மறுக்கப்படுகிறது. ''நீயே உழைத்துப் பாடுபட்டு, இந்நேரம் நீயே உணவு தேடி உண்ணும் நிலைமை அடைந்திருக்க வேண்டும். ஆகையால் உணவு இல்லை; போ'' என்று மறுக்கப்படுகிறது.

சிலர் கூறுகின்றனர்: தம்பி செய்த தீவினை இது என்று. முதல் உரிமை இழந்தது ஒரு பாவம்; அந்தப் பாவத்தின் வினைவால் இரண்டாம் உரிமையும் போயிற்று. உரிமை என்பது ஏமாற்றத்திற்கு இடம் தராமல் வாழ வல்லவர்களின் செல்வம். உரிமைக்கு ஏற்ற தகுதியைத் தம்பி தேடிக் கொள்ளாதது குற்றம் என்கின்றனர்.

அது வேறு கதை.

ஆங்கிலம் அந்நிய மொழி, அது நம் நாட்டு மொழி அன்று, இந்தியை முன்னமே கற்றுத் தேறியிருக்க வேண்டும் என்று காரணம் கூறலாம். ஆனால் தமிழரைப் பொறுத்தவரையில், ஆங்கிலம் மூன்றாம் கால் பங்காளியின் மொழி என்றால், இந்தி இரண்டாம் கால் பங்காளியின் மொழி; மொழித்துறையில் நின்று நோக்கினால் இரண்டும் அந்நிய மொழியே. இதை மறைத்துப் பயன் இல்லை. உண்மைகளை மறைத்துவிட்டு ஆக்க வேலைகள் செய்தல் நன்று அன்று.

போகட்டும். ஆங்கிலத்தைவிடச் சிறப்பாக இந்தியைக் கற்றிருக்க வேண்டும் என்றால், அது இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்குக் கூறவேண்டிய உபதேசம். உபதேசம் அன்று, ஆணையே என்றால் சட்டங்களின் வாயிலாக அதை முன்னமே செய்திருக்க வேண்டும். முதலாவதாகப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலம் தலைகாட்டாமல் செய்திருக்கவேண்டும். இரண்டாவதாக, தேர்தலில் நின்று டில்லி பாராளு மன்றத்திற்கு வருவோர்க்குத் தகுதிகளில் ஒன்றாக இந்தி அறிவை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இந்தி கற்றுத் தேறாதவர்கள், அல்லது, மன்னிப்புக் கேட்டு இரண்டு ஆண்டுகளில் கற்றுத் தேறுவதாக வாக்குறுதி அளிக்காதவர்கள் பாராளுமன்றத் தேர்தலில் நிற்கத் தகுதி அற்றவர்கள் என ஆணையிட்டிருக்க வேண்டும்.

இவ்வாறு செய்தல் மக்களாட்சி (ஜனநாயக) முறைக்கு மாறானது என்றால், மக்களாட்சி முறையை எங்கும் போற்றுதல் வேண்டும். மக்களின் தாய் மொழியில் அல்லது மாகாண மொழியில் பேசுவதற்கும், அம்மொழியில் பிறர் கருத்து மொழிபெயர்த்து அறிவிக்கப்படுவதற்கும் உரிமை அளித்து ஏற்பாடு செய்வதுதான் மக்களாட்சி முறைக்கு இயைந்தது ஆகும். அவ்வாறாயின், ஆங்கில மொழிபெயர்ப்பு வேண்டும் என்று கோரும் தமிழ்நாடு உறுப்பினரை நோக்கிப் பாராளுமன்றம் பின்வருமாறு கூறுதல் வேண்டும்: ''தமிழ்நாட்டு உறுப்பினர்களே! நீங்கள் ஆங்கில மொழிபெயர்ப்பு வேண்டுமென்று கேட்பது மக்களாட்சி முறைக்கு இயையாதது. உங்கள் கோரிக்கை தவறானது. மக்களாட்சி அவரவர்களின் தாய்மொழியினைப் போற்றுவதற்கும் பொது மொழியாகிய இந்தியைப் போற்றுவதற்குமட்டுமே உரிமை அளிக்க முடியும். அந்நிய மொழியாகிய ஆங்கிலத்தைப் போற்ற உங்களுக்கு உரிமை அளிக்க முடியாது. ஆகையால் ஆங்கில மொழிபெயர்ப்புத் தரமுடியாது.

உங்கள் நாட்டு மொழியாகிய தமிழில் மொழிபெயர்த்து அறிவித்தல்மட்டுமே முடியும். இதோ தமிழ் மொழிபெயர்ப்பு'' என்று அறிவித்திருக்க வேண்டும். அப்போது தமிழர்க்கு இது மக்களாட்சியே என்ற எண்ணம் வேரூன்றும். இல்லையேல், ஆங்கிலேயர் ஆட்சிக்கும் இந்தியர் ஆட்சிக்கும் என்ன வேறுபாடு என்ற ஆராய்ச்சியில் அவர்களின் மனம் சென்று விடக்கூடும்.

வேறுவகையாகக் கூறலாம். ''ஆங்கிலேயர் இந்த நாட்டை ஆண்டபோது, ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருந்தபோது, நீங்கள் ஆங்கிலத்தை முதல் மொழியாகக் கற்றீர்கள். ஆங்கிலம் கற்காதவர்களும் ஆங்கிலப் பேச்சுக்களை அமைதியாகக் கேட்டுக் கைகட்டி வாய்பொத்தி இருந்தீர்கள். இப்போதும் அப்படியே நடந்து கொள்வது உங்கள் கடமை. அந்நாளில் ஆங்கிலம் ஆட்சிமொழி. இந்நாளில் இந்தி ஆட்சிமொழி. ஆகையால் இப்போதும் முன்போலவே கை கட்டி வாய் பொத்தி இருப்பதே உங்கள் கடமை'' என்று கூறலாம்.

''அந்நாளில் நாங்கள் இருந்த நிலைவேறு. அரசியல் சுதந்தரம் அற்ற அடிமைகளாக வாழ்ந்த காலம் அது. இந்நாளில் அரசியல் சுதந்தரம் பெற்றுள்ளோம். அடிமைகள் என்ற எண்ணம் போய்விட்டது. ஆகையால் ஆங்கிலேயர் எங்களை நடத்தியது போலவே நீங்களும் எங்களை நடத்தலாமா? உரிமைப் போரில் எங்களுக்குப் பங்கு இருந்தது. ஆகையால் உரிமையிலும் எங்களுக்குப் பங்கு உண்டு. அதனால் ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்தது போல் இப்போதும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தல் தகாது'' என்ற விடை காத்திருக்கின்றது.

மற்றொன்றும் இங்கே உணர்தல் வேண்டும். தமிழர் தனி மதமாக நின்று, பிளந்து போகவோ பிரிந்து போகவோ போராடினால், இந்திய அரசியல் சட்டப்படி குற்றமாகும். தமிழர் தங்கள் தனிப் பழக்கவழக்கங்களை மற்றவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டால், பிறருடைய பழக்க வழங்கங்களை அவமதித்தால் அது குற்றம் எனலாம். தங்கள் மொழி மூன்று கோடி மக்கள் பேசும் சிறுபான்மை மொழி என உணர்ந்தும், இந்தியாவில் உள்ள எல்லோரும் தமிழ் கற்றுக்கொள்ள வேண்டும் என்று வெறிபிடித்து வற்புறுத்தினால் அது குற்றம் ஆகும். ஆனால் தமிழை ஒரு மாகாண மொழியாகக் கருதி மாகாண மொழி என்ற அளவில் அதற்குத் தக்க இடம் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டும் என்று கேட்பது குற்றமாகாது அதற்கு மாறாக, மாகாணங்களின் கூட்டமைப்பாகிய பாராளுமன்றத்தில் மாகாண மொழிகளுக்கு இடம் இல்லை என்று கூறுவதே குற்றமாகும். இந்திய அரசியல் சட்டத்தின்படி குற்றம் அன்று. எனினும், மக்களாட்சி முறைப்படி குற்றம் ஆகும்.

இந்திய அரசியல் சட்டம் என்பது காலப் போக்கில் மாறியமையக் கூடியது; திருத்தங்களை ஏற்று ஏற்று மாறவேண்டிய கடப்பாடு உள்ளது. ஆனால் மக்களாட்சி முறையின் அடிப்படையான ஒன்று என்றும் மாறாதது; அதுதான் பெரும்பாலோரின் விருப்பம் என்பது.

தமிழ் நாட்டின் பெரும்பாலோரின் விருப்பம், மொழியைப் பொறுத்தவரையில் தமிழில் பேச, தமிழில் கேட்க உரிமை பெறுவதாகும். சென்னை நீதிமன்றமாயினும் டில்லி பாராளுமன்றமாயினும் தமிழர் விரும்பும் மொழியுரிமை அதுவே ஆகும்.

அவ்வாறு அன்றி, டில்லியில் உள்ள பாராளுமன்றத்தின் உறுப்பினர் பெரும்பாலோரின் விருப்பமே நிறைவேறத் தக்கது எனின், அது ஒரு தனிவகையாகும். உலக ஒற்றுமைக் கழகம் (U. N. O.) முதலிய அமைப்புக்கள் உடன்பட முடியாத தனிப்போக்கு என்றே அதைக் கூறலாம்.

அவ்வாறே வைத்துக்கொள்வதாயினும், வங்காளம், மராத்தி, குஜராத்தி, ஆந்திரா, கன்னடம் முதலிய பிற மொழி மாகாணங்கள் இந்த மொழியுரிமையை மறந்துவிட்டனவா? அந்த மாகாணங்களி லிருந்து வந்தவர்கள், இத்தகைய ஏற்பாட்டுக்கு உடன்பட்டுவிட்டார்களா? "டில்லி பாராளுமன்றம் இந்தியப் பொது மொழியாகிய இந்தி மொழி ஒன்றிற்குமட்டுமே இடம் தரும்; மாகாண மொழிகளுக்கு இடம் தராது" என வங்காளிகளும் மராத்தியரும் குஜராத்தியரும் ஆந்திரரும் கன்னடரும் மற்றவர்களும் ஒப்புக்கொண்டு விட்டார்களா? கட்சிக் கட்டுப்பாட்டுக்காக இன்று அவர்கள் வாய்மூடி மௌனியாக இருப்பதைக் கண்டோ, அல்லது கைதூக்கச் சொல்லும்போது சொன்னபடி கை தூக்குவதைக் கண்டோ, இந்த ஏற்பாட்டுக்கு உடன்பட்டுவிட்டார்கள் என்று கூறமுடியாது. இப்போது உள்ள நிலையின் நெருக்கடியைக் கருதிப் பொறுக்க வேண்டும் அல்லது இன்று காஷ்மீர் முதலிய சிக்கல்கள் தீரட்டும், அல்லது, உலகப் போர்க் குழப்பம் தீரட்டும், அல்லது, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறி நாடு செழிக்கும் வரையில் பொறுக்கவேண்டும், அல்லது இன்றைய நிலையில் கட்சி கட்டுப்பாடாக இருந்தால்தான் உருவாக முடியும், ஆகையால் இப்போது இதில் முனைய வேண்டா என்று வேறு பல காரணங்கள் சொல்லி, பிற மொழி உறுப்பினர்களிடையே அமைதி ஏற்படுத்த முடியும். அதைக் கொண்டும், அவர்கள் இந்த ஏற்பாட்டுக்கு உடன்பட்டு விட்டார்கள் என்று கூறமுடியாது. வேறு எந்தக் காரணமும் இன்றி, உண்மையாகவே தம் தம் மாகாண மொழிகளைத் துறந்து பாராளுமன்றத்தில் பயில உடன்பட்டு விட்டார்கள் என்ற நிலை ஏற்படுமாயின், அப்படிப்பட்டவர்களோடு உறவும் தொடர்பும் கொள்ள நேர்ந்ததைக் குறித்துத் தமிழ்நாடு வருந்தும்; எண்ணி எண்ணிப் புழுங்கும்.

போகட்டும்; இந்த நெருக்கடி, அந்த நெருக்கடி, குழந்தைப் பருவத்தில் உள்ள சுதந்தர நாடு, பகைவர்களின் தொல்லை, வேறு கட்சிகளுக்கு இடம் தரும் வாய்ப்பு என்ற பல காரணங்கள் காட்டி இந்தச் சிக்கலை ஒத்திவைக்கச் செய்யலாம்.

ஆனால் எந்த நெருக்கடிக்கும் தொடர்பு இல்லாத, எவரும் இயற்கை என்று ஒத்துக் கொள்ளக்கூடிய மக்கள் விருப்பம் ஒன்று உள்ளது. அதையாவது மக்களாட்சி போற்றுமா?

இந்தப் பாராளுமன்றத்து உறுப்பினர்கள் டில்லியிலிருந்து தமிழ் நாட்டுக்குத் திரும்புகிறார்கள். அப்போது அவர்களின் பக்கத்து வீட்டாரும் பக்கத்துத் தெருவாரும் கேட்கிறார்கள். "வெள்ளைக்காரன் ஆண்டபோது கார்டு கவர் முதலியவற்றில் தமிழ் எழுத்து இல்லை. இப்போதும் தமிழ் இல்லையே. ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தி எழுத்து வந்திருக்கிறது. இதுதானா மாறுதல்? நம் தமிழ் வராதா? உங்களுக்கு வாக்குரிமை கொடுத்து டில்லிக்கு அனுப்பினோமே. தமிழருக்கு இந்தச் சுதந்தரம் வாங்கித் தரக் கூடாதா? சுற்றத்தாருக்கும் நண்பருக்கும் அன்பாகக் கடிதம் எழுதும்போது, தமிழ் எழுத்து இருந்தால் பார்த்துக் கொண்டே எழுதுவது மகிழ்ச்சியாக இருக்குமே. போதாக் குறைக்கு மணியார்டர் பாரத்திலும் இனிமேல் இப்படியே இந்தி வரப்போகிறதாமே. அப்போது தொகை எங்கே எழுதுவது, பெற்றுக்கொள்வோரின் முகவரி எங்கே எழுதுவது, அனுப்புவோரின் பெயர் முதலியவை எங்கே எழுதுவது முதலியன ஒன்றும் தெரியாமல் தடுமாற நேருமே. வெள்ளைக்காரன் காலத்தில் குருடாக இருந்தது போலவே, இப்போதும் குருடாக இருக்கவேண்டுமா" என்றெல்லாம் அந்த உறுப்பினர்களைக் கேட்கிறார்கள்.

''அதற்குள் நீங்கள் எல்லாம் இந்தி எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்'' என்று உறுப்பினர்கள் சொல்வார்கள்.

''வெள்ளைக்காரன் காலத்தில் சொன்னது போல்தான் இப்போதும் சொல்கிறீர்கள்'' என்று மறுமொழி பிறக்கும்.

தான் உண்டு தன் குடும்பம் உண்டு என்று வாழும் போக்கில் உள்ளவர்கள் கேட்கும் கேள்விகள் இவை.

கற்றவர்கள் வேறுவகையாக எண்ணி வருந்துகிறார்கள். ''மூன்று கோடித் தமிழர் உள்ள நாடு ஒரு சின்ன நாடா? இங்கே அனுப்பும் கார்டு கவர்களில்மட்டும் தமிழில் அச்சடித்தால் என்ன? போகட்டும்; இந்தியிலும் தமிழிலுமாக இரண்டு மொழியிலும் அச்சடித்தால் என்ன? வெள்ளைக்காரன் காலத்தில் ரூபாய் நோட்டுக்களில் தமிழ் எழுத்து இருந்ததுபோல் செய்யக் கூடாதா? இலங்கையில் இருந்து வரும் தபால் ஸ்டாம்புகளில் தமிழ் எழுத்தைப் பார்த்து மகிழ்கிறோமே. இந்த நாட்டில் நாம் எழுதும் கார்டு கவர்களில் தமிழ் எழுத்தைப் பார்க்க உரிமை இல்லையா? கோடிக்கணக்காகக் கார்டும் கவரும் அச்சிடும்போது அவற்றில் ஒரு பங்கை இப்படி அச்சிட்டு நம்மை மகிழ்விப்பதால் ஒரு நஷ்டமும் இல்லையே. ஏன் இப்படிச் செய்கிறார்கள்?'' என்று எண்ணி வருந்துகிறார்கள்.

அன்பு நெறியை நம்பி, அமைதியாகத் தொண்டு செய்வோரின் போக்கு இது.

நாட்டின் பெரும்பாலோராக உள்ள அரசியல் அறியாத மக்களின் விருப்பத்தையும், கற்றவர்களில் நல்லவர்களாக உள்ளவர்களின் விருப்பத்தையும் புறக்கணிப்பது நன்று அன்று. மக்களாட்சி முறைக்கு இயைந்தது அன்று; இப்படிப் புறக்கணிப்பதால், காலப்போக்கில் மொழிச் சிக்கல் தீர்ந்துவிடும் என்று எண்ணுவது பொருந்தாது.

இது ஒருவகையான மறைமுக அடக்குமுறை.

எல்லார்க்கும் எல்லாம்
நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன்
தொழில்.

அவ்வாறு அறிந்து, மக்கள் கூக்குரலிட்டுக் கேட்பதன் முன்பே அவர்களின் விருப்பத்தை அறிந்து நிறைவேற்றுதல் ஆட்சி முறையாகும்.

இந்தக் கடமையைச் செய்யத் தவறும் போதுதான், உலகத்தில் எந்த நாட்டிலும் வீணான குழப்பங்களும் பூசல்களும் ஏற்படுகின்றன. நெறியல்லாத நெறியில் கொந்தளிப்புக்கள் ஏற்படுவதற்கும் இதுவே காரணம் என்பதை உலக நாடுகளின் வரலாற்றில் காணலாம். குழப்பங்களும் பூசல்களும் பிறவும் ஏற்பட இடம் கொடுத்துவிட்டு, பிறகு அவற்றிற்குக் காரணமானவர்களைப் பழிப்பதில் பயன் இல்லை. தம்பியின் மனம் கெடுவதற்கு இடம் கொடுத்து, பிறகு அவனைக் கெட்டவன் என்று பழிப்பதால் பயன் என்ன? தம்பி கெட்டவனாகாமல் காப்பதே சிறந்த கடமை. தமிழர் பரந்த மனப்பான்மையும் தொன்றுதொட்டு வளர்ந்த பண்பாடும் உடையவர்கள். ஆகையால் அவர்கள் இந்தியையும் இந்தி பேசுவோரையும் வெறுக்காத வரையில் அவர்களுக்கு உரிய உரிமையை அளித்துக் காப்பதே நற்செயலாகும்.

குழந்தையின் உள்ளமும் உணவும்

டாக்டர். இராஜம்மாள் தேவதாஸ், M.A., M.Sc., Ph.D.

★

இன்றைய குழந்தைகள் நாட்டின் வருங்கால மன்னர்கள். எதிர்காலத்திற்கு என்றும் அழியாத அஸ்திவாரத்தை நாட்டு பவர்கள். நாட்டின் வளர்ச்சிக்காக நாம் காணும் கனவுகளை உருவாக்கி உயிர் கொடுக்கப் போகிறவர்கள். வாழையடி வாழையாக வந்த நமது பண்பாடு தடையின்றித் தழைக்கச் செய்கின்றவர்கள். தமிழ் மறை தந்த வள்ளுவர் கூறியபடி கிடைப்பதற்கரிய செல்வம் மக்கட் செல்வம்; அந்தச் செல்வத்தைச் சரியான முறையில் பாதுகாத்து வளர்ப்பது நமது அருங் கடமையாகும்.

குழந்தையின் சுகம், குணம், அறிவு, இன்பம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு அடிப்படையான சூழ்நிலைக் காரணங்களை இரு பிரிவாகப் பிரிக்கலாம். ஒன்று, வெளிக்குப் புலனாகாமல் குழந்தையின் உள்ளத்தில், உடலில் ஏற்படும் மாறுதல்களாகிய ''உள் சூழ்நிலை''. மற்றது, குழந்தையைச் சுற்றிலுமிருந்து அதன் வளர்ச்சியைப் பாதிக்கும் உணவு, உடை, வீடு, ஆகாயம், விளையாட்டு, நட்பு முதலியவை அடங்கிய ''வெளிச் சூழ்நிலை''. வெளிச் சூழ்நிலையின் அம்சங்க ளனைத்திலும் மிக முக்கியமானது உணவு. உண்ணும் உணவும், உண்ணும்போதுள்ள உணர்ச்சிகளும் குழந்தையின் உடல் வளர்ச்சியோடு அதன் மன வளர்ச்சிக்கும் ஆதாரமாகின்றன என்ற உண்மை பலருக்குத் தெரிவதில்லை.

குழந்தைப் பருவத்தில் பெறும் உணவானது வளர்ச்சிக்கும், உடலின் பல பாகங்களைக் கட்டுவதற்கும், சக்தியைத் தருவதற்கும், நோயை எதிர்ப்பதற்கும், மலர்ச்சிக்கும், வரையற்ற சுகத்திற்கும் வேண்டிய சத்துக்களைக் கொண்டதாக இருக்கவேண்டும். பச்சிளங் குழந்தைக்குத் தாய்ப்பாலே சிறந்த உணவாகும். தாய்ப்பாலில் இயற்கை உணவுகளில் கிடைக்கக்கூடிய சத்துக்கள் அனைத்தும் அடங்கியிருக்கின்றன. அதில் இரும்புச் சத்து மிகமிகக் குறைவாக இருந்த போதிலும், குழந்தை தாயின் கருப்பையி லிருந்து வெளிவரும் போதே தனது ஈரலில் நிறைந்த இரும்புச் சேமிப்புடன் வருவதால் அக்குறைவு வளர்ச்சியைப் பாதிப்பதில்லை. ஆரோக்கியமான தாய், சீரான உணவைத் தகுந்த அளவில் உண்டு, குழந்தைக்குத் தரும் பால் சுத்தத்திலும், வியாதி அணுக்களின்மையிலும் மேம்பட்டு விளங்குகின்றது. குழந்தையின் உணவில் அக்கறையுள்ள தாய்மார் குழந்தை பிறப்பதற்கு முன்பும் பாலூட்டும் பருவத்திலும் நன்றாகச் சாப்பிடவேண்டும். குறிப்பாகப் பால், முட்டை, பசுங்காய்கறிகள், கீரை வகை

கள் ஆகியவற்றை நிறைந்த அளவில் தாய்மார்கள் சாப்பிடுவது அவசியம். தாய்ப் பாலை உண்ணும் குழந்தைகளுக்குச் சகல சத்துக்களும் அடங்கிய சீருணவு வேண்டிய சமயங்களில் கிடைப்பதுடன், தாயின் அணைப்பில் இணையற்ற ஆதரவும் கிடைக்கின்றது. முதல் மூன்று மாதங்களில் தாய்ப்பாலை மூன்று அல்லது நான்கு மணிக்கு ஒரு முறை கொடுக்க வேண்டும். ஒவ்வொரு வேளையும் குழந்தைக்கு 2 முதல் 3 அவுன்ஸ் பால் கிடைக்கவேண்டும்.

குழந்தைக்கு இரண்டு மாத மானதும்; தாய்ப் பாலில் குறைவாக இருக்கக்கூடிய வைட்டமின் 'C' சத்து அதிகரிக்க அச் சத்து நிறைந்துள்ள ஆரஞ்சு, தக்காளி, சாத்துக்குடி, எலுமிச்சைப் பழச் சாறுகளைத் தரலாம். பழச் சாற்றிலுள்ள சத்துக்களால் குழந்தையின் வளர்ச்சி ஓங்குவதுடன், பற்களும் எயிறுகளும் வலுவடைகின்றன. மூன்ருவது மாதத்திலிருந்து நன்ருக வேகவைத்துக் கடைந்து நாறகற்றிய காய்கறிகளும் சமைத்த சோறும் தர ஆரம்பிக்கலாம். இந்த உணவுகளை முதன் முதலில் சேர்க்கும் போது, மிகவும் பத்திரமாகக் குழந்தையின் நாட்டத்தை அறிந்து சிறிது சிறிதாகச் சேர்க்க வேண்டும். நன்ருகச் சமைத்துக் குழைத்த மாமிசம், முட்டை, பருப்பு முதலிய புரோடீன் சத்து நிறைந்த பொருட்களை 6 முதல் 8 வது மாதத்திலிருந்து கொடுக்கலாம்.

குழந்தைக்கு ஒரு வயது ஆகும் சமயத்தில் தாய்ப்பாலை முற்றிலும் மறக்கடிக்க வேண்டும். ஒரு வயதுக்கு மேற்பட்டுக் குடும்ப உணவில் குழந்தையும் பங்கெடுத்துக்கொள்ளலாம். ஆரம்பத்திலிருந்தே அனுவசியமான காரம், உப்பு, புளிப்பு முதலிய சுவைகளை விலக்கவேண்டும். குழந்தை அழுகிறதேயென்று நினைத்தபோதெல்லாம் மிட்டாய் போன்ற இனிய தின்பண்டங்களைத் தரக்கூடாது.

குழந்தைக்கு அவசியமான உணவைப் பற்றிச் சுருக்கமாகப் பார்த்தோம். எழுத்திலே, படிக்கும்போது குழந்தையை உண்ணவைப்பது சுலபமாகத்தா னிருக்கும். ஆனுல் நடைமுறையில் அது அவ்வளவு எளிதன்று. சில குடும்பங்களில் அது மிகவும் தொல்லையளிக்கும் ஒரு சிக்கலான தொழிலாகிவிடுகின்றது. அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, அண்ணன், அக்கா, வேலைக்காரி புடைசூழ்ந்து கெஞ்சக் குழந்தை உணவை அள்ளியெறிந்து விளையாடி வேடிக்கை பார்த்து அழுது புரளும் காட்சி ஒவ்வொருவீட்டிலும் சகஜமானதே. உணவைக் கண்டால் 'விர்' ரென்று கத்திக் கலவரப்படும் குழந்தைகளையும் நாம் சாதாரணமாகப் பார்க்கலாம். பசியெடுத்து அழும் குழந்தை தன் வேதனையைப் போக்கக்கூடிய உணவை விரும்பி உட்கொள்ளாததற்குக் காரணங்கள் பலவுண்டு. அவற்றை நாம் ஆராய்ந்து அறியவேண்டும்.

உலகத்தில் முதன் முதலாகக் குழந்தை கற்றுக்கொள்ளும் தொழில் உணவு உட்கொள்ளுத லாகும்; அது விரும்பி ஈடுபடுவதும் அதிலேதான். அந்தத் தொழில் பிறகு சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டுக் குழந்தைக்கு விரும்பத்தகாத பழக்கங்களை ஏற்படுத்துவதற்குக் காரணம் குழந்தைக்குப் பாலூட்டும்போது மேற்கொள்ளும் சில தவருன முறைகளே. உண்ணும் தொழில் மூலமாகத்தான் குழந்தை ஏனைய பழக்க வழக்கங்களையும் கற்றுக்கொள்கின்றது. தாய் சரியாக உணவு உட்கொள்ளாத குறையால் குழந்தைக்குத் தேவையான அளவு பால் கிடைக்காமல் போவது; நாகரிகத்தை நாடிக் குழந்தைக்குப் பால் கொடுக்காமலேயே விட்டுவிடுவது; விரைந்து தாய்ப்பாலை மறக்கடிப்பது; காலவரையின்றிக் கண்டபோதெல்லாம் பாலூட்டுவது; குழந்தை அழும்போதெல்லாம் அதன் நோக்கத்தையும் விருப்பத்தையும் உணராது பால் அருந்த வற்புறுத்து

வது; குழந்தை வளரவேண்டுமேயென்ற கவலையினால் அளவுக்கு விஞ்சிய பாலைத் தருவது; பசியெடுத்துக் கதறும் குழந்தையை வேறு வேலையிலீடுபட்டுக் கவனிக்காது விட்டுவிடுவது ஆகிய பல காரணங்கள் குழந்தையின் மனத்தில் இளமையிலேயே உணவின்பால் வெறுப்பை உண்டாக்கிவிடுகின்றன. அதன் விளைவாக, குழந்தை விருப்பமின்றி உணவை உண்ணத் துவங்குவதால், மற்ற வாழ்க்கைத் தொழில்களிலும் விருப்பத்தை இழக்க ஏதுவாகிறது.

தாய்ப்பாலை நிறுத்தி அதற்குப் பதிலாக மாற்றுணவு தரும் பருவத்தில் குழந்தையின் உள்ளப் போக்கை நன்குணர்ந்து அன்புடனும், வற்புறுத்தல் இல்லாமலும், புதிய உணவைக் குழந்தைக்கு ஆவலெழுப்பும் வண்ணம் அமைக்கவேண்டும். தாய்ப்பாலைச் சுவைக்கும்போது அன்னையின் அரவணைப்பைப் பெற்ற பசுங்குழந்தை திடீரென வேறுணவைப் பார்க்கும்போது பயமடைகின்றது. அந்தப் பயத்தைப் புரிந்துகொள்ளாமல் பலதரப்பட்ட உணவைப் பலவந்தப்படுத்தி ஊட்டுவது என்றும் அழிக்கமுடியாத கேடுகளை விளைவிக்கும். அந்தப் பருவத்தில் அநேக புதிய உணவுகளை ஒரே சமயத்தில் தராமல் ஒரு சில சத்துணவுக்களைக் குழந்தையின் மனங்கோணுதபடி கொஞ்சங் கொஞ்சமாக உண்ணவைத்துப் பழக்கவேண்டும். குழந்தை சாப்பிடும்போது பெரியவர்கள் விருந்தினரை உபசரிப்பதற்காகவோ, சினிமா செல்வதற்காகவோ, அல்லது வேறு அலுவல் காரணமாகவோ அவசரப்படுத்தக்கூடாது. குழந்தையின் மனம் உணவில் நாட்டங் கொள்ளாமல் விளையாட்டில் ஈடுபட்டிருந்தால், தாய் உணவு தருவதைச் சற்றுத் தாமதப்படுத்தி, குழந்தையின் மனத்தைப் பக்குவமாக உணவின்பால் திருப்பிய பிறகே உணவை உண்பிக்க வேண்டும்.

பல வளர்ச்சிகளின் விளைவாக இந்தப் பருவத்தில் குழந்தை தனது சுயேச்சையை நிலைநாட்ட விரும்பலாம். தானுகவே உணவைக் கையாள முற்படுவது இதன் காரணமாகத்தான். அமுதுக் கிண்ணத்தைத் தன் சிறு விரல்களால் பிடித்து, உணவை அள்ளியெறிந்து நீரைக் கலக்குவது போன்ற செயல்கள் அதற்கு ஒரு புது மகிழ்ச்சியைத் தருகின்றன. அச்சமயத்தில், உணவு வீணுகிறதே யென்று கண்டிப்பது குழந்தையின் மனத்தில் பிற்காலத்தில், ஆணவம், அகங்காரம், பிடிவாதம், வெறுப்பு முதலிய உணர்ச்சிகளைக் கிளப்பிவிடும். இந்தச் சமயங்களில் குழந்தையைப் போகிற போக்கிலேயே விட்டுச் சிறுகச் சிறுக உணவின்பால் வசப்படுத்துவதுதான் முறை. அதற்கு மாருகக் குழந்தையின் சேட்டைகளைக் கண்டு வெறுப்படைவது சரியன்று. ''போலீஸ்காரன் வருவான்; உன்னைப் பிடித்துக்கொள்வான். பூச்சாண்டி வரும்; உன்னை விழுங்கிவிடும்'' என்றெல்லாம் பயமுறுத்திச் சாப்பிடவைப்பது எல்லையற்ற கெடுதலை உண்டாக்கும். என்ன இருந்தாலும் குழந்தை சிறுகை அளாவிய கூழ் அமிழ்தினும் ஆற்ற இனிதன்றோ ?

ஒன்று, இரண்டு ஆண்டு வயதுக் குழந்தைகளுக்கு உணவு தருவது பெற்றோருக்கு ஒரு சிரமமான கடமையாக இருக்கின்றது. அவர்கள் குழந்தையின் உள்ளப்போக்கை உணர்ந்துகொண்டால் இது சற்று எளிதாகும். இந்தப் பருவத்தில், குழந்தையின் இயற்கையான வளர்ச்சியின் ஒரு அம்சமாக, யார் என்ன சொன்னுலும் தடுக்க விரும்பும் ஒரு ''எதிர்ப்பு'' உணர்ச்சி குழந்தையின் மனத்தில் ஏற்படுகின்றது. அதனால், நாம் கூறுவதற் கெல்லாம் எதிர்மாருன செயல்களையே செய்ய முற்படுகிறது குழந்தை. இதைப் புரிந்துகொள்ளாமல் தாய்மார் குழந்தைகளின் உணர்ச்சிகளுக்குப் போட்டியாக வற்புறுத்திக் காரி

யங்களைச் சாதித்துக்கொள்வது குழந்தையின் குணத்தைக் கோணச் செய்யும். அதற்குப் பதிலாகச் சிறு விஷயங்களில் கூடக் குழந்தையைக் கட்டாயப்படுத்தாமல் சாந்தமாகச் சகிப்புத் தன்மையைக் காட்டிக் குழந்தையை உண்ண வைக்க வேண்டும்.

உடல் வளர்ச்சிப் பருவங்களில், Metabolism என்ற தொழிலின் விளைவாகச் சில வேளைகளில் குழந்தை உணவைத் தேடுவதே கிடையாது. அதையும் குறிப் பறிந்து சமாளித்துக் கொள்ள வேண்டும். குழந்தை உண்ண வருவதற்கு முன்பிருந்த சூழ்நிலையும் அதற்கு உணவின்பால் உள்ள விருப்பத்தைப் பாதிக்கின்றது. விளையாட்டிலே மும்முரமாக ஈடுபட்டிருந்த குழந்தை அவ்விளையாட்டில் மனத்தைப் பறிகொடுத்துவிட்டு உணவுண்ண வருகின்றது. நாம் விளையாட்டின் இறுதிப் பருவத்திலேயே குழந்தையின் மனத்தைச் சிறிது சிறிதாக உணவிடம் இழுத்துப் பின்னர் உணவை உண்பிக்க வேண்டும்.

குழந்தையின் உள்ளம் ஒரு தனி உலகம்; அங்கே பல அதிர்ச்சிகள், பிம்பங்கள், எண்ணங்கள் இடையருமல் எழுந்து கொண்டிருக்கின்றன. குழந்தைக்கும் சிந்தனைச் சக்தி உண்டென்பதை நம்மில் பலர் உணர்வதில்லை. அந்தச் சின்ன மனத்தில் எத்தனையோ கவலைகள் இருந்துகொண்டே யிருக்கின்றன. இப்படிப் பல நினைவு அலைகள் நிறைந்த உள்ளம் சில வேளைகளில் உணவின்மேல் விருப்பமின்மையைக் காட்டுவது இயற்கை தானே! உடைந்த பொம்மை, பிரிந்த நண்பன், கிடைக்காத பலூன், விரும்பாத தூக்கம், தனிமை போன்ற பல கவலைகள் குழந்தையின் மனத்தை வருத்தலாம். ஆகவே, அந்த அடிப்படைக் காரணங்களைக் கண்டுபிடித்து அவற்றை நீக்குவது மூலம்தான் குழந்தையின் மனத்தை உணவின்பால் செலுத்தமுடியும்.

குழந்தைக்கு இரண்டு வயதான பிறகு குடும்பத்திலுள்ள மற்றவர்களோடு சேர்ந்து உண்ணவைக்கலாம். அப்பொழுது குழந்தை பெரியவர்களின் உணவுப் பழக்கங்களைப் பின்பற்றத் துவங்கும். ஆகவே மற்றவர்களின் சரியான முன் மாதிரி இச் சமயத்தில் மிகமிக அவசியம். மனத்தை வருத்தும் ஏதோ ஒரு காரணத்தால் சில சமயங்களில் குழந்தை உணவின்மேல் தன் கோபத்தைக் காட்டுவதும் உண்டு. அதனுல் தண்ணீரை இறைத்து, தாலத்தைக் கவிழ்த்துக் கோப்பையை உடைக்கலாம். அச்சமயங்களில் நாம் ஆத்திரமடைவது குழந்தையின் எதிர்ப்பைத் தான் அதிகரிக்கும். அமைதியாக இருந்து குழந்தையின் சேஷ்டைகளைப் பொருட்படுத்தாது விட்டு விடுதலே நலமாகும்,

நோயுற்ற காலையில் குழந்தையைப் போஷிப்பது மிகவும் கடினமான காரியம். சில நோய்கள் வெளிப்படுவதற்குப் பல நாட்களுக்கு முன்பே உடலிலும் உள்ளத்திலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன. அந்தச் சமயங்களில் குழந்தை உணவை வெறுக்கின்றது. நாம் உடனே காரணத்தை வைத்தியர் மூலமாக ஆய்ந்தறிந்து தகுந்தன செய்யவேண்டும்.

குழந்தைக்குத் தேவையான உணவைத் தருவது ஒரு படி; அதைவிட மேலான படி அந்த உணவைக் குழந்தையின் உள்ளம், உணர்ச்சி ஆகியவற்றை உணர்ந்து ஊட்டுவது. பாலூட்டும் அன்னை குழந்தையின் பசியைமட்டுமா அகற்றுகின்ருள்? பாலுடன் அன்பு, பாதுகாப்பு, பண்பு ஆகியவற்றையும் அல்லவா ஊட்டுகின்ருள்!

"குழந்தை சாப்பிட மாட்டேன் என்று அடம் செய்கிருன்" என்று குறை சொல்லாதீர்கள்; குட்டாதீர்கள். அவன் மெல்லிய மனத்தில் என்ன வேதனை இருக்கின்றது என்பதை உணர்ந்து அதை அனுசரித்து உணவை ஊட்டுங்கள். குழந்தைக்குத் தேவையானது உணவுமட்டு மல்ல; அனுதாபமும் குழந்தை யுள்ளத்தைப்புரிந்து கொள்ளுதலும் மிக அவசியமானவை. இங்ஙனம் உடல் வளர்ச்சிக்கும் மன வளர்ச்சிக்கும் சிறந்த உணவு கிடைக்கும் போது குழந்தை எல்லா வளங்களும் பெற்று வளர்ந்து மலர்ந்து, நாட்டின் செல்வமாதற்குத் தடை உண்டோ?

எழுத்தின் வரலாறு

டாக்டர். அ. சிதம்பரநாதன், M. A., Ph. D.

★

எழுத்து என்பது எழுதப்படுவது என்ற பொருளுடையது. எழுத்து என்ருலோ, எழுதுதல் என்ருலோ நாம் அனைவரும் ஒரு வரிவடிவத்தை உடனே நினைக்கிருேம். எழுத்து என்றதும், அச்சடித்த எழுத்தும், மைகொண்டு பேனுவால் எழுதப்பட்ட எழுத்தும், சுண்ணும்புத் துண்டு கொண்டு கரும்பலகையில் எழுதப்பட்ட எழுத்தும், குச்சியினுல் சிலேட்டில் எழுதப்பட்ட எழுத்தும், எழுத்தாணியால் ஒலையில் எழுதப்பட்ட எழுத்தும் விரைவில் நம் கண் முன்னே தோன்றிவிடுகின்றன. எழுத்து என்றதும் இந்த எழுத்துக்களைப்பற்றி நாம் இன்று எளிதில் நினைத்துவிடுகிருேம். ஆனுல், நம்முடைய மூதாதையர்கள் உலகில் எந்தத் திசையில் இருந்தவ ராயினும் அவரெல்லாம் எழுத்து இன்னது என அறியமாட்டாது இருந்த நெடுங்காலம் உண்டு என்பதை அறிதல்வேண்டும். ஆதியில், மனிதன் நாம் எழுதுமாறுபோல எழுதுதற்குக் கற்றுக்கொண்டவன் அல்லன். காட்டிலும் வெளியிலும் மனிதன் முதலில் அலைந்து திரிந்து பல ஒலிகளை வாளா எழுப்பி, நாளடைவில் அவ்வொலிகளுக்குப் பொருள் உண்டாக்கிக் கொண்டான். சமுதாயக் கூட்டுறவால், சமுதாய முயற்சியால் நாளடைவில் பேசும் மொழி எழுந்தது. அப்பேச்சினே, அந்தச் சொற்களை எழுதிக் காட்டத் தலைப்பட்ட காலம் பிந்தியதே யாகும்.

புலி வடிவத்தைக் கண்டவுனே புலியென்றே கிலி பிடித்த மக்கள் முற்காலத்தில் மிகுதியாக வாழ்ந்திருத்தல் வேண்டும். அந்தக் காட்டுமிராண்டிக் காலம் கழிந்த பிற்பாடு, விலங்குகளை விரட்டியடித்தல் விலங்குகள் போன்று வடிவம் வரைவதால் இயலும் என மக்களிற் சிலர் நினைக்கலாயினர். அன்றி, விலங்குகளைப்போல் வரைவதால் அவற்றைத் தம் பக்கம் வசப்படுத்திக் கொள்ளுதல் இயலும் என நம்பினபேரும் உண்டு. உதாரணமாக, புலி போன்ற வடிவத்தைத் தமது ஆயுதத்திற் செதுக்கிக்கொள்வதால், புலியாகிய பகையைத் தவிர்ப்பதற்கு வழிகண்டதாக நினைத்த மக்கள் உண்டு. இந்த நிலை மாறி, புலியென்ற வடிவம் வரைந்தால் புலியென்ற பொருளைக் குறிக்கிருேம், புலியென்ற ஒலியைக் குறிக்கிருேம் என்ற எண்ணம் மக்கட்கு எழுதற்கு எத்தனையோ நெடுங்காலம் ஆகியிருத்தல் வேண்டும்.

மக்கள் தாம் தாம் கருதுகின்ற பொருள்களின் வடிவத்தை வரைதற்கு முன்னுல், அப்பொருளைக் குறிக்க அப்பொருட்களை அப்படியே கொடுத்துவிட்ட நிலையொன்று உண்டு என அறிகிருேம். உதாரணமாக,

பெர்சியா தேசத்து மன்னன் டரையஸ் என்பானுக்குச் சீத்தியர்கள் ஒரு தூது அனுப்பினதாக ஹெரொடட்டஸ் என்னும் சரித்திர ஆசிரியர் குறிப்பிட் டிருக்கின்ருர். பகைவர்கள் அஞ்சியோடிப் பதுங்காவிட் டால் இறந்துபடுவர் என்பதே அத்தூதின் செய்தி. ஆனல், இஃது எழுத்தில் எழுதப் பட்டதன்று. ஓர் ஆள்வசம் தவளை, எலி, பறவை, அம்புகள் ஆகியவை அனுப்பப் பட்டன. இவை குறித்த கருத்து என்ன என்ருல், பகைவ ரெல்லாம் தவளைகள் போலத் தண்ணீருட் பதுங்காவிட்டால், எலிகள்போல வளைகளுள் நுழையாவிட் டால், பறவைகள் போல விண்ணிடைப் பறக்காவிட்டால் அம்புகளாற் கொல்லப் படுவர் என்பதே. எனவே எழுத்துவழியே கருத்தினைப் புலப்படுத்த மக்கள் கற்றுக் கொள்ளுதற்கு முன்பு அவ்வப்பொருட்களை அறிகுறி வகையால் ஆண்டனர் என்பது விளங்கும்.

இவ்வாறெல்லாம் பலமுறைகளில் தட்டுத் தடுமாறிய பின்பே, கருத்தைத் தெரிவிக்க எழுத்து தக்கதொரு கருவியென்பது கண்டு பிடிக்கப்பட் டிருக்கும். அந்த எழுத்துத் தானும், முதலில் சித்திரங்களாகவே இருந் தன எனச் சொல்லப்படுகின்றன. தன் முன்னே நிகழும் ஒரு நிகழ்ச்சியைக் காணு கின்ற பண்டை மனிதன் அவ்வாறே அதனை ஒருவாறு படமெழுதிப் பார்த்திருப் பான். உதாரணமாக, எகிப்து தேசத்திற் காணப்படும். ஓர் ஓவியத்தில் முட்டை வடிவமான ஓர் அடிநிலத்தில் சில செடி கள் காணப்படுகின்றன; அந்த அடிநிலத் திலிருந்து கிளம்புவதுபோல உள்ள ஒரு மனிதன் தலை உண்டு; அவனுடைய தலையைக் கயிற்றினல் பருந்து ஒன்று பற்றிக்கொண் டிருக்கிறது. இத்திரண்ட ஓவியம் ஒரு கதை சொல்லுகிறது. பாப் பிரஸ் என்னுஞ் செடிக்குப் பெயர்போன நைல் ஆற்றின் பிரதேசத்தில் வாழ்ந்த புரா தன மக்களை எவனே ஒருவன் வென்று அரசனுயினன் என்பது அக்கதை. இவ் விதம், படத்தில் உள்ள வடிவங்கள் எல் லாம் சேர்ந்து ஒரு நிகழ்ச்சியைக் குறிக் கின்ற பாங்கு ஸ்காண்டினேவியா மக்களி டத்திலும், அமெரிக்கப் பூர்வீகர்க ளிடத்தி லும் உண்டு.

எழுந்து வளர்ந்த வரலாற்றின் அடுத்த நிலை, படநிலையி லிருந்து அது கருத்தொத்த வடிவெய்திய நிலை. படத்தின் தொகுதி திரண்ட ஒரு கருத்தைத் தெரிவிக்கப் பயன்பட்டதற்குப் பதிலாக, ஒவ்வொரு உருவமும் ஒவ்வொரு தனித்தனிப் பொருளை நேர்முகமாகக் குறிப்பதாகக் கருதப்பட லாயிற்று. உதாரணமாக எகிப்து தேசத்தில் அமைந்த ஒருவகை எழுத்தின், கண்ணின் உருவம் கண் என்ற பொருளை யும், வட்ட வடிவமொன்று ஞாயிற்றையும், பிறை வடிவம் திங்களையும் குறிப்பதாகக் கொள்ளப்பட்டன. இவ்வண்ணம் தீட்டு தலால் ஒரு நன்மை உண்டு. ஒரு மொழி மாந்தரே யன்றியும் பிறமொழிகள் பேசும் மக்களும் இவ்வடிவங்களைக் கண்டமாத் திரத்தில் பொருள் இன்னது என்று அறிந்துகொள்ளுவர். ஆயினும் சில இடர்ப்பாடுகளும் உண்டு. ஒவ்வொரு பட மும் ஒவ்வொரு பொருளின் நிலையை அல் லது செயலைக் காட்டக் கூடுமே யல்லாது, எண்ணினையோ வேற்றுமையையோ காலத்தையோ காட்டுதல் இயலாது. எனவே, பல்வேறு இலக்கணக் கருத்துக் களைத் தெரிவித்தல் இவ்வகை எழுத்தால் இயலாது. அன்றியும், பிழம்புணர்த்தலா காப் பொருள்களாகிய அன்பு, அறிவு, நட்பு, பகை ஆகியவற்றை நேரே உணர்த் தக்கூடிய படம் இல்லாததால், நாளடை வில் பிற பொருள்களை உணர்த்தும் படங் களே இவற்றிற்காகப் பயன்படுத்தப்பட் டன. உதாரணமாக, பல மாடுகளின் வடி வம் ''செல்வம்'' என்ற பொருள் உணர்த்து வதாகக் கொள்ளப்பட்டது; கைகள் கோத் திருத்தல் ''நட்பு'' என்பதைக் காட்டுவ தாகக் கொள்ளப்பட்டது. கைகளின் படம் கைகளைக் குறிக்காமல், நட்பினைக் குறிக்கின்றது என்பதைச் சந்தர்ப்பம் நோக்கி மக்கள் உணர வேண்டியவர் ஆயினர்.

அடுத்தபடியாக, ஒவ்வொரு படமும் ஒவ்வொரு கருத்தினைக் குறித்து நிற்காமல், அவ்வவ் வடிவத்திற்கு உரிய ஒலியைக் குறிப்பதாகக் கருதப்பட லாயிற்று. இந் நிலையை ஒலியெழுத்து நிலை என்னலாம். உதாரணமாக, மா என்ற மரத்தின்படம், விலங்கு என்னும் பொருளுடைய மா என்னும் ஒலியையும் குறிப்ப தாயிற்று. சித்திரக் குறுக்கெழுத்துப் போட்டியிற் படிப்பது போன்றே மக்கள் படிக்கலாயினர். அதனால், எந்நேரத்தில் மா என்ற மரம் கருதப்பட்டது, எந்நேரத்தில் மா என்ற விலங்கு கருதப்பட்டது, எந்நேரத்தில் பெரிய என்ற பொருளுடைய மா கருதப்பட்டது என்று காட்டவேண்டிய அவசியம் எழுந்தது. அக்காலத்தில் ஒவ்வொரு படத்தின் அருகே திறவுகோல் போன்றமைந்த சிறு வடிவங்களும் சேர்க்கப்பட்டன; அல்லது பட வடிவுகொண்டு, ஒலிக்கும் பொழுதே உச்சரிப்பில் சிறிது சிறிது வேறுபாடு செய்யப்பட்டது. இவ்வாறு அஸ்ஸிரியா, சீனம் முதலிய தேசங்களில் ஒலி வகை வடிவங்கட்கு வேறுபாடு வகுத்துக் கொண்டனர். நம் தேசத்திலும் மீன் ஒன்றின் வடிவம் மீன் என்ற பொருளைக் குறிப்பதோ டல்லாமல், மின்னுதல் தொழிலையும், மின்னுகின்ற நட்சத்திரத்தையும் குறிப்பதற்கு ஒலிவகையாற் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்று அறிஞர் ஹெராஸ் அவர்கள் காட்டியுள்ளார். மொஹஞ்சோ-தரோவிற் காணப்படும் பழங்கால எழுத்துக்கள் தமிழ் மக்களின் பண்டைய எழுத்துக்களே எனச் சான்றுகொண்டு அவர் நிறுவியுள்ளார்.

ஒவ்வோர் உருவங் காட்டும் முழு ஒலியையும் கொள்ளாமல், ஒலியின் முதலசையை மாத்திரம் கருத்திற் கொள்ளத் தலைப்பட்ட மக்களும் உண்டு. அவ்வாறே செமிட்டிக், ஜப்பானிய, சிப்பிரியாட் மொழிகள் கொள்ளத் தலைப்பட்டன. உதாரணமாக, அகரத்தைக் குறிக்க எகிப்திய மொழியிற் கண்ட எருதுவின் தலைவடிவம் கிரேக்க மொழியில் ஆல்ஃபா எனப்பட்டது. அதனையே முதலசையாகிய ஆல்ஃப் என்ற அளவில் செமிட்டிக் மொழி எடுத்துக் கொண்டது.

இதுவே 'அ' என்ற அளவில் நிறுத்திக் கொள்ளப்படுகின்ற கடை நிலைதான் எழுத்துவரலாற்றின் முடிவுநிலை. ஓர் உருவம் குறிப்பிடும் ஒலியில் முதலசையைக் கூடமுழுதும் எடுத்துக்கொள்ளாமல், முதல் எழுத்து அளவே அமைதல் என்பதுதான் அக்கடைநிலை. ஒவ்வொரு மொழியிலும், ஒவ்வோர் எழுத்தை முதலெழுத்தாகக் கொண்ட எத்தனையோ பல சொற்கள் இருப்பவும், அவற்றுள் ஒன்றின் வடிவம் மாத்திரம் ஏன் தேர்ந்தெடுக்கப்பட் டிருக்க வேண்டும் என்ற வினா எழுதல் இயல்பே. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட சொல் அம்மொழியில் அதிகமாக வழக்காற்றில் இருந்த சொல் என்பது ஒரு காரணம். அன்றி, அதன் வடிவம் ஏனையவற்றின் வடிவங்களைவிட எளிதான வடிவம் என்பதும் காரணம் ஆகும். உதாரணமாக, அம்மை அப்பன் அணில் அடவி அருவி அடகு ஆகியவற்றுள் ஏதாவதொன்றன் வடிவந்தான் பெரும்பான்மை வழக்குப் பற்றி அகரத்தின் வடிவமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலை எய்தியிருக்கும். சீன மொழியில் இவ்வாறுதான் செய்தனர்.

எனவே, ஆதிகாலத்தில் மக்கள் ஓவியத்தின் வழியாகக் கதை சொல்லக் கற்றுப் பிறகு ஒவ்வொரு வடிவத்தையும் ஒவ்வொரு தனித்தனிப் பொருளைக் குறிக்கப் பயன்படுத்தினர். நாளடைவில், அவ் வடிவு பொருளைக் குறிக்காமல் ஒலியைக் குறிக்கத் தலைப்பட்டது. பின்னர், அவ் வடிவு அல்லது அவ்வடிவின் திரிபு முழு ஒலியையும் குறிப்பிடாமல், முதலசையொலியை மாத்திரம் குறிப்பிடுவதாகி நாளடைவில் முதலெழுத்தளவே நின்றுவிட்டது என்பது அறியப்படும். இக்காலத்தில் உள்ள எழுத்துக்கள் எல்லாம் இம்முறைப்படி ஒருகாலத்தே ஒவ்வொரு பொருளின் ஓவியமாக இருந்தவற்றின் திரிபுவேறுபாடுகள் என்று கருதப்படுகின்றன. இவ்வெழுத்துக்களின் விந்தையால் காலத்திற்கும் தேசத்திற்கும் அப்பாற்பட்ட பற்பல செய்திகளை நாம் அறியும் பேறு பெற்றிருக்கின்றோம்.

பொன் வளையல்

திரு. அ. ச. ஞானசம்பந்தம், M.A.

தமிழ் இலக்கியத்தில் சாவா இடம் பெற்று வாழும் கவிதைகளில் எல்லாச் சுவைகளையும் (ரசம்) காணலாம். சில இடங்களில் சில சுவைகள் ஆழ்ந்து நோக்கிய வழியே புலனாகும்படி அமைந்துள்ளன. பழந்தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியம் சுவையை எட்டு எனக் கொண்டது. நகை முதலாக உவகை ஈறாக அவற்றிற்குப் பெயர்களும் தந்துள்ளது, (தொல். மெய்ப்பாட்டியல்—3.) இதனுள் நகை என்ற முதற் சுவையும் உவகை என்று இறுதியாகக் கூறப்பட்டதும் ஆய்தற் குரியன. உவகை என்பது மகிழ்ச்சி என்றே கூறப்படலாம். ஆனால் மகிழ்ச்சி காரணமாகப் பிறக்கின்ற நகைக்கும் தொல்காப்பியனார் முதற் சுவையாகக் குறிப்பிட்ட நகைக்கும் வேறுபாடு உண்டு. 'எள்ளல், இளமை, பேதைமை, மடமை' என்ற நான்கு காரணமாகவும் நகை தோன்றும் என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். அவ்வாறாயின் இதனை மேலைநாட்டுத் திறனாய்வாளர் கூறும் 'Humour' என்பதனோடு ஒருவாறு ஒப்பிடலாம். ஒருவாறுதான் ஒப்பிடல் கூடுமே தவிர இவை இரண்டும் ஒன்று என்று நினைந்து யாரும் இடர்ப்படல் வேண்டா. நம்மவர் நகைச் சுவை தோன்றப் பேசிய இடங்களும் மேலைநாட்டார் 'ஹ்யூமர்' தோன்றுகிறது என்று கூறும் இடங்களும்

வெவ்வேருனவை. இயற்கையில் தோன்றும் நகைச் சுவை ஒருவருடைய பேச்சின் மூலமும் செயலின் மூலமும் பிறரால் அனுபவிக்கப் பெறுகிறது. ஆனல் ஒவ்வொரு நாட்டினரின் பேச்சும் செயலும் பிற நாட்டினருடைய சொல் செயல்களிலும் மாறுபட்டவை யல்லவா? எனவே நாம் நகை தோன்றப் பேசும்பொழுது பிற நாட்டாருக்கு அங்கே அச்சுவை தோன்றுவ தில்லே. அப் பிறநாட்டார் நம் மொழியை நன்கு கற்றிருப்பினுங்கூட நகைச் சுவை தோன்றும் இடங்களே அவர் காண்டல் இயலாது. நமது மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள்மட்டுமே இம் மொழியில் தோன்றும் நகைச் சுவையை நன்கு அனுபவித்தல் கூடும். ஆங்கிலப் படக் காட்சிகள் பார்க்கும்பொழுது இந்த அனுபவம் ஏற்படுதலேக் காணலாம். பேசிக் கொள்பவர்கள் விழுந்து விழுந்து சிரிப்பர்; ஆனல் அதனேக் கேட்கும் நமக்கு அவர்கள் பேச்சு முற்றிலும் விளங்கினுலும்கூட ஏன் சிரிக்கிருர்கள் என்பது பல சமயங்களில் விளங்குவ தில்லே.

எனவே, மேலேநாட்டார் கூறும் 'ஹ்யூமரை' அப்படியே தமிழில் 'நகைச் சுவை' என்று கூறிவிட்டதாக யாரும் நினேந்துவிட வேண்டாம். பிறரைப் புண்படுத்தாத முறையில் அமையவேண்டும் நகைச் சுவை. பிறரிடம் காணப்படும் குறைபாடுகளே எடுத்துக்காட்டும் பொழுதுகூட அவர்களும் சேர்ந்து நகைக்குமாறு அது அமையவேண்டுமே தவிர அவர்களே வருத்தத்தில் ஆழ்த்திவிடக் கூடாது. தம்பால் உள்ள குறைகளேத்தான் எடுத்துக் காட்டுகின்றனர் என்று அறிந்தவிடத்தும் குறையுடையார் வருந்தாமல் ஏற்றுக்கொள்ளும் முறையில் அமைவதுதான் சிறந்த நகைச் சுவை எனப்படும். நகைச் சுவை தோன்றப் பேசும் வன்மை சிலரிடம் காணப்படும். ஆனல் இவ்வாறு பேசுவதால் யாதொரு பயனேயும் அவர்கள் எதிர்பார்ப்பதில்லே. அந்த நேரத்தில் பேச்சைக் கேட்பவர்கள் கைகொட்டிச் சிரித்து ஆர்ப்பரிப்பதைத் தவிர வேறு பயனேப் பேசுபவரும் கேட்பவரும் எதிர்பார்ப்ப தில்லே.

ஆனல் இலக்கியத்தில் நகைச் சுவை தோன்றும்பொழுது இவ்வாறில்லே. நகை தோன்றச் செய்வதுடன் பெரிய தொரு பயனேயும் கருதியே இலக்கிய ஆசிரியன் நகைச் சுவையைக் கையாள்கிருன். அவன் கருதும் பயன் தனிப்பட்ட ஒரு மனிதனேத் திருத்தவேண்டும் என்பதாகவும் இருக்கலாம். இன்றேல் அவன் காலத்தில் காணப்பெற்ற சமுதாயம் முழுவதையும் திருத்த வேண்டும் என்ற நோக்கமாகவும் இருக்கலாம். இவற்றை யல்லாத மூன்ருவது வகையும் உண்டு. அகப் பாடல்களில் மருதத்திணேப் பாடல்கள் பலவற்றுள்ளும் நகைச் சுவை உண்டு. தலேவனுடைய நாட்டு வளனே விவரிக்கும் முகமாக அவனுடைய குறைபாடுகள் அனேத்தும் பேசப்பெறும். மேலாகப் பார்ப்பதற்கு நகைச் சுவை தோன்றினுலும் ஆழ்ந்து நோக்குகையில் தலேவனேத் திருத்தவேண்டும் என்ற ஆவல் அச் சொற்களுள் அடங்கி யிருக்கும். எவ்வளவு பெரிய தவற்றையும் நகைச் சுவையுடன் எடுத்துக் கூறினுல் பிறர் மனம் நோவாமல் எடுத்துக் கூறலாம். நற்றிணேயில் வரும் நுண்மையான நகைச்சுவை ஒன்றைக் காணலாம். அது மூன்ரும் வகையைச் சேர்ந்தது.

பலவகையாலும் சிறப்பெய்திய தலேவன் அவன். அவளும் 'பெரிய இட'த்துப் பெண்தான். அவன் கண்ட பெண்களிடமெல்லாம் மனத்தைப் பறி கொடுத்துத் தவிப்பவன் அல்லன். அவளும் அவ்வாறே. இவ்வாறு இருந்தும் அவர்களிருவரும் ஒருவரை யொருவர் சந்தித்தவுடன் காதல் கொண்டனர். 'கண்டதும் காதல்' என்று தற்காலத்தார் கூறும் வகையில் அமைந்ததன்று அவர்களுடைய காதல். பல பிறவிகளிலும் தொடர்ந்து வரும் ஒன்றுதான் தங்களுடைய காதல் என்பதை அவர்க

ளிருவரும் நன்கு அறிந்துகொண்டனர். முதன் முறை இருவரும் சந்தித்துக் களவுப் புணர்ச்சியில் ஈடுபட்டனர். இதன் பிறகு பல முறையும் சந்திப்பதாகவே உறுதி பூண்டு இருவரும் பிரிந்தனர்.

முதன் முறை அவர்கள் சந்தித்தது ஒருவருக்கும் தெரியாது. விதிதான் தங்களைச் சேர்த்துவைத்தது என்று அவர்கள் உறுதியாக நம்பினர். ஆனல் மறு முறை சந்திப்பது முதன் முறைபோல் அவ்வளவு எளிதாக இல்லை. தோழியின் உதவி இல்லாமல் தலைவனைச் சந்திக்கமுடியாது என்று தலைவியும் உணர்ந்தாள்; தலைவனும் இதனை நன்குணர்ந்தான். எனவே இருவரும் தனித்தனியே தோழியிடம் பேசி அவளுடைய சம்மதியைப் பெற்றுவிட்டனர்.

நாள்தோறும் வந்தான் தலைவன்; தலைவியைச் சந்தித்தான். ஆனல் அதற்கு மேல் அவன் ஒன்றும் செய்வதாகத் தெரியவில்லை. வாழ்நாள் முழுதும் களவொழுக்கத்தில் கழித்துவிட முடியுமா? அவள் நினைக்கிருள் முடியா தென்று. ஆனல் அவன் அதுபற்றிக் கவலைப்படுவதாகவே தெரிய வில்லை. குடும்பப் பொறுப்பு இல்லாமலே இன்பம் பெறுவதைச் சிறந்த வழி என்று கருதிவிட்டானு? அவன் வாய்மூடி இருப்பதால் தலைவி படும் துயரை அவனுக்கு யார் எடுத்துரைப்பார்கள்? தலைவியே கூறினல் நலம் என்றுகூடத் தோழி கருதினுள். ஆனல் பண்பாடுடைய அவனுக்கு இதனை எடுத்துக் கூறுதல் பொருத்தமற்றது என்று கருதினுள் தலைவி.

ஒரு நாளில் எப்பொழுதோ ஒரு நேரத்தில் வருகிருன் அவன். அந்த நேரத்தில் அவன் எதிர்பார்த்து வரும் இன்பத்திற்கு மறுதலையாக அவனுடைய கடமை பற்றி நினைவூட்டுவது நாகரிகமற்ற செயலாகும் என்றும் கருதினுள் தலைவி. தலைவிக்குத் தோன்றும் இவ்வெண்ணங்கள் தலைவனுக்குப் பட்டதாகவே தெரியவில்லை. எத்தனை நாட்களுக்குத்தான் பொறுத்திருக்க முடியும்? தலைவன்மாட் டுள்ள அன்பு காரணமாகத் தலைவி பொறுத்திருக்கத் துணியலாம். ஆனல் ஊரார் வாய் சும்மா இராதே! சிறு தூற்றல் பெரு மழை யானற்போல ஊரார் பழிச் சொல்லும் மிகுத்து விட்டதே! இந்நிலையில் இதற்கொரு வழிகாண வேண்டும் என்று முடிவு கட்டினுள் தலைவி.

தலைவி சிறு குழந்தையாக இருந்தது முதல் அவளுக்கு மருத்துவம் செய்துவந்தார் ஒரு மருத்துவர். அவளுக்குமட்டும் என்ன? ஊரார் முழுவதும் நோயுற்ற பொழுது அவரிடமே சென்றனர். அவர்தான் எவ்வளவு அறிவும் ஆற்றலும் படைத்தவர்! 'நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும், வாய் நாடி வாய்ப்பச் செயல்' (குறள்: 948) என்ற குறளை நன்கு அறிந்து கடைப்பிடிப்பவர். ஒரே நேரத்தில் இருவர் வயிற்றில் வலி என்று கூறிக்கொண்டு வந்தனர். இருவருக்கும் வயிற்றுவலி தானே என்று அவர் ஒரே மருந்தைத் தருவதில்லை. வயிற்றுவலி யாகிய காரியம் ஒன்றே யாயினும் அதன் காரணம் வெவ்வேருகலாம் அல்லவா? எனவே ஒருவருக்கு இனிய மருந்தும் மற்றவருக்குக் கசப்பு மருந்தும் தந்தார். கசப்பு மருந்து உண்பவர் தம்முடைய வருத்தத்தைத் தெரிவித்து எவ்வாருயினும் தமக்கும் இனிப்பு மருந்து தரவேண்டினர். ஆனல் மருத்துவர் அதற்கு ஒத்துக்கொள்ள மறுத்து விட்டார். 'நோய்க்கு மருந்தே தவிர நாவுக்கு மருந்து இல்லை' என்று கூறி விட்டார். இதனல் நடுவு நிலை திரியாத 'அறவோன்' என்ற பெயரையும் பெற்று விட்டார். பல காலம் அவர் இவ்வாறு செய்வதைத் தலைவி கண்டிருந்தாள். இப்பொழுது அவளுக்கு அவருடைய நினைவு தோன்றிற்று. அவர் செயலை எடுத்துக் காட்டுவதன் மூலம் தலைவனுக்கு அறிவு கொளுத்த முடிவு செய்துவிட்டாள்.

நேரடியாக ஒன்றைக் கூறுவதைக் காட்டிலும் மறைமுகமாகக் கூறுவது

எளிது. அவ்வாறு கூறுவதிலும் நகைச் சுவை தோன்றக் கூறுவது இன்னும் நலம் பயக்கும். ஆனால் நகைச் சுவை ததும்பப் பேசக்கூடிய நிலைமையிலா தலைவி இருக் கிறாள்? எல்லையற்ற வருத்தத்தில் ஆழ்ந் திருக்கும் அவளால் சுவைபடப் பேசல் இயலுமா? பேச முடியும் என்று சுவை இயல் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். "ஒவ்வொரு முறையும் ஒருவன் நகைச் சுவை ததும்பப் பேசும்பொழுதும் சிரிக்கும் பொழுதும் ஆராய்ந்து பார்த்தால் ஓர் உண்மை விளங்கும். அவனுடைய உணர்ச்சிகளை ஆழ்ந்து நோக்கினால் கண் ணீர் வரவழைக்கும் ஒரு நிலையிலிருந்தே இந்த நகைச் சுவை தோன்றிற்று என்பதை அறிய முடியும்."[1] இவ்விலக்கணத்தைத் திருப்பிவைத்துப் பார்த்தாலும் இதில் உண்மை இருப்பது விளங்கும். எல்லை யற்ற துயரம் தோன்றிய பொழுதும் சிரிப் பும் சிரித்தற்கு ஏற்ற பேச்சும் தோன்ற இடமுண்டு என்பதை அறிய முடிகிறது. மேலே கூறப்பெற்ற தலைவிக்கு எல்லையற்ற வருத்தத்தில்தான் நகை ததும்பப் பேசும் வாய்ப்பு ஏற்படுகிறது.

நகைச் சுவையுடன் வரும் பேச்சு ஏதா வது ஒரு காரணம் பற்றியே தோன்றல் கூடும். அக்காரணத்தை ஆய்ந்த திறனாய் வாளர் இவ்வாறு கூறுகின்றனர்: "நகைப் பேச்சு என்பது வைரம் போன்ற ஒளி படைத்த ஓர் அனுபவமாகும். விளையாட் டில் எதிர்பாராமல் தோன்றிய அதிர்ச் சியோ, ஏமாற்றமோ, (அது மனத் திருப் தியை உண்டாக்குவதாயின்) தோன்றும் பொழுதுதான் இந்த அனுபவம் கிட்டுகி றது."[2] தலைவியின் எல்லையற்ற நம்பிக்கை மெள்ளத் தகர்கிறது. தலைவன் நீண்ட காலமாகத் தன் எதிர்காலம் பற்றி ஒன்றும் கவலையுறாமல் இருப்பதால் இது எவ்வாறு முடியுமோ என்ற ஐயம் முதலில் தோன் றிற்று. நாளடைவில் அந்த ஐயம் வளர்ந்து பெரிதாயிற்று. ஒரு வேளை அவள் அவனை நெருக்கிக் கேட்டபொழுது அவன் தட்டிக் கழிக்கும் முறையிலோ அன்றி அவள் மனம் அமைதியடையாத நிலையிலோ பேசி யிருக்கலாம். இந்த ஏமாற்றம் அவளுடைய மனத்தில் ஆழப் பதிந்துவிட்டது. இதன் பயனாகவே அவளுடைய பேச்சும் மாறு பட்டு வெளிவருகிறது. ஒரு நாள் தலைவன் வந்தான். ஆனால் தலைவியிடம் நேரே வந்து விடாமல் ஒரு வேலி ஓரத்தில் மறைவாக நிற்கிறான். அவன் வந்து நிற்பதைத் தோழி தலைவி என்ற இருவரும் அறிந்தனர். அவ னிடத்தில் நேரிற் கூறமுடியாத ஒன்றை மறைமுகமாகக் கூற விரும்பினாள் தலைவி. அவன் இருப்பதை அறியாதவள்போல் பேசத் தொடங்குகிறாள் தோழியை நோக்கி. தலைவன் தன்னைவிட்டு நீண்டகாலம் பிரிந் திருப்பதால் தன் தோள்கள் மெலிந்து விட்டன என்று கூறவேண்டும் அவளுக்கு. அதைத்தான் எவ்வளவு திறம்படக் கூறு கிறாள்! ஆத்திரத்துடனும் அழுகையுட னும் பேசவேண்டிய ஒரு நிகழ்ச்சியை ஆழ்ந்த நகைச் சுவை ததும்பப் பேசுகிறாள் தலைவி.

"தோழி! திருத்தமாகச் செய்யப் பெற்ற தும் ஒளி பொருந்தியதுமான வளையல்கள் தான் வேண்டுமென்று யான் அழவும் என் தந்தை என் செய்தார் தெரியுமா? கடுமை யான பிணியுடையவர்கள் தாம் விரும்பிய மருந்தைக் கொடாமல் அவர்கள் நோயை ஆய்ந்து அதற்கு ஏற்ற மருந்தையே தரும் அறமுடைய மருத்துவன் போலத் தந்தை

---

1. For in every case in which a man laughs humoursouly there is an element which, if his senstivity were sufficiently exaggerated, would contain the possibility of tears: The Sense of Humour by Max Eastman. P. 21.

2. And a joke is a litte node, or gem-like moment in our experience created by the exact coincidence of a playful shock or disappointment with a playful or a genuine satisfaction: Ibid. P. 28.

என்னுடைய நிலையை உணர்ந்து கொண்டார். தலைவனொடு நமக்குப் பிரிவுநேரிடும்; அந்த நேரத்தில் நம்முடைய தோள் நெகிழும். அவ்வாறு நெகிழ்ந்தால் இந்த வளையல் கழன்று வீழ்ந்துவிடுமே என்று ஐயுற்றவர் போல் மிகவும் இறுக்கமாக அமைந்துள்ள சிறிய வளையல்களையே போட்டுவிட்டிருக்கிறார்,'' என்ற கருத்துப்படக் கூறுகிறாள்.

திருந்துகோல் எல்வளை வேண்டியான் அழவும்
அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாது
மருந்துஆய்ந்து கொடுத்த அறவோன் போல
என்ஐ வாழிய பலவே பனிஇய
மலைகெழு நாடனொடு நம்மிடைச் சிறிய
தலைப்பிரிவு உண்மை அறிவான் போல
நீப்பநீங் காது வரின்வரை அமைந்து
தோட்பழி மறைக்கும் உதவிப்
போக்குஇல் பொலம்தொடி செறீஇ யோனே! ''

(நற்றிணை:136)

'தலைவன் பிரிந்த பொழுது தோள் இளைத்தாலும் கழன்றுவிழாத வளையல்களாகப் பார்த்து எனக்கும் போட்டு அனுப்பினார் போலும், தந்தை! 'அவர் வாழ்க' என்று கூறுவதில் நகைச்சுவை அமைந்துள்ளது. ஆனால் நுண்ணிதின் நோக்குவார்க்கேயன்றி மேலாகக் கற்பார்க்கு விளங்காவகையிலும் அமைந்து கிடக்கிறது அந்தச் சுவை, தனது தோள்கள் இளைத்துவிட்டமையைத் தலைவன் ஆர்வமிகுதியால் காணவில்லையாகலின் சிரிப்புடன் பேசுவதுபோல் அவ்வுண்மையை அவன் காதுகேட்கக் கூறிவிட்டாள். என்றாலும் அந்த நகைச்சுவையும் அவளுடைய பெண்தன்மைக்கேற்ப அடக்க ஒடுக்கத்துடன் வெளிவருகிறது. வெடி சிரிப்புடன் வரும் சொற்களல்ல இவை. மெல்ல முல்லையரும்பு போன்ற பற்கள் மட்டும் வெளியே தெரியும்படியான புன்சிரிப்புடன் வரும் சொற்கள்.

இலக்கியத்தில் தோன்றும் இத்தகைய நகைச்சுவைகட்கு ஒரு காரணம் கூறுகிறார்கள் திறனாய்வாளர். மனித மனத்தின் ஆழத்தை அது வெளிப்படுத்துகிற தாகலின் அதனைக் காண்டல் வேண்டும். ''எதிர்பார்த்தது நடைபெறும் பொழுது தோன்றும் இன்பத்தையும் அது நடைபெறாதபொழுது ஏற்படும் துன்பத்தையும் நம் அறிவு எடைபோடுகிறது. துன்பந்தான் நேரும் அந்த இக்கட்டான நிலையில் மகிழ்ச்சி தரக்கூடியது எதுவாயினும், அந்த ஒன்று கற்பனையளவில்தான் மகிழ்ச்சி தரும் என்றாலும் அறிவு அந்தக் கற்பனை மகிழ்ச்சியைப் பற்ற விரும்புகிறது. இவ்வாறு கற்பனை மகிழ்ச்சியைப் பெறுவதன் மூலம் இன்மையால் நேரும் துன்ப உணர்ச்சி தணிகிறது.''[1]

தலைவன் செய்த கொடுமையால் ஏற்பட்ட ஆறுத்துயரத்தில் ஆழ்ந்திருக்கும் தலைவியைத் தந்தை செய்துபோட்ட இறுக்கமான வளையல்கள் பற்றிய நினைவு சிரிக்கச் செய்கிறது. ஏனைய சந்தர்ப்பமாயின் இது நகைப்பதற்குரிய செயலன்று. ஆனால் பிரிவினால் ஏற்பட்ட வருத்தத்தின் எதிரே தந்தையின் இந்தச் செயலிலும் ஒரு நகைப்பைப் பெறுகிறாள் தலைவி. இத்துணை நுண்ணிய முறையில் சுவைகளைப் பெய்து பாடும் தமிழ்க் கவிஞர் இனம் இன்று எங்கு மறைந்ததோ தெரியவில்லை.

---

1. Our brain is just balancing, as we might imagine, upon that fine edge between pain and pleasure at the failure of what it had momently desired, when there looms into the void some unexpected ripe apple of a thing desired more, or desired at least deeply and continually, and with a hunger that can be relied on to be glad. And by this means that arbitrary trick of turning loss into gain is actually warrented and borne out by the facts — Ibid. Page 28.

அணுயுகம் பிறந்த நாள்

"யுசிஸ்"

முதல் முறையாக அணு உலை உருவாகி டிசம்பர் 2ம் தேதியோடு சரியாகப் பன்னிரண்டு ஆண்டு ஆகிறது. அணுவை உடைத்துத் தட்டுப்பாடு இல்லாமல் வெப்பம் உண்டாக்கும் முதலாவது அணு உலை அன்றுதான் தோன்றிற்று. உலகமெங்கும் விஞ்ஞானிகள் பலர் 1942-ம் ஆண்டு டிசம்பர் 2ம் தேதியை அணுயுகம் பிறந்தநாள் எனக் கருதுகின்றனர்.

அந்த முதலாவது அணு உலையை ஆக்கியவர் காலஞ்சென்ற டாக்டர் என்ரிக்கோ பெர்மி என்னும் பௌதிக விஞ்ஞானி. அமெரிக்காவில் சிக்காகோ நகரத்தில் அணுயுகத்தைத் தோற்றுவித்த அவர் இத்தாலியிற் பிறந்தவர். உலகம் அவரை ''அணுயுகச் சிற்பி'' என அழைப்பதுண்டு.

நினைத்தவாறு அணு உலையைக் கட்டுப்படுத்தி அதிலிருந்து வெப்பம் பெறும் முறையை முதன்முதலாகத் தோற்றுவித்த புகழுடைய பெர்மிக்கு அமெரிக்க அணுச் சக்தி ஆணைக் குழு (நவம்பர் 16ல்) சிறப்புப் பரிசு வழங்கியது.

''அணுச் சக்தியை வென்றுவிட்டோம்; அதனை அழிவு செய்வதற்கு அல்லாமல் மக்கள் இனத்தின் செழிப்பு மல்கும் ஒரு புதுயுகம் தோற்றுவிப்பதற்காக உபயோகிக்கலாம் என நான் உண்மையாகவே நம்புகிறேன்'' என்பது டாக்டர் பெர்மி தமது மரணத்துக்கு முன்பு கூறிய மொழியாகும்.

அணு ''ரியாக்டர்'' என்றாலும் அணுஉலை என்றாலும் ஒன்றே. யுரேனியம் அல்லது அணுச் சக்தியுள்ள வேறு ஒரு பொருள் அதில் இருக்கும். யுரேனிய அணு ஒன்றை உடைத்தால், நியூட்ரான் எனப்படும் நுண்ணிய துகள் புறப்படும். நியூட்ரானால் தாக்கப்பட்ட மற்ற அணுக்களும் உடைபட்டு மேலும் பல நியூட்ரான்கள் உண்டாகும். இவ்வாறு அணு உடைபட்டு உடைபட்டுத் தாங்க முடியாத வெப்பம் உண்டாகிறது. வேண்டும்பொழுது இவ்வாறு வெப்பம் உண்டுபண்ணவும் வேண்டாதபோது அவ்வுற்பத்தியை நிறுத்திவைக்கவும் தகுந்தவாறு டாக்டர் பெர்மியும் அவருடன் உழைத்தவர்களும் அணுஉலையை ஆக்கியிருக்கிறார்கள். அணுச்சக்தியை அமைதிக் காலத்து ஆக்க வேலைகளில் செலுத்துவதற்கு அணு உலைகள் மிகவும் முக்கியமான சாதனங்களாகும்.

அணு உலைகளில் பாஸ்பரஸ், கோபால்ட் முதலிய சாதாரண ரசாயன மூலப் பொருள்களை இட்டு அவற்றையும் அணுச் சிதைவுள்ள பொருள்களாக மாற்றலாம். இவற்றை ''ரேடியோ ஆக்டிவ் ஐஸடோப்புகள்'' அல்லது ''ரேடியோ ஐஸடோப்புகள்'' என்பார்கள். அவற்றை அணுக்கதிரியக்கமுள்ள ஐஸடோப்புகள் என்று கூறலாம். ஆக்க வேலைகளில் அணுச்சக்தியைச் செலுத்துவதற்கு இந்தக் கதிரியக்க முள்ள ஐஸடோப்புகள் அருமையான கருவிகளாக வாய்த்துள்ளன.

விஞ்ஞானத்துக்கு ''மைக்கிராஸ்கோப்'' எவ்வளவு இன்றியமையாத கருவியோ



'யூசிஸ்'

டாக்டர் என்ரிகோ பெர்மி

ஆக்க வேலைகளுக்கு அணுச்சக்தி பயன்படுகிறது என்றால், அதன் அடிப்படை என்ன தெரியுமா? அணுச்சக்தியைக் கட்டுப்படுத்தி, அடக்கியாள முடியும் என்பதுதான். இல்லாவிடில் இந்த முயற்சியில் ஈடுபட்டவர்கள் அதோகதிதான்! அணுக்குண்டைக் கண்டு பிடித்தது பெரிய காரியமாகாது; அச்சக்தியை அடிமை கொள்ளமுடியும், ஆக்க வேலைகளுக்கு 'ஏர் பூட்ட' முடியும் என்று கண்டுபிடித்ததுதான் சிறப்புடைய தாகும். இதை முதன் முதலில் செய்து காட்டிய பெருமை என்ரிகோ பெர்மி **(Dr. Enrico Fermi)** என்ற விஞ்ஞான நிபுணரைச் சார்ந்த தாகும். இவர் அண்மையில், கடந்த நவம்பர் 28-ம் நாள் புற்றுநோய் காரணமாக—தமது 53-ம் வயதில் இவ்வுலகை நீத்தார். இதற்குப் பத்துத் தினங்களுக்கு முன்புதான் அவருடைய ஆராய்ச்சிகளைப் பாராட்டிய அமெரிக்க நாடு 25,000 டாலர் பரிசுத் தொகையை அவருக்கு வழங்கியது. நோபல் பரிசு ஏதாவது......? ஆம், நான்கு ஆண்டுகளுக்கு முன் அதையும் பெற்ற விஞ்ஞானிதான் இவர்!



தமிழகம் தந்த இந்திய விஞ்ஞானி

டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன்

அவ்வளவு இன்றியமையாத தாகியுள்ளது கதிரியக்கமுள்ள ஐஸடோப்பும். வைத்தியம், விவசாயம், தொழிலியல் முதலிய துறைகளி லெல்லாம் கதிரியக்க முள்ள ஐஸடோப்புக்கள் பெரிதும் முன்னேற்றம் பெற்றுள்ளன. வைத்தியத்தில் சிலவகைப் புற்றுநோய்களையும், மற்றும் பல பிணிகளை யும் அறிந்து குணமாக்குவதற்குக் கதிரியக் கமுள்ள ஐஸடோப்புகள் விஞ்ஞானிகளுக்கு மிகவும் உதவியுள்ளன. பயிர் வகைகளைச் சிறந்தவையாக்கி விளைவைப் பெருக்க அவை உதவி செய்கின்றன. தொழில் துறையில் உற்பத்தியின் செலவு குறையவும் தரம் உயரவும் அவை செம்மையாகப் பயன்படுகின்றன. பல துறைகளிலும் விஞ்ஞான ஆராய்ச்சி முன்னேறுவதற்கு அவை பெருந்துணையாகி யுள்ளன.

அணுவி லிருந்து மின்சாரம் எடுப்பதற்கும் வேலை நடக்கிறது. அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் அதற்காகப் பெரிய பெரிய அணுஉலைகள் செய்கிருர்கள். இன்னும் சில ஆண்டுகளில் வேறுபல நாடுகளிலும் அத்தகைய அணுஉலைகள் கட்டப்படும் எனத் தெரிகிறது.

இந்த அணுஉலைகளில் அணுவை உடைத்து வெப்பம் பெறுகிருர்கள். இந்த வெப்பத்தால் நீரை ஆவியாக்கி, நீராவியால் டர்பைன் இயந்திரத்தை ஓட்டுகிருர்கள். டர்பைன் இயந்திரம் மின்சார உற்பத்தி இயந்திரத்தை இயக்க, மின்சாரம் உற்பத்தியாகிறது. இதனை அணு மின்சாரத் தொழிற்சாலை எனலாம். இதற்கும் சாதாரண மின்சார உற்பத்திசாலைக்கும் உள்ள வித்தியாசம் ஒன்றுதான். மற்ற மின்சார உற்பத்திச்சாலைகளில் நிலக்கரியோ எண்ணெயோ இருக்கும்; இதில் யுரேனியம் இருக்கும்.

அணுவை அமைதிக்குப் பயன்படுத்தும் ஐஸன்ஹவர் திட்டம் நிறைவேறினல் ஏற்படக்கூடிய பலன்களைப் பற்றிப் பேசும் போது டாக்டர் பெர்மி கூறியவை குறிப்பிடத்தக்கவை:

''அணுச்சக்தியால் இயந்திரங்களை இயக்கக்கூடிய நிலையே அணுச்சக்தி உபயோகத்தில் மிகவும் முக்கியமான தாகும் என எண்ணுகிறேன். அணுச்சக்தி எரிபொருளுக்கு எடை மிகக்குறைவு. (நிலக்கரி, பெட்ரோல் முதலிய) இயற்கை எரிபொருள் சமீபத்தில் கிடைக்காமல் அவற்றை அதிகச் செலவு செய்து நெடுந்தொலைவிலிருந்து கொண்டுவரும் இடங்களுக்கு அணுச்சக்தி எரிபொருள் சிறப்பாகப் பயனுள்ளதாகும்'' என்ருர் டாக்டர் பெர்மி.

சர்வதேச அணுச்சக்தி நிலையம் இப்பொழுது உருவாகிக்கொண் டிருக்கிறது. அதற்கு அமெரிக்காவும் பிரிட்டனும் யுரேனியம் கொடுத்திருக்கின்றன. இது அணு உலைகள் செய்வதற்கு உதவியாகும் எனத் தெரிகிறது.

இவ்வாறு செய்யப்படும் சிறிய அணு உலைகள் கதிரியக்க முள்ள ஐஸடோப்புகள் உற்பத்தி செய்யப் பயன்படும்; அணுவைப் பற்றியும் அதனை எவ்வெவ்வாறு ஆக்கமான துறைகளில் பயன்படுத்தலாம் என்பது பற்றியும் அறிவதற்கு அவை பெரிதும் பயன்படும் என்று விஞ்ஞானிகள் கருதுகிருர்கள்.

இன்றைய அணு உலைகள் தோன்றுவதற்கு வழிகாட்டியாக இருந்த முதலாவது அணுஉலை சரித்திரப் புகழ் வாய்ந்ததெனினும் அதன் அமைப்பு எளிமையானதே. அதன் அமைப்பை மேற்பார்த்தவரும் அதனை ஆக்குவதற்குப் பொறுப்பாயிருந்தவரும் டாக்டர் பெர்மியாவார்.

முதலில் ஒரு மரச்சட்டதை அடியில் வைத்தார்கள். அதன்மேல் அடுக்கடுக்காகப் பென்சில் கரி அல்லது கிராபைட்டு என்பதை வைத்தார்கள். இந்த கிராபைட்டு அடுக்குகளில் ஒன்றுவிட்டு ஒன்றின் மூலைகளில் யுரேனியம் அல்லது யுரேனியம் ஆக்ஸைடு கட்டி கட்டியாக வைக்

கப்பட் டிருந்தது. கிராபைட்டு அடுக்கு களில் துவாரங்கள் இருந்தன; அவற்றின் வழியே காட்மியம் கம்பிகள் செருகப் பட்டிருந்தன. நியூட்ரானைக் கவர்ந்து கொள்ளக்கூடியது காட்மியம்; எனவே தட்டுத் தடங்கல் இல்லாமல் அணுஉலை உஷ்ணம் கொடுக்கத் தொடங்கும் நிலை அடைந்ததும் திடீரென அது வேலை செய்யத் தொடங்கி விடாதபடி காப்பதற்கு இந்தக் காட்மியக் கம்பிகள் பயன்பட்டன.

இந்த அணு உலை அடுக்கினுள் நியூட் ரான் உற்பத்தி நிகழ்வதைக் கண்டுபிடிப் பதற்குரிய கருவிகளும் அருகில் பொருத் தப்பட்டன. கிராபைட்டு அடுக்குகளை ஒவ் வொன்ருக அடுக்க அடுக்க, காட்மியக் கம்பிகள் இடைக் கிடையே கவனமாக வெளியே இழுக்கப்பட்டன. இவற்றை முழுவதும் இழுத்துவிட்டால், உள்ளே நடக்கும் நியூட்ரான் உற்பத்தியின் வேகம் அனைத்தையும் கருவிகளில் கண்டு விடலாம்.

நியூட்ரான் உற்பத்தியால் மேலும் மேலும் அணுக்கள் உடைபட்டு உஷ்ணம் இடைவிடாமல் உண்டாக வேண்டும் என் பதே ஆராய்ச்சியின் நோக்கம். அதற்கு அணுஉலை எந்த அளவு பெரிதாக இருக்க வேண்டும் என்று கண்டுபிடிக்கவே டாக்டர் பெர்மி இப்பரிசோதனையை நடத்தினர். அவர் நினைத்ததற்கு முன்பே, அணுஉலை அடுக்கு தகுந்த அளவுக்கு விரைவில் வளர்ந்தது.

நியூட்ரான் உற்பத்தி மிக வேகமாக நடந்துவருகிறது என்று டிசம்பர் 1-ம் தேதி தெரிய வந்தது. அன்று இரவு டாக்டர் பெர் மியும் அவருடைய துணைவர்களும் அணு உலையிலிருந்து காட்மியக்கம்பிகளை எடுத்து விட்டால் அணு உலை தாளுக வேலை செய்யத் தொடங்கிவிடும் என்று கண்டனர்.

1942 டிசம்பர் 2ம் நாள் விடிந்தது. காலை 9·45 மணி. காட்மியக் கம்பிகள் சிலவற்றை வெளியே இழுத்துவிடும்படி டாக்டர் பெர்மி சொன்னர். அருகிலிருந் தவர் எல்லோரும் நியூட்ரான் உற்பத்தி யைக் காணும் கருவிகளையே உற்றுப் பார்த்துக்கொண் டிருந்தார்கள். இக் கருவிகளின் முகப்பு கடிகாரம் போலத் தோன்றும்; கடிகார முள் போல அதில் ஒரு முள் உண்டு; நியூட்ரான் உற்பத்தி வேகத் துக்குத் தக்கபடி அது ''க்ளிக் க்ளிக்'' என்று அசையும். இன்னெரு கருவியும் பக்கத்தில் இருந்தது; அதில் ஒரு பேஞ உண்டு; அது அணு அடுக்கினுள்ளேயுள்ள நியூட்ரான் உற்பத்தி வேகத்தை ஒரு காகி தத்தில் கோடிட்டுக் காட்டுவதாகும்; கோடு உயரப் போனல் அதிக நியூட்ரான் கள் ஒரே வேகமாய் உற்பத்தியாகின்றது என்று பொருள்.

நியூட்ரான் உற்பத்தி கட்டுக்கடங்காமல் போய்விடாதபடி காக்க முக்கியமான காட் மியக் கம்பி ஒன்று செருகப்பட் டிருந்தது. அதனை வெளியே எடுத்துவிடும்படி டாக்டர் பெர்மி 10 மணி ஆனதும் சொன் ஞர். ஸின் என்பவர் அவ்வாறே செய்தார். இன்னெரு கம்பிக்கு அருகே ஜார்ஜ் வெய்ல் என்பவர் நின்ருர். அக்கம்பி அணு உலை அடுக்கினுள்ளே எத்தனை அடி எத் தனை அங்குலம் இருக்கிறது என்று அறி யுமாறு வரையிடப்பட் டிருந்தது.

நியூட்ரான் உற்பத்தி வேகத்தைக் காட்டும் கருவிகளின் ''க்ளிக் க்ளிக்'' என்ற சத்தம் அதிகமாயிற்று; காகிதத்தில் வரையும் கோடும் உயர்ந்தது. ஆனல் சத்தம் ஒன்றுபோல் இல்லை; விரைவில், சத்தம் குறைந்துவிட்டது; கோடும் படுக்கைக் கோடாகிவிட்டது. அணுஉலை இன்னும் தானே இயங்கக் கூடியதாக வளரவில்லை.

ஜார்ஜ் வெய்ல் வைத்திருந்த காட்மியக் கம்பி அதன்பின் பன்முறை சிறிது சிறி தாக உயர்த்தப்பட்டது. ஒவ்வொரு முறையும் நியூட்ரான் உற்பத்தி வேகம் உயர்ந்தது. ஆனல், விரைவில் அது தணிந்துவிட்டது. நண்பகல் ஆனதும்

டாக்டர் பெர்மி, 'பசிக்கிறது; சாப்பிடப் போகலாம்'' எனத் திடீரெனக் கூறினர்.

கூட வேலை செய்பவர்களுக்கு அலுப்புத் தட்டக்கூடாது என்பதை அவர் உணர்ந்தார் போலும். சாப்பாட்டு வேளையில் அவர் அதிகம் பேசவில்லை. எப்போதுமே அதிகம் பேசாதவர் அவர். அன்று அவர் அதிக மௌனமாக இருந்தார்.

இரண்டு மணிக்கு மீண்டும் ஆராய்ச்சிக் களத்தை நோக்கி அவர்கள் நடந்தார்கள். இருபது நிமிஷம் கழித்து, ''உம், சரி'' என்ருர் டாக்டர் பெர்மி; குறித்த அளவு ஜார்ஜ் வெய்ல் காட்மியக் கம்பியை வெளியே இழுத்தார். அருகில் நின்றவர் எல்லோரும் ஆவலாய்க் கவனிப்பதும், கருவிகளி லிருந்து நியூட்ரான் உற்பத்தி வேகத்தை டாக்டர் பெர்மி கவனிப்பது வரையில் காத்திருப்பதுமாக இருந்தார்கள்.

''இப்பொழுது நடந்துவிடும். இனி மேல் அணு உலை தானே இயங்கும். கோடு உயர்ந்துகொண்டே போகும்; இறங்காது'' என்ருர் டாக்டர் பெர்மி, அருகிலிருந்த டாக்டர் ஆர்தர் காம்டனிடம்.

டாக்டர் பெர்மி நியூட்ரான் உற்பத்தி வேகத்தைக் கணக்கிட்டார். ஒன்றும் பேசாமல் வேகமாக மாறி மாறிக் கணக்குகள் போட்டார்.

அவருக்குப் பின்புறம் நின்றவர்கள் உன்னிப் பார்த்தார்கள்; புதுயுகம் பிறக்கப் போவதை ஒரு விநாடியும் தப்பாமல் காண வேண்டுமென்று ஒரே ஆர்வம். நியூட்ரான் வேகம் காட்டும் கருவிகள் இரையத் தொடங்கின. அமைதியாய் டாக்டர் பெர்மி கணக்குப் போட்டுக்கொண் டிருந்தார்.

சரியாக 3-25 மணிக்கு டாக்டர் பெர்மி ''அணு உலை தானே இயங்குகிறது'' என்ருர். 1942 டிசம்பர் 2 பிற்பகல் 3-25 மணியை அநேக விஞ்ஞானிகள் அணு யுகத்தின் தொடக்கம் எனக் கருதுகிருர்கள்.

இவ்வாறு அணுஉலை 28-நிமிஷநேரம் வேலை செய்ய விடப்பட்டது. காட்மியக் கம்பிகள் உள்ளே செருகப்பட்டன. பரிசோதனை பலனளித்தது குறித்து இத்தாலியச் சிவப்பு ஒயின் சின்ன காகிதத் தம்ளரில் வழங்கப்பட்டது. அதனை விஞ்ஞானிகள் மெல்லப் பருகினர். சற்று நேரம் சென்றபின் ஆர்தர் காம்டன் ஹார்வர்டு பல்கலைக் கழகத்திலிருந்த டாக்டர் ஜேம்ஸ் பி. கானன்டுக்கு டெலிபோன் பேசினர். டாக்டர் கானன்டும் அப்பரிசோதனையில் மிக அக்கறை காட்டியவர்.

டாக்டர் பெர்மியைப் புகழும் முகமாக டாக்டர் காம்டன் ''இத்தாலிய மாலுமி புதிய உலகம் வந்து கரையிறங்கி விட்டார்'' என்ருர்.

''புது உலகக் குடிகள் எப்படியிருந்தார்கள்?'' என்ருர் டாக்டர் கானன்ட்.

''நட்போடு வரவேற்ருர்கள்'' என்ருர் டாக்டர் காம்ப்டன், பரிசோதனை பலன் அளித்தது என்ற குறிப்போடு.

இந்தப் பன்னிரண்டு ஆண்டுக் காலத்திற்குள் அணுச்சக்தி மாபெரும் அழிவுச் சக்தியாக ஆனதையும் அமைதிக்குரிய துறைகளில் பெரும் பெரும் நன்மை செய்யக் கூடியதாக வளர்வதையும் உலகம் கண்டுவிட்டது. அணுவை மக்களுக்கு அடிமை செய்யும் அமைதியான மிகச் சிறந்த ஊழியனுக ஆக்க அமெரிக்காவும் பிரிட்டனும் மற்றுமுள்ள சுதந்திர நாடுகளும் இயன்ற முயற்சிகளெல்லாம் செய்கின்றன. சர்வதேச அணுச்சக்தி நிறுவனத்துக்குத் தோரியம் வழங்குவதாக இந்தியாவும் முன் வந்துள்ளது.

அணுச்சக்தியை ''மக்கள் இனத்துக்குச் செழிப்பு மல்கும் ஒரு புதிய யுகம் தோற்றுவிப்பதற்காக உபயோகிக்கலாம்'' என்று டாக்டர் பெர்மி உளமார நம்பிய நம்பிக்கையைத் தமது நம்பிக்கையாகக் கொள்ளாத பொறுப்புள்ள தலைவர் சுதந்திர உலகில் இன்று எங்கும் இல்லை.

மேதையின் கர்வம்

"சுகி"

குமாரபுரத்தின் வேப்பங்காற்று ரயில் வண்டிக்குள் சொகுசாக வீசிற்று. கண் மூடி இந்த உலகை மறக்கும் மோன நிலை.

துப்பாக்கிக் கட்டையால் தலையில் இடிக்காத குறை; 'ணங்' கென்று பலகையில் ஓசைப்படுத்தி, 'எழுந்திரய்யா' என்று ஆக்ஞையிட்ட குரலை ஏறிட்டுப் பார்த்தேன். இரு போலீஸ் வீரர்கள், துப்பாக்கி, தோட்டாப்பை, செந்தலையுடன் கம்பீரமாகப் பிளாட்பாரத்தில் நின்றனர். வசதியாகத் தூங்கிக்கொண்டு போகலாம் என்ற ஆசையில் மண் விழுந்தது.

உடனே............?

குமாரபுரத்தின் வேப்பங்காற்றுக்கூட உஷ்ணமாக வீசிற்று. தாடியும் மீசையுமாக, விலங்கிட்ட உருவம்; அவன் கண்களில் எவ்வளவு தீட்சண்யமான பார்வை; கடலைப் போன்ற ஆழம் நிறைந்த கண்கள்; நாசியின் பிடிப்பும் கூர்மையும் ...... பரந்த நெற்றியும் ஒரு கலைஞனுக்குள்ள தோற்றத்தை என் கண்களிற் பதித்தன.

கைதிக்குள்ள கூனிக் குறுகி நிமிரும் உடல் வளைவோ, மனச் சோர்வோ இல்லாத நடை; பார்வை! போலீஸ்காரர்கள் இருவரையும்விடக் காம்பீர்யமாகவும், திடமான உடல்கட்டோடும் இருக்கும் கைதியை நான் கண்டதில் வியப்பு. படுத்திருந்த என் உடல் மட்டுமன்று, உள்ளமும் நிமிர்ந்து உட்கார்ந்தது.

''இப்படி உட்காரும். என்னங்க, திரி நாட்செவன், நான் பலகாரம் சாப்பிட்டு வருகிறேன். பார்த்துக்கொள்ளும்'' என்று 603 இறங்கிப் போய்விட்டார்.

கைதியின் கை விலங்கோடு சங்கிலி பிணைத்ததை 307 பிடித்தபடியே உட்காரப் போனார்.

கைதி, ''ஜன்னல் ஓரத்தை எனக்குக் கொடுங்கள்'' என்று பதிலை எதிர்பாராத படியே ஓரத்தை அடைந்தான், மன்னிக்கவும், அடைந்தார். எனக்கு என்னையறியாமலே மரியாதை கைதியின்மீது விழுந்தது. இறங்கிக் காப்பி குடிக்கப்போன 603-ன் கண்களில் ஜன்னலோரத்துக் கைதி விழவே, 'வேய் இதுதானா பாராக் கொடுக்கிறது? நீ இந்தப் பக்கம் வாய்யா; ஆளு குதிச்சான்னா?' என்று தமது காவலின் பயத்தையும், தீரத்தையும் எச்சரிக்கை விடுக்கவே, கைதி நகர, ஜன்னலோரம் உட்கார்ந்தார் போலீஸ் 307.

எனக்குப் பேசவே பயம். வாங்கிப் படிக்காமல் மடித்த பத்திரிகையைப் பிரித்துக் கண்ணைப் புதைத்தேன். என் மனம் எதிரே இருந்த நபர்களை மறந்து, பத்திரிகை உலகுக்குள் சஞ்சரித்தது. அதிலே வழிப்பறி பற்றியும், காதறுத்த திருட்டுப் பற்றியும், களவு குறித்தும் ஒரு சில செய்திகள் வந்தபோதுதான், மீண்டும் எதிரே நின்ற கைதியின் நினைப்பு எழுந்தது. படித்து முடித்த உணர்ச்சி மனம், கைதி



யின் கண்களோடு சந்திக்கவே சற்றுத் திடுக்கிட்டேன்.

எவ்விதமான பயமோ, தயக்கமோ இல்லாமல், அந்தக் கைதி 'பேப்பரைக் கொடுங்கள்' என்ருர். நான் என்னே மறந்து நீட்டினேன். எவ்வித மனக் கஷ்டமுமின்றிப் பத்திரிகையைப் படிக்க ஆரம்பித்தார். புதிதாகப் பத்திரிகை படிப்போர் பக்கத்தைப் புரட்டவும், அதைப் பிடிக்கவும் திணறுவார்கள். டெய்லி பத்திரிகையைப் படித்து அனுபவப்பட்டவர்களுக்கே எடுத்ததும் படிக்க முடியும்.

'ஓகோ படித்தவரா?' என்று உள் மனம் கேள்வி கேட்டுக்கொண்டது. படித்தவர்களைக் கைதிக் கோலத்தில் காணமுடியாது என்று அறிவு வாதாடிற்று.

திடீரென்று கைதி சிரிக்க ஆரம்பித்தார். அவர் கையிலுள்ள விலங்கு, அருகாகக் காபந்து செய்யும் போலீஸ்—இவை மறந்து

சிரித்ததில் இன்னும் வியப்பு அடைந்தேன். அதிலே கார்ட்டூன்கூட இல்லாதபோது எதைக் கண்டு சிரிக்கமுடியும்? அதே பக்கம் படித்திருந்தும் நான் சிரிக்கவில்லை.

'ஏன் சிரிப்பு' என்று மையமாகக் கேட்டேன். 'சிரித்தாய்' என்று ஒருமையோ, 'சிரித்தீர்கள் என்ற பன்மையோ கொடுக்க மனம் கூசிற்று. இரண்டுங் கெட்டானுகக் கேட்டேன்: 'ஏன் சிரிப்பு? 'பாருங்கள். பேடிப் பயல்கள்' என்று மீண்டும் கைதியின் சிரிப்புக் கேட்டது. இந்த உலகில் ஒரு சிலருக்குத்தான் தங்கள் அவல நிலையை மறந்து சிரிக்கும் வாய்ப்பு இருக்கிறது.

'என்ன?' பத்திரிகை வாங்கிப் பத்தியைப் பார்த்தேன்:

......இன்று அதிகாலையில் மசமச வென்ற பொழுதில் தண்ணீர் எடுக்கச் சென்ற கிழவியொருத்தியின் பாம் படத்தை (காது நகையை) அறுத்து இரு காதுகளையும் ரணகளமாக்கி நகையைப் பிடுங்கிக் கொண்டு ஓடிவிட்டதாகத் தகவல் கிடைத்தது. ஸ்தலத்திற்குப் போலீஸார் விஜயம் செய்து புலன் விசாரணை செய்ததில் இரண்டுபேரைச் சந்தேகாஸ்பதமாகக் கைது செய்துள்ளார்கள்.

படித்து முடித்த நான் கைதியைப் பார்த்தேன். அவர் சிரிப்பு இன்னும் நின்றபாடில்லை. திருட்டைப் பற்றிச் சிரிக்கும்படி என்ன வேதாந்த நிலையை அடைந்தார்? அதே பத்தியில் மற்ருேர் பகுதியில் இருந்ததையும் அக்கைதி சுட்டிக்காட்டியவர் 'படியுங்கள்'' என்ருர்.

''இவ்வூரில் பிரபல திருடன் பிடிபட்டான்.பள்ளிக்கூடத்தின்அருகாக ஆறுவயதுச் சிறுமியைச் சீனிமிட்டாய் கொடுத்து ஏமாற்றி, அதன் காலில் கிடந்த மூன்று ரூபாய் விலையுள்ள வெள்ளிக் கொலுசை... ...''என்று முடிக்கு முன்னதாக, 'எச்சிப் புத்திப் பயல்கள் வெள்ளிக் கொலுசைப் போய்த் திருடுவார்களா? இவனையெல்லாம் கட்டிவைத்து உதைக்கணும்' என்று ஆவேசமாகச் சொன்னுர்.

என் நெஞ்சமே நிற்கும் உணர்ச்சி பெற்றேன். கைதி தன் சகபாடிக்காக அனுதாபம் தெரிவிக்காமல் 'உதைக்க வேண்டும்' என்று திட்டினுல்?

''வெள்ளிக் கொலுசைத் திருடிக் கடை வீதியில் விற்கும்போது, கடைக்காரர் மிரட்டவே ஆசாமி உளறி, போலீசார் வசம் ஒப்புவிக்கப் பட்டான். குழந்தைக்கு எவ்வித ஆபத்தும் இல்லை.........' என்று செய்தியை முழுவதும் படித்தேன். இந்தச் செய்திகள் அன்ருடம் வருகிறவை; ஆகவே என் மனத்திலே அதிசயமோ திடுக்கிடும் உணர்ச்சியோ தரவில்லை. கைதிக்கு இவை சிரிப்பூட்டும் செய்தியாக இருக்கலாம்.

போலீஸ் 603 திருப்தியாகச் சாப்பிட்ட பெருமையில் வெற்றிலை சுவைக்கும் வாயுடன், கட்டைப் பீடியுடன் வண்டிக்குள் வந்தார். கைதியின் அருகாக அமர்ந்தார்; இருமேகங்களுக்கு நடுவே ஒளிரும் நட்சத்திரத்தின் காட்சி என் மன வானில் மின்னிற்று.

இதுவரை வாய்மூடியிருந்த 307, ''கேட்டீங்களா 603, இவள் சிரிக்கிற காரியத்தை?'' என்று ஆரம்பித்தார்.

''அவுகளுக்கு என்ன 'மேதாவி', சிரிப்பாக'' என்று சூடு கொடுத்தார் 603.

ஒவ்வொன்ருகக் கிழவி காதை அறுத்தவன், சிறு பிள்ளையை மிட்டாய் கொடுத்துத் திருடியவன், கொல்லையில் கிடந்த வெந்நீர்த் தவலை திருடியவன் ஒவ்வொரு நபராகச் சொல்லிய 307, ''இத்தனை நபர்களையும் உதைக்க வேண்டுமாம். இந்த ஹைக் கோர்ட்டு நீதிபதி சொல்லும் தீர்ப்பு'' என்று கிண்டலில் இறக்கினுர். தனியாகக் கைதியிடம் வாக்குக் கொடுத்தால் மட்டந் தட்டுவார் என்று ஜவான் பக்கபலமாக அடுத்த ஜவான் வந்த பின்னர் இதைச் சொல்லுகிறர் போலும்.

''யாரு? இவுகதானே! ஹைக் கோர்ட்டு சீப் ஜட்ஜ் கெட்டாங்கேடு. இவருதானே ஸுப்ரீம் கோர்ட்டு நீதிபதி ஆச்சே, இவாள்?'' என்று இடக்காக மட்டந்தட்டினுர் 603.

இந்தச் சூடு 'கைதி' உடம்பில் உறைத்ததாக எனக்குத் தெரியவில்லே. ஏதோ அறிவிலிகள் பேசுகிருர்கள் என்ற அலட்சிய பாவத்தில் கைதி அமர்ந்திருந்தார்.

'என்னய்யா அகப்பட்டவனே உதைக்கத்தானே வேண்டும்' என்று வம்புக்காகப் போலீசார் பேச்சை வளர்த்தார்கள்.

'திருடன் என்ருல் எல்லோரும் திருனுக முடியுமா?'

என் காதுகளில் ஏதோ தெய்விக மந்திரம் ஒலிப்பதுபோல இருந்தது. திருடன், என்பது அரசன், தளபதி போல ஒருசிலருக்குத்தான் அமையக் கூடிய பெயரா? கைதியின் புதியபேச்சு—சொற்ருெடர்—என்னே உலுக்கிற்று.

''திருட்டுப் பயல்களுக்குள் மேல் ஜாதி, கீழ் ஜாதிகூடவா இருக்கிறது?'' இது 603 கொடுத்த அசைக்கமுடியாத ஆப்பு.

''ஏன் இல்லே? கோழி திருடுகிறவனும் திருடன்; கிழவி—பாவம், வயசானவள்; நடக்கமுடியாதவள், அபலே—அவளிடம் தன் வீரத்தைக் காட்டுகிறவன் ஒரு ஆண் பிள்ளேயா? பொம்பளேப் பயல். மஞ்சள் பூசாத கம்பொஞ்சாதி. கோழை. முட்டாள்; கையாலாகாத பயல்.'' வார்த்தைக்கு வார்த்தை உணர்ச்சி கொப்புளித்தது. திட்டுகள் அம்புபோல எழ, எனக்கு வியப்பின் வெறி ஒருபடி மேலாயிற்று.

''அடடா. நீதான் திருடர்களுக்குள் மகாத்மா. சும்மா இரய்யா.'' என்ருர் போலீஸ் 603.

''திருடன் என்ற பெயருக்கே லாயக்கில்லாத பயல்களுக்குத் திருட்டுப் பட்டம் கொடுப்பது அவமானம். இவனேயெல்லாம் பின்கட்டு முன்கட்டுக் கட்டிப் பச்சையாத் தோலுரிக்க வேண்டும்.''

இது பொறுக்காத 307, ''தேவாள் எந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவரோ? உங்க முதுகுத் தொலியை மட்டும் உரிக்காமலா விடுவார்கள்.'' என்று சொற்களிலேயே உரிக்கும் தொனியைக் கரகரப்பேற்றிக் காட்டினுர்.

எனக்கு ''இவர் என்ன கேஸில் அகப்பட்டார்?'' என்று கேட்க ஆசை உந்திற்று.

''நம்ம காரியம் வேறே. சோதாப் பயல்களேயும்—அபலேகளிடம் திருடும் அயோக்கியர்களேயும் நம்மோடு ஒப்பிடவேண்டாம். அவமானம்.''

கைதியின் இந்த வீரவாசகம், பிடிபட்ட *போரஸ் அரசன்* கைதியாக நின்ருலும், 'அரசன் அரசனே' என்பதை மகாவீரன் அலெக்ஸாந்தருக்கு எடுத்துச் சொன்ன சரித்திரக் காட்சியை நினேப்பூட்டியது. திருடர்களுக்குள்ளும் ஒரு நியாயம் உண்டு, நேர்மை உண்டு, வீரம் உண்டென்ற புதிய ஒளியை என் எண்ணத்தில் பாய்ச்சினுர் கைதி.

''மகா யோக்கியர்; வாயை மூடும். திருட்டுத் திருட்டுத்தான். கோழிக்குஞ்சைத் திருடினுலும் சரி, கோடி ரூபாய் திருடினுலும் சரி.'' என்று 603 சொல்ல, 'சபாஷ் சபாஷ்'' போட்டார் போலீஸ் 307.

''ஏழையிடம் திருடுகிறவன்—பலமற்றவனிடம் திருடுகிறவன் திருடனல்ல. முட்டாள்; கோழை. எச்சிபொருக்கி.''

''பெரிய புத்திசாலி நீர். உம் யோக்யதை என்ன?'' என்றனர் இரட்டை நாயனச் சுருதி போன்று போலீசார். நான் விரும்பிய விடைக்கு அஸ்திவாரம் தென்படவே காதைத் தீட்டிக் கொண்டேன்.

''நம்ம யோக்யதைக்கு என்ன? நான் கிழவி காதை அறுக்கிற பேடியா? குழந்தை சங்கிலியைத் திருடும் முட்டாளா? வெந்நீர்த் தவலே தூக்கும் பயங்கொள்ளியா?

இவனுகளேயும் நம்மையும் ஒரே தராசில் வைக்காதீங்க............''

''உங்க யோக்யதையை நிறுக்கத் தங்கத்திலே தராசும், வைரத்திலே படியும் செய்ய வேண்டியதுதான்.''

போலீஸ் 603 மூளையைச்—சொற்சிலம்பத்தை—என் கற்பனை உள்ளம் வியந்தது.

''ஆமாம் என் பெருமை உங்களுக்குத் தெரியாது. சார், நீங்களே சொல்லுங்கள். மக்களுக்குத் தொல்லே தருகிற பிச்சைக்காரப் பயல்களும், அரசாங்க விரோதியும் ஒன்ரு?''

புதிர் புரியவில்லே.

''அட அரசாங்க விரோதியே'' என்று போலீசார் ஏளனமாகச் சிரித்தார்கள்.

''ஏழையையும், பலஹீனமானவர்களேயும் ஏமாற்றுவதா பெரிசு? இதைவிட இராப் பிச்சை எடுக்கலாமே?''

''குற்றம் குற்றந்தான், எதைச் செய்தால் என்ன? குற்றத்திற்குச் சிறிது பெரிதென்ற அளவுகோல் கிடையாது.''

''என்னேயும் பட்டினிப் பட்டாளம் லிஸ்டில் சேர்க்கவேண்டாம். நான் அரசாங்க விரோதியே தவிர, மக்கள் விரோதியல்ல''

''போடுடா தப்பல்; எவ்வளவு பெரிய தியாகி!'' என்ருர் போலீஸ் 603.

''இவருடைய தீரத்தை மெச்சிச் சர்க்கார் பாராட்டுப் பத்திரமும் புது வருஷத்துப் பட்டமளிப்பும் செய்வாங்க! வாய் இருக்குதே அப்பா உனக்கு!''

''கள்ள நோட்டு, நாணயம் அடிச்சவரு, சவடால் அடிக்கிற ஜம்பத்தைப் பாருங்க சார்'' என்ருர் 603 என்னேப் பார்த்து.

என் தலே சுற்றியது. கைதியின் பரந்த உள்ளம், தான் மக்கள் விரோதியல்ல, அரசாங்க விரோதி என்ற மாபெரும் தனிப் பெருமை என் இதயத்தில் விழிப்பைத் தந்தது. எந்தத் தொழிலிலும் கலேயிலும் மேதை, கையாலாகாத அப்பாவியை—புரட்டனே,—பயங்கொள்ளியை—நாயினும் இழிவாக எண்ணுவதுபோல இவரும் எண்ணுகிருர்.

அப்பப்பா, அவர் முகத்திலும் குரலிலும் எத்தனே பெருமை, கர்வம்!

603, ''பலே ஆளய்யா நீ. கொண்டாங்க அந்தக் கையை'' என்று மறுபக்கத்துக் கையில் சங்கிலியை மாட்டித் தன் கையில் பிடித்துக் கொண்டார்.

''உங்களுக்குச் சிந்திக்கும் சக்தி ஏது? சொன்னுலும் தெரியாது. உங்கள் பீனல் கோடு சட்டப் புத்தகத்தில் சாணிச்சட்டியும் சந்தனக் கும்பாவும் ஒண்ணுதான்! கேளுங்கள் சார், இந்தப் போலீசாருக்கு அழுகல் வாழைப்பழம் திருடும் நாலுநாள் பட்டினியும் திருடனுகப்படும்; அரசாங்கமே திகைக்கும் பொருளாதார நெருக்கடி தருகின்ற நானும் திருடனுகப்படும். நீங்கள் சொல்லுங்கள் அவனேத் திருடன் எனலாமா? என்னேயும் அவனுடன் இனம் சொல்லலாமா? உங்களுக்குத் தெரியும் சொல்லுங்கள்.........''

அந்த மேதையின் வேதாந்தம் என் புத்தியைச் சிதற வைத்தது. நாக்கு உலர்ந்து பேசும் சக்தியின்றிச் சிலேயாய் நான் இருக்க, ரயில் ''ஆமாம் ஆமாம், இவன் சொல்வது சரி'' என்று தாளமிடுவது போன்று ஓடிக்கொண் டிருந்தது.

—ஓ—

''வாகனைக்கண் டுருகுதையோ — ஒரு

மயக்கமதாய் வருகுதையோ

''மோகமென்பது இதுதானோ — இதை

முன்னமேநான் அறியேன்! ஓ!''

(ஓவியர்: ''சங்கர்'')



டாக்டர். மு. ஆரோக்கியசாமி, M.A., Ph.D.

மனித வாழ்க்கைக்கு வரலாறு மிக இன்றியமையாத தொன்று என்பது தற்போது யாவராலும் ஒப்புக்கொள்ளப்படும் உண்மை. பழமையி லிருந்தே புதுமை பிறக்கின்றது; பழமையை அறிந்தால் மட்டுமே புது வாழ்வை நாம் செப்பனிடக் கூடும். இது காரணம் பற்றியே வரலாறு இப்போது எங்கும் போற்றப்படுகிறது; எழுதப்படுகிறது. இதற்கு ஆராய்ச்சி இன்றியமையாதது. மனிதன் ஆராய்ச்சியில் ஈடுபட்டால் அது அவனைச் சில சமயங்களில் வெகுதூரம் கொண்டு செல்லக் கூடியது. இந்த நிலையிலே அவன் தன் பழங்கால வரலாற்றை ஆராய்கின்றான். இவ்வாராய்ச்சி வரலாற்றுக் காலம் என்று சொல்லப்படும். இந்த வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலத்திற்கும் ஆராய்ச்சி மனிதனைக் கொண்டு செல்கின்றது. இவ்விதமே மூன்று முக்கியமான காலப் பாகுபாடுகள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைப்பற்றி (Pre-historic age)ச் செய்யப்பட்டுள்ளன. இவற்றிற்கே முறையே பழம் கற்காலம் (Old stone age), கற்காலம் (Stone age), புதுக் கற்காலம் (New stone age) என்று பெயர் சூட்டப்பட்டுள்ளன.

கற்காலத்தில் தமிழரின் வரலாறு என்ன என்பதைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். முதலில் கற்காலம் என்ற பெயர் எப்படி எழுந்தது என்று பார்ப்போம். வரலாற்றிற் குரிய ஏதுக்கள் ஒரு தேசத்தின் வரலாற்றின் ஒரு பகுதிக்கே உள்ளன. ஒவ்வொரு நாடும் அங்குக் கிடைத்துள்ள ஏதுக்களின்படி அதன் பழங்கால வரலாற்றை வகுத்துள்ளது. ஆகவே ஒவ்வொரு நாட்டின் வரலாறும் வெவ்வேறு காலத்திலிருந்து தொடங்குகிறது. உதாரணமாகக் கிரேக்கர் வரலாறு சுமார் கி. மு. 1000 வருஷத்திலிருந்தும், ரோமானியர் வரலாறு கி. மு. 700 வருஷத்திலிருந்தும், ஆங்கிலேயர் வரலாறு கி. மு. 55 வருஷத்திலிருந்தும், பாபிலோனியர் எகிப்தியர் பினீஷியர் என்ற இவர்கள் வரலாறு சுமார் கி. மு. 3000 வருஷத்திலிருந்தும் தொடங்குகிறது. தற்கால ஆராய்ச்சியாளர்கள் இந்நாடுகளின் வரலாற்றைப் பூமியினின்றும் கண்டெடுக்கப்படும் பழங்கால ஆயுதங்கள், ஆபரணங்கள் முதலியவற்றைக் கொண்டு இங்குக் குறித்த கால எல்லைக்கும் முன்னே கொண்டு சென்றிருக்கிறார்கள். இப்பழங்காலத்து ஆயுதங்களெல்லாம் பெரும்பாலும் கல்லால் செய்யப்பட்டவை. ஆனால் இவை காலத்திற்கேற்பச் சொரசொரப்பாகவும், மழுமழுப்பாகவும் அமைந்திருக்கின்றன. இவைகளைக் கொண்டு

மக்களின் நாகரிகப் போக்கு ஒருவாறு கணிக்கப்படும். இவ்விதமே வரலாற்றிற்கு அப்பாற்பட்ட இக்காலத்தை ஆராய்ச்சியாளர்கள் மூன்று பாகமாகப் பிரித்தார்கள். இவைதாம் முறையே பழைய கற்காலம், கற்காலம், புதிய கற்காலம் என்று அமைந்தன. இவை ஒவ்வொன்றின் காலத்தையும் முறையே கி. மு. 35000 வருஷங்களுக்கு முற்பட்டது, கி. மு. 35,000 வருஷத்தில் தொடங்கி கி. மு. 10,000 வருஷம் வரை நீடித்தது. கி. மு. 10,000-ல் தொடங்கி கி. மு. 5000 வரை நீடித்தது என்று வரலாற்று நிபுணர்கள் கணித்துள்ளனர்.

இவ்விதமாக எழுந்த கற்காலத்தில் தமிழரின் நிலை என்ன? சிந்துச் சமவெளி நாகரிகம் உண்மையானல் கற்காலத்தில் தமிழர் எப்படி வாழ்ந்திருந்தார்கள் என்று நாம் ஒருவிதமாகக் கணிக்கலாம். இந்தச் சமவெளியில் தோண்டி எடுக்கப்பட்ட உயர்ந்த மாடி வீடுகளும், அகன்ற கால் வாய்களும், சிறந்த ஆபரணங்களும் கி. மு. 3000 வருஷத்திற்கும் முற்பட்டவை என்பது சர். ஜான் மார்ஷல், டால்பாய்ஸ் வீலர் (Wheeler), ஹெராஸ் பாதிரியார் முதலிய அறிஞர் அபிப்பிராயம். இந்த நாகரிகம் படைத்திருந்தவர்கள் நம் தமிழரே என்பதும் ஒருவாறு யூகிக்கப்படும்.

இதற்கு ஆதாரமாகத்தான் நாம் முதலில் கற்கால இந்தியர் யாவர் என்பதைப் பற்றி யோசிக்கவேண்டும். தற்போது தென்இந்தியாவில் வாழும் திராவிடர்கள் முன்னொரு காலத்தில் இந்தியா முழுவதுமே பரவியிருந்தார்கள் என்பது ஆரியர் இந்தியாவினுள் நுழைந்தபோது அங்கே வாழ்ந்தவர்களைத் தென்னாட்டிற்குத் துரத்தினார்கள் என்ற வரலாற்றி லிருந்து நமக்குத் தெரிய வருகிறது. பொதுவாகக் கூறுமிடத்துத் தற்போது இந்தியாவில் வாழும் மக்கள் ஒன்று ஆரியர் வழிவந்தவர்கள், அல்லது திராவிடர் வழிவந்தவர்கள். ஆகையால் ஆரியரால் துரத்தப்பட்டவர்கள் திராவிடரே என்பது பொருந்தும்.

திராவிடர் இந்தியாவின் பழங்குடி மக்கள் என்பது இதனால் பெறப்படுகிறது. திராவிடர் உற்பத்தியைப்பற்றிப் பலர் பலவாறு அபிப்பிராயப்படுகிறார்கள். சர் ரிச்சர்டு ஹால் என்ற அறிஞர் இவர்கள் மத்திய கீழ்ப் பாகத்தைச் (Middle East) சேர்ந்தவர்கள் என்றும், எட்கார் தர்ஸ்டன் போன்றவர்கள் இவர்கள் ஆப்பிரிக்க ஜாதியைச் சேர்ந்தவர்களென்றும், இன்னும் சிலர் இவர்கள் மத்திய தரைக்கடல் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களென்றும் கருதுகிறார்கள். இக்கொள்கைகள் யாவும் ஒன்றிற்கொன்று முரண்பாடுடையவை யல்ல என்பது என்னுடைய கருத்து. பழந் திராவிடன் ஒருகாலத்தில் ஆப்பிரிக்காவில் வாழ்ந்திருக்கலாம்; பிறகு மத்திய தரைக்கடல் ஓரமாயும் வாழ்ந்திருக்கலாம்; கடைசியில் மத்திய கிழக்குப் பிரதேச வழியாய்ச் சுமேரியா, பாரசீகம் வழியாக இந்தியாவினுள் நுழைந்திருக்கலாம். ஆகவே திராவிடரிடம் மத்திய தரைக்கடல் பிரதேசப் பழக்கங்கள் இருப்பதிலும், சுமேரியா பிரதேசத்தில் தமிழ்போன்ற தொரு மொழி வழக்கத்தில் இருப்பதிலும், கற்கால மனிதர் ஆப்பிரிக்க ஜாதியாரை ஒத்தவர்கள் என்று சிலர் சொல்வதிலும் எவ்வித முரண்பாடும் இருப்பதாகத் தெரியவில்லை. திராவிடர் இந்தியாவின் பழங்குடி அல்லது முதற்குடி மக்கள் என்பதிலும் எவ்வித வேறுபாடும் இல்லை.

திராவிடன் முதலில் பல நாடுகளில் வாழ்ந்தான் என்பதற்கும், பழங்காலத்திலேயே இந்தியாவை அவன் சொந்த நாடாகக் கொண்டான் என்பதற்கும் என்ன முரண்பாடு இருக்கமுடியும்? ஆங்கிலேயர்கள் 16-ம் நூற்றாண்டில் பல நாடுகளைத் தேடிச் சென்ற காரணத்தால் அவர்கள் ஆங்கில நாட்டைத் தங்கள் சொந்த நாடாகக் கொள்ளவில்லையா? அல்லது போர்த்துக்கீசியர் இக்காரணத்தால் போர்த்துகல் நாட்டைத் தங்கள் நாடாக்க

கொள்ளவில்லையா? தற்காலத்தைவிட முற்காலத்தில் மனிதன் நாடுவிட்டு நாடு திரியும் (Nomadic habit) வழக்கத்தை இயல்பிலே கொண்டிருந்தான் என்பதை நாம் இங்கு நினைவூட்டிக்கொள்ளவேண்டும்.

திராவிடர் என்போர் தமிழர். இவர்கள் தான் இந்தியாவின் கற்கால மனிதர்கள் என்பதில் எவ்விதச் சந்தேகமு மில்லை. இதற்குச் சான்ருகவே கற்காலச் சின்னங்கள் தென்னுட்டிலேயே அதிகமாகக் கிடைக்கின்றன. அவர்கள் மொழி எங்ஙனம் தோன்றியபோதிலும் சரி அது சமஸ்கிருதத்திற்கும் முந்தியது. இதற்கு ஆதாரம் இவ்விரு மொழிகளின் இலக்கணமேயாகும். முதல் தமிழ் இலக்கணம் குறைந்தது கி. மு. 600 வருஷத்தில் செய்யப்பட்ட தென்பதும், முதல் சமஸ்கிருத இலக்கணம் கி. மு. 400-ல் தோன்றிய தென்பதும் ஆராய்ச்சியாளரின் அபிப்பிராயம்.

இதுமட்டுமன்று; சிந்துச் சமவெளிப் பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் திராவிடர்மட்டு மல்ல, தமிழர் சின்னங்களாகவே காணப்படுகின்றன. ஆராய்ச்சியாளர்கள் இவற்றிற்கு என்ன பெயர் கொடுத்துக்கொண்டாலும் சரி, ஒரு சிலர் சொல்வதுபோல் இங்கே காணப்படும் கற்குறிப்புகள் அல்லது சாசனங்கள் மனிதனுல் கண்டுபிடிக்கக்கூடாதவை என்று சொன்னுலும் சரி, இங்குக் காணப்படும் சான்றுகள் முற்றிலும் திராவிட நாகரிகத்திற்குரியவையே யாகும். இவற்றை முறையே ஆராய்வோம்.

(1) இந்தச் சமவெளியில் காணப்படும் சமயத் தொடர்பான உருவங்களை முதலில் எடுத்துக்கொள்வோம். மூன்று முகங்கள் கொண்ட உருவம் பக்கத்தில் அமைந்த எருதுக்களோடு பல இடங்களில் காணப்படுகிறது. இது தற்காலத்தில் தென்னிந்தியாவில் காணப்படும் திரிமூர்த்தியைப் போன்றும், பசுபதீசுவர உருவத்தைப் போன்றும் இருக்கின்றது. இதற்குச் சரியாய்ச் சொல்லக்கூடிய உருவங்கள் வேறே எதுவுமில்லை. இதைவிட நடராசரைப் போல் அமைந்த உருவங்களை நாம் இங்குக் காண்கின்ருேம். இது தென்னிந்தியக் கலையைத் தவிர வேறு எதை உணர்த்த முடியும்? இவை மட்டுமல்ல; சிவலிங்கங்கள் பல இங்கே காண்கின்ருேம். இவை யாவும் திராவிட நாகரிகத்தையே எண்பிப்பவை யாகும்.

(2) இந்தச் சமவெளி நாகரிகத்தில் மற்ருேர் உருவம் தென்படுகிறது. அதுதான் மீன் உருவம். தென்னுட்டைத் தவிர வேறே எங்கும் இந்த மீன் உருவம் போற்றப்பட்டதாகத் தெரியவில்லை. தென்னுட்டிலோ பழங்கால மன்னன் என்ற பொருள்பட அமைந்த பாண்டியன் இதைத் தன் அரசியல் குறியாகப் பழங்காலந்தொட்டே கொண்டிருந்ததாக நமக்குத் தெரியும். இதுவும் சிந்துச் சமவெளி நாகரிகம் தமிழருடையது என்பதைக் காட்டுவதாகும்.

(3) இனி இந்தச் சமவெளியில் வழங்கிய மொழிதான் என்ன என்று கேட்டால் அதைப்பற்றி நாம் திட்டமாகத் தற்போது கூற இயலாது. எனினும் இங்கேஇருந்த கற்களில் செதுக்கியும் படருபமாக எழுதியும் உள்ள சாசனங்களைப் படித்த ஹெராஸ் பாதிரியார் என்ற ஆராய்ச்சியாளர் இவற்றில் பல தமிழ்ச் சொற்களாகவே திகழ்கின்றன என்கிருர். உதாரணமாக வேல், வேளாளன், நாய், ஊர் என்ற தனித் தமிழ்ச் சொற்கள் இங்கே பயிலப்பட்டுவந்துள்ளன என்று இந்தச் சீரிய ஆராய்ச்சியாளர் சொல்லுவது நம் கொள்கையைப் பெரிதும் உறுதிப்படுத்துவ தாகும்.

சிந்துச் சமவெளியில் திகழ்ந்தது சுமேரிய நாகரிகம் என்பர் ஒரு சாரார்; இல்லை, இது மத்திய தரைக்கடல்

நாகரிகம் என்பார் மற்ருெரு சாரார். ஆனல் உண்மையாகவே இது திராவிட நாகரிகம், இன்னும் சொல்லவேண்டுமாஞல் இதுவே பழந்தமிழ் நாகரிகம். பழந்தமிழன் நாம் முன்னே கூறியபடி ஆப்பிரிக்கா, மத்திய தரைக்கடல் பிரதேசம், சுமேரியா முதலிய பூபாகங்களை யெல்லாம் சுற்றினவன்; பிற் காலத்தில் இந்த நாடுகளோடு வியாபாரத் தொடர்பு பூண்டவன். ஆகவே இவனு டைய பழைய நாகரிகத்தில் சுமேரியாவின் மணமும், மத்திய தரைக்கடல் பிரதேச மணமும் கமழ்வதில் எவ்வித வியப் பும் இருக்க இடமில்லை. இன்னும் வர லாற்றுக் காலத்தில் கி. பி. முதல் நூற் ருண்டி லிருந்து நாம் திண்ணமாய்க் காணக் கூடிய தமிழ் நாகரிகம் இத்தகைய பெரும் நாகரிகத்தின் வளர்ச்சி என்றும் எண்ணும் போதுதான் தமிழன் எப்படி கி. பி. முதல் நூற்ருண்டிலேயே மிகுந்த செல்வாக்குடன் வாழ்ந்தான் என்பதற்குப் போதிய சான்று கிடைக்கின்றது.

ஆகவே கற்காலத் தமிழர் மற்றைய நாடுகளில் கற்கால மனிதர் வாழ்ந்தது போல் காட்டுமிராண்டிகளாய் வாழவில்லை என்பது தேற்றம். புதுக் கற்காலம் ஏறக் குறைய கி. மு. 5000 வருஷம் வரை நீடித் திருந்ததாகச் சொல்லுகிருர்கள். சிந்துச் சமவெளியில் கி. மு. 3000-ல் மிகுந்த செல்வாக்குடன் ஒரு ஜாதியார் வாழ்ந்தார் களென்ருல் அவர்கள் கி. மு. 5000-ல் காண்டுமிராண்டிகளாய் வாழ்ந்திருக்க முடியாது. இந்தப் புது கற்காலத்தைப் பற்றி நமக்கு கிடைக்கும் சான்றுகளைப் பார்த்தாலும் அக்காலத்திலேயே விவ சாயம், பருத்தி நூற்றல், ஆடு, மாடு வளர்த்தல் என்ற இவையே அன்றிச் சட்டி செய்தல் முதலிய நுண்கலைகளும் மக்கள் பயின்றுவந்தார்கள் என்று தெரிகிறது. அவர்கள் மக்களை மக்களாய் மதித்தார் கள் என்பதற்குச் சான்று அவர்கள் தம்மில் இறந்தோரை அடக்கம் செய்த முறையி லேயே இருக்கின்றது. கடவுள் ஒருவர் உண்டு, அவர்தான் நம்மைப் படைத்தவர், அவர் நம்மை ஆளுகிருர் என்ற உயரிய எண்ணங்க ளெல்லாம் இவர்கள் மனத்தில் அக்காலத்திலேயே இருந்துவந்தன என் பதை எண்ணும்போது நம் மூதாதையர் கற்காலத்திலேயே மிகச் சிறந்து விளங்கி னர் என்பது நமக்குப் பெருமிதத்தை விளைப் பதாகும். கி. மு. 4000-ல் தமிழர் கால் டேய மன்னரோடும், கி. மு. 1000-ல் ஹீப்ரு மன்னன் சாலமோனேடும் துணி யிலும், மயிலிலும், அகிலிலும் வியாபாரத் தொடர்புகொண்டிருந்தனர் என்னும் அறி ஞர்கள் கூற்று இத்தகைய பின்னணி யிலேயே நமக்கு விளங்குகின்றது.

—○—

* அறமும் அரசியலும் *

''இக்கால அரசியல் பெரிதும் கட்சி வழியே இயங்குவது, பெரும்பான்மை-சிறு பான்மை வழி இயங்குங் கட்சி—அரசியலில் மனச் சான்றுக்கு இடம் ஏது? அறம் கட்சியின்பாற்பட்டு நிற்கிறது. சிலபோது, கட்சி-அரசியல், பெருந் தீங்கு விளைவிக்கவும் உறுத்தெழும். அவ்வேளையில் மனச் சான்றுடைய அறவோர் என் செய்தல் கூடும்? அவர் கட்சியினின்றும் விலகுதல் வேண்டும்; அல்லது மனச் சான்றை விற்று அடிமையாய் உழலல் வேண்டும். கட்சி - அரசியலின் கொடுமையை - சிறுமையை - கயமையை - என் வாழ்க்கை நன்கு அநுபவித் தது..............ஆபாசக் கட்சி - அரசியல் முறை மேல்நாட்டினின்றும் வந்து இறங்கிய சரக்குகளுள் ஒன்று. அது வாழ்க்கையில் போராட்டத்தை விளைப்ப தாதலின், அதனல் மக்கள் மனச் சான்றுடைய அறவோராதல் இல்லை.''

— திரு. வி. க.

கம்ப ராமாயணப் பதிப்பு



பேராசிரியர்-ஜி.சுப்பிரமணிய பிள்ளை. M.A., B.L.

*

இராமாவதாரத்தைப் பாடுவதற்கென்றே கவிச்சக்கரவர்த்தி கம்பன் அவதரித்தான்- 'கல்வியிற் பெரியன் கம்பன்' என்ற சொல்வழக்கு கம்பராமாயணம் தோன்றிய காலத்திலேயே தோன்றிவிட்டது. அது என்றும் நிலவி நிற்கும். ஒரு பெரிய அறிஞன் நாட்டிலே தோன்றினால், அந்த நாடும் அறிவிற்சிறந்து பெருமையடையும். கம்பன் கவிதை தோன்றியநாள் முதல், அதனைப் பலரும், பல இடங்களிலும் படிக்கத் தொடங்கித் தமது கல்வியறிவைப் பெருக்கிக் கொள்ளலாயினர். கம்பன் கல்வியிற் பெரியனானதால், தமிழ்நாடும் கல்வியிற் சிறந்து விளங்குவதாயிற்று. அதைத்தான் கவி பாரதியார், ''கல்விசிறந்த தமிழ்நாடு—உயர் கம்பன் பிறந்த தமிழ்நாடு'' என்று காரண காரிய முறையில் வைத்து விளக்கிப்பாடினார். திருவள்ளுவரைப்போல் கம்பனும் தமிழுக்குச் செய்திருக்கும் தொண்டு அளவிட முடியாதது. தமிழுக்குக் கதியாவார் கம்பனும் திருவள்ளுவரும் என்று கூறுவது வெறும் வார்த்தையன்று.

கம்பன் உலகப் பெருங் கவிஞர்களுக்குள்ளே மிகவும் தலைசிறந்தவன். கம்பராமாயணம் வான்மீகத்தின் மொழிபெயர்ப்புத் தானே என்றுஎளிதாய் நினைத்துவிடக்கூடாது. பெரிய காப்பியம் எழுதிய எந்தப் புலவனும் தன் சொந்தமாக எதையும் எழுதிவிட வில்லை. ஹோமர், வர்ஜில், ஷேக்ஸ்பியர், மில்டன் போன்றவர்களும் பிறமொழிகளில் அல்லது உலக வழக்கில் பயின்றுவந்த கதைகளைக்கொண்டே தம் காவியங்களை அழகுறப் பாடினார்கள் சிலம்புச் செல்வம் ஒன்றுதான் ஒரு மொழிபெயர்ப்பு நூலாகாது தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் உரியதோர் ஒப்பற்ற நூலாய் மிளிர்கிறது. கம்பனுடைய வீறுகொண்ட புலமைத் திறனுக்கும், பரந்த கற்பனைக்கும், கடவுளுணர்ச்சிக்கும், கவியின் ஆற்றலுக்கும் ஏற்றதாகக் கிடைத்தது வான்மீகி இராமாயணம். அதனைக் கண்டவுடன் கம்பனின் உள்ளம் துள்ளிப் பாய்ந்தது: அதிலே ஈடுபட்டது. அத்தகைய அழகிய கதை தமிழில் இல்லையே. என்று எண்ணினான். தமிழில் அதைவிடவும் சிறப்பாக, அழகாகத் தானே பாடலாம் என்ற துணிவு பிறந்தது; ஆசை வளர்ந்தது. தமிழ்நாட்டவர்மேல் அன்பு ஊறியது. தனது திறமையைக் காட்ட ஓர்அரிய வாய்ப்புக் கிடைத்ததே எனும் எக்களிப்பு ஏற்பட்டது. கவி வெறிகொண்டான். வடமொழி இராமாயணத்தைத் தமிழாகத் தனதாகப் பாடினான். ஓர் இரசவாதியின் கைபட்டதும் இரும்பு பொன்னாவது போன்ற இந்திரசாலம், அதிசயமாற்றம், அற்புதத் தோற்றம் நிகழ்ந்தது. கம்பராமாயணம் பிறந்தது. அதில்வரும் கதாபாத்திரங்கள்

எல்லாரும் தமிழ்நாட்டவராகித் தமிழரின் மேன்மைக் குணங்களையும், பழக்க வழக்கங்களையும் மேற்கொண்டு, தமிழெழில் விளங்கக் காட்சியளிக்கின்றனர். கோசல நாடே தமிழ்நாடாக, ஏன், சோழ நாடாக மாறிவிடுகிறது.

தமிழ் மொழியிடத்தும் தமிழ் நாட்டிடத்தும் உண்மைப் பற்றுக்கொண்ட எவரும் கம்பனைப் போற்றுமலிருக்க முடியாது. கம்பராமாயணத்தால் தமிழ்மொழி பன்மடங்கு உயர்வும், பெருமையும், மேன்மையும், இனிமையும், செழுமையும் அடைந்திருக்கிறது. கம்பனுக்குத் தமிழ்மொழியினிடத்தே மட்டற்ற மதிப்பும், அன்பும், பற்றுதலும் உண்டு. 'என்று முள தென்றமிழை இயம்பி யிசை கொள்'ளவே பிறந்தவன் கம்பன். உலகிற்சிறந்த மொழிகள் எல்லாவற்றி னுள்ளும் மிகச் சிறந்ததோர் மொழியாகத் தமிழைச் சிவபெருமானே படைத்தார் என்று கம்பன் பாடியுள்ளான். அவனுடைய சிவபக்தியின் சீலம் அவன் காவியத்தில் நூற்றுக்கணக்கான இடங்களில் வெளிப்படுகிறது. தமிழ்நாட்டிடத்தே பற்றுக்கொள்வதில் கம்பன் எந்தத் தமிழனுக்கும் பின்வாங்கியவ னில்லை.

"அத்தி ருத்தகு நாட்டினை யண்டர்நா(டு)
ஒத்தி ருக்கும் என்றுல், உரை ஒக்குமோ?
எத்தி றத்தினும் ஏழுல கும்புகழ்
முத்தும் முத்தமி ழும்தந்து முற்றுமோ."

என்று தன் இராமாயண நூலகத்துக் கம்பன் பாடியுள்ளான். வேறு எந்தத் தமிழன் இவ்வாறு பாடினுன்?

ஆனுல், உண்மையான கம்பனைத் தமிழுலகம் இன்னும் காணவில்லை. கம்பனுடைய உருவச்சிலை விகாரமடைந்து, பாசிபிடித்துத் தூசிகுவிந்து, மாசுபடிந்து, துருஏறிச் சிதைவுற்றுக் கிடக்கிறது. இந்த நிலையிலே குன்றிக்கிடக்கும் கம்பனின் உருவமே இவ்வளவு சிறப்புடன் இலங்கி நம் உள்ளத்தைக் கவருவதா யிருக்குமானுல், அவன் படிவம் தூய்மை செய்யப்பெற்றுத் தன் இயல்பான எழிலோடும் ஒளியோடும் விளங்கும்பொழுது, இன்னும் ஆயிரம் மடங்கு ஏற்றம்பெற்று விளங்கும் அல்லவா? இத்தகைய புனிதமான திருப்பணியிலே இப்பொழுது அண்ணமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் ஆராய்ச்சித்துறை முனைந்திருக்கிறது.

ஒரு திருத்தமான கம்பராமாயணப் பதிப்பு வெளிவரும் பொழுதுதான் தமிழுலகமும், வெளியுலகமும் கம்பனை நன்ருக அறிந்து சுவைக்க முடியும். அப் பதிப்பு வேலையை எவ்வாறு செய்ய வேண்டுமெனின், கிடைக்கக்கூடிய கம்பராமாயண ஏட்டுச்சுவடிகள் அனைத்தையும் திரட்டி வைத்துக்கொண்டு, ஒவ்வொரு ஏடாக, ஒவ்வொரு பாட்டாக, விடாமல் அனைத்தையும் நன்கு படித்துப் பாடபேதங்களைக் குறிக்க வேண்டும். இவ்வாறு ஏடுபடிக்கும்பொழுது, ஒவ்வொரு பகுதிக்கு, ஒவ்வோர் ஊருக்கு, ஒவ்வொரு பிராந்தியத்திற்கு ஓர் ஏடு, அல்லது இரண்டு ஏடுபார்த்தால்போதும் என்று மற்ற ஏடுகளைப் புறக்கணித்துவிடக் கூடாது. திருத்தமாகத் தெரியக்கூடிய ஓர் ஏட்டில் பல பாடல்கள் உள்ளே பிழைபட்டுக் கிடக்கக் கூடும். பிழைபட்டதாகத் தெரியக்கூடிய ஓர் ஏட்டில் திருத்தமான பல பாடல்கள் கிடைக்கக்கூடும். ஓர் ஏடு மற்றேர் ஏட்டின் பிரதியாக முதலில் தோன்றக்கூடும். ஆதலால் அதைப் படிக்க வேண்டாம் என்று விட்டுவிடக்கூடாது. அது போகப்போக மாறுபட்டு வேறெரு விதமாகத் திரும்பக்கூடும். எனவே, ஒன்றையும்ஒதுக்கிவிடாது எல்லா ஏடுகளையும் படித்துப் பாடம் எடுத்து ஆக வேண்டும். ஒரு சுவடியில் பதினயிரம் பாடல்களைப் படித்துப் பார்த்ததில் ஒரே ஒரு திருத்தமான பாடம் கிடைத்தது. ஆனுல் அந்த ஒரு பாடமும் ஒரு கோடி பொன் கிடைத்தது போன்ற மகிழ்ச்சியை உண்டாக்கியது. இந்த ஒருபாடம் கிடைப்பதற்காக நாலைந்து மாதங்களாய் ஒரு சுவடியைப்படித்துக் காலத்தை வீணுக்குவதா

என்று விட்டிருந்தால், வேறு எந்த ஏட்டிலும் கிடைக்கக்கூடாத அந்த ஒரு பாடம் நமக்குக் கிடையாமலே தொலேந்திருக்கும்.

ஆகவே, கம்பராமாயணப் பதிப்பு வேலைக்கு, ஏடுபடித்து ஒப்புமை நோக்கிப் பாட வேறுபாடுகளைக் குறிப்பது தான் முதன்மையான அடிப்படை வேலை. இவ்வேலையை யாரும் எவரும் செய்துவிடலாம் என்று விட்டுவிடுவதும், எளிதென்று கருதுவதும் பெரும் பிழையாகும். ஒரு மாளிகை கட்டுவதற்கு அதன் அடிவாரத்து வேலை எவ்வளவு முக்கியமோ, அதுபோன்று திருத்தமான கம்பராமாயணப்பதிப்புவெளி வருவதற்கும் ஏடு படிக்கும் வேலை மிகமுக்கியம். தமிழ்க் கல்வியிற் சிறந்து இவ் வேலையிற் பழகிய தக்கோர்களே இவ்வேலையைக் கைக்கொள்ள வேண்டும். பயிற்சி இல்லாத மாணுக்கர்களையும், கூலிவேலைக் குமாஸ்தாக்களையும் கொண்டு இவ் வேலையை நடத்திவிடுதல் கூடாது. டாக்டர் சுவாமிநாத ஐயர் அவர்கள் என்னபாடு பட்டாவது தாமே ஏடுகளைப் பரிசீலனை செய்வது என்ற நியதியைக் கையாண்டதாலேதான், பல நல்ல நூல்களைத் தமிழுலகிற்கு அளிக்க முடிந்தது: ஏடு படிப்பவர்கள் தமிழ் மொழியிடத்துப் பற்றுடையவர்களாய்க் கம்பராமாயணத்திற்கு நல்லமுறையில் ஒரு பதிப்பு வெளிவர வேண்டுமே என்ற ஆத்திரத்துடிப்பு உள்ளவர்களாய்க் கடமையுணர்ச்சி பெற்றவர்களாய் அமைய வேண்டும். எப்படியாவது வயிற்றுப் பிழைப்பை நடத்திஞற்போதும்என்ற எண்ணம் உள்ளவர்களை இவ்வேலையில் விட்டால், நமக்கு நல்ல திருந்திய பாடங்கள் கிடைக்காமல் தொலேந்தே போய்விடும். பழைய ஏடுகளில் றகர ரகரங்கள், லகர வகரங்கள், ழகரளகரங்கள், புள்ளியில்லாத ஒற்றுக்கள், கால்கள், எல்லாம் குழம்பிக் கிடக்கும். நெட்டெழுத்துக்குப்பதில் குற்றெழுத்துக்களே எழுதப்பட் டிருக்கும். எழுத்துக்களின் தலேயில் எழுத்தாணியால் ஒரு புள்ளி இலேசாக இடப்பட்டு அடித்தல்கள் நடந்திருக்கும். பூச்சிகள் துளைத்த துளைகளாலும் புள்ளிகள் போன்று அரித்தல்கள் நடந்திருக்கும். நாம் முன்னுல் மனனம் பண்ணின பாடங்கள் வந்து ஏட்டுப்பாடங்களை மறைத்துஏமாற்றிவிடக் கூடும். முக்குண வசத்தான், மனிதனின் மனநிலேமாறி மயக்கமுறும் நேரங்களும் உள. இடையே மெய்மறந்த தூக்க நிலேயும் ஏற்படக்கூடும். விரைவில் வேலையை முடிக்க வேண்டும் என்ற நிலேயில் உணர்ந்து கொள்ளாமலே பல பாடங்கள் தள்ளப்பட்டுவிடும். பொருளுணர்ச்சியில்லாமல் ஒரு பாடலேயும் கடக்கக்கூடாது என்ற உறுதிப்பாடு வேண்டும். சிலஇடங்களில் எழுத்துக்கள் தெரியாமல் திரிந்து கிடக்கும் அல்லது மங்கிக்கிடக்கும். அவற்றைச் சிரமம் எடுத்துத் தெளியவேண்டும். தெரியாதவற்றை அருகிலுள்ள அறிஞர்களிடம் காட்டித் தெரிந்துகொள்ள வேண்டும். சிரமம் எடுக்கச் சோம்பியும், கேட்டுத்தெரிய நாணியும், பல பாடங்கள் பாழாய்ப் போய்விடக்கூடும். இவை நிகழாதவாறு பார்த்துப் பாடங்களைக் குறிக்க வேண்டும். பாடங்களைக் குறிக்கும் பொழுது ஏற்படக்கூடிய தவறுகள் மிகப் பலவாகும். அவற்றை ஒருமுறைக்கிருமுறை திருப்பிப்படித்தும், பிறரைக் கொண்டு பார்க்கச்செய்தும் செப்பனிட்டுக் கொள்ள வேண்டும். பின்னும் பலமுறை அதே ஏட்டைப் புரட்டிப் பார்க்கும்படியும் நேரலாம். அதற்குச் சோம்பி வாளாஇருந்து விடக்கூடாது. இவ்வாறு அரிதிற் சேர்த்த பாடங்களைக்கொண்டு பின் திருத்தமான பாடத்தைக் காண முயலவேண்டும்.

இப்பொழுது அச்சாகி வந்திருக்கும் புத்தகப் பாடங்களையும், அவற்றுக்கு எழுதப்பட் டிருக்கும் உரைகளையும் சீர்தூக்கி, ஒவ்வாதனவற்றை யெல்லாம் தனியே எடுத்துத் தொகுக்க வேண்டும். அவற்றை ஏனைய ஏட்டுப் பாடங்கள் எந்த விதத்தில் திருத்த முடியும், அத்திருத்தத்தால் பாடல் எவ்வாறு விளக்கம் பெறுகிறது, எதுகை

மோனை சீர் தளைகள் எவ்வாறு இயைந்து பொருத்தம் காண்பிக்கின்றன, அவற்றிற்கு முன்பின் பகுதிகளில் ஒப்புமை ஆதரவுகள் இருக்கின்றனவா, பிற நூல்களிலிருந்து ஏதேனும் விளக்கம் கிடைக்குமா, கம்பன் அவ்வாறு பாடியிருக்க முடியுமா என்பனவற்றை யெல்லாம் நிதானமாகவும், காய்தல் உவத்தல் இன்றியும், சுவையுணர்ச்சியுடனும் சிந்தனைசெய்து, பலரோடும் விவாதித்துத் தடை விடைகளான் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். பெரும்பாலும், கம்பனுடைய உண்மைப் பாடம் நமக்குக் கிடைத்துவிட்டால் போலிகள் எல்லாம் புறகென்று மங்கிவிடும். இருந்தாலும் பல இடங்களில், பாடபேதங்களின் குவியலுக்குள்ளே உண்மைப் பாடத்தைக் கண்டுபிடிப்பது, இந்திரப்பிரத்தத்தில் பாண்டவர் நிருமித்த பளிக்கு மாளிகையினுள் துரியோதனன் பட்டபாடாகவே இருக்கும்.

''கம்பராமாயணம்தான் பலராலும் உரையெழுதப்பட்டுப் பல பதிப்புக்களாக அச்சாகி வெளிவந்துள்ளதே, இன்னும் என்ன என்ன திருத்தம் அடைய வேண்டியிருக்கிறது?'' என்று சிலர் எண்ணக்கூடும். நூற்றுக்கு எழுபத்தைந்துக்கு மேலான பாடல்களும் உரைகளும் இன்னும் திருத்தம்பெற வேண்டிய நிலையில் உள்ளன என்றுசொன்னால், அது மிகையாகாது. அதற்குக் காரணம் நல்ல பாடங்கள் கிடையாமையும், கிடைத்த பாடங்களுக்குத் தக்கவாறு ஏதாவது உரை எழுதினாற்போதும் என்ற எண்ணமுமே யாகும். எடுத்துக்காட்டாக ஒரு சிலவற்றை இங்குக் காண்போம். சுந்தர காண்டம், கடல்தாவு படலத்தில், 78-ஆம் பாடல் வருமாறு:—

> ''துண்டப் பிறைத்துணை யெனச்சுட ரெயிற்றுள்
> கண்டத் திடைக்கறை யுடைக்கடவுள் கைம்மா
> முண்டத் துரித்தவுரி யான்முளரி வந்தான்
> அண்டத் தினுக்குறை யமைத்தபில வாயாள்.''

இப் பாடலின் நடு விரண்டடிகளுக்கு, ''கழுத்தில் விஷக்கறையை யுடைய பரமசிவன்போல, துதிக்கையுடைய யானையினது உடலினின்று உரித்தெடுத்த தோலைப் போர்த்துக்கொண்டிருப்பவளும்'' என்று உரை யெழுதப்பட் டிருக்கிறது. பிறரெவராலும் செய்தற்கரிய செயலைச் செய்பவன் சிவபெருமான் என்று காட்டவே, சிவன் யானைத்தோலைப் போர்த்துக்கொண் டிருக்கிறான் என்று கூறப்பட்டது. 'யானையின் பசுந்தோல் பிறருடம்பிற் பட்டாற் கொல்லுமென்றுணர்க' என்று நச்சினார்க்கினியரும், சீவகசிந்தாமணி, 2787-ஆம் பாடலின் உரையில் எழுதியுள்ளார். அத்தகைய அரிய செயலை அங்காரதாரை யென்ற அரக்கியும் செய்தாள் என்று கூறுவதானால், அங்காரதாரை சிவபெருமானை யொத்த ஆற்றலையுடையவள் என்றாகி விடும். கம்பன் இவ்வாறு புராண அறிவுக்கு இழுக்கு உண்டாகும்வண்ணம் பாடியிருப்பானா? மாட்டான். பின் இப்பிழை எவ்வாறு நேர்ந்தது? நாம் பல ஏட்டுப்பிரதிகளையும் பார்க்கும்பொழுது, சில ஏடுகளில் மூன்றாவது வரியில், உரியான் என்ற பாடமும் வருகிறது. உரியால் என்பதிலுள்ள லகரஒற்று, முளரி என்ற வருமொழிக்கு முன், இலக்கண விதிப்படி, னகரவொற்றாக மாறியுள்ளது. கண்டத் திடைக்கறையுடைக் கடவுளாகிய சிவன், யானையை உரித்தெடுத்த தோலைக்கொண்டு, முளரி வந்தானாகிய பிரமன், இவ்வண்ட கோளத்தினுக்கு ஓர் உறை அமைத்ததுபோன்றிருந்தது அங்காரதாரையின் வாய் என்று அவ்வரக்கியின் வாயின் பெருமையை எடுத்துப் பேசுகின்றான் கம்பன். யானையின் தோலை உரிப்பது வேறெவருக்கும் ஆகாது ஆகையால், சிவன் உரித்த தோலைப் பிரமன் கொண்டு உறை அமைத்தது போன்றிருந்தது என்று கவி பாடினான் என்க. எனவே, 'உரியால்' என்ற பாடமே பொருந்துவதாகும். அதுவே திருந்திய பாடம். 'உரியால்' என்பது 'உரியான்' என்று ஆகிப் பின், ஏடு படிப்போர்களும் எழுதுவோர்களும் பொருளை உணரமாட்டாதநிலையில், உரியான் என்பது ஆண்பால் எனக்

கொண்டு, இங்குப் பேசப்படும் அங்காரதாரை பெண்பால் ஆகையால், அப்பெண்பாலுக்கேற்ப உரியாள் என்று திருத்த, இலக்கணப் புணர்ச்சி விதிப்படி ளகர வொற்று ணகர வொற்றுகமாறி, ஏடுகளிற் பாடமாக ஏறிவிட்டது. அப் பாடத்திற்கியைய உரையும் எழுதப்பட்டுவிட்டது.

அடுத்தபடியாக, ஊர்தேடு படலத்தில் 11-ஆம் பாடலைப் பார்ப்போம்:—

''போரியைந்தன தோற்றவென் றிகழ்தலிற்
புறம்போய்
நேரியன்றவன் றிசைதொறு நின்றமா நீற்க
ஆரியந்தனி யைங் கரக் களிறுமோ ராழிச்
சூரியன் றனித் தேருமே யிந் நகர் தோகாத.''

இலங்கையி லுள்ள யானைப்படை தேர்ப்படைகளின் மிகுதியைக் கூறஎழுந்தது இப்பாடல். இதில், 'ஆரியந் தனி யைங்கரக் களிறும்' என்பதற்கு ''மேன்மையான ஒப்பற்ற ஐந்து கரங்களையுடைய விநாயகக் கடவுளாகிய யானையும்'' என்றுஉரைகூறப்படடுள்ளது. இவ்வுரையை இதுவரை தவறென்று கூறுவார் எவரும் இல்லை. பதிப்புக்களும் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று பலமுறை அச்சாகியும் எதுவும் திருத்தப்பட வில்லை. விநாயகக் கடவுள் யானைமுகக் கடவுளே. ஆனால் அவர் யானையாக மாட்டார். வாகனமும் ஆக மாட்டார். விநாயகரையும் திக்கு யானைகளோடு சேர்த்து எண்ணி, இலங்கையானைகளுடன்வந்து சேராதவை இவையேஎன்று கம்பன் பாடுவானா என்பதை நாம் சிந்தனை செய்ய வேண்டும். ஆயின், இதற்குத் திருந்திய பாடம் எதுவென ஆராயின், 'ஆரியன் தனித் தெய்வமாக் களிறும்' என்று ஒரு பாடம் கிடைத்திருக்கிறது. அதற்குப் பொருள் ஐயனாருடைய தெய்வத் தன்மை வாய்ந்த பெரிய வாகனமாகிய யானையும் என்பதாகும். இப்பாடமும் இப்பொருளுமே ஏற்புடையன என்பதை அறிஞர்கள் ஒப்புக்கொள்வார்கள்.

மற்றொரு பாடலை நோக்குவோம். நிந்தனைப் படலத்தில் 8-ஆம் பாடலின் முன்னிரண்டடிகள் வருமாறு:—

''சன்னவீரத்த கோவை வெண்டரள மூழியி
னிறுதியிற் றனித்த
பொன்னெடு வரையிற் றேற்றிய கோளுநாளு
மொத்திடையிடை பொலிய.''

இதில், இராவணன் மார்பில் அணிந்திருந்த பொன்னாரத்தில் பதிக்கப்பெற்ற முத்துக்கள் எவ்வாறு காட்சி அளித்தன என்பது கூறப்படுகிறது. அவை ஊழியினிறுதியில் மேருமலையிற் காணப்பட்ட கிரகங்களையும் நட்சத்திரங்களையும் ஒத்திருந்தனவாம். இரண்டாவது வரியில் 'பொன்னெடு வரையில் தோற்றிய' என்று பாடம் வந்துள்ளது. எல்லா அச்சுப் பிரதிகளிலும் இந்தப் பாடமே காணப்படுகிறது. ஆனால் வானத்திலுள்ள நாள்களும் கோள்களும் மேருமலை மேற்கொள்ளப்படுவானேன் ? அதற்குத் 'தோற்றிய' என்ற சொல் விளக்கம் தரவில்லை. ஏடுகளில் 'தொத்திய' என்ற பாடமும் வருகிறது. வான்கெட்டு மாருதமும் மாய்கின்ற ஊழிக்காலத்தில் சலியாது கடைசியில் நின்றமேருமலையைப் பற்றுக்கோடாக எண்ணி நாள்களும் கோள்களும் தொத்திக்கொண்டு தப்பவழி தேடுமாம். ஆகலின் 'தோற்றிய' என்ற பாடத்தை விட, 'தொத்திய' என்ற பாடமே சிறக்கும். இதுவே திருந்திய பாடம் என்பதை வலியுறுத்துவதற்கு யுத்த காண்டத்துச் செய்யுள் ஒன்றையும் நாம் நோக்கி ஒப்புமை காணுதல் வேண்டும். யுத்த காண்டத்துப் பிரமாத்திரப் படலத்து 117-ஆம் செய்யுளில்,—

''ஒத்தக்கடை யுகமுற்றழி யுறுகால்பொரவுடுமீன்
தொத்தப் பொலி கனகக்கிரி''

என்று கம்பன் பாடிச்செல்வது எவ்வளவு பொருத்தமாய் இருக்கிறது பாருங்கள் ! இங்குத் 'தொத்த' என்பது எதுகையிலே கிடக்கிறது. பல ஏடுகளில் 'தொத்த' என்

பது தொற்ற என்றே எழுதப்பட் டிருக்கும். தகரத்திற்குப் பதில் றகரத்தை எழுதுதல் ஒரு வழக்கம். அதனைக் கூர்ந்து நுனித்தறிதல் வேண்டும்.

ஆரணிய காண்டம், சூர்ப்பநகைப் படலம், 90-ஆம் பாடல் வருமாறு:-

''விடியல் காண்டலி னீண்டுதன் னுயிர்கண்ட
வெய்யாள்
படியி லாண்மருங் குள்ளன வெனையவன் பாரான்
கடிதி னோடினெ னெடுத்தொல்லைக் கரந்தவள்
காதல்
வடிவி னுனுடன் வாழ்வதே வாழ்வென மதியா''

இப் பாடலின் பின்னிரண்டடிகளுக்கு, ''விரைவாக ஓடிச்சென்று சீதையை எடுத்துக்கொண்டுபோய் விரைவிலே மறைத்து வைத்துவிட்டு அவளது ஆசை வடிவமான அவனுடனே (அல்லது சீதையாற் காதலிக்கப்பட்ட வடிவழகுடையானாகிய இராமனுடனே) கூடி வாழ்வதே சிறந்த வாழ்க்கையாம் என்று எண்ணி'' (னாள் சூர்ப்பநகை) என்று கூறப்படுகிறது. சூர்ப்பநகை சீதையின் வடிவழகிலே இராமன் முற்றிலும் ஈடுபட்டிருக்கிறான் என்பதை நன்கு உணர்ந்துகொண்டாள். தன் வடிவை அவன் விரும்பவில்லை என்பதும் தெளிவு. எப்படியாவது இராமனை அடையவேண்டும் என்பது சூர்ப்பநகையின் குறிக்கோள். அவளுக்கோ வேண்டும் உருவம் எடுக்கத் தெரியும். இந்த நிலையில், சீதை காதலிக்கும் கட்டழகுடையான் இராமன் என்ற பொருள்பட 'அவள் காதல் வடிவினனுடன்' என்று அரக்கி கூறியிருப்பாளா? என்பது சிந்திக்க வேண்டியதொன்று. இராமன் காதலிக்கும்படியான பேரழகுடையவள் சீதையென்பதே அரக்கியின் எண்ணமேயொழிய, சீதை காதலிக்கும் அழகுடையவன் இராமன் என்பதன்று. இந்த நிலையில் சில ஏடுகளில், ஈற்றடியில் ''வடிவினாலுடன் வாழ்வதே'' என்ற பாடம் கிடைக்கிறது. இராமனால் காதலிக்கப்பட்ட அந்தச் சீதையின் வடிவத்துடனே, என்பது இதன் பொருள். எந்த விதத்திலும் இராமனையடைந்துவிட முற்பட்ட சூர்ப்பநகை சீதையை மறைத்துவிட்டு, அவள் வடிவத்தைத் தானடைந்து, சீதைபோலவே நடித்து, இராமனுடன் வாழவேண்டும் என்று திட்டமிட்டாள். அவள் மிகவும் பொல்லாதவள். நல்லகாலமாக இலக்குவன் இடைமறித்து அவள் சதித் திட்டத்தைச் சிதறவடித்துவிட்டான். இப்புதிய கருத்து இப்புதிய பாடத்தால் இப்பொழுது நமக்குக் கிடைக்கிறது. இதுவரை இது கிடைத்ததில்லை. அச்சிலுள்ள பாடம் பொருத்தமுடையதாயில்லை. பொருளும் சிறக்கவில்லை. இதுபோன்று நூற்றுக்கணக்கான திருந்திய பாடங்கள் இதுவரை நமக்குக் கிடைத்துள்ளன. இன்னும் ஆயிரக்கணக்கானவை கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. இதற்குத் தமிழ்ப் பெருமக்களுடைய ஆதரவும் அன்பும் பெரிதும் வேண்டும்.



விஞ்ஞானப் புதுமைகள்!

சந்திரன் மூலம் பேச்சு, பாடல்!

வானொலி நிலையத்தில் நிகழ்த்தும் பாடல், பேச்சு ஆகியவற்றின் அலையொலிகள் விண்மண்டலத்தில் 'அயனோஸ்பியர்' வரைச் சென்று அங்கிருந்து அவைகள் எதிரொலிக்கப்படுகின்றன. இதனால் சில சமயங்களில் 'அயனோஸ்பியர் புயலால்' (ionosphere stroms) ஒலியில் கோளாறுகள் ஏற்படுகின்றன. இப்போது ஒலி அலைகளைச் சந்திர மண்டலத்திற்குச் செலுத்தி அங்கிருந்து எதிரொலிக்கும்படிக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சந்திரனிலிருந்து அலையொலிகள் எதிரொலிக்கப்பட்டால் ஒலியில் எவ்விதக் கோளாறுமின்றித் தெளிவாக இருக்கும்.

*

எச்சரிக்கை!

பால் முதலியவற்றைக் கொதிப்பேறுமல் சுட வைப்பது சற்றுக் கடினம். சிறிது ஏமாந்தால் பால் கொதித்துக் கீழே வழிந்து விடுமல்லவா? இதைத் தடுப்பதற்கு ஒரு வழி கூறுகிறர் ஒரு விஞ்ஞானி. படத்தில் காண்பதுபோல் கலத்தின் மேற் பகுதியில் ஒரு கருவி அமைக்கப்படும். பால் எந்த வெப்ப நிலைக்குச் சூடேற வேண்டுமோ அதற்கேற்ப அக் கருவியை முன்னதாகவே அமைத்துக் கொள்ள வேண்டும். பாலின் சூடு அந்த வெப்ப நிலையை எய்தியதும் அக் கருவி மேல்நோக்கி எழுந்து மணி அடிக்கும்.



*



ஒரே தரமான பழங்கள் வேண்டுமா?

மரஞ் செடிகளில் காய்கள் மிக விரைவாகவும் ஒரே தரமானவையாகவும் கனிவதற்குச் சூரிய ஒளி மிகுதியாகத் தேவை. இதற்காக ஒரு விஞ்ஞானி ஒரு புதிய வழியைக் காண்கிருர். அதாவது, சூரிய ஒளியை எதிரொளிக்க வல்ல மைக்கா, உலோகத் துண்டுகள் முதலியவற்றை மரத்தின் கீழே பரப்ப வேண்டும். சூரிய ஒளி அவற்றின் மீது பட்டதும் அவைகள் அவ் வொளியை மரத்திலுள்ள காய்கள் மீது எதிரொளிக்கும்.

*

எதிர்கால விண்வெளி விமானம்!

பூமியின் காற்று மண்டலத்தைக் கடந்து விண்வெளியில் செல்லும் விமானங்களைச் சூரிய ஒளியிலிருந்து உண்டாக்கும் மின் சக்தியைக்கொண்டு ஓட்ட முடியும் என்று ஜெர்மன் விஞ்ஞானி ஹெர்மன் ஒபரெத் கூறுகிருர். விண்வெளியில் எப்போதும் சூரிய ஒளி உண்டு. இரவும், மேகங்களும் அங்குச் சூரிய ஒளியை மறைக்க முடியாது. இதனல் விண்வெளிக்குச் செல்லும் விமானங்களுக்குப் பூமியின் காற்று மண்டலத்தைக் கடக்கும் அளவுக்கு எரிபொருள் இருந்தால் போதும்.

*





திருடரைக் கண்டுபிடிக்க ...

நள்ளிரவில் களவாடும் திருடர்களைக் கண்டுபிடிக்க ஒரு விஞ்ஞானி ஒரு புதிய வழியைக் கூறுகிறார். கைத் துப்பாக்கி மேலிடத்தில் ஒளிவீச்சு விளக்கு அமைக் கப்பட்டிருக்கும். அவ்வொளிவீச்சை வேண்டிய அளவு நீட்டவும் குறைக்கவும் அதன்கண் சாதனம் உண்டு. துப்பாக்கி யின் விசையை அழுத்தியதும் விளக்குப் பேரொளி வீசும். அதே தருணத்தில் ஓடும் திருடன்மீது குறிவைக்கலாம்.

*

புதுமையான பெருக்காடி.

படத்தில் காணும் கருவி ஒரு புதுமை யான பெருக்காடி (Microscope). தரை மட்டத்திலுள்ள மிக மிகச் சிறிய மேடு பள்ளங்களையும் அதன்மூலம் அறியலாம். ஓர் அங்குலத்தின் இரண்டிலிருந்து 100 மில்லியன் பாக அளவுள்ள மேடு பள்ளங் களையும் அப்பெருக்காடியைக் கொண்டு காணலாம்.

*





தலைகீழாக நீந்தும் மீன்!

தலைகீழாக நடப்பது எவ்வளவு கடினம்! மீனுக்கும் தலைகீழாக நீந்துவது கடினமே. ஆனால் பூனைமுக மீன் (Cat-fish) என்ற ஒருவகையான மீன் எப்போதும் நீரில் தலை கீழாகவே நீந்துகிறது. நீர்ச் செறிவை (density) விட பொருளின் செறிவு குறை வாக இருக்குமானால் அப்பொருள் நீரில் மிதக்கும். பூனைமுக மீனின் வாயின் மேற் பகுதியில் ஒரு காற்றுக் கோளம் இருக் கிறது. இக் காற்று, மீனின் செறிவைக் குறைக்கிறது. ஆகையால்தான் அம் மீன் தலைகீழாக நீந்த முடிகிறது. ஆனால் இது ஏன் எப்போதும் தலைகீழாகவே நீந்து கிறது என்பதை விளக்க இதுவரை ஒருவ ராலும் இயலவில்லை.

*

சந்திரனைத் தாக்கிய கோள்.

சந்திரனில் பல நீண்ட பள்ளங்கள் தோன்றுகின்றன அல்லவா? அவை எப் படி உண்டாயின? 1,00,000 ஆண்டு களுக்கு முன்பு ஒரு சிறு கோள் சந்திர னோடு தாக்குண்டு வெடித்தது. வெடித்து அதனின்றும் வெளிப்பட்ட பொருள்கள் பல மைல் நீளமுள்ளவையும், பெரிய இரும்பு - நிக்கல் உலோகத் துண்டுகளைக் கொண்டவையாயும் இருந்தன. அப் பொருள்கள் மிக வன்மையாகச் சந்திர னின் எல்லாப் பாகங்களிலும் கிழித்துச் சென்றன. அதன் விளைவுதான் அப் பெரும் பள்ளங்கள்.

*



வாழ்க்கைக்குச் சமயம் அவசியமா?

சுவாமி சித்பவானந்தர்.

வானத்தில் சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் முதலியன ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன. மக்களில் பெரும்பாலர் அவைகளைப் பொருட்படுத்துவதில்லை. யாரோ சிலர் அவைகளைப் பார்த்து ரசிக்கின்றனர். கவிஞன் ஒருவன் இன்னும் கொஞ்சம் அதிகமாகவே அவைகளைக் கண்டுகளிக்கின்றான். ஆனால் வான சாஸ்திரி ஒருவனுக்கு அவைகள் கொடுக்கும் செய்தி அலாதியானது. அவைகளைப் பற்றிய ஞானத்தில் அவன் மேலும் மேலும் தன் வாழ்நாளைச் செலுத்துகிறான். ஒரு விதத்தில் தன்னையே மறந்துவிடுகின்றான். வெகு தொலைவில் நமக்கு அப்பால் இருப்பவைகளிடம் வான சாஸ்திரி தன் உயிரையே கொடுத்துவிடுகின்றான் என்று சொல்லலாம்.

மண்ணுலகில் பல பொருள்கள் இருக்கின்றன. அவைகளைப் பற்றி அறியுமளவு நாம் அவைகளை நன்கு பயன்படுத்துகின்றோம். தண்ணீர் நீராவியாக மாறவல்லது. நீராவியின் வலுவை ஒருவன் அறிந்தான். பிறகு பலர் அதை அறிய ஆரம்பித்தனர். அதன் விளைவாக நீராவியந்திரம் வந்தது. அதைக்கொண்டு மனிதன் இன்று ஏராளமாக வேலை வாங்குகின்றான்.

மின் சக்தியைப் பற்றி நெடுநாள் மனிதனுக்குத் தெரியா திருந்தது. நாளடைவில் அதைக் கண்டுபிடித்தான். நாள் தோறும் அதைப்பற்றிய ஞானம் விரிவடைந்துகொண்டே போகிறது. அதற்கேற்றவாறு அதை உபயோகிக்கும் முறையும் பலதரப்பட்ட தாகிறது. இயற்கையிலுள்ள எல்லாப் பொருள்களைப் பற்றியும், விசைகளைப் பற்றியும் அறிவு நாளடைவில் விரிவடைந்துகொண்டே வருகிறது. இயற்கையில் உள்ளவைகளை யெல்லாம் நன்கு பயன்படுத்துவதற்கான உபாயங்களும் எண்ணிறந்தபாங்கில் வடிவெடுத்து வருகின்றன. இவைகளைப் பற்றிய அறிவு முழுதும் பொதுவாக விஞ்ஞானம் என்னும் பெயர் பெற்றுள்ளது.

தன்னைப்பற்றி மனிதன் அறிந்துகொண்டது எவ்வளவு என்பது கேள்வி. வானத்தில் இலங்கும் நட்சத்திரங்களைப் பற்றிப் பலர் கவலையற்றிருப்பது போன்று தங்களைப் பற்றியும் மக்களில் பெரும்பாலர் கவலையற்றிருக்கின்றனர். தங்களின் அமைப்பு யாது, உயிர்களுக் கிடையில் ஒற்றுமை ஏதேனும் உண்டா, உயிர்களுக்கும் உலகுக்கும் உள்ள தொடர்பு யாது-இவை போன்ற கேள்விகளைக் கேட்பவரைக் காண்பது அரிது. ஆயினும் இக் கேள்விகளை ஏதோ சில காலங்களில்,யாரோ சிலர் கேட்கின்றனர். அவற்றிற்கு விடைபெறவும் அவர்கள் முயல்கின்றனர். முயற்சியில் ஒரு சிலர் வெற்றியடைகின்றனர். அவர்கள் அறிந்துகொண்ட விஷயங்கள் வாழ்க்கைக் குரியவைகள் ஆகின்றன. அந்த விஷயங்களின் அடிப்படைத் தத்துவங்களே சமயம்

என்னும் பெயர் பெற்றுள்ளன. இந்தச் சமயத்தைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

முயற்சியால், உடல் வாழ்க்கையை மனிதன் திட்பமுடைய தாக்கலாம். நோயை மனிதன் பெரிதும் தடுத்துவிடலாம். தடையையும் மீறித் தோன்றுகின்ற நோயின் வேகத்தைத் தடுக்கவும் மனிதனுக்கு இயலும். இங்ஙனம் உடல் வாழ்க்கையைப் பற்றிய உண்மைகளைத் தெரிந்து கொள்ளுமளவு, தெரிந்தவைகளைக் கையாளுமளவு மனிதனுடைய உடல் வாழ்வு சீர் பெறுகிறது. ஆனல் மனிதன் வெறும் உடல் சொரூபமானவன் அல்லன். உடலுக்குரிய வாழ்வுதான், அவனுடைய வாழ்வு என்றால் விலங்குக்கும் அவனுக்கும் ஒரு விதமான வித்தியாசமும் இல்லை. ஒரு விதத்தில் விலங்கு மனிதனைவிட உயர்ந்த நிலையில் இருக்கிறதென்றே சொல்லிவிடலாம். வீடு கட்டாது விலங்குகள் வாழ்கின்றன. நூல் நூற்று, ஆடை நெய்து, அதை அணிந்து கொள்ளாது விலங்குகள் வாழ்கின்றன. அவைகள் சாகுபடி செய்வதும் இல்லை. தங்களுக்காக வென்று ஆஸ்பத்திரிகளும், பள்ளிக் கூடங்களும் அமைத்துக்கொள்வதும் இல்லை. அப்படியிருந்தும் நோயற்ற நிறை வாழ்வு இன்பமாக அவைகளுக்கு வந்தமைகின்றது. மனிதன் உண்மையில் உடல் சொரூபம் அல்லன். உடலில் குடியிருக்கும் அறிவு சொரூபமாக மனிதன் இருக்கின்றான். அறிவு மனிதனுடைய சிறப்பியல்பு ஆகிறது. மனத்தை உடைய விலங்கு மனிதன் ஆயிருக்கின்றது. இந்த மனத்தைப் பண்படுத்துமளவு மனிதன் மேலோன் ஆகின்றான். மனப்பண்பாட்டுக்கு முடிவு இல்லை. மனப்பண்பாடே சமயம் என்னும் பெயர் பெற்றுள்ளது. 'மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன.' மனிதன் என்னென்ன பாங்கில் மனத்துக்கண் மாசு இல்லாதவன் ஆகக்கூடும் என்பதைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

இயற்கையி லுள்ள நீராவி, மின்சக்தி முதலியன பள்ளிக் கூடத்துப் பிள்ளைகளுடைய ஆராய்ச்சிக்கும் உரியவைகளாக இன்றைக்கு இருப்பது போன்று, மனிதனுடைய வாழ்க்கையும் அவனுடைய ஆராய்ச்சிக்குரிய தாகின்றது. முன்னாளைய முனிவர்கள் செய்த ஆராய்ச்சியை இக்காலத்தைய மனிதர்களும் செய்துபார்க்கலாம். பழைய உண்மை திரும்பத் திரும்ப ஒவ்வொரு ஆராய்ச்சியாளன் மூலமாகவும் நிரூபிக்கப் பெறும். நீராவியை ஒரு பாத்திரத்துக்குள் கட்டி அடக்கினால் அதற்கு வலிமை வருவது போன்று, ஐம் பொறிகளையும் மனிதன் கட்டி அடக்கப் பழகினால் அவனுடைய மனத்தகத்துப் புதிய பண்புகள் உரு எடுக்க ஆரம்பித்து விடுகின்றன. 'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் நீடு வாழ்வர்' என்பது பொதுக் கோட்பாடு. புலனடக்கம் சிறிதளவு அமைந்தால் அதற்கேற்ற பலனை மனிதன் பெற முடியும். புலனடக்கத்தால் உச்ச நிலைக்கு அவன் போய்விட்டால், அதன் விளைவு மிகப் பெரியதாகும்.

மனம் போன போக்கில் ஐம் பொறிகள் வாயிலாக விதவிதமான உலக இன்பங்களை மனிதன் சில காலத்திற்கு வேண்டியவாறு அனுபவித்துப் பார்க்கட்டும். அதன் பிறகு இன்னும் சில காலத்துக்குத் தீவிரமாக ஐம் பொறிகளையும், அவைகளின் வாயிலாகப் புலன்களிடத்துச் செல்லும் மனத்தையும் அடக்கி வைத்திருந்து பார்க்கட்டும். இவை இரண்டுக்கும் இடையிலுள்ள வேற்றுமையை மனிதன் தானே அறிந்து கொள்வான். அடக்கம் அவனை அமரர் கூட்டத்தில் சேர்க்கும். அதாவது அடக்கத்தின் மூலம் தனக்கு அழிவு வராது பாதுகாக்க முடியும் என்பதை மனிதன் தெரிந்து கொள்வான். ஆனல் அடங்காமையே மனிதனை அதிவிரைவில் அழித்து விடுகிறது. அதுவுமல்லாது அவனுடைய அறிவு விரைவில் மழுங்கி மங்கிப்போய் விடுகிறது. அடக்கத்தின் மூலம் அறிவு ஒளி

பெறுகிறது. அடங்காமையின் மூலம் அறிவு இருள் படிந்து விடுகிறது. நல்லுணவும், உழைப்பும், ஓய்வும், உறக்கமும் சேர்ந்து உடலை உறுதிப்படுத்துவது போன்று, புலனடக்கம் உள்ளத்தை உறுதிப் படுத்துகிறது.

புலனடக்கத்திற்குச் சில சான்றுகள் எடுத்துக் கொள்வோம். மனிதன் நினைத்த வேளைகளில் எல்லாம் உணவை உண்ணலாகாது. குறிப்பிட்ட வேளைகளிலேயே உண்ணவேண்டும். உண்கின்ற உணவில் பொருந்துகின்ற உணவு என்றும், பொருந்தாத உணவு என்றும் இரு பகுதிகள் இருக்கின்றன. பதை பதைப்பை உண்டுபண்ணுகின்ற உணவையும், மயக்கத்தை உண்டு பண்ணுகின்ற கள் போன்ற உணவையும் ஆத்ம சாதனம் செய்கின்ற ஒருவன் உண்ணலாகாது என்பது கோட்பாடு. ரசோ குணத்தையும், தமோ குணத்தையும் வளர்க்கின்ற உணவுகளை ஒதுக்கி வைத்து விட்டுச் சத்துவ குணத்தை வளர்க்கின்ற உணவு வகைகளையே உண்ணுதல் வேண்டும். அப்படிச் செய்வதால் உடல் அமைப்பு தூயது ஆவதோடு கூட, உள்ளமும் பண்படுகிறது. காம விகாரத்தை உண்டுபண்ணும் காட்சிகளைக் கண்ணால் பார்க்கலாகாது; அதற்குரிய சொற்களைக் காதால் கேட்கலாகாது. கண் கொண்டு காண்கின்ற காட்சிக ளெல்லாம் மனத்திலே உயர்ந்த எண்ணங்களை உண்டுபண்ணுபவைகளாக இருக்கவேண்டும்; காதால் கேட்கும் செய்திகளும் எப்பொழுதும் மனத்தை மேன்மைப் படுத்துபவைகளாக இருப்பது அவசியம். இத்தகைய அனுட்டானங்களுக்குப் புலனடக்கம் என்று பெயர். இப் பழக்கத்தின் மூலம் மனிதன் தன்னையே மேம்பட்ட மனிதனாக மாற்றியமைத்துக்கொண்டு வருகின்றான். ஆராய்ச்சியின் மூலம் ஒவ்வொரு மனிதனும் இதை அறிந்துகொள்ள முடியும்.

மனத்தை அடக்குதல் புலனை அடக்குவதைவிட உயர்ந்தது. புலன்கள்மீது மனம் ஆட்சி புரிந்துகொண் டிருக்கிறது. மனத்தின் பாங்குக்கு ஏற்ப புலன்கள் சீரிய காரியங்களுக்கும் பயன்படுகின்றன; புல்லிய காரியங்களுக்கும் பயன்படுகின்றன. ஒரு டெலிபோன் கருவியின் மூலம் நல்லதையும், பேசலாம் கெட்டதையும் பேசலாம். இரண்டு விதப் பேச்சுக்கும் அது ஒரு கருவியாய் அமைகிறது. அதே விதத்தில் கண், காது முதலியன மனத்தகத்து உண்டாகும் மேலான எழுச்சிகளுக்கும் பயன்படுகின்றன; கீழான எழுச்சிகளுக்கும் பயன்படுகின்றன. மனத்தில் எப்பொழுதுமே மேலான எண்ணங்கள் உதித்துக் கொண்டிருக்க வேண்டும். மனம் அப்படிப் பண்பட்டு விட்டால் புற இந்திரியங்களும் அதற்கேற்றபடி மேலான செயல்களையே புரிந்து வரும். இனி, தூய எண்ணம் எது என்கின்ற கேள்வி எழக்கூடும். எந்த எண்ணத்தைத் தங்குதடையின்றி எல்லார்க்கும் தெரிவிக்க முடியுமோ, அதுவே தூய எண்ணம். எந்த எண்ணத்தை மனத்துக்குள்ளேயே மறைத்துவைக்க முயலுகின்றோமோ அது கீழான எண்ணம். நோயானது உடலுக்குள்ளேயே மறைந்திருந்தால் அதுவே முடிவில் பெருங் கேடாகும். காய்ச்சலாக, சொறி, சிரங்காக அது வெளிக் கிளம்பு மிடத்து உடல் தூயதாகி விடுகிறது. உள்ளத்துக்குள் கெட்ட எண்ணங்கள் மறைந்து கிடக்குமானால் நாளடைவில் மனிதனே சீர்கேடு அடைந்து விடுவான். நல்ல எண்ணங்களே உள்ளத்தில் உதிக்கும்படி செய்ய வேண்டும். காமம், குரோதம், கோபம், மதம், மாச்சரியம் முதலியன மனத்தை நோய்வாய்ப் படுத்தும் கீழான எண்ணங்களாம். அன்பு, அனுதாபம், தயாளகுணம், இரக்கம் முதலியன சீரிய எண்ணங்களாம். சீரிய எண்ணங்களில் ஊறியிருக்குமளவு மனம் மேன்மையுறுகிறது. அது தெளிவு அடைகின்றது. மனத்தில் நல்ல எண்ணங்களையே எண்ணிப் பழகுதல் சமய அனுட்டானமாகிறது. உயிர்கள் அனைத்திடத்தும் நல்லிணக்கம்

வைப்பது சமய அனுட்டானமாகிறது. அதன் மூலம் வாழ்வு தூயதாக மாறிவிடு கிறது.

இனி மனத்தகத்து உணர்வு என்னும் பகுதி ஒன்று உண்டு. இந்த உணர்வு இன்ப துன்பமாக, பொறை பொருமையாக, விருப்பு வெறுப்பாக வடிவெடுப்பதுண்டு. இன்பம், பொறை, விருப்பு முதலியன உடன்பாட்டு உணர்வுகள் ஆகின்றன. துன்பம், பொருமை, வெறுப்பு முதலியன எதிர்மறை உணர்வுகள் ஆகின்றன. எதிர் மறை உணர்வுகள் மனத்தைப் பாழ்படுத்து கின்றன. உடன்பாட்டு உணர்வுகள் மனத்தை மாண்புடைய தாக்குகின்றன. எக்காரணத்தை முன்னிட்டும் மனிதன் விச னப்பட லாகாது. விசனம் அவனுடைய மேலாம் சொரூபத்தை அழித்து விடுகிறது. இன்பம் என்னும் பெயர் வைத்துக்கொண்டு அல்ப விடயங் களையெல்லாம் முன்னிட்டுக் கழிபேருவகை அடையலாகாது. வெறும் வேடிக்கை விநோதங்களிலேயே சர்வ கால மும் ஈடுபட்டிருக்கும் மனம் உயர்ந்த எண் ணங்களில் நிலைபெற்றிருக்கத் தகுதியற்ற தாய்விடுகின்றது. சாந்தமும், அமைதி யும் கூடிய தூய இன்ப நிலையில் மனத்தை வைத்துப் பழகுதல் வேண்டும். பிறர் அடை யும் ஆக்கத்தைக் கண்டு அல்லது கேட்டுச் சிலர்க்குச் சகிக்க முடிவதில்லை. அது பொரு மையின் கூறு. பிறர் முன்னேற்றத்தைப் பார்த்துச் சகிக்க முடியாதவன் தன்னுடைய ஆற்றலை இழந்துவிடுகின்றான். தன்னு டைய முன்னேற்றத்துக்குத் தானே தடை போட்டுக்கொள்கின்றான். அப்படியல்லாது பிறர் இடத்தில் தென்படும் ஆக்கங்களை யெல்லாம் கண்டு, மனமாரப் பாராட்டி, அவர்கள் மேலும் முன்னேற்றம் அடையட் டும் என்று ஆசி கூறும் பாங்குடையவர் களுக்குப் பொறை என்னும் பண்பு வளர்கி றது. அதன் மூலம் மேலாம் மன அமைப் பும் இயல்பாக அவர்களுக்கு வந்துவிடு கின்றது. வெறுப்பதன் மூலம் தனக்கும், மற்றவர்களுக்கும் வேற்றுமையை ஒருவன் வளர்க்கின்றான். வெறுப்பு தன் அமைப் பையே நஞ்சு ஆக மாற்றி விடுகிறது. வெறுப்பு என்னும் நெருப்பு மனத்தகத் துள்ள மேன்மைகளை யெல்லாம் பொசுக்கி விடுகிறது. எல்லா உயிர்களையும் நேசிக்க வேண்டும். கெட்டவர்க ளிடத்தும் அனுதா பமும் இரக்கமும் காட்டவேண்டும். இந்தப் பாங்கில் ஒருவன் வளர்ந்துவந்தால் அவன் மனம் அடையும் மேன்மை ஒப்பற்றதாகி றது. இத்தகைய மனநிலைக்குத் தூய அன்பு அல்லது பக்தி என்று பெயர்.

பக்தி ஓங்குதற்குக் கடவுள் விசுவாசம் வேண்டும். கடவுள் என்றால் என்ன என் பது பலருக்குத் தெரியாது. தெரியாத ஒன்றை ஏன் வணங்கவேண்டும் என்றும் அவர்கள் கேட்கின்றனர். கடவுள் ஊனக் கண்ணால் காணும் வஸ்து அல்ல. அண்ட மெங்கும் வியாபித்துள்ள அன்பே சிவம். அண்டமெங்கும் வியாபித்துள்ள அறிவே தெய்வம். 'சித்தமிசை குடிகொண்ட அறி வான தெய்வமே' என்று கடவுளை ஒரு பக் தர் அழைத்துள்ளார். அன்பையும் அறிவை யும் நாம் உணர்ந்துள்ளோம். இந்த அன்பும் அறிவும் நம்மிடத்துத் தூயனவாகி விடுமா னால், நாம் கடவுள் சொரூபத்தில் நிலைபெற் றவர் ஆகிறோம். அப்பொழுது நம்முடைய வாழ்வே பெரு வாழ்வாக மாறிவிடுகிறது. நமக்கும் உலகுக்கும் அப்பொழுது அப் பெருவாழ்வு நன்கு பயன்படுகின்றது. உலக முழுவதும் கடவுள் சொரூபம் என் பதன் பொருளும் இதுவே. அன்பைப் பாராட்டாத மனிதன் உலகில் இல்லை. அன் புக்கு வசப்படாத உயிர் உலகில் இல்லை. அந்த அளவில் உயிர்களெல்லாம் கடவுள் நாட்டம் கொண்டவர்களாக இருக்கின்ற னர். அறிவைப் போற்றுகின்றோம். அறி வுடயவர்க ளிடத்து நாம் அபிமானம் கொள் கின்றோம். அதன் மூலம் மறைமுகமாகக் கடவுளைத்தான் நாம் போற்றுகிறோம். மனத் தைப் பண்படுத்துதலின் மூலம், நல்லறி வைப் பெறுதற்கு நாம் பக்குவமடைந்து வருகிறோம். புத்தகங்களைப் படித்து அவை களிலுள்ள விஷயங்களைத் தெரிந்திருக்கும் அறிவு வேறு. மனத்தகத்துத் தெரிந்த பாங் கில் உருவெடுக்கும் நுண்ணறிவு வேறு. ஒன்று வெறும் வாசாஞானம். மற்றது நிறை ஞானம். சந்திரனிடத்துக் கடன் வாங் கிய வெளிச்சம் இருக்கின்றது. நூலறிவு களெல்லாம் அத்தகைய சந்திர வெளிச்சத்

துக்கு ஒப்பானவைகள். சூரியனே சுயஞ் சோதியாய் இருக்கின்றது. பண்பட்ட மனத்தில் உதயமாகும் பேரறிவு சூரியப் பிரகாசத்துக்கு ஒப்பானது. அதைத்தான் கடவுளைப் பற்றி நிறை ஞானம் என்கின்றோம்.

உயிர்களெல்லாம் நெடிது வாழ்ந்திருக்க முயலுகின்றன. மாய்ந்துபோக எவ்வுயிர்க்கும் விருப்பம் கிடையாது. நெடிது வாழ்ந்திருக்க விரும்பும் உயிர்கள் வாழ்வைப் பற்றிய ஒரு மர்மத்தை அறிந்துகொள்ள வேண்டும். நித்திய வாழ்வு உடலின்கண் கிடையாது. உடலுக்குள்ளிருக்கும் ஆத்மாவே நித்திய வஸ்து. அது என்றைக்கும் அழியாது. அந்த ஆத்மாவானது உடலைத் தன் சொரூபம் என்று எண்ணிக்கொண்டு உடலின்கண் யாண்டும் அழியாதிருக்க விரும்புகிறது. அது சாத்தியப்படாது. உடலுக்குள்ளிருக்கும் ஆத்மாவே புதிய புதிய உடல்களை எடுத்துக்கொண்டு என்றைக்கும் அழியாதிருக்கிறது. அந்த ஆத்மா அழியாமையை முன்னிட்டுச் சத் சொரூபம் என்று அழைக்கப்படுகிறது. சடப்பொருள் தான் இருப்பதை உணர்வதில்லை. ஆத்மாவோ தான் இருப்பதை உணர்கிறது. இருட்டறைக்குள் உட்கார்ந்து கொண்டிருக்கும்பொழுதும் தான் இருப்பதை அது உணர்கிறது. அந்த உணர்வே மெய்யறிவு ஆகிறது. நிறை ஞானம் என்றும், சிவ ஞானம் என்றும், பிரம்ம ஞானம் என்றும் இப்படி யெல்லாம் அதற்குப் பெயர்கள் வருகின்றன. சித் சொரூபம் என்ற பெயரும் அதற்குண்டு. உயிர் ஆனந்த சொரூபம். கடவுளும் ஆனந்த சொரூபம். அழியாத நித்தியானந்தம் கடவுளிடத்து உண்டு. தடைப்படுகின்ற ஆனந்தம் உயிர்களிடத்து உண்டு. நல்வாழ்க்கையின் மூலம் தடைப்படுகின்ற ஆனந்தத்தைத் தடையில்லாத ஆனந்தமாக்க முடியும். அப்பொழுது உயிர் ஆனந்த சொரூபம் ஆய்விடுகின்றது. தன் உண்மை நிலையை அப்பொழுது அறிந்துகொள்கிறது. அது சத் சொரூபமாய், சித் சொரூபமாய், ஆனந்த சொரூபமாய் இருக்கிறது. இம் மூன்றையும் தொகுக்குமிடத்துச் சத் சித்ஆனந்தம்-சச்சிதானந்தம் என்பதாகின்றது. உயிர்களும் சச்சிதானந்த சொரூபம். கடவுளும் சச்சிதானந்த சொரூபம். உயிர்களுக்கு உடலபிமானம் என்னும் அழுக்கு இருக்கிறது. கடவுள் பிரபஞ்சம் எங்கும் வியாபித்திருக்கின்றார் என்றாலும் பிரபஞ்சத்தில் கட்டுப்படாது இருக்கின்றார். பிரபஞ்சத்தின்கண் உள்ள கட்டு அல்லது தளையை அவிழ்த்து விட உயிர்கள் ஓயாது முயன்று வருகின்றன. இந்த முயற்சியை வகை தெரிந்து கையாளுமிடத்து, அதுவே சாதனம் என்றும், ஆத்ம சாதனம் என்றும் பெயர் பெறுகிறது. முயற்சி அப்பொழுது விரைவில் வெற்றி பெற்று விடுகிறது.

நித்திய வாழ்வையும், பேரறிவையும், பேரானந்தத்தையும் ஓயாது நாடிக்கொண்டிருக்கின்ற உயிர்கள், அது தங்கள் ஆத்ம சொரூபத்தில் இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளும் பொழுது, உண்மையான சமய வாழ்வு அத்தகைய சீவாத்மாக்களுக்குத் துவங்குகிறது. அதன்பொருட்டு அந்த ஆத்மாக்கள் வாழ்கின்ற நெறியான வாழ்வும், புரிகின்ற நல்வினைகளும் சேர்ந்து கர்மயோகம் என்னும் பெயர் பெறுகின்றன. மனத்தைப் பிரபஞ்ச வாழ்க்கையில் செல்லாது கட்டிப் பிடித்து உள்ளிருக்கும் பேரானந்தப் பெருநிலையிலேயே அடக்கி வைக்கின்ற பொழுது, அது ராசயோகம் என்னும் பெயர் பெறுகிறது. பிரபஞ்சத்திலுள்ள உயிர்கள் அனைத்திடத்தும் நல்லன்பு செலுத்துகின்ற பொழுது,அது பக்தி யோகம் என்னும் பெயர் பெறுகிறது. மனத்தகத்து மிளிர்ந்துகொண் டிருக்கும் ஆத்ம சோதியை அறிந்துகொள்ளும் தெளிவு ஏற்படும்பொழுது, அது ஞானயோகம் என்னும் பெயர் பெறுகிறது. இந்த நான்கு யோகங்களையும் முறையாகக் கையாண்டு வரும் சீவர்கள் பெருமக்கள் ஆகின்றனர். உலகுக்கு அவர்களுடைய வாழ்வு நன்கு பயன்படுகிறது. உலகனைத்தையும் நேசிக்க அவர்களுக்கே இயலுகிறது. உலகின்கண் ஒற்றுமையை உண்டுபண்ண வல்லவர்களும் அவர்களே. உடல் வாழ்க்கையினின்று விடுதலையடைந்து, பரம்பொருளுக்கும் தங்களுக்குமுள்ள ஒற்றுமையை உணர்ந்து, முக்தி அடைய வல்லவர்களும் அவர்களே. சமய வாழ்க்கையினின்று சீவர்களுக்குக் கிடைக்கும் நலன்கள் இவைகளே யாம்

கல்லும் சொல்லாதோ கவி?

திரு. கு. ராஜவேலு, M.A.

நெடுவானை ஒளி செய்யும் பால் நிலா வெண்கதிரும், எண்ணற்ற தேன் நிற விண் மீன்களும் கடமையை மறந்து கண்ணயர்ந்துவிட்ட கங்குற்காலம். நீள் புவியிலும் அவ்வண்ணமே விளக்கேதும் இல்லாது, நீண்ட துயிலில் படுத்துறங்கும் காட்டு விலங்குகளைப்போல், மாந்தரும் மீளாத துயிலில் ஆழ்ந்து விட்டார்கள். நீல வான் எது? நித்திலக் கடல் எது? நீல முடிதரித்த மலை எது? வண்டினம் முரலும் சோலை எது? குழலும், யாழும் வருந்தும் வண்ணம் அமிழ்தம் பரப்பும் அரிவையர் வாழும் நல்லிடம் எது? இவற்றையெல்லாம் கண்கள் காணா வண்ணம் காரிருள் எங்கும் கவிந்திருந்தது. மலைப் பிளவில் மண்டிக்கிடந்திருந்த மாய இருள், எங்ஙனும் பரந்து கரந்ததோ என எண்ணும்படிக் கனத்த இருள் காசினியை மறைத்துக் கார்முகில் தவழும் கார்வானையும் ஆட்சி செய்தது.

திக்குத் திசை தெரியாது நான் மட்டும் அந் நள்ளிருளில் ஏனோ நடந்துகொண்டிருந்தேன். சமமான பாதையில் நடவாது

ஏதோ ஒரு மலைப் பாதையின் மீது ஏறுவதைப்போன்று என் கால்கள் நடந்தன. இவ்வாறு எவ்வளவு தூரம் நடந்தேனு தெரியாது. கல்லும் முள்ளும் கலந்து கரடுமுரடான பாதையில் ஏறி நடந்த என் கால்கள் சட்டெனப் பஞ்சுப்பாதையின்மீது இறங்கி நடந்தன. எங்கிருந்தோ சந்தனங் கமழும் தென்றல் காற்று அழகான குழந்தையின் இனிய மழலை போன்று இன்பமாக வீசியது. கார்மழையைக் கண்ட பயிரின் வாட்டமும், தளர்ச்சியும் நீங்குவதைப்போன்று, கல் நிறைந்த வழியைக் கடந்துவந்த என் கடுந் துன்பமும், களைப்பும் நீங்கின. அருவிபோல் என்னுள்ளத்தில் இன்பக் கடல் பொங்கியது. விரைந்து இறங்கினேன். இப்போது என் கால்கள் சமதரையில் நடப்பதைப் போன்று உணர்ந்தேன்.

ஆனுல் இந்த இன்பம் நீண்ட நேரம் நீடிக்கவில்லை. நீரில் தோன்றும் குமிழி போல், அது மிக விரைவில் அழிந்து விட்டது. இரும்பு உலக்கை கொண்டு யாரோ என் நெற்றியில் அடிப்பதைப் போன்று உணர்ந்தேன். ''அம்மா'' என்று அலறினேன். அடுத்த கணம் நான் என் நினை விழந்து நெடுந்தரையில் வீழ்ந்தேன்.

கோடிக்கணக்கான கூடைகளில் மூடி வைத்திருந்த முல்லை அரும்புகளை மழைக் காலத்தின் வைகறைப் போதிலே திறந்து விட்டால் அப்போது அவ்வளவு இனிய நறுமணம் கமழுமோ, அதைப் போன்று கொள்ளை மணம் கமழ்ந்தது. கண்களை மெல்லத் திறந்தேன். ஆனுல் என்ன அதிசயம்! ஆயிரம் நிலவு வானுலகில் தவழ்ந்து சிரிப்பதைப்போன்று, ஆருயிரும் உருகும் வண்ணம் இன்பப் பேரொளி எங்கணும் விரிந்து விளங்கியது. இரண்டு கைகளையும் ஊன்றி மெல்ல எழுந்து நின்றேன். நெற்றியிலிருந்து ரத்தம் சொரிந்துகொண் டிருந்தது. எதிரே ஓர் அழகான பளிங்குச் சிலை இருந்தது. அதைப் பற்றியவாறே சிறிது நேரம் நின்றிருந்தேன்.

பட்டப்பகலிலே உவர்க்கடல் முழுவதும் பாற்கடலாக மாறினுல் அது எவ்வாறு விந்தைக்குரிய காட்சியாக இருக்குமோ. அதேபோன்று நான் கைப்பிடித்து நின்ற அக் கற்சிலையும் கண்டவர் மயங்கும் வண்ணம் பேரழகு படைத்த ஒரு காரிகையாக மாறியது; அவள் தன் தளிர்க்கரத்தில் குருதி வடியும் என் நெற்றியைத் தொட்டாள். உடனே ரத்தம் நின்றது. வேதனையும் மறைந்தது.

அச்சத்தோடு அவளை நோக்கினேன். அப்போது என் உடல் முழுவதும் ஆடிக் காற்றில் ஆடும் வாழைமரம் போன்று ஆடிக்கொண்டிருந்தது. அவளோ, ''அஞ்சேல்'' என்பது போல் கையை ஆட்டிச் சிரித்தாள். அச்சிரிப்பில்தான் எவ்வளவு இனிமை! எத்தனை இன்பம்! கோடி மின்னல் கூடிச்சிரித்தாலும் அவளது குறுநகையின் கவினுக்கு ஈடாகுமா? சங்கப் பாடலைப்போன்ற அவளது இயற்கை அழகிலே என் கண்கள் மயங்கின. எனினும் என் உள்ளம் இன்னும் நடுங்கியவாறுதான் இருந்தது.

அப்போது அவள் முத்துப்போல நிலவு வீசும் தன் முல்லைப் பற்கள் தெரியும்வண்ணம், பவழவாய் திறந்து, இளங்கோவின் சிலம்புபோல் தேனெழுக ''அன்ப'' என அழைத்தாள். என்னைப் பிடித்திருந்த அச்சப் பேயும் இருந்த இடம் தெரியாமல் மாயமாய் மறைந்தது; கீழ்வானில் தோன்றும் கதிரவனைப்போன்று என் உள்ளத்திலே ஆண்மை எழுந்தது. அவளைப் பற்றிய முழு விவரத்தையும் அறியவேண்டுமென்ற ஆவல் என் நெஞ்சில் எழுந்தது. 'எப்படிக் கேட்கலாம்?' என்று நான் எண்ணமிட்டுக்கொண் டிருக்கையில் அவ் எழில் மங்கை என் கைகளைப் பற்றிய வண்ணமே, ''வாருங்கள், உங்களுக்கு நான் இங்குள்ள புதுமைகளையெல்லாம் காட்டுகிறேன்'' என்று கூறி அழைத்துச் சென்ருள்.

பல பக்க மலைகளோடு விளங்கிய அப் பெருமலை இப்போது என் கண்களுக்கு நன்கு புலனாகியது. திரும்பிய பக்கமெல்லாம் அழகான சோலைகள் இருந்தன. பன்னிற மலர்கள் மலர்ந்து, எல்லையில்லாத மணத்தை எங்கும் பரப்பின. சோலைகளைப் பார்த்தவண்ணமே நாங்கள் இருவரும் ஓர் அருவியை வந்தடைந்தோம். மலையிலிருந்து தவழும் வெண்மேகம்போல், அருவி நீர் வெண்ணிறத்தோடு வீழ்ந்துகொண்டிருந்தது. அதனுடைய அழகை அங்காந்த வாயுடன் நான் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே, அவள், ''வாருங்கள், இன்னும் எவ்வளவோ பார்க்கவேண்டிய இடங்கள் இருக்கின்றன'' என்று நகர்ந்தாள். நானும் அவளைப் பின்தொடர்ந்தேன். இதுதான் ''மின்னற்குன்று'' என்று அவள் ஒன்றைக் காட்டினாள். வானத்திலே ஒளிரும் விண்மீன்கள் அத்தனையும் ஒரு கருங்குன்றின் மீதுபடிந்திருந்தால் அதுஎவ்வாறு பளபளப்பாயிருக்குமோ அவ்வாறு மின்னியது அக் குன்று. அக் குன்றின் வலது பக்கத்திலே ஒரு பளிங்குக் கல்மண்டபம் தெரிந்தது. மண்டபத்திலே ஏராளமான சிலைகள் உயிருள்ள மனிதரைப்போல் நின்றவண்ணமிருந்தன. அவைகளைக் கண்டுகளிக்க என் உள்ளம் விரும்பியது.

''அதோ, தெரியும் அந்த மண்டபத்துக்குச்செல்லலாமா?'' என்றேன், அப்பொற்கொடியைப் பார்த்து.

''அங்குச் செல்ல வேண்டுமென்றால் படகில்தான் செல்ல வேண்டும். சரி, வாருங்கள்,'' என்றாள்.

அவள் இவ்வாறு சொன்னவுடன்தான் குன்றையும், மண்டபத்தையும் சுற்றிப் பரந்த நீர்ப்பரப்பு இருப்பதை உணர்ந்தேன். இருவரும் கரையை அடைந்தோம். சிறிது நேரத்திற்கெல்லாம் பொன்போன்ற படகு ஒன்றை ஓட்டிக்கொண்டு ஒருத்திவந்தாள். அதில் அமர்ந்து சென்று மன்றத்தை

அடைந்ததும், அங்கே நூற்றுக்கணக்கான இளம் பெண்கள், அழகு ததும்ப எங்களை வரவேற்றார்கள். ஆனால் இவர்களுடைய ஆரவாரத்தில் சிக்காது, ஒருத்தி மட்டும் தனியாக அமர்ந்திருந்தாள். என்னை அவள் பார்த்த பார்வையிலே பொறாமை நிறைந்திருப்பதை அறிந்தேன். எனினும் மண்டபத்தில் நிறைந்திருந்த சிற்பங்களின் கண்கவர், வனப்பு அவளைப்பற்றிய எண்ணத்தையே மாற்றிவிட்டது.

இவ்வாறு நாங்கள் அம்மலையின்மீதுள்ள மாண்புமிக்க காட்சிகளைக் கண்டபின்னர் ஓர் இடத்தில் வந்து நின்றோம். ஓர் ஓரமாக நின்று நான் கீழே நோக்கினேன். ஈட்டிபோன்ற பாறைகள் நீண்டு நீண்டு விளங்கின. அவற்றிடையே மனித எலும்புக்கூடுகள் நிறைந்து கிடந்தன. அவைகளைக்கண்டதும் என் உள்ளம், உடல் அனைத்தும் ஆடின. ஆளை விழுங்கும் அரக்கிதான் இவ்வாறு அழகு நிறைந்த பெண்ணாக விளங்குகிறாளோ? இந்தச் சூர்ப்பநகையிடமிருந்து எப்படித் தப்புவது? என்று எண்ணமிட்டேன்.

''நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். உங்களை நான் கொன்றுவிடுவேனோ என்றுதானே எண்ணுகிறீர்கள்?'' என்று வினவினாள்.

''மனிதர்களின் எலும்புக்கூடுகள் இங்கே கிடப்பதன் பொருள் என்ன?'' என்றேன் நான்.

நான் என்னுடைய கேள்வியைக் கேட்டேனோ, இல்லையோ உடனே எங்கிருந்தோ ஓர் இனிய இசை காற்றில் மிதந்து வந்து என்னை உருகச் செய்தது. உற்றுக் கேட்டேன். சொற்கள் தெளிவாகக் கேட்கவில்லை. ஆனால் அந்த இசையிலே துன்பத்தின் நிழல்தான் படிந்திருந்தது. வேதனையின் எல்லையிலே விம்முகின்ற இசை ஒலியைக் கேட்ட உடனே, அவள், ''உங்களுடைய வினாவிற்குரிய விடையை நான் நாளை கூறுகிறேன். இப்போது என்னுடைய உயிர்த்துடிப்பு அடங்க வேண்டிய நேரம் அணுகிவிட்டது. விரைந்துவாருங்கள்'' என்று என்னை அழைத்துச் சென்று ஒரு பொன்னறையில் இருக்கச் செய்தாள். அங்கே எண்ணற்றபழவகைகள் நிறைந்து கிடந்தன. ''பசித்தபோது இவைகளைச் சாப்பிடுங்கள்'' என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே அவள் மீண்டும் கற்சிலையாக மாறிவிட்டாள். இசையும் சட்டென நின்றது.

என்னுடைய கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. நான் இதுவரைக்கும்கண்ட நிகழ்ச்சிகளெல்லாம் கனவா? அல்லது இப்போது காணும் இந்தக் காட்சிதான் கனவா? எது உண்மை? என்னால் ஒன்றையும் நிதானிக்க முடியவில்லை. எதிரே நிற்கும் சிலையைத் தொட்டுப் பார்த்தேன். கற்சிலைதான். அதில் ஐயமே இல்லை. நின்ற அந்தச் சோக இசை மீண்டும் எழுந்தது. இப்போது அது என்னுடைய வயிற்றிலும் வேதனைத் தீயைத் துழாவிச்சென்றது. கண்கள் கலங்கின. நீண்ட பெருமூச்சு என்னையும் அறியாது வெளிவந்தது.

கற்சிலையாகிவிட்ட என் கன்னியை மீண்டும் நோக்கினேன்; ஆனால் என்னவியப்பு! இப்போது அச்சிலையின் கண்களிலிருந்தும் நீர் தாரை தாரையாய் வடிந்தது. பொங்கி வரும் துன்பப்புயலை அடக்கிக் கொண்டு, என்மேலாடையால் அவள் கண்ணீரைத் துடைத்தேன். கண்ணீரும் நின்றது. ஆனால் அதே நேரத்தில் அந்தத் துன்பப் பாட்டும் ஓய்ந்தது. அதை அடுத்து இருளும் பரவத்தொடங்கியது.

இரண்டாம் நாள். இரவு மறைந்ததும் காற்சிலம்புகள் ''கணீர், கணீர்'' என ஒலிக்கச் சிலையாக நின்ற என் இளமங்கை என்னை நோக்கி வந்தாள். இருவரும் சென்று ஓர் எழில்மிக்க ஏரியை அடைந்தோம். அந்த ஏரியின் கரைகள் தங்கத்தால் கட்டப்பட்டிருந்தன. படிக்கட்டுகளிலே ஒன்பது வகையான மணிகளையும் பதித்துவைத்து அழகுபடுத்தியிருந்தார்

கள். நீண்ட கரைகளிலே வானுயர் மரங்கள் வளர்ந்திருந்தன. அவைகள் உதிர்த்த மலர்கள் எங்கணும் பரந்து நறுமணத்தைப் பரப்பின.

ரத்தினக் கற்களால் ஆன ஒரு படிக் கட்டின் மீது நாங்கள் அமர்ந்ததும், ''அவள்'' என்னுடைய முதல் நாளைய கேள்விக்கு விடை அளித்தாள். ''நேற்று நாம் இருவரும் அந்த மண்டபத்தை அடைந்ததும் அங்கே ஒருத்திமட்டும் நம்மை மிக அலட்சியமாகப் பார்த்தாளே, அவளை நீங்களும் பார்த்தீர்கள் அல்லவா? அவள்தான் இந்தப் பொன்னுலகின் தலைவி; மந்திரம், தந்திரம், மாயம் எல்லாம் தெரிந்தவள்; நெஞ்சிலே ஈரம் இல்லாதவள்.

''இருந்தாற்போ லிருந்து வானத்திலே தோன்றும் எரி நட்சத்திரத்தைப்போன்று அவள் இந்தப் பொன்னுட்டிற்கு மின்னலைப்போன்ற அழகுடன் வந்தாள். கன்னலெனக் கனியின் சாறு எனக் கவிதை பாடினுள் ஒரு நாள். அப்பாடலைக் கேட்டுக் கடுவிலங்கும், கற்பாறையும், காட்டுமரங்களும் கண்ணீர் சிந்தினவென்றால் எங்களைப்பற்றிக் கேட்கவா வேண்டும். இவ்வாறு உள்ளம் உருக்கும் இசையை அவள் ஏழு நாட்கள் விடாது பாடினுள்.

''எட்டாம் நாள் இருள் செறிந்த நள்ளிரவில் அவள் தன் இசையைத் துவக்கினுள். தேன்மலரைச் சுற்றும் வண்டுகள் போல், அவளின் உயிர் கவரும் பாடலைக் கேட்க ஆண்கள் மொய்த்தனர். அவள் பாடிக் கொண்டே சென்றுள். விளக்கில்வீழ்ந்து மடியும் விட்டிற்பூச்சிகள்போல் அவர்களும் அவளைப் பின்தொடர்ந்தனர். ஆனல் ஒருவராவது வீடு திரும்பவில்லை. அனைவரையும் அவள் நேற்று நீங்கள் பார்த்தீர்களே, அந்தச் செங்குத்தான மலைக்கு அழைத்துச்சென்று, ஈட்டிப்பாறைகளுக்கு இரையாக்கி விட்டாள்.

''கொடுமைக்காரியின் இயல்பறிந்த பெண்கள், அவளைச் சூழ்ந்து நின்று, வசை பெய்தனர். சிறிது நேரத்தில் அவளுடைய கூந்தலைப் பற்றியிழுத்து நையப் புடைத்தனர். அடித்த கைகள் ஓய்ந்துபோய்விட்டன. ஆனல் அவளுடைய கண்ணிலிருந்து ஒரு ''பொட்டு'' நீர் வரவில்லை; வாயிலிருந்து ''ஐயோ'' என்று ஒரு அவலச்சொல் வரவில்லை. திகைத்து நின்று கண்ணீர் வடிக்கும் அப்பேதைப் பெண்களை நோக்கி அவள் ஏளனமாகச் சிரித்தாள்; பின்னர் ஏதோ முணுமுணுத்துக் கொண்டே தன் வலது கையை வானத்தை நோக்கி உயர்த்தினுள். அடுத்த கணம் நாங்கள் அனைவரும் சிலைகளாக மாறிவிட்டோம். இப்போது நாங்கள் அனைவரும் அவளுடைய அருளால் ஒரு நாளில் பாதிநாள் உயிர்பெற்று உலாவுகிறேம்'' என்று கூறி முடித்தாள்.

இச்செய்தியைக் கேட்டு என் உடலிலுள்ள ரத்தமெலாம் உறைந்துபோய்விட்டது. மந்திரத்தால் மாறிவிட்ட சிலை போன்று நானும் பேசாது ஊமைபோல் அமர்ந்திருந்தேன். என்னுடைய தோள்களை உலுக்கி அவள் என்னை என் நினைவிற்குக் கொண்டுவந்தாள். மறுபடியும் நாங்கள் அந்தப் பொன்னுட்டின் வேறு பல காட்சிகளையும் காணப் புறப்பட்டோம்.

அன்று முழுவதும் நாங்கள் நீர் ஊற்றுக்கள் பலவற்றைக் கண்டோம். அலை போன்று அடுக்கடுக்காக வந்த நீர்ஊற்று ஆருகப் பெருகியது. ஆருக வடிந்த நீர், ஊற்ருக மேலே எழுந்தது. மயில், மான், புலி, சிங்கம், யானை முதலிய விலங்குகளாகப் பல ஊற்றுக்கள் கண்ணுக்கு விருந்தளித்து, நெஞ்சிற்கு இன்பத்தைக் கொடுத்தன.

அந்தி நெருங்கியது. மீண்டும் அத் துன்பப் பாடல் வேதனை நெருப்பை எங்கும் பரப்பிக்கொண்டு எங்கள் காதிலே விழுந்தது. கொடுமைக்காரியின் வஞ்சனையை ஒழித்துக்கட்ட நாங்கள் இருவரும்கூடி ஒரு முடிவுக்கு வந்தோம். ''சென்று வருகிறேன் செல்வரே!'' எனச் சொல்லிச் சென்ற என் செல்வியும் சிலையாக மாறி நின்ற கொடுமையை என் கண்ணுல் கண்டேன். 'இவ்வஞ்சனையை ஒழித்துக்கட்டுவதே என் முதற் கடமை'எனச் சூளுரைத்த வண்ணமே என் அறை நோக்கி நடந்தேன்.

என்னுடைய அறையிலே என்னால் அமைதியாக உட்கார்ந்திருக்க முடிய வில்லை. வஞ்சனை அரக்கியை நோக்கி நடந்தேன். குளத்தை அடைந்ததும் அங்கே அவள் நீந்தி விளையாடிக்கொண் டிருப்பதைக் கண்டேன். என்னைக் கண்ட தும் அவள் கரைக்கு வந்து அங்கே இருந்த ஒரு பெட்டியைத் திறந்து தன் உடைகளை அணிந்துகொண்டாள். எனக் குச் சிறிது ஐயமேற்பட்டது. ஒரு கால் இந்த உடைகள் இல்லையெனில் அவளால் ஒன்றுமே செய்யமுடியாமற் போகலாம் அல்லவா?

கும்பிட்ட என் கைகளைப் பற்றியவாறே அவள், ''உனக்கு என்ன வேண்டும்?'' என்றாள்.

''அன்று என்னோடு வந்த இள மங் கையை எனக்குத் தரவேண்டும். இரவும் பகலும் அவள் என்னுடனேயே இருக்க வேண்டும். இந்த வரத்தைத்தான் நீங்கள் தரவேண்டும்'' என்றேன்.

''ஒரே ஒரு நிபந்தனை'' என்றாள்.

''நிபந்தனை எதற்கும் நான் ஒப்புக் கொள்கிறேன்'' என்றேன்.

''அப்படியா?'' என்று அவள் ''கலகல'' வெனச் சிரித்தவாறே கூறினாள். ''நீங்கள் இருவரும் இந்நாட்டைவிட்டு வெளியேறு வதற்கு எப்பொழுதுமே முயலக்கூடாது'' என்றாள்.

''அப்படியே'' என்று நானும் ஒப்புக் கொண்டு திரும்பி வந்தேன். என்பைங் கிளியும் உயிர் பெற்று என்னைத் தேடிவந் தாள். அன்று முதல் கம்பனின் கவிதை யைப்போன்ற இனிய வாழ்வை நாங்கள் இருவரும் நடத்தி வந்தோம்.

நாட்கள் பறந்தன. எதிர்பாரா வகையில் அம்மந்திரக்காரி நோய்வாய்ப்பட்டாள். தப் பிச்செல்ல இதுதான் பொன்னான நேரம் என முடிவு செய்தோம்; ஒரு நல்ல நாளை யும் குறித்து வைத்தோம்.

வேதனைப் பாட்டைக் கேட்டுச் சில நாட் கள் ஆகிவிட்டன. எனினும் இரவு வந்த வுடன் எல்லாம் வழக்கம்போல் நடந்தன. மான் போன்றும், மயில் போன்றும், தேன் வண்டு போன்றும் திரிந்து விளையாடிய பெண்களெல்லாம் அங்கங்கே சிலையாக மாறி நின்றனர். ஒளியின் சிறு கதிரும் அணைந்து விட்டதுபோல் இருள்மண்டியது.

ஏரியைக் கடந்து சென்றால் எதிரே ஒரு அழகான காடு வரும்; அதையும் தாண் டிச் சென்று விட்டால்......அப்பால் அவ ளுடைய மந்திரம் எங்களை ஒன்றும் செய்ய முடியாது. கைகோத்த வண்ணமே இருவ ரும் ஓசைபடாது மலரில் நடந்து செல்வது போல் பஞ்சுப்பாதையிலே நடந்து சென்று ஏரியை அடைந்தோம். கரையிலே ஒரு சிறு ஓடம் காத்து நின்றது. அதில் ஏறி நானே ஓடத்தைத் தள்ளினேன். காற்றும் எங்களுக்குத் துணை செய்தது.

ஓடம் பாதி ஏரியைக் கடந்துவிட்டது. அச்சமயத்தில்தான் அந்த இசை வெள்ளம் காற்றையும் கிழித்துக்கொண்டு வந்து என் செவியில் பாய்ந்தது. காற்றும் திசைமாறி வீசியது. கையிலிருந்த துடுப்பும் நழுவி யது. ஓடமும் வந்த வழியை நோக்கி விரைவாகத் திரும்பியது.

கரையை அணுகியதும் எங்களையும் அறி யாமல் நாங்கள் இறங்கினோம். இசைத் தேன்வந்த திசைநோக்கி எதிர் சென்றோம். கண்ணன் குழலும், நாரதன் வீணையும், ராவ ணன் யாழும் அந்த இசையமுதிற்கு முன் னர் இணையாகுமா? சிறிது நேரத்திற்கெல் லாம் நாங்கள் செல்லும் திசையையும் மறந்து, எங்களையும் மறந்துவிட்டோம்.

சட்டென இசைப்பாட்டு நின்றது. நாங் கள் இருவரும் அந்த ஈட்டிப்பாறையை நோக்கி விழுந்துகொண் டிருந்தோம். எங் கள் முன்னே அந்த வஞ்சனைக்காரி நின்று சிரித்துக்கொண் டிருந்தாள்.

''ஐயோ, அம்மாடீ!'' என்று அலறிக் கொண்டே கண் விழித்தேன். மார்பின் மீது கிடந்த ஷேக்ஸ்பியரின் ''புயற்காற்று'' (Tempest) கீழே விழுந்தது. கண்டது கனவுதான் என்பதை அறிந்தும் என்னால் தூங்கவே முடியவில்லை. கனவில் கண்ட என் ஆருயிர்த் தோழியையும் என்னால் மறக்க முடியவில்லை.

சங்கத் தமிழ்ச் சோலை

செங்காந்தள் மீதெழுந்த வண்டே! நீதான்
சிறைபெற்ற பயனுண்டோ? குறிஞ்சிச் சாரல்
அங்காந்த வாயெல்லாம் கொம்புத் தேனை
அமுதூறு மலர்த்தேனைக் கபிலன் ஊற்றும்
மங்காத பூஞ்சோலை பயின்ற துண்டோ?
மங்கையவள் மலர்க்கூந்தல் மணங்கண் டாயோ?
தன்காதல் வாயிலாத் தலைவ னேச்சித்
தமிழனையாள் மருங்கணையத் தந்த துண்டோ?

தேன்கொன்றை மணக்கவரும் மழையே! உன்னைத்
'திருக்குற'ளும் 'வான்சிறப்'பாய்த் தெரிந்த தென்றல்
நான் ஒன்று கேட்டிடுவேன்; முல்லை பூத்த
நப்பூதன் தமிழ்க்காட்டில் நடந்த துண்டோ?
ஆன்கன்றின் துயர்தீர அந்தி தூக்கும்
ஆயர்குழல் அவள்உயிரை அலைக்கு முன்னே
தான்வென்று கார்முன்னே தேர்ந டாத்தும்
தனித்தலைவன் தூதாகித் தவழ்ந்திட் டாயோ?

கண்ணெகிழ்ந்த தாமரையே! கீழை வாயிற்
கடைதிறந்தான் புதுவரவில் ஊடி னாயோ?
மண்ணெகிழ்ந்த வைகறைநாள் 'ஓரம் போகி'
மடைதிறந்த புனல்யாற்று மருதஞ் சோலை



உண்ணெகிழ்ந்தே ஊராடுந் துறைசின் றுயேல
ஊர்ப்பரத்தை ஊரனிடை கேழ்ந்த எல்லாம்
கண்ணிழந்த காமமென அலர் திறந்து
காதலறம் உலகறியக் கமழு வாமே!

வெண்தூநகே! ஆரல்மீன் வரவு பார்த்து
வீற்றிருக்கும் பெரியீரே! வாரும்; இங்கே
பெண்தூநது புலம்புகின்றாள்; கேளா யோரீ?
பெருந்தாழை மணம்பரப்பும் கழியின் பாக்கம்
விண்பருதும் அலையேறிப் பரத மாக்கள்
வீரியாணர்க் கலிசிறக்க விரைந்தார்; ஆங்கே
புண்பெருத கடலோதப் புலம்ப லூடு
புலம்புகின்றாள் ஒருதலைவி கேட்டா யன்றோ?

பாலையிலோர் சோலைவனம் பார்த்த துண்டோ?
'பட்டினத்துப் பாலைக்'கே பறப்பாய் சிட்டே!
ஆலையிலே கார்க்கரும்பின் சாறு காய்ச்சும்
ஆவியிலே பூச்சாம்பும்; புலத்தே செந்நெற்
சோலையிலே மோட்டெருமை கதிர நுந்தித்
தூங்குமொரு காவிரிநீர்ப் பழனம் நின்ற
பாலையிலே 'அவள்'நினைப்பால் மீண்டான்; சங்கப்
பாட்டெல்லாம் தமிழ்ச்சோலை; பறப்பாய் சிட்டே!



*

சிலப்பதிகாரக் காவியம் நமக்குத் தெரிவிக்கும் செய்திகள் மிகப்பல. அவ்வவர் பயிற்சியின் ஆழத்திற்கும் நுண்மாண் நுழைபுலத்திற்கும் ஏற்றவாறு சிந்தையைத் திறை கொள்ளும் அச்செந்தமிழ்க் காப்பியம் நற்செய்திகள் பலவற்றைப் புலப்படுத்திக் கொண்டே செல்லும். நவில்தொறும் நயந்தரும் நூல் சிலப்பதிகாரம்; பயில்தொறும் இன்னியல் தோற்றும் பண்புடையர் இளங்கோ. நாமே நூலுள் நுழைந்து நம் காலக் கண்கொண்டு செய்திகளைத் தேரப் புகுமுன், சிலப்பதிகாரமே தன் செய்தி இதுவெனத் தெளிவுறுத்தும் இடங்கள் உண்டோ எனக் காணுதல் வேண்டும். இளங்கோவடிகளின் காப்பிய மாளிகைக்குள் நுழையு முன்னர், அம்மாளிகையின் வரைப்படம்போல் ஒன்று முதற்கண் அழகுறப் பொலிகின்றது. சிலப்பதிகாரத்தின் முன்னுரையாய்ப் பொலியும் பதிகம், சிலப்பதிகாரத்தின் குறிக்கோள்கள் இவைதாம் எனக் கூறுகின்றது.

பதிகத்தின் நிலை

பதிகம் தெரிவிக்கும் சிலப்பதிகாரச் செய்தியின் விளக்கத்தைப் பார்க்கப் புகுமுன், பதிகம் பற்றிய குறிப்பினை மனங்கொள்ள வேண்டியுள்ளது. சிலப்பதிகாரத்தின் பதிகமும் நூற்கட்டுரையும், மணிமேகலையின் பதிகமும் தமிழ் ஆராய்ச்சியாளர்க ளிடையே சிக்கல்கள் பலவற்றை எழுப்பியுள்ளன. அப்பதிகங்களின்கூற்றுக்களை ஒருங்கு இணைத்துக் கண்டு, இளங்கோவடிகளும் சாத்தனாரும் ஒரு காலத்தே ஒருவரையொருவர் அறிந்து அளவளாவி வாழ்ந்தவர் என்று கொள்வர் ஒரு சாரார். இவ்விரு நூல்களின் இயல்புகளையும், இவ்விரு காவியங்களை இயற்றியருளிய ஆசிரியர்களின் இதயப் பாங்குகளில் உள்ள போக்குகளையும் கண்டுணரும் வேறு சில புலவர்கள் இளங்கோவடிகளும் சாத்தனாரும் ஒரு காலத்து ஒருங்கியைந்து வாழ்ந்திருத்தல் இயலாது என்று கொள்வர். இவ்விருவரையும் சம காலத்தவராகக் கொள்ளுதற்கு அடிப்படையாக வுள்ள பதிகங்கள் பிற்காலத் தொருவரால் இயற்றப்பெற்று இரு நூல்களிலும் சேர்க்கப்பட் டிருத்தல்வேண்டும் என்பது அவர்கள் துணிபு. அன்றி, இளங்கோவடிகட்குப் பின்னர்த் தோன்றிய மணிமேகலையின் ஆசிரியரே இவ்விரு பதிகங்களையும் இயற்றிச் சேர்த்திருத்தல் கூடும் எனக் கொள்வாரும் உளர். இருவரையும் சமகாலத்தவராகக் கொள்வோரும், அவ்விருவரையும் வெவ்வேறு காலத்தவராகக் கொள்வோரும் அகச்சான்று புறச்சான்றுகளை அவ்வவர் திறனுக்கு ஏற்ப எடுத்துக்காட்டுகின்றனர். தீர்ந்த முடிபு இதுதான் என்று இதுகாறும் துணிபு ஏற்படவில்லை.

பதிகத்தின் நிலை இவ்வாறு ஐயுறுதற்கு ஏற்றதாக உள்ளது. எனினும், சிலப்பதிகாரப் பதிகத்தை இயற்றியவர் - எவரேயாயினும், எக்காலத்தவ ராயினும் - சிலம்புச் செல்வத்திலே ஊறித் திளைத்தவர் என்பதில் ஐயம் இல்லை. நூலினுள் வரும் சொற்களும் தொடர்களும் பதிக ஆசிரியரின் ஆட்சிக்கு இயைபுறக் குழைந்து போந்து பதிகச் செய்யுளை அணி செய்துள்ளன. நூலினிடத்துத் தோய்ந்த நெஞ்சினர்க்கே இத்தகைய நடைச் செல்வம் கிடைக்கும். நடை ஒருபால் இருக்க, பதிகத்தின் கூற்றுக்களை ஒருகால் பயின்றாலும் கண்ணகியார் வரலாற்றில் அவ்வாசிரியர் கொண்டிருந்த ஈடுபாடும், அத்தெய்வத்திற்குச் சொற்கோவில் சமைத்த இளங்கோவடிகளின் புலமையில் கொண்டிருந்த மதிப்பும் எளிதில் புலப்படுகின்றன.

எனவே, பதிகத் தோற்றம் பற்றிய ஐயப்பாடு எங்ஙனமாயினும், அதனுள் கூறப்படும் கருத்துக்கள் எளிதிலே புறக்கணிக்கத்தக்கனவாக இருத்தல் இயலாது.

பதிகச் செய்திகள்: பதிகத்துள் சிலப்பதிகாரச் செய்திகளாக மூன்று உண்மைகள் குறிப்பிடப் படுகின்றன.

அவை,

> ***அரைசியல் பிழைத்தோர்க்கு***
> ***அறம்கூற்று ஆவதூஉம்***
> ***உரைசால் பத்தினிக்கு***
> ***உயர்ந்தோர் ஏத்தலும்***
> ***ஊழ்வினை உருத்துவந்து***
> ***ஊட்டும் என்பதூஉம்***
> ***சூழ்வினைச் சிலம்பு***
> ***காரணம் ஆக***
> ***நாட்டுதும் யாம் ஓர்***
> ***பாட்டுடைச் செய்யுள்***

(பதிகம்: ருரு-சூ௰)

என்ற வரிகளின் முற்பகுதியில் புலப்படுகின்றன. அரசியலில் பிழை செய்வார் அறக்கடவுளின் ஒறுத்தலுக்கு இரையாவர் என்பது ஒரு செய்தி; புகழ்புரிந்த இல்லினராம் கற்புடைப் பெண்டிரைத் தேவரும் போற்றுவர் என்பது இரண்டாவது செய்தி; மற்றென்று சூழினும் தான் முந்துற்றுப் பெருவலியுடையதாய் ஊழ்வினை தன்பயனை ஊட்டியே செல்லும் என்பது மூன்றாவது செய்தி. பதிக ஆசிரியரின் கருத்துப்படி - அவர் சிலப்பதிகாரத்தைக் கண்டுணர்ந்த நெறிப்படி - இம் மூன்று செய்திகளையும் தெரிவிப்பதற்கே சிலம்பை மையமாக வைத்து இக்காப்பியத்தை ஆசிரியர் இயற்றினர் எனத் தெரிகின்றது.

இம்மூன்று கருத்துக்களும் சிலப்பதிகார ஆசிரியர்க்கு உடன்பாடே எனினும் பதிகம் கூறுவது போலச் 'சிலம்பு காரணமாக'

சிலம்பால் நிகழ்ந்தவை: இவை நூலுள் வலியுறுத்தப் பெறவில்லை. சிலம்பு எவ்வெந் நிகழ்ச்சிகட்குக் காரணம் ஆயிற்று என்பதைச் சிலப்பதிகாரமே குறித்துள்ளது.

> ***தீவினைச் சிலம்பு***
> ***காரணம் ஆக***
> ***ஆய்தொடி அரிவை***
> ***கணவற்கு உற்றதும்***
> ***வலம்படு தானை***
> ***மன்னன் முன்னர்ச்***
> ***சிலம்பொடு நின்ற***
> ***சேயிழை வழக்கும்......***

(காட்சிக். சூகூ-எஉ)

இப்பகுதியி லிருந்து கண்ணகியின் கணவனாகிய கோவலன் கொலையுண்ணவும், பாண்டியன்முன் சென்று கண்ணகி வழக்காடி வெல்லுதற்குமே சிலம்பு காரணமாக இருந்ததை நாம் உணரலாம். வழக்குரை காதையின் ஈற்றிலே காணப்படும் வெண்பாக்களில் உள்ள **'காவி உகு நீரும் கையில் தனிச் சிலம்பும்... கண்டு அஞ்சிக் கூடலான் கூடாயினன்', 'கையில் தனிச்சிலம்பும்... வையைக் கோன் கண்டளவே தோற்றான்'**

என்ற தொடர்களும் சேயிழையின் வெற்றிக்குச் சிலம்பு காரணம் ஆயிற்று என்பதை வலியுறுத்துகின்றன.

கோவலன் கொலைக்கும் காவலன் தோல்விக்குமே சிலம்பு காரணமாகின்றது.

அரைசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்று ஆவதூஉம், ஊழ்வினை உருத்துவந்து ஊட்டலும் சிலம்பு காரணமாக நிகழ்ந்தன எனக் கொள்ள வழியில்லை. 'அரைசியல் பிழைத்தல் காரணமாக அரசனை ஒறுத்தது அறம். அறக் கடவுளுக்கு ஒரு கருவியாயிற்று சிலம்பு.' இவ்வாறு வலிந்து கொள்வதாயின் முதற் கருத்தைத் தெரிவித்தற்கும் சிலம்பு காரணம் ஆகின்றது எனலாம். 'சிலம்பின் வென்ற சேயிழை தன் வெற்றியால் கற்பியல்பினைப் புலப்படுத்தினாள்; அம் மாண்பு கண்ட யாவரும் கண்ணகியைப் போற்றினர். எனவே உயர்ந்தோர் ஏத்தலுக்கும் சிலம்பு காரணம்ஆகின்றது.' இதுவும் வலிந்துகொள்ளும் நெறியேயாகும். இதனையும் சரி என ஏற்றுக்கொள்ளினும், மூன்றுவதாக உள்ள ஊழ்வினை ஆற்றலுக்குச் சிலம்பு காரணம் ஆகுமாறில்லை. எவ்வெந் நிகழ்ச்சிக்கும் தான் காரணமாய் முன்னிற்கும் ஊழுக்குச் சிலம்போ காரணம் ஆகவல்லது? இதற்கும் ஏதேனும் வலிந்துகொள்ளும் விளக்கம் காணுதல் கூடும்.

ஊழும் சிலம்பும்

ஆனால், சிலப்பதிகார அமைப்பின் நெறிமுறையினை நோக்குவார்க்கு இம்மூன்றே அக் காவியத்தின் சிறப்பான உள்ளுறை என்று கொள்வது பொருந்தாது என்பது தெளிவாய்ப் புலப்படும். பதிக ஆசிரியர் இந் நூலின் தோற்றத்தைச் சுட்டும்பொழுது கண்ணகியின் கதை 'முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது' என்று பாடுகின்றார். சிலப்பதிகாரத்தின் செந்நெறியும் இப்பொதுமைச் சிறப்பையே கலைநலம் பொலியக் காட்டுகின்றது. இதனைப் பதிக ஆசிரியர் உணர்ந்துள்ளாராயினும், சிலப்பதிகார உள்ளுறை இவையெனக் குறிக்கும்போது இக்கருத்தைக் கூறவேயில்லை. சிலப்பதிகாரத்தின் மூன்று காண்டங்களும் தமிழகத்தின் முப்பெருந் தலைநகரங்களின் பெயர்கொண்டு ஒளிர்கின்றன. கதையும் 'முடி மன்னர் மூவரும் காத்து ஓம்பும்' தமிழகப் பகுதி மூன்றிலும் நிகழ்கின்றது. கதையின் நிகழ்ச்சிகள் மூன்று பகுதிகளிலும் நிகழ்ந்தன என்பதால்மட்டுமே சிலப்பதிகாரத்தைப் பாடினர் இளங்கோவடிகள் என்று சொல்லிவிட இயலாது. கதை நிகழ்ச்சிகள் மட்டுமே ஆசிரியர் மனத்துள் கருதியிருப்பின் காண்டங்களுக்கு வேறு பெயர்கள் இட்டிருக்கலாம். கண்ணகியை விட்டுக் கோவலன் பிரிந்து மாதவியோடு வாழ்ந்து அவளையும் விடுத்துவந்த நிகழ்ச்சிகளைக் கூறும் பகுதியைத் தவறுணர் காண்டம் எனச் சொல்லியிருக்கலாம்; அல்லது பொறை நிலைக் காண்டம் எனலாம். அங்ஙனமே ஏனை இரு காண்டங்களையும் முறையே எரியிடு காண்ட மெனவும் தெய்வதக் காண்டம் எனவும் பெயரிட்டிருக்கலாம். அவ்வாறிடாமல் புகார், மதுரை, வஞ்சி எனத் தலைநகர்களின் பெயரோடு புணர்த்துக் குறிப்பிட்டதற்குத் தகுந்த காரணம் இருந்தல் வேண்டுமன்றோ? புகார் நிகழ்ச்சிகள் புகார்க் காண்டத்திலும், மதுரை நிகழ்ச்சிகள் மதுரைக் காண்டத்திலும் கூறப்பட்டன எனின், வஞ்சிக் காண்ட நிகழ்ச்சிகள் வஞ்சி நகரத்திலா நடந்தன? இல்லையே! எனவே, இவ்வாறு பெயரிட்டமைக்குத் தகுந்த காரணம் வேறு இருத்தல் வேண்டும். இக்காரணத்தை ஒவ்வொரு காண்டத்தின் இறுதியிலும் உள்ள கட்டுரைப் பகுதிகள் ஒருவாறு குறிப்பாகப் புலப்படுத்துகின்றன. அக்கருத்தினைத் தெளிவுறச் சொன்னால், மூன்று(பிளவுற்ற) தமிழகமாக இல்லாமல் மூன்று பகுதிகளா

பதிகமும் காண்டப் பெயர்களும்

லாகிய மும்மைத் தமிழகமாக ஒன்றுபட்ட காட்சியைக் காண விரும்பினார் இளங்கோவடிகள் எனலாம். கண்ணகியின் கதை இந்நோக்கத்திற்கு இயைந்த ஒன்று என்று கண்டே இளங்கோவடிகள் இதனைப் பாடினார். பதிக ஆசிரியர் இதனை உணர்ந்துள்ளார். எனினும், உள்ளுறை இதுவெனக் குறிக்கவேண்டிய இடத்தில் இத் தலைமைக் கருத்தைக் குறிக்காமல் வேறு எவையோ மூன்றினைக் கூறிவிட்டார்.

காண்டங்களின் உள்ளுறை :— (பதிகப்படி)

இங்கே சிலர் ஒரு விளக்கம் தருதல் கூடும். அரைசியல் பிழைத்தோர்க்குஅறம் கூற்றாதல் மதுரைக் காண்டத்தாலும், உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தல் வஞ்சிக்காண்டத்தாலும் புலப்படுத்தப்பட்டனவே என்பர். ஆயின் புகார்க் காண்டத்தின் உள்ளுறை எது? பதிக ஆசிரியர் குறித்த மூன்றனுள் எஞ்சியிருப்பது ஒன்றே-ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பது. இது புகார்க்காண்டத்தின் உள்ளுறையா? மதுரைக் காண்டத்தில் இந்தஉள்ளுறைஇல்லை என்று சொல்ல முடியுமா? புகாரை விடுத்துப் புலருமுன் கோவலன் கண்ணகியோடு புறப்பட்ட செய்தியைச் சொல்லவந்த ஆசிரியர்,

வினைகடைக் கூட்ட
வியங்கொண்டான் கங்குல்
கனைசுடர்க் கால்சீயா
முன்

என்று ஊழ்வினை உருத்துவந்து ஊட்டியதைக் குறிக்கின்றார். அவ்வாறே இதன் முன்னரும்,

யாழிசைமேல் வைத்துத்தன்
ஊழ்வினை வந்து உருத்ததாகலின்

மாதவியை விட்டுப் பிரிந்து போனதாக இளங்கோவடிகள் குறிக்கின்றார். புகார்க் காண்டத்துத் தலைமையான நிகழ்ச்சிகள் இரண்டுக்கும் இவ்வாறு ஊழ் வினையை முன்நிறுத்திய ஆசிரியர், மதுரைக் காண்டத்திலும் அதன் வலிமையைப் புலப்படுத்துகின்றார். வளையாத செங்கோலினனாகிய பாண்டியனின் செங்கோல் வளையக் காரணமான நிகழ்ச்சியைக் குறித்த இளங்கோவடிகள் ஊழ்வலியைச் சுட்டுகின்றார்.

வினைவிளை காலம்
ஆதலின் யாவதும்
சினையலர் வேம்பன்
தேரான் ஆகி

மாசற்ற கோவலனின் கொலைக்குக் காரணமாகின்றான்; ஊழ்வினையின் வலிய கரத்திலே எளிய கருவியாய்க் கிடக்கின்றான். பாண்டியன் செங்கோல் வளையுமாறு கோவலன் கொலைப்படக் காரணமாக இருந்தது ஊழ்வினை:

காவலன் செங்கோல்
வளைஇய வீழ்ந்தனன்
கோவலன் பண்டை
ஊழ்வினை உருத்தென்

கொலைக்களக் காதையின் இறுதியிலுள்ள வெண்பாவும் இதே கருத்தினை வலியுறுத்துகின்றது. இதுவரையிலும் கூறிய கருத்துக்களால், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்ற உண்மை சிலப்பதிகாரத்தின் தலைமையான நிகழ்ச்சிகள் பலவற்றிற்குக் காரணமாக இருப்பதை உணரலாம். அரசியற் பிழை செய்தோர் அறத்தின் ஒறுத்தலுக்கு இரையாவார் என்பதை மதுரைக் காண்டத்துக்கும், பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்துகின்ற நிலை கிடைக்கும் என்பதை வஞ்சிக் காண்டத்துக்கும் உரிமை ஆக்கி விட்டால், புகார்க் காண்டத்துக்கெனத் தனியாக ஓர் உள்ளுறை இல்லை என்ற குறை இருக்கும்.

காண்டங்களின் உள்ளுறை :— (காவியப்படி)

ஒரு காவியத்தால் தெரிவிக்கப்படுகின்ற உண்மைகள் அல்லது நீதிகள் அக் காவியப் பிரிவுகட்கு இயைந்திருக்கவேண்டும் என்பது கட்டாய நியதியோ எனச் சிலர் வினவலாம். கட்டாயம் இல்லை என்பது உண்மைதான்.

பொதுப்படையாக உள்ள நீதிகளைத் தெரிவிப்பதே காவியத்தின் நோக்கமாயின், சிலப்பதிகார இறுதியில் வரந்தரு காதையுள், பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின், தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின் என்பன முதலாகக் கூறப்பட்டவற்றையே சிலப்பதிகாரச் செய்திகளாகக் குறித்துச் சொல்லிவிடலா மன்றோ? அங்கே பேசப்படுகின்ற நீதிகள் யாவும் உயர்ந்தன அல்லவோ? அவை யாவும் சிலப்பதிகாரத்தால் தெளியப்படுவன அல்லவோ? ஆம்; அவை யாவும் உயர்ந்தவையே. ஆனால், சிலப்பதிகாரக் காப்பிய அமைப்பின் வாயிலாகவே அதன் ஆசிரியர் ஒரு தலைமையான செய்தியைத் தெரிவிக்க நினைக்கின்றார். அத்தலைமையான கருத்தை ஒருவாறு உணர்ந்திருந்தும், பதிகத்தை இயற்றிய ஆசிரியர் அதனைத் தெளிவாகக் கூறாமல் விடுத்தார் என்பதே இங்கே நாம் காணவேண்டிய கருத்து.

முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது இந்தக் கதை என்று சுட்டிய பதிகத்தார் அதுவே காவியத்தின் சிறப்பான உள்ளுறையாக அமைந்தது எவ்வாறு என்பதை விளக்கவில்லை. அதனை விடுத்து வேறு எவையோ மூன்றினைக் குறித்துச் சென்றார். வரந்தரு காதையுள் விரிவாகச் சொல்லப்பட்ட நீதிகள் யாவும் எவ்வாறு இளங்கோவடிகட்கு உடன்பாடோ, அவ்வாறே பதிக ஆசிரியர் குறித்த உண்மைகள் மூன்றும் அவர்க்கு உடன்பாடே. உள்ளுறைகள் பல இருக்கலாம். ஆயினும் மூன்று காண்டங்களாய்-மூவர் தலைநகர் பெயராலும் அமைந்த காவியத்தின் தலைமையான உள்ளுறை யாதேனும் ஒன்று இருக்கவேண்டு மன்றோ? அஃது எது? பதிகத்தில் தெளிவான விடை இல்லை.

இவ்வினாவுக்கு உரிய விடை சிலப்பதிகாரச் செய்திகளுள் தலைமை சான்றதாக இருக்கும். சிலப்பதிகாரக் காவியத்தின் வாயிலாகப் பத்தினி வழிபாடு என்ற ஒரு புதிய சமயத்தையே உண்டாக்கினார் இளங்கோவடிகள். புகாரிலே பிறந்த ஒரு சாதாரண மானிடப் பெண் தன் கற்பொழுக்கத்தால் தேவர்களும் போற்றுகின்ற தெய்வம் ஆயினள். அத் தெய்வத்தின் திறத்தால் தமிழகத்து மூவேந்தருள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் உண்மையை உலகுக்கு விளக்கும் நிலை பெற்றனர்.

சோழன் வாயிலாகக் கண்ணகி என்ன உண்மையைக் கூறினாள்? சோழனுக்கு அந்தத் தெய்வம்-பார்தொழுது ஏத்தும் பத்தினித் தெய்வம்-அளித்தது என்ன? அரசாட்சி முறை செம்மையாக இருந்தாலன்றித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலா ராகிய பெண்டிரின் கற்பு நெறி மாண்புறுது. இதனைச் சோழன் வாயிலாக உணர்த்தினாள். 'நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே'-இது பொன் முடியார் விளக்கம். சோழனுடைய நாடு கேளிக்கையையே நாடும் நாடாகிவிட்டது. செல்வத்துப் பயன் செழிக்கத் துய்த்தலே என்றாகி விட்டது. புலனுணர்வுக்கு இரையாகும் இடத்தில் ஒழுக்கம் ஏது, கற்பு ஏது? ஆடவரினும் பெண்டிரே கற்பின் களஞ்சியங்களாய் அன்று வாழ்ந்தனர்; இன்றும் அவ்வாறே. ஆட்சி முறையிலே செம்மை இன்றேல் பெண்டிரின் கற்பு-பெருமழை தரவேண்டின் தருகிற்கும் பெருமை -வாழாது, வாழமுடியாது. மழை வளம் தருதற்கு இந்திரனை நம்பி, மனையுறை மகளிரின் மாண்பினை மறந்தது சோழநாடு. கண்ணகி போன்ற கற்புடை மகளிர் வாய்வாளாமை மேற்கொண்டொழுக நேர்ந்தது. அப்பெண்ணினல்லாரின் தவவலிமை போலும் கண்ணகியாய் உருவெடுத்துச் சோணாட்டின் குறையைச் சுட்டிற்று.

இனி, பாண்டியனுக்கு அப் பத்தினித் தெய்வம் யாது அளித்தது எனக் காண்போம். அரசனுக்கு வெற்றி தருவது

எது? வேலா? அன்றிச் செங்கோலா? வள்ளுவர் கூறினர்;

வேல் அன்று வென்றி
தருவது மன்னவன்
கோல்; அதூஉம் கோடாது
எனின்.

இதையே புறநானூறு,

கடுஞ்சினத்த கொல்களிறும்
கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும்
நெஞ்சுடைய புகல்மறவரும் என
நான்குடன் மாண்டது
ஆயினும் மாண்ட
அறநெறி முதற்றே
அரசின் கொற்றம்

என்று விரிவாக விளக்குகின்றது. மன்னுயிர்க்கெல்லாம் மண்ணுள் வேந்தனே உயிராக இருக்கின்றான். அவன் வாழ்வின் கோணல் - ஆட்சியின் கோணலாய்-மக்களின் வாழ்வைத் தாக்குவது திண்ணம். நோயுற்று வாழ்வது தீங்கினை வளர்க்கும்; வழி தவறிய மன்னன் நாட்டைக் கெடுப்பான். அவனுக்கு மனச்சான்று இருக்குமாயின் உயிரை விடுப்பான். அறம் தழைக்கும்; நாடு நலமுறும். வளைந்த கோலைத் தன்னுயிர் கொண்டு நிமிர்த்திய பாண்டியன் வாயிலாக இச் செங்கோன்மைச் சிறப்பினைக் குறித்தாள் கண்ணகி.

நன்னடை நல்கலும், கோன்முறை காத்தலும் ஆகிய இரண்டு பண்புகளோடு மன்னர் அமைதல் போதாது. இவை இரண்டையும் போல மற்றொரு பண்பும் மன்னுயிர் ஓம்பும் மன்னர்க்கு வேண்டும். இவ்விரு மாண்பு பெற்றும் உறுதியற்ற நெஞ்சினராய் வாழ்ந்தால் பிறநாட்டாரின் இகழ்ச்சியே கிடைக்கும். ஒழுக்கமும், ஒழுங்கும் வீரத்தால் சிறப்புறுவன. வீரம் இல்லாதாரிடத்து அமைந்துள்ள ஒழுங்கும் ஒழுக்கமும் கோழைமை என்று பழிக்கப்பட இடனுண்டு. அதற்கு இடந்தருதல் ஆளுகின்ற மன்னன், ஆளப்படும் மக்கள் யாவருக்கும் இழுக்குத் தருவதாகும். இழுக்கை நீக்கவல்ல வீரத்தைச் சேரன் வாயிலாக விளக்கினாள் பத்தினித் தெய்வம்.

சோழ நாட்டில் முகிழ்த்து, பாண்டி நாட்டில் மலர்ந்து, சேர நாட்டில் மணம் பரப்பிய கண்ணகி என்ற கற்பு நறுமலரின்முழு வரலாற்றையும் விவரித்த இளங்கோவடிகளே இங்கே குறித்த கருத்துக்களைத் தருகின்றார். வஞ்சிக் காண்டத்து நடுகற் காதையுள் ஒளிர்கின்ற வரிகள் தந்த கருத்துக்களே இவை.

“அருந்திறல் அரசர்
முறைசெயி னல்லது
பெரும் பெயர்ப் பெண்டிர்க்குக்
கற்புச் சிறவாதெனப்
பண்டையோர் உரைத்த
தண்டமிழ் நல்லுரை
பார்தொழுது ஏத்தும்
பத்தினி யாகலின்
ஆர்புனை சென்னி
அரசர்க்கு அளித்துச்
செங்கோல் வளைய
உயிர்வா ழாமை
தென்புலங் காவல்
மன்னவற்கு அளித்து
வஞ்சினம் வாய்த்தபின்
அல்லதை யாவதும்
வெஞ்சினம் விளியார்
வேந்தர் என்பதை
வடதிசை மருங்கின்
மன்னவர் அறியக்
குடதிசை வாழும்
கொற்றவற்கு அளித்து......

(நடுகல்: உ0எ-உகஎ)

மூன்று காண்டத்து நிகழ்ச்சிகளினூடு

வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் உயிர் நாடியாய்ப் பொலிகின்ற கண்ணகியின் வாழ்க்கை எவ்வாறு முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியதாயிற்று என்பதை இப்பகுதி மிகத் தெளிவாகக் காட்டுகின்றது.

பதிகத்துள் சுட்டப்பட்ட தாயினும் அதனை எழுதிய ஆசிரியர் விளக்க மறந்துவிட்ட கருத்து இது. மூவர்க்கும் இன்னும் என்னென்ன இக்காவியம் தெரிவிக்கின்றது? இதன் விடையைப் பிற கட்டுரைகளில் காணலாம்.

சிலப்பதிகாரச் செய்யுள் வேலையற்ற சோம்பேறியின் பொழுது போக்கிலே தானே உதிர்ந்துவிட்ட *மேலும்...* வெற்றுரை அன்று. சீரமைந்த வாழ்க்கை சிறப்புற அமைய வழிவகுத்த செந்தமிழ்க் காப்பியம் சிலப்பதிகாரம். தமிழர் வாழ்க்கையிலே இருந்த நிறைவைப் பாராட்டி, குறைவை எடுத்துக்காட்டி, ஐந்தொகை வகுத்த தணிக்கையாளர் இளங்கோ. வாழ்க்கை இவ்வாறு இருந்தது என்று படம் பிடிக்கும் நிழற்படமாகவோ கண்ணடியில் தெரியும் எதிர்ப்பிழம்பாகவோமட்டும் சிலப்பதிகாரம் அமையவில்லை. வாழ்க்கை இவ்வாறு அமைதல் வேண்டும் என்ற குறிக்கோளையும் புலப்படுத்துகின்ற வண்ண ஓவியமாய்-மங்கா ஒளிபடைத்த காவியமாய்-தமிழன்னையின் திருவடியில் பொருந்தித் தமிழினத்தின் நடையும் நடத்தையும் இவையென ஒலிக்கும் சிலம்பாய் வாழ்வது சிலப்பதிகாரம்.

கிழவன் துள்ளினன்!

பழைய காலத்துப் புராணங்களிலே வரும் முனிவர்களிடம் ஒரு குளிகை உண்டாம். அதை வாயில் போட்டுக் கொண்டால், இறந்த கால நிகழ்ச்சிகளெல்லாம் நினைவுக்கு வருமாம். அது போலவே உடம்பை இளமையாக்கும் காயகல்பம் பற்றியும் படிககிறோம் புராணங்களிலே.

இந்தப் புராணச் செய்திகள் உண்மையாகி விடும்போல் தெரிகிறது. நடுத்தர வயதுடைய ஓர் அம்மையார் சுமார் பதினைந்து நாட்கள் எட்டு வயதுப் பெண்ணாகவே வாழ்ந்தார். பிள்ளைகளைப் பெற்றெடுத்த ஓர் அம்மையார் ஏழு வயதுப் பெண்ணாகவே இருந்தார் சில நாட்கள்.

இந்த விந்தைகளெல்லாம் ஒரு மருந்தால் உண்டாகின்றன. இந்த மருந்தைச் சாப்பிட்டால் பிறந்த போது இருந்த உணர்வுகளைக்கூட அடைய முடியுமாம்.

தானியங்களைப் பாதிக்கக்கூடிய ஒருவகைப் பூசணத்தி லிருந்து இந்த மருந்து தயார் செய்யப்படுகின்றது. கடந்த கால உணர்ச்சியை அடையச் செய்யும் இம் மருந்து, மனவியல் மருத்துவர்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும். முன்னே எப்போதோ நடைபெற்ற நிகழ்ச்சியால் மனக்கோளாறு ஏற்பட்டிருக்கலாம். அது என்ன கோளாறு என்பதைத் தெரிந்துகொள்ள இந்தப் புது மருந்து பயன்படும் என்று நம்புகிறார்கள்.

திரு. டி. ஐ. சந்தாமியான்

“ காலத்தை வென்ற களிப்போ......? ”

(தாராசுரச் சிற்பம்)

திரு. இராமகிருஷ்ண

வழிபாட்டுச் சுமை

திரு. பி. ரங்கநாதன்

வாழ்க்கைச் சுமை

திரு. வி. ஏ. வி. ராஜன்

★

பூ மகளின்
புன்னகை"

★

உள்ளத்தின் உண்மை

திரு. T. E. சண்முகம், M.A., M.Litt.

குறிப்பு:—மனிதன் குறைபாடுகள் பல. நன்கு ஆராய்ந்தால் இக் குறைகள் பலவற்றிற்கு உள்ளமே காரணமாக அமைந்திருக்கின்றது என்பது புலனுகும். உள்ளத்தைப் பற்றிய கேள்விகளுக்கு உள நூல் ஆசிரியர் திரு. தா. ஏ. சண்முகம் அவர்கள் இப்பகுதியில் தக்க விடையளிக்க அன்புடன் இசைந்துள்ளார்கள். அன்பர்கள் கேள்விகளே எழுதி உள்ளத்தின் உண்மையை உணரலாம்.

கேள்விகள் சுருக்கமாக இருத்தல் வேண்டும். கேள்விகளே எழுதி அனுப்புவோர் பெயர்கள் வெளியிடப் பெறு. எனினும் கேள்விகளோடு அவர்களுடைய பெயரையும், முழு முகவரியையும் குறித்து ''ஆசிரியர், கலைக்கதிர், பூளைமேடு, கோயமுத்தூர்'' என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

உள்ளம் என்பது உண்மையாகவே இருக்கிறதா? அல்லது உளநூலறிஞரது கற்பனையா? ஒருவர் தமது உள்ளத்தையோ அல்லது பிறர் உள்ளத்தையோ, மற்ற விஞ்ஞான நூல்களைப் போன்று ஏதாவது கருவிகளைக் கொண்டு பார்க்க முடியுமா?

உம்மிடம் எழுந்திருக்கும் ஐயங்கள் மிகவும் நியாயமானவை. இவை போன்ற விளுக்களுக்கு உளநூலறிஞர்களாலும் நேராகப் பதில் அளிக்க முடியாது. உள்ளத்தையும் நேராக உம் கண்முன்னே அவர்களால் நிறுத்த முடியாது. அந்த வகையில் அவர்களுக்குத் தோல்விதான். ஆனல் உம் கேள்விகளுக்கு, வேறு வகையில் பதிலளிக்க இயலும்.

உள்ளம் என்பது இருக்கிறதென்று உளநூலறிஞர்கள் கருதுவதற்கு, மனிதனிடத்து ஏற்படும் பல்வேறு 'விளைவுகள்தான்' (effects) காரணமாகும். தற்காலத்தில், நீர் குறித்திருக்கிறவாறு மற்ற விஞ்ஞானிகள் பல விதச் சக்திகளைப்பற்றிப் பேசுகிறுர்கள். உம் போன்ற ஒருவர் 'மின்சாரம் என்றுல் என்ன? அதை என் கண்முன்னே நிறுத்த முடியுமா?' என்று கேட்கிறுர் என்று வைத்துக்கொள்வோம். நாம் என்ன செய்கிறேம்? வீட்டின் ஒரு மூலைக்குச்சென்று ஒரு 'பொத்தானை' அமுத்துகிறேம், ஒரு விளக்கு எரிய ஆரம்பிக்கிறது. இன்னெரு 'பொத்தானை' அமுத்துகிறேம்; 'விசிறி' ஓட ஆரம்பிக்கிறது. மற்றும் இன்னெரு பொத்தானை அமுத்துகிறேம்; 'ரேடியோ' சத்தம்போட ஆரம்பிக்கிறது. விளக்கு எரியவோ; 'விசிறி'

ஓடவோ, 'ரேடியோ' பாடவோ எப்படி முடிகிறது? இவைகளெல்லாம் மின்சார சக்தியினுல் என்று பதிலளிக்கவேண்டியிருக்கிறது. இதைப் போலவே விஞ்ஞான நூல்களுக்கெல்லாம் அடிப்படையாக இருப்பது சில 'நம்பிக்கைகள்' (assumptions). அவைகளை யெல்லாம் கண்ணுக் கெதிரே பார்க்க முடியாது. அவைகளினுல் ஏற்படும் 'விளைவுகளை'க்கொண்டு அவைகளை அறியவேண்டும். மற்றும், ஒரு சான்றை நோக்குவோம். 'அணு' (atom) என்றும் அணுச்சக்தி (atomic energy) என்றும் தற்காலத்தில் விஞ்ஞானிகள் கூறுகிருர்கள். பொது மக்களும் அவைகளைப்பற்றிப் பேசத் தொடங்கிவிட்டார்கள். நாம் உட்கார்ந்திருக்கும் நாற்காலியும், நாம் எழுதும் பேணுவும் அணுக்களால் ஆகியவை என்கிருர்கள். அவை கண்ணுக்குத் தெரியாதவைகள் என்கிருர்கள். இதோடுமட்டு மல்ல, ஒவ்வொரு அணுவுள்ளேயும், எலக்ட்ரான் (electron), புரோடான் (proton), இவைகளுக்கு நடுவே நியூட்ரான் (neutron)என்பன இருக்கின்றன என்றும் கூறுகிருர்கள். இவைகள் எல்லாம் கண்ணுக்குத் தெரிபவைகளா? ஆனுல் அவைகளைப் பயன்படுத்தும் போது ஏற்படும் 'விளைவுகள்' யாவரும் அறிந்தவையே. உள்ளச் சக்தியும் மின்சார சக்தி, அணுச் சக்தி போன்றதாகும். உள்ளச்சக்தி இருக்குமிடம் உள்ளம் என்பதாகும்; உள்ளச் சக்தி உண்டு என்று அறிவது பல்வேறு உள்ள இயல்புகளோடு, நுண்ணறிவு, எண்ணம், யோசனை பகற்கனவு, கனவு, பீதி, கவலை, அச்சம்,சினம், காமம் முதலிய உணர்ச்சிகளாலும், இச்சைகளாலுமே யாம். இவற்றிற் கெல்லாம் ஆதாரமாக உடலுறுப்புகள் கிடையா. இவைகள் எல்லாம் எங்கேயோ ஓரிடத்திலிருந்து எழுகின்றன; அந்த இடம்தான் உள்ளம் என்று உளநூலறிஞர்கள் கருதுகிருர்கள். இந்தக் கருத்தைப் பல சோதனைகொண்டு நிரூபித்தும் இருக்கிருர்கள்.

மனிதன் பிறப்பிலிருந்து இறப்பு வரை பல மாறுதல்களை அடைகிருன். குழந்தையா யிருப்பவன் குமரனுக மாறுகிருன், குமரன் பெரியவனுகிருன், பிறகு அவனே கிழவனுகிருன். எப்படி ஒருவன் இந்தப் பருவத்தினன் என்று குறிப்பது?

மனிதவாழ்க்கையைப் பொதுவாக நான்காகப் பிரிக்கலாம். அவை குழவி-குழந்தைப் பருவம்,குமரப் பருவம், முதிர்ச்சிப் பருவம், வயோதிகப் பருவம் என்பனவாம். ஒருவரை நாம் உற்று நோக்கினுல், அவர் குழவி குழந்தைப் பருவத்தினரா குமரப் பருவத்தினரா அல்லது முதிர்ச்சி அல்லது வயோதிகப் பருவத்தினரா என்று எளிதில் கூறிவிடலாம். ஆனுல், ஒருவர் ஒரு பருவத்தினின்று மற்றொரு பருவத்திற்கு எங்ஙனம் மாறுகிருர் என்று திட்டமாகக் கூறமுடியாது. அது பற்றி ஆராய்ச்சியாளர்களிடத்திலே மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. ஒரு சிலர் குழந்தை உற்பத்தியி லிருந்து பன்னிரண்டு வயது முடிவுவரை குழந்தைப் பருவம் என்றும்,பதின்மூன்று வயதிலிருந்து பத்தொன்பது வயதுவரை(Teen age) குமரப் பருவம் என்றும், பத்தொன்பது வயதிலிருந்து ஐம்பத்து ஐந்து வயதுவரை முதிர்ச்சிப் பருவம் என்றும், ஐம்பது வயதுக்கு மேற்பட்டு வயோதிகப் பருவம் என்றும், கருதுகிருர்கள். மற்றும் சிலர் குழந்தைப்

பருவம் என்பது பிறந்ததி லிருந்து ஒருவருக்குப் பால்முதிர்ச்சி(puberty) வரும் வரையில் என்றும், பால் முதிர்ச்சி அடையத்தொடங்கி நல்ல முதிர்ச்சி நிலை அடையும்வரை குமரப் பருவம்என்றும், முதிர்ச்சி நிலை உச்ச நிலையில் இருக்கும்வரை முதிர்ச்சிப் பருவம் என்றும், முதிர்ச்சி நிலை குறைய ஆரம்பிக்கும்நிலை வயோதிகப் பருவம் என்றும் கூறுகிறார்கள். பால் முதிர்ச்சி நிலை என்பது, ஆண் பெண் ஒருவரோடு ஒருவர் கலந்து உயிரை உற்பத்தி செய்யும் வலுவைக் குறிப்பதாகும். இது ஆரம்பிக்கும் நிலையைப் பெண்ணில் பூப்புநிலை (mensus) கொண்டு திட்டமிடலாம். ஆனால் ஆணில் அந்த நிலையை அறிவது சிறிது கடினம். பொதுவாக அவர்கள் பால்குறி வளர்ச்சிகொண்டும், அவர்கள் குறி மேலும் அக்குளிலும் வளரும் ஒருவிதமான உரோமத்தைக் கொண்டும், விந்து (Semen) எனப்படும் கண்ணுக்குத் தெரியாத தவளைக் குஞ்சுகள் போன்ற உயிரணுக்களைக் கொண்ட வெளிமை நிறமுடைய சத்து ஆண் குறியினின்று வெளிப்படத் தொடங்குவதினின்றும் அறியலாம்.

இந்த இரண்டு வகையான கருத்துக்களில், முதல் கருத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இளங் குற்றவாளிகளுக்கான சட்டங்கள் இயற்றி யிருக்கிறார்கள். அதாவது குற்றவாளிகளின் வயதுக் கேற்ப, அவர்களைக் குழந்தை என்றும்,குமரப் பருவத்தினர் என்றும், முதிர்ச்சிப் பருவத்தினரென்றும்,பிரித்து, அதற்குத்தக இழைத்த குற்றம் ஒன்றாக இருந்தாலும் - வெவ்வேறு தண்டனை தருகிறார்கள். வயதுகொண்டு ஒருவன் இந்தப்பருவத்தைச்சேர்ந்தவன் என்று நிர்ணயிப்பதில் நாடுகளுக்குள்ளேயே வித்தியாசம் இருக்கிறது.

இரண்டாம் வகையான கருத்தை உளநூலறிஞர்கள் கையாளுகிறார்கள். இரண்டாம்வகையான கருத்தே முதல் கருத்தைவிடச் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

வைடமின் B-யின் பெருமை!

வைடமின் B யைச் சேர்ந்த சில சத்துக்கள் குறைவதால் சில தொல்லைகள் ஏற்படுகின்றன. அந்தத் தொல்லைகளும் அவற்றைப் போக்க உதவும் சத்துகளும் பின்வரும் பட்டியலில் உள்ளன:-

(i) மறதி, நிரல்படச் சிந்திக்க முடியாமை, தூக்கமின்மை போன்ற குறைகள் நீங்க—தையாமைன் (B-1)

(ii) ஊக்கமின்மை, மனக் குழப்பம், பார்வைக் கோளாறுகள், ஒன்றிய நிலையில் ஊன்றிக் கவனிக்க இயலாமை போன்றவை நீங்க--ரிபோஃபிளேவின் (B-2)

(iii) முசுடுத் தனம், பயங்கரமான காட்சிகள் தோன்றுதல், மறதி, பிதற்றல் போன்றவை நீங்க—நியாசின்.

(iv) வலிப்பு, தூக்கமின்மை, முசுடுத்தனம் போன்றவை நீங்க-பிரிடாக்சைன் (B-6)

இன்பம் எங்கே?

திரு. செ. பொன்னுசாமி, B.O.L.

★

இன்பத்தை எங்குக் காணலாம்? மக்கள் வாழ்வில் நிலையான இன்பத்தை எங்கு,எவ்வாறு காணமுடியும்? கண்டு எளிதில் அடையும் பொருளாக இருந்தால், கம்பர் கற்பனையில் கண்ட உலகை இன்று நாம் நனவுலகில் காணமுடியும் அல்லவா! கம்பர் காணும் உலகில் எல்லோருமே செல்வர்கள்; ஆதலால் அங்கு வள்ளல்கள் தோன்ற வேண்டிய அவசியமே ஏற்படவில்லை; அங்கு ஏழ்மையைக் காண இயலாது. அந்நாட்டில் கல்வி அறிவு இல்லாத ஒருவனைப் பார்க்கவே முடியாது.

''தேடுகல்வி இலாததோர் ஊரைத்
தீயினுக்கு இரையாக மடுத்தல்''

என்ற அமுத மொழியினை ஆவேசத்தோடு பாடக் கம்பர்தான் பாரதிக்கு ஊக்கமளித்தாரோ என்று எண்ண இடமளிக்கிறது.

அந்நாட்டில் சான்றோர்களே கல்வியறிவைப் பெருக்கினர். ஆதலால் அவ்வறிவு மெய்யறிவை ஊட்டும் அறிவாக அமைந்திருந்தது. அந் நாட்டு மக்கள் மெய்யறிவு கொண்டு உண்மை பேசி, ஒழுக்கம் வளர்த்து, உறவாடி உள்ளன்பு கொள்ளும் மெய்யன்பர்களாகத் திகழ்ந்தனர். அதன் வழி புகழ் வளர்த்தனர்.

செல்வ வளம், கல்வி வளம், ஒழுக்க வளம் நிறைந்த மக்கள் நிலையான இன்பம் துய்க்கின்றனர் என்று கூறினால் அதை யாரும் மறுக்க இயலாதன்றோ! ஆனால், ஏழை என்றும், அடிமை என்றும் எங்கள் நாட்டில் இன்று யாரும் இல்லை, யாங்கள் நிலைத்த இன்பத்தை அடையும் பருவத்தில் இருக்கின்றோம், என்று பெருமை கொள்ளும் ரஷ்யாவும், 'உலகச் செல்வத்தில் 45% எங்களிட மிருக்கின்றது, எங்கள் நாட்டில் உள்ள ஒவ்வொரு தொழிலாளியும் கார் வைத்துக்கொள்ளும் அளவுக்கு ஊதியம்பெற்று இன்பமாக வாழ்கின்றான்'என்று மார்தட்டும் அமெரிக்காவும் மடியில் நெருப்பைக் கட்டிக்கொண்டு மறைமுகமாகப் போர்முழக்கம் செய்கின்றன; இன்பத்தைக் காணமுடியவில்லை. காரணம் என்ன? தாங்கள் கனவுகாணும் இன்ப வாழ்வு பொறாமை கொண்ட பிறநாட்டினரால் எங்கு அழிந்துவிடுமோ என்ற அச்சந்தான். அதற்காகவே போர்வீரர்களைப் பெருக்குகின்றனர், போர்ப் பொருளை மிகுக்கின்றனர். உலகமே ஒரு முனையில் நின்றாலும் தங்களை வெல்ல முடியாது என்ற அளவுக்கு அவர்கள் வீரத்தை, படை வலிமையைப் பெருக்கினால்தான் முடியும். அப்பெருக்கினைக் காணும் யாரும் அவர்களை எதிர்க்க எண்ணங்கொள்ளார்; எதிர்ப்பெண்ணம் கொள்ளாததோடு நிற்கமாட்டார்கள். அவர்களோடு நட்புக்கொண்டு, அவர்கள் உதவியால் முன்னேறவும் செய்வர்.

ஆக, ஒரு நாடு இன்பமாக வாழச் செல்வம், அறிவு, ஒழுக்கம் இருந்தால்மட்டும் அமைவதில்லை, வீரமும் பெருகவேண்டும். கம்பரின் கற்பனை உலகில் வாழும் ஒவ்வொருவரும் பெருவீரராகத் திகழ்ந்தனர். இங்குக் கம்பர் கூறும் முறை வியப்பாக அமைந்திருக்கின்றது.

'திண்மை இல்லைநேர் செறுநர் இன்மையால்'

அவர் கற்பனை உலகில் வீரரே இல்லை. ஏன்? அந்நாட்டு மக்களை எதிர்க்கும் பகைவர்கள் எந்த நாட்டிலுமே இல்லை. அவர் கற்பனை உலகை எதிர்க்கும் அளவுக்கு வலிமைமிகுந்த பகைநாட்டினர் இல்லை. அவ்வளவு வலிமையும் வீரமும் வாய்ந்தோர் கம்பர் உலகினர். அவ்வுண்மையை எதிரிடையாகக் கூறி நம்மை மகிழவைக்கின்றார்.

சுருங்கக் கூறினால், அறிவு, ஒழுக்கம், செல்வம், இவைகளைக் காக்கும் வீரம் நான்கும் அமைந்த நாடு எங்குக் காணப்படுகின்றதோ அங்குச் சென்றால் இன்பம் காணலாம்; நிலைபேறான இன்பம் அடையலாம். அவ்வின்பத்தை மேலுலகம் செல்லினும் அடைதல் அரிதென்று அறுதியிட்டுரைக்கலாம்.

அந்த நாட்டை இந்த நாட்களில் தேடி அடைவதென்பது அரிதாகிவிட்டது. இக்காலத்தில் ஒரு நாட்டினர் இன்னொரு நாட்டில் எளிதில் சென்று குடியேற முடியாது; குடியேறினால் என்ன ஆபத்து நேருமோ என்ற அச்சத்தில் குடியேற்றத் தடுப்பு விதிகள் ஏற்பட் டுள்ளன. ஆகையால் இருக்கும் இடத்தை இன்பபுரி ஆக்குவதே அறிவுடைமை; ஆக்க முடியும் என்றே அறிஞர் உலகம் அன்று கருதிற்று, இன்றும் கருதுகிறது.

ஒரு நாட்டில் முதலில் செல்வவளம் பெருகினால்தான் அதன் துணைகொண்டு சான்றோரால் அறிவை வளர்க்கவும் பெருக்கவும் முடியும். அறிவின் துணைகொண்டு ஒழுக்கத்தையும் வீரத்தையும் வளர்க்கமுடியும். அங்குத்தான் இன்பத்தைக் காணவும் அனுபவிக்கவும் முடியும்.

பொதுவுடைமை வாதிகள், நாட்டின் முதல் பொதுவுடைமை ஆக்கப்பட்டாலன்றி நாட்டின் செல்வ வளமும் மற்ற வளமும் பெருக வழியில்லை என்கின்றனர். தனியுடைமை வாதிகளோ அதற்கு எதிரிடையான கூற்றினை உடையவர்கள். தனியுடைமையால்தான் நாட்டுவளம் விரைவாகவும் ஒழுங்காகவும் பெருகும் என்கின்றனர், ஆனால் நம் தமிழ்நாட்டுப் பண்டைச் சான்றோர்கள், எந்த நாட்டில் நேர்மையும் திறமையும் பெற்ற ஆட்சி இருக்கின்றதோ அந்த நாட்டில்தான் வளம் பெருகும் என்று கூறியுள்ளனர்.

''அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடு பெரிது நந்தும்''
(புறம் 184)

(யாத்து - தேடிக்கொடுத்து: நந்தும் - வளத்தில் பெருகும்)

நல்லாட்சியில் நாட்டுவளம் பெருக்கப்பட்டு, அதன் உதவிகொண்டு சான்றோரால் அறிவும் ஒழுக்கமும் வளர்க்கப்பட்டு, வீரத்தால் அமைதி நிலவும் நாட்டில் இருக்கும் தனி ஒருவன் நிலையான இன்பத்தை அங்கு அடைய முடியாமல், ஏதோ தன் வாழ்வில் குறையிருப்பதாகக் கருதுகிறான். இயற்கையன்னையின் படைப்பிலே அவன் பெற வேண்டிய வாழ்க்கைத் துணையைப் பெறாததால், இன்பம் தரும் நாட்டில் வாழ்ந்தும் இன்பம் பெறாது தன்வாழ்வில் குறைகாண்கின்றான். குறைகாணும் அவன், வள்ளுவர் புகழ்ந்து கூறும் புகழ்புரிந்த இல்லாளைப் பெற்றதும் இன்பம் கண்டதாக, இன்பத்தைப் பெற்றதாக, இன்பத்தை அனுபவிப்பதாகக் கருதுகின்றான், உணர்கின்றான். இவ்வின்பத்தை இடையீடின்றிப் பெறவே மேற்குறிப்பிட்ட நான்கு வளங்களும் துணை

புரியும் கருவிகள் என்ற மெய்யுணர்வைப் பெறுகின்றான். உண்மையுணர்வில் பெற்ற இன்பத்தில் ஆண்டுகள் சில கழிகின்றன

மீண்டும், அவன் வாழ்வில் அடையும் இன்பத்தில் சிறிது குறையிருப்பதாகக் காண்கின்றான். அந்நிலையில் பெறுதற்கரிய அறிவுசான்ற மக்களைப் பெறுகின்றான்.

''பெறும் அவற்றுள் யாம் அறிவது இல்லை
அறிவறிந்த மக்கள்பேறு அல்ல பிற''

ஒருவன் வாழ்வில் அடைய வேண்டிய செல்வங்களில் சிறந்தது அறிவும் ஒழுக்கமும் பெற்ற மக்கட் செல்வமே யாகும்.

ஒருவன் பெறவேண்டிய செல்வங்களுள் சிறந்தது பண்புடைய மக்களைப் பெறுவதாகும்; அம்மக்களைப் பெற்றபின்னரே வாழ்வில் எதிர்நோக்கும் இன்பம் நிறைவு பெற்றதாக முடிவுகொள்கின்றான்.

ஆண்டுகள் பல ஓடுகின்றன; குடும்பம் பெருகுகின்றது; மனைவி மக்கள், உடன் பிறந்தோர் என்று பெரிய குடும்பமாகின்றது. இவன் குடும்பத் தலைவன்; குடும்பப் பொறுப்பு இவனிடம். இருந்தும் உடன் பிறந்தோர்க்கும் இவனுக்கும் கருத்து வேறுபாடு. இன்பம் நிறைவு பெற்றதாகக் கருதிய அவன் உள்ளம் அலைமோதுகின்றது. மீண்டும் தான் அடையவேண்டிய இன்பத்தில் குறை இருப்பதாகக் கருதுகின்றான்; ஏங்குகின்றான் இன்பத்தை நாடி.

நாட்டில் அமைந்த நல்லாட்சியில் மலர்ந்த சான்றோர்கள் வருகின்றனர் அவன் உதவிக்கு. உடன் பிறந்தோர் அறிவுரையால் அமைதிபெற்று, அண்ணனோடு வேறுபாட்டை விட்டு அவன் உரையை ஏற்கின்றனர். குடும்பத்தில் இன்பம் நிலவுகிறது; முழு இன்பம், நிலைபேறான இன்பம், எதிர்பார்த்த இன்பம் பெறுவதாக எண்ணினான், உணர்ந்தான். அவ்வின்பம் அவன் வாழ்நாள் முழுதும் நிலைத்தது. உணர்வோடு இன்பத்தை நுகர்கின்றான். அந்த நிலைத்த இன்பத்தில்-துன்பமே அறியமுடியாத அந்த வாழ்வில் இளமை பெறுகின்றான்; நரையும் திரையுங்கூட அவனை அணுகவில்லை. இந்த இன்பம்தான் இன்றைய உலகில் வாழும் ஒவ்வொருவனும் விரும்பும் இன்பம்.

நோக்குங்கள்: நேர்மையும் திறமையும் உள்ள ஆட்சி வேண்டும்; ஆட்சியில் நாட்டுவளம் பெருகவேண்டும்; தனி ஒருவன் வறுமை ஒழியவேண்டும்; சான்றோர்கள் மக்களுக்கு அறிவும், ஒழுக்கமும், வீரமும் புகட்டவேண்டும். மூன்றினையும் பெற்ற மக்கள் இல்லறம் புகுந்து, நல்லற வாழ்வில் மக்கட் பேற்றினைப் பெறவேண்டும்; அம்மக்களும் அறிவும் ஒழுக்கமும் பெறவேண்டும்; ஒரே குடும்பத்தில் வாழும் மனைவிமக்களும், உடன் பிறந்தோரும் குடும்பத்தலைவன் உரைகேட்டுச் செயலாற்றவேண்டும். அங்குத்தான் நிலைபேறான இன்பத்தைக் கண்டு அனுபவிக்கமுடியும்.

இச்சூழ்நிலை யாவும் பெற்று இன்பம் அனுபவித்த பண்டைப் பெரியார்களில் ஒருவர் பிசிராந்தையார். இந்த உண்மையை அவர்தாமே கூறுகின்றார்:

''மாண்ட என் மனைவியொடு மக்களும்
நிரம்பினர்;
யான்கண்டு அனையர் என்இளையரும்;
வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன்தலை
ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே''

(புறம் 191)

(மாண்ட - சிறந்த; இளையர் - உடன்பிறந்தோர்; அதன்தலை-அதற்குமேல்)

'இவ்வாறு, யான் அமைதியும் இன்பமும் பெற்று வாழ்வதால் கவலை என்பதைக் கனவிலும் அறியேன்; வாழ்வு எனக்கோர் இன்பப் பூங்கா; ஆதலால் வயது முதிர்ச்சியைக் காட்டும் நரைதிரையும் என்னைத் தீண்ட அஞ்சுகின்றன' என்று விளக்குகின்றார்.

முயன்றால் நிலைபேறான இவ்வின்பத்தை இன்றும் பெறலாம். முயல்வோமாக.

—ஞ—

பெண்மை அறம்

—★—

வளம் ஒருபால்; வறட்சி இன்னொருபால், கற்பகத்தின் சால்பு பொலியும் ஒருபுறம்; கள்ளிமுள்ளிபோல் அரக்கக் கொடுமைகள் வீறேங்கி விளங்கும் இன்னொருபுறம்.
— இது வாழ்க்கை.

இன்பமும் துன்பமும் இயைந்து கிடக்கும் சூழலிடையே— கரடு முரடான வழியிலே — புதரும் முள்ளும் நிறைந்த பாதையிலே — முன்னேறுகிருன் அவன்.

தொலேவிலே நம்பிக்கை ஒளி புலனுகின்றது. அவனுக்கு அந்த ஒளி நம்பிக்கை ஊட்டுகின்றதா? இல்லே; இல்லே.

கையொடு கை கோத்து, கண்ணோடு கண்ணேப் பிணேத்து — கருத்தொடு கலந்த காரிகை ஒருத்தி அவன் பக்கத்திலே நிற்கிருள். அவள்தான் அவனுக்கு உயிர்த் துணே — உள்ளத்தின் ஊக்கம் — வாழ்விலே ஒரு நம்பிக்கை.

○

மாற்ரு உள்ள வாழ்க்கையளாகி எழுக என எழுந்து, கோவலனேடு புறப்பட்டாள் கண்ணகி.

'நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு' என்று கேள்வி எழுப்பி, இராமனேடு கானம் புகுந்தாள் சீதை.

இவர்கள் பெண்மை அறத்தைப் பேணிய பெண்டிர்.

○

பாரதியார் பாடினுர் — பெண்மையின் பிரதிநிதியாக:

"காதல் ஒருவனேக் கைப்பிடித்தே—அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து
மாதர் அறங்கள் நடத்தவந்தோம்..........."

[ஓவியர்: திரு. தரணிபதி]

கலேக்கதிர் ... பொங்கல் இதழ் ... 1955.

மறுவளர்ச்சி

திரு. ப. இராமலிங்கம், B. Sc.

★

படீரென்று ஜன்னல் கதவைச் சாத்தி னேன்.

'அண்ணு......... பல்லி.........!' என்று கத்தினுன் என் அருமைத் தம்பி.

அடுத்த கணமே ஜன்னலைத் திறந்தேன். அறுந்த வால் தரையில் விழுந்து துடித்துக் கொண்டிருந்தது. அதன்மேலேயே கவ னமாக இருந்த என் தம்பி துடிப்பு நின்றதும் 'பல்லி எங்கே?' என்ருன். 'போய்விட்டது' என்றேன்.

'ஐயோ! அநியாயமாக அதன் வாலை அறுத்து விட்டாயே! வாலறுந்த பல்லி என்ன வாதனைப் படுகிறதோ!' என்று ரகளை செய்ய ஆரம்பித்து விட்டான்.

என் பாட்டியின் காதில் அவன் பல்லவி விழுந்துவிட்டது. துப்பறியும் சேவகனைப் போல விபத்துநடந்த இடத்திற்கு விரைந்து வந்துவிட்டாள்; துப்பை அறிந்துவிட்டாள்.

'பல்லியின் வாலையறுத்து ஏண்டா பாவத் தைக்கட்டிக் கொண்டே! பார்த்து ஜன் னலைச் சாத்தக்கூடாது? பாவம்! வாலை இழந்து பல்லி என்ன பாடுபடுகிறதோ!' என்ருள்.

'அதெல்லாம் ஒரு பாடும்படாது. ஆபத் திலிருந்து தப்பிக்க வாலை விட்டுவிட்டுப் போய்விட்டது, பிறகு, வால் வளர்ந்து விடும்.' என்றேன். நம்பவில்லை. ஏன்? பல்லியின் மேலிருந்த பாசம்! பல்லி சொன் ஞல் பலன்; பல்லி விழுந்தால் பலனல்லவா?

பல்லிமட்டு மென்ன? இன்னும் எவ் வளவோ விலங்குகள் இழந்த பாகத்தைத் திரும்ப அடைகின்றன—மறு வளர்ச்சியால். ஆம்! மறு வளர்ச்சி அல்லது இழந்த பாகத்திற்கு ஈடுசெய்வ தென்பது பொது வாக எல்லா விலங்குகளிடையேயும் ஓர ளவு நடைபெறுகிறது. ஏன்? நம்மிடையே யுந்தான் நடைபெறுகிறது. எந்த அள விற்கு? தோலும் தசையும் வளர்ந்து புண் ஆறும் அளவிற்கு; உடலினுள் ஒடிந்த எலும்புகள் ஒன்று சேரும் அளவிற்கு. ஆனல், ஒரு போதும் இழந்த உறுப்பை— கை, கால் போன்றவை – மீண்டும் நாம் பெற முடியாது. ஏன்? அதற்கு மறு வளர்ச்சி யில்லை. அவ்வளவே. ஆனல், எளிய வாழ்க்கையை யுடைய விலங்கு களில் தான் மறு வளர்ச்சி பூரணமாக நடைபெறுகிறது. அவற்றுள் சில இழந்த உறுப்புகளைத் திரும்பப் பெறுகின்றன. சில இரண்டாகத் துண்டிக்கப்பட்டாலும் துண்டிக்கப்பட்ட ஒவ்வொன்றும் ஒவ் வொரு விலங்காகி விடுகிறது. எல்லாம் மறு வளர்ச்சியால்!

அவ்வித மறு வளர்ச்சியில் ஒன்று மட் டும் முக்கியமாகக் கவனத்தில் இருக்க வேண்டும். அதாவது ஒரு விலங்கு இரண் டாகத் துண்டிக்கப்பட்டிருக்கிற தென்று வைத்துக் கொள்ளுவோம். அந்த விலங் குக்குத் தலையும் வாலும் உண்டல்லவா? அப்படியாயின், துண்டித்த இரு துண்டு களுள் ஒன்று தலைப் பாகத்துண்டும், மற்

றென்று– அதற்கு எதிரான – வால் பாகத் துண்டுமாகத்தானே இருக்க வேண்டும்? எனவே, அவ்விரு துண்டுகளிலும் மறு வளர்ச்சி ஏற்படும் பொழுது தலைப் பாகத் துண்டிலிருந்து வாலும், வால் பாகத்துண்டிலிருந்து தலையுந்தான் வளரும். இதே முறையை மறு வளர்ச்சியில் விலங்குகள் எப்பொழுதும் கடைபிடிக்கின்றன. அதாவது, எத்தனைத் துண்டாக வெட்டினாலும் வெட்டுண்ட ஒவ்வொரு துண்டின் மேல் பாகத்திலிருந்து தலையும், கீழ் பாகத்திலிருந்து வாலுந்தான் வளரும். மேலும், அம் மறு வளர்ச்சி விலங்கின் தலையிலிருந்து வால் பக்கம் போகப் போகக் குறைந்துகொண்டே போகிறது.

இதை உயிர் நூலறிஞர்கள் எவ்வளவோ ஆராய்ச்சியின் மூலம் விளக்கிக் காட்டியுள்ளார்கள். அவற்று ளெல்லாம் மிகச் சிறந்ததாய், எளிதில் விளங்குவதாய் அமைந்தது ஓர் வகைத் தட்டைப் புழுவில் (Planaria) நடத்திய ஆராய்ச்சிதான். எனவே, அப்புழுவில் எப்படி மறு வளர்ச்சி நடைபெறுகிறதென்று இனிப் பார்ப்போம். பிறகு, விளங்கிவிடும் விலங்கில் மறு வளர்ச்சி எப்படி நடைபெறுகிற தென்று.

மேலே சொன்ன புழுவானது கறுப்பு நிறத்ததாய், தட்டை உருவினதாய், நீரோடைகளில் கற்களுக்கிடையிலும் புற்பூண்டுகளுக் கடியிலும் பதுங்கி வாழ்கின்றது. புழுவின் நீளம் சுமார் அரை அங்குலமே. இப் புழுவிற்கு வாய் உடலின் நடுப்பாகத்திலிருக்கிறது. கண்கள் இரண்டும் நம்மைப்போல தலையின் ஒரே பக்கத்தில் அமைந்திருக்கின்றன.

இனிப் புழுவில் மறு வளர்ச்சி எப்படி நடைபெறுகின்ற தென்று பார்ப்போம். மறு வளர்ச்சி, மறுவளர்ச்சி யென்று உங்களை மருளவைக்கப் போவதில்லை. மாறாகப், படித்துவிட்டு மகிழ்ச்சி யடையப் போகிறீர்கள், இதென்ன மாயாஜால வித்தையா யென்று! ஏன்? இம் மா நிலத்தில் தோன்றும் மன்னுயிர்க ளெல்லாம் எப்படியெப்படியோ பிறவி யெடுத்து இறுதியில் செத்து மடிவதே மாயாஜாலமாக இருக்க இம் மறு வளர்ச்சியையும் மாயாஜாலமாக நீங்கள் நினைப்பதில் தவறென்றுமில்லையே! இனி, வித்தை எப்படி நடக்கிற தென்று கூர்ந்து படித்துக்கொண்டு வாருங்கள். கவனம் வேறு எங்கும் போகக்கூடாது. இல்லையேல் வித்தை விளங்காது!

முதலாவதாகப் புழுவை இரண்டாகத் துண்டித்தால் முன்பு கூறியது போல ஒவ்வொரு துண்டிலிருந்தும் வால் வளர வேண்டிய இடத்தில் வால் வளர்ந்துவிடும்; தலை வளர வேண்டிய இடத்தில் தலை வளர்ந்து விடும். (படம் 1)



(படம் 1)

ஆனால், இம் மறு வளர்ச்சியானது தலையிலிருந்து வால் பக்கமாகக் குறைந்துகொண்டே போகிறது. அதாவது, இப் புழுவின் வாய்க்கு மேலே துண்டிக்கப்படும் துண்டுகளில் வால் வளர வேண்டிய இடத்தில் வால் வளரும்; தலை வளரவேண்டிய இடத்தில் தலை வளரும். ஆனால், வாய்க்குக் கீழாகச் செய்யப்படும் துண்டுகளில் தலையோ, வாலோ வளருவதில்லை. அதற்குப் பதிலாகத் துண்டிக்கப்பட்ட இடம் தோலும், தசையும் வளர்ந்து புண் ஆறுவதுபோல் திசுக்களால் மூடப்படுகிறது. (படம் 2)



(படம் 2)

இதோ பாருங்கள். இன்னொரு வேடிக்கையான மறு வளர்ச்சி – அதே புழுவில் தான். இது மறு வளர்ச்சியில் தலை எவ்வளவு தூரம் ஆதிக்கம் செலுத்துகிற தென்பதைக் காட்டும். இதை விளக்க இரண்டு தட்டைப் புழுக்களை எடுத்துக் கொள்ளுவோம். முதலாவதாக முதல் தட்டைப் புழுவின் தலையிலிருந்து சிறிய பாகத்தைத் துண்டித்து எடுத்து இரண்டாவது தட்டைப் புழுவின் வால் பாகத்தில் ஒட்டவைத்தால் ஒட்டவைத்த தலையானது வளர்ந்து அதற்கொரு வாயும் தோன்றி விடும். (படம் 3). இப்பொழுது ஒட்டப்



(படம் 3)

பட்ட புழுவின் தலையைத் துண்டித்து விட்டால், மறுபடியும் தலை வளராது வால் தான் வளரும். இந்த இரண்டாவது புழுவை, முதல் புழுவிலிருந்து தலையைத் துண்டித்து ஒட்டவைப்பதற்கு முன்பு துண்டித்தோமானால் என்ன ஆகும்? தலைதானே வளரும்? ஆனால், இப்பொழுது வால் வளர்ந்திருக்கிற தல்லவா? இது போலவே, தலைக்குப் பதிலாக முதல் புழுவிலிருந்து வாலைத் துண்டித்து எடுத்து இரண்டாவது புழுவில் ஒட்டவைத்தால் யாதொரு மாறுதலும் ஏற்படாது. அதற்குப் பதிலாக ஒட்டவைத்த வாலானது இரண்டாவது புழுவில் ஐக்கியமாகி விடும்! இப்பொழுது புரிகிறதல்லவா மறு மளர்ச்சியில் புழுவின் தலையானது எவ்வளவு தூரம் ஆதிக்கம் செலுத்துகிற தென்று?

இதோ இன்னொரு வேடிக்கை. இதில் புழுவின் தலைப் பாகத்தை இரண்டாகப் பிளந்து, பிளந்த இரண்டும் ஒன்று சேராத படிச் செய்தால், பிளந்த இரு பாகங்களும் இருதலைகளாக வளர்ந்து விடும். எப்படி? ஒருடல் இரு தலைகள்! (படம் 4)



(படம் 4)

இன்னும் இரு பக்கமும் தலைகளும், இரு பக்கமும் வால்களும் வளரும்படிச் செய்யலாம். எப்படித் தெரியுமா? புழுவின் கண்களை யொட்டித் தலையைத் துண்டித்தால் இரு பக்கமும் தலை வளர்ந்து விடும்! வால்பக்கம் வாலை யொட்டி ஒரு சிறு துண்டு செய்தால் துண்டின் இரு பக்கமும் வால் வளர்ந்து விடும்! (படம் 5)



(படம் 5)

எப்படி மாயாஜால வித்தை? அடடா! மன்னிக்கவும். நானும் மயங்கி விட்டேன்.

ஹைட்ரா.

தட்டைப் புழு.



மண் புழு.

மறு வளர்ச்சி எப்படி ?......

இனி மற்ற விலங்குகளைப் பார்ப்போம்.

'உலக வரலாற்றிலே ஒரே ஓர் உயிரினம் தான் மக்கள் நலனில் மிகமிகப் பங்கெடுத்துக் கொள்ளுகிறது' என்று பரிணாமத்தை உலகுக்குப் பறை சாற்றிய பேரறிஞர் டார்வின் கூறுகிறார். அவ்வினம் வேறொன்றுமில்லை. 'உழவனின் தோழன்' என்றழைக்கப்படும் உங்களுக்குத் தெரிந்த மண் புழுக்கள் தான். இப் புழுக்கள் உருண்டையாய் தலையிலிருந்து வால் வரை வளையங்களாலான உடலை உடையன. நிறமோ மண் நிறம். இவைகள் தோட்டந் துரவுகளிலும், வயல் வெளிகளிலும் ஊர்ந்து செல்வதைப் பார்த்திருக்கலாம். இப் புழுக்களிலும் மறு வளர்ச்சி ஓரளவு நடைபெறுகிறது. கவனம் இருக்கட்டும். ஓரளவு நடைபெறுகிறதென்றேன். ஏனெனில், மண் புழுவின் தலைப் பாகத்தில் முதல் 5 வளையத்திற் குள்ளும், வால் பாகத்தில் கடைசி நுனியிலிருந்து 13—வது வளையத்திற் குள்ளும் வெட்டினால் தான் மறு வளர்ச்சி ஏற்படும். அதாவது புழு இரண்டாக வளரும். மற்ற இடங்களில் வெட்டினால் மறு வளர்ச்சி யில்லை; மரணம் தான்!

புராணக் கதைகள் நம் நாட்டில் மட்டுமல்ல, மேல் நாடுகளிலும் உண்டு. அப் புராணக் கதைகளுள் ஒன்று ஹெர்குலஸின் வீர தீரச் செயல்களைக் குறிக்கிறது. ஹெர்குலிஸ் பன்னிரண்டு வீரச் செயல்களைப் புரிந்திருக்கிருன். அவற்றுள் ஒன்றுதான் ஹைட்ரா என்ற ஒன்பது தலைகளை யுடைய அரக்கனேடு போரிட்டது. ஹைட்ராவின் ஒரு தலையை வெட்டினுல் அவ்விடத்தில் இரண்டு தலைகள் முளைக்கும். அப்படியாயின் வெட்ட வெட்டத் தலைகள் ஒன்றுக்கு இரண்டாகத் தானே முளைத்துக்கொண்டிருக்கும். ஆனல், ஹெர்குலிஸ் எப்படியோ கொன்றுவிட்டான். அது புராணக் கதை......

அதுபோல, இப்பொழுதும் வசிக்கிறது ஓர் உயிர். நிலத்திலல்ல; நீர் நிலைகளில். அவ்வுயிர் அரக்கனல்ல. ஆனுல், உயிர் இனத்திலே அற்பப் புழுவுக்கும் ஒருபடி குறைவான ஓர் விலங்கு. எவ்வளவு பெரியது தெரியுமா? மிக மிகப் பெரியதாக வளர்ந்தாலும் ஒரு அங்குலத்திற்குமேல் வளருவதில்லை. மற்றவைகளெல்லாம் சாதாரண கண்ணுல் காணமுடியாத அவ்வளவு சிறியவை. விலங்கின் தலையில் இரையைப் பிடித்துத் தின்னுவதற்கென்று ஒன்பது



நட்சத்திர மீன். வெட்டை மீன்.



கடற் கத்தரிக்காய்.



பல்லி.

கைகள் (Tentacles) இருக்கின்றன. அவ் விலங்கு சாதாரணமாகக் குளம் குட்டைகளிலும், பாறைகளிலும், செடிகளிலும் தன்னுடைய உடலிலிருந்து கசியும் ஒருவித பசையினல் ஒட்டிக்கொண் டிருக்கும். அவ் விலங்கில் மறு வளர்ச்சி பூரணமாக நடைபெறுகிற தெனலாம். எப்படியெனின், அவ் விலங்கை இரண்டாக வெட்டினல் வெட்டுண்ட ஒவ்வொரு துண்டிலிருந்தும் ஒன்பது கைகளோடு ஒவ்வொரு தலை முளைத்துவிடும். இன்னும் எத்தனைத் துண்டுகள் போட்டாலும் சரி, ஒவ்வொரு துண்டிலிருந்தும் ஒவ்வொரு தலை முளைத்துவிடும். இவ்விதம் வெட்ட வெட்டத் தலைகள் முளைப்பதினுலும், தலையில் ஒன்பது கைகள் இருப்பதனுலுந்தான் இவ் விலங்குக்கு ஹைட்ரா (Hydra) என்ற பெயர் ஏற்பட்டது.

விலங்கினத்தில் மறு வளர்ச்சி நடைபெறுவதை எடுத்துக் காட்டாக நிலத்தில் வாழ்வதற்கு ஒன்று பார்த்தோம்; நீரில் வாழ்வதற்கு இரண்டு பார்த்தோம். இனிக் கடலில் வாழ்வதற்கும் உண்டா என்று காண்போம்.

நட்சத்திர வடிவம். தட்டையானது. சிறுது கடினமானதுங் கூட. கரையிலே அலையால் ஒதுக்கப்பட்டுக் காய்ந்து கிடக்குமதைக் கடலோரமாக வாழ்பவர்கள் காணலாம். அது ஒரு விலங்கென்ருல் ஆச்சரியப்படத்தான் செய்வீர்கள்! பெயர் என்ன தெரியுமா? நட்சத்திர மீன் (Star-fish)! நீங்கள் நினைக்கலாம் பொருத்தமான பெயர்தானே என்று. ஆம், ஓரளவு பொருத்தந்தான். வடிவத்தால் நட்சத்திரப் பொருத்தம், சரி. ஆனுல், மீன் என்பதுதான் பொருந்தாத பெயர். ஏனெனில், மீனுக்கும் அதற்கும் எந்த விதத் தொடர்பும் கிடையாது. அவ் வினத்தைச் சேர்ந்தது மல்ல. அது ஒரு தனி இனம். ஏதோ கடலில் வாழ்கிறதே என்ற காரணத்தால் பரம்பரையாக மீன் என்றழைக்கப் பட்டு விட்டது. நாம்தான் எப்பொழுதும் பரம்பரைக்குப் பெருமை யளிப்பவராயிற்றே! பின், அதே பெயரால்தானே அழைக்கவேண்டும்?

சாதாரணமாக நட்சத்திர மீன்களுக்கு ஐந்து கோணங்கள் தான் இருக்கும். அவ்வைந்து கோணங்களும் ஐந்து கைகளாகும். ஐந்துக்கு மேலும் சில மீன்களுக்குக் கைகள் இருக்கும். மீனின் அடிப்பக்கமாகக் கைகளெல்லாம் ஒன்று சேரும் மத்திய பாகத்தில்தான் வாய் அமைந்திருக்கிறது. இம் மீனை, மற்ற கடல்வாழ் விலங்குகள் 'இரை கிடைத்து விட்டதே' என்று கையைக் கவ்விப் பிடித்துக் கொண்டால், 'தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போகட்டும்' என்று பிடிபட்ட கையைத் தன்னை உண்ண வரும் விலங்கின் வாயில் விட்டுவிட்டுத் தப்பித்துக் கொள்ளும். மீனின் இழந்த கையும் மறு வளர்ச்சியால் வளர்ந்து விடும்!

இதே நட்சத்திர மீனைச் சேர்ந்த இன்னென்றும் இருத்கிறது. அதற்கும் இதைப் போலத்தான் ஐந்து கைகள் இருக்கின்றன. ஆனுல், அக் கைக ளெல்லாம் மிக நீளமானவை. பாம்புபோல் நெளிய வல்லன. அக் கைகளின் நெளிவாலேயே அம் மீன் நீந்துகிறது. பாம்புபோல் நெளியும் கைகளை யுடையதால் அதற்குப் பாம்பு நட்சத்திரமீன் (Serpent Star) என்று பெயர். அக் கைகள் மிக எளிதில் ஒடிந்து விடும். அதனுலும் அதற்கு வெட்டை மீன் (Brittle Star) என்ற மற்றெரு பெயருண்டு. அக் கைகளும் ஒடிய ஒடிய மறு வளர்ச்சியால் வளர்ந்து விடும்!

மனம் தெளிவு பெருத ஒருவர் ஏதோ காரணத்தால் தன்னை மாய்த்துக்கொள்ள நச்சுப் பொருளை உண்டு விடுவார். உண்ட நச்சு உடலிலே வேலைசெய்து மரண வேதனைப் படும்போது நச்சை முறித்து வெளியாக்க மருந்து சாப்பிட்டுப் பார்ப்பார்.

பயன் கிட்டாது. நீண்ட பயணம்தான்—பார்க்கமுடியாத உலகிற்கு !

ஆனால் பாரிலோ ஓர் உயிர் வாழ்கிறது. அவ்வுயிர் தன்னையறியாமலேயே ஏதாவது நச்சுப் பொருளை—பொதுவாக உடலுக்கு ஒத்துக்கொள்ளாததை— உட்கொண்டு விட்டால் உடனே வயிறையும், குடலையும் உண்ட பொருளோடு தன்னுடலை விட்டு உதறித் தள்ளி விடுகிறது. இழந்த வயிறுக்கும், குடலுக்கும் பதிலாக வேறொன்று உடலிலே வளர்ந்து விடுகிறது! இதுவும் மறு வளர்ச்சியால்தான். வியப்பாக இருக்கிற தல்லவா !

இவ்விலங்கும் நட்சத்திர மீனின் நெருங்கிய உறவாகும். கடலில் வாழ்வது. பெயர் கடல் கத்தரிக்காய் (Sea-Cucumber). காரணப் பெயர்தான். உணவாகவும் உபயோகப் படுகிறது. நம் தேசத்திலல்ல. சைனாவில்.

இதுவரை முதுகெலும்பற்ற விலங்குகளில் மறுவளர்ச்சியைப் பார்த்தோம். இனி முதுகெலும்புள்ள விலங்குகளில் பார்ப்போம். அதற்குக் கட்டுரையின் ஆரம்பத்தில் பார்த்தோமேஅதே பல்லியில் மறு வளர்ச்சி எப்படி நடைபெறுகிற தென்று விரிவாகப் பார்ப்போம்.

ஒரு முறைகூட வாலறுத பல்லியைக் கூர்ந்து பார்த்தால் வாலில் ஒரு குறிப்பிட்ட தூரத்தில் செதில்களால் மூடப்படாத வளையம்போ லொன்று தெரியும். இது எல்லாப் பல்லிகளுக்கும் உண்டு. இவ்விடத்தில் தான் வால் அறுந்து விழுவது. இதே இடத்தில் வால் எலும்பானது இயற்கையிலேயே குறுக்காகப் பிளவுபட்டு இருக்கும். அதோடு வாலுக்குச் செல்லும் முதுகு நடுநரம்பும் மிகக் குறுகிய இழை போலிருக்கும். அங்குச் செல்லும் இரத்தக் குழாய்களும் அப்படியே. எனவே வாலானது கெட்டியாகப் பிடிபட்டவுடனே நரம்பு மூலம் பல்லிக்குத் தந்தி பறக்கிறது. அக்கணமே பல்லி வாலைச் சுண்டி இழுக்கிறது. வளையம் உள்ள இடத்தில் வால் விடுபடுகிறது. இதற்குத் தானாக விடுபடுதல் என்று பெயர். இது விலங்குக்கு எதிரிகளிடமிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்காக இயற்கையிலேயே ஏற்பட்ட ஒரு நியதி. இதோடு இன்னொன்றும் இருக்கிறது. அதாவது அறுந்து விழுந்த வாலானது மிக வேகமாய்த் துடித்துக்கொண்டிருக்கும். எதிரியின் கவனமெல்லாம் அதன்மேல் போய்க்கொண் டிருக்கும். அதே சமயத்தில் வாலறுந்த பல்லியார் ஆமைபோல் நகர்ந்து தப்பித்துக் கொள்ளுவார். எப்படியிருக்கிறது ? எதிரியைப் படைத்த இயற்கையே எதிரியிடமிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டிய வசதியையும் படைத்திருக்கிறது. இயற்கையின் திருவிளையாடலைத் தான் என்னவென்றியம்புவது! தப்பித்துச் சென்ற பல்லிக்கு வாலறுந்த இடத்தில் இரத்தக் குழாய்களும் அறுந்து இரத்தம் கசிந்துகொண்டே இருக்கலா மல்லவா? அதையும் நீக்கிவிடுகிறது இயற்கை. எப்படித் தெரியுமா? சிறிது கசிந்த இரத்தம் உடனே உறைந்து குழாயை மூடிவிடுகிறது. பிறகு, நாளடைவில் மறு வளர்ச்சியால் வால் வளர்ந்து விடும் !

மறு வளர்ச்சி எப்படி ? நமக்கும் இப்படி இருக்கக் கூடாதா என்று நினைக்கிறீர்களா ? இருந்தால் மனித இனம் என்ன ஆகுமோ என்று பயந்து இயற்கை மௌனமாக இருந்து விட்டது போலும் !

'நன்மை செய்யா விடினும் தீமை செய்யாதே' என்பார்கள். அதுபோல, கட்டுரையை ஆரம்பித்து முடிக்கும் வரையில் நல்ல சொல் சொல்லாவிட்டாலும் கெட்ட சொல் சொல்லாதிருந்த பல்லிக்கு எனது மனமார்ந்த நன்றியைச் சொல்ல மறக்க மாட்டேன்! தயவு செய்து கேலி செய்யாதீர்கள்! என் செய்வது? பரம்பரை பரம்பரையாக உடலிலே ஊறிவந்த வழக்க மல்லவா !

இவ்வுலகம் இயங்குவது காதலால். அது நிலைத்து நிற்பதும் காதலாலேயாம். இவ்வுலகின் உயிரினங்கள் அனைத்தும் காதலுக்குக் கட்டுப் பட்டவை. புழு, பறவை, விலங்கு, மக்கள் ஆகிய அனைத்தையும் கூர்ந்து நோக்கின் அவை காதலால் வளர்கின்றன என்ற உண்மையை உணரலாம். சுருங்கக் கூறின் காதலின்றேல் இவ்வுலகம் இல்லை.

காதல் தெய்வ நீர்மை சான்றது. காதல் நிறைந்த இடத்தில் அமைதி நிலவும்; அழகு மிளிரும். அது குறைந்த இடத்தில் அமைதி குறையும்; கொடுமை நிறையும். போரும் பூசலும், பிணக்கும் பொறுமையும், காழ்ப்பும் வெறுப்பும் எங்குத் தோன்றுகின்றனவோ அங்குக் காதலில்லை என்று கொள்ள வேண்டும்.

உயிர் வளர்ந்து பண்படுதற்கு உறுதுணையாய் அமைவது காதல். இவ்வுலகில் உறுதிப்பேறு எய்திய உத்தமர்களின் வரலாற்றினை ஆராய்ந்தால் அவர்கள் உய்வுக்குக் காரணமாய் இருந்தது காதல் என்பது புலனும். புத்தர், வள்ளுவர், ஏசு, தாயுமானவர், இராமலிங்க அடிகள், காந்தி-இவர்களுடைய வாழ்க்கை வரலாறுகளை நோக்குக! அவர்தம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் காதல் கரைபுரண்டது காதற் பெருக்கே அவர்தம் வாழ்வு எனலாம். அவர்தம் கரையிலாக் காதல் வெள்ளத்தால் பெறலரும் பயன் எய்தி உய்ந்தவர் எத்துணைப் பேர்!

கணவர் மனைவியரிடையே நிகழ்கின்ற அன்பே காதலாகும் என்று சிலர் கருதுகின்றனர். இவர் அறியார். காமத்தைக் காதலாகக் கொள்வோரின் கருத்து இது எனலாம். காமம் வேறு; காதல் வேறு. காமம் உடலைப் பற்றியது; காதல் உயிரைப் பற்றியது. கணவன் மனைவியரிடையே காதல் தொடங்குகிறது. அவர்தம் இல்லறத்தின் தொடக்கத்தில் அஃது அரும்புகிறது. இங்ஙனம் அவர்களிடையே தொடங்கிய காதல் அங்கேயே சிறைப்பட்டுக் கிடப்பதில்லை. நாளடைவில் அது மக்கள், சுற்றம், நட்பினர், விருந்தினர் முதலியோரிடமும் விரிந்து பரவுகிறது.

காதல் ஒரு வரம்பிற்கு உட்படாது. அஃது எல்லை இகந்து பரவும். இஃது உண்மைக்காதலின் பெற்றி. இல்லறத் தொடக்கத்தில் அரும்பிய காதல் தூய்மையுடைய தாயின் அது விரைவில் போதாகி மலரும்; பின்பு காயாகிக் கனியும். காதல் கனிந்த நிலைதான் அருள்

அட்டைப்படம்

நிலை; எல்லா உயிரினங்களிடத்தும் ஒரே தன்மைத்தான அன்பு செலுத்தும் நிலை; தன்னலம் மறந்து பிற உயிர்களின் நல னுக்காக முயலும் நிலை. சுருங்கக் கூறின் அதுவே பற்றற்ற நிலையாம். இந் நிலையி லிருந்துதான் மேலே குறிப்பிட்ட அருட் செல்வர்கள் உயிர்கள் உய்ய அருள்புரிந் தார்கள். இவ் வுலகில் போர், பூசல் முத லியவைகள் அறவே ஒழிந்து எல்லா நாட் டவரும் இனிதே இன்பமுற வாழவேண்டு மாயின் இத்தகைய கனிந்த காதல் உல கெங்கணும் நிறைய வேண்டும்.

தலைவன் தலைவியரிடையே காதல் அரும் புகிறது என்றோம். இங்ஙனம் அரும்பிய காதலின் பெற்றியைத்தான் நெடுந் தொகை, குறுந்தொகை, நற்றிணை, கலித்தொகை முதலிய நூல்களின் அகப் பொருட் பாடல்கள் ஓதுகின்றன.

ஒரு நல்லிளங்காளை தற்செயலாய் ஒரு மெல்லியல் பாவையை எதிர்ப்பட்டான். காளை அழகும், ஆண்மையும், வீரமும், பண்பும் நிறைந்தவன். பாவையும் அழகே உருக் கொண்டாற்போல் ஒளிர்ந்தாள் பெண்மையின் சிகரமாக விளங்கினாள். அவ்வணங்கின் திருவுருவம் அக்காளையின் உள்ளத்தில் குடிபுகுந்தது. அவன் உள்ளத் தில் காதல் பெருக் கெடுத்தது. காரிகை யும் காளைபால் சிந்தையை இழந்தாள். இருவர் கண்களும் பேசின; உள்ளங்கள் ஒன்றின. இருவருங் கூடினர். இனி அவளைத் தான் பிரியமுடியா தென்றும், பிரிந்தால் தன்னால் உயிர்வாழ இயலா தென்றும் அக்காளை சூளுறவு செய்தான்.

காதலால் கட்டுண்ட அவ்விளஞ் செல் வர் இருவரும் பிறர் அறியா வண்ணம் பல நாட்கள் காதலொழுக்கம் நிகழ்த்தினர். ஒருவரை ஒருவர் நன்ருகப் புரிந்து கொண் டனர். அவனுக்கு அவள் இன்றியமையா தவள் ஆனாள். அவளுக்கு அவனும் இன்றி யமையாதவ னானான், பின்பு இருவரும் திருமணம் செய்துகொண்டு இல்லறத்தில் இறங்கினர். அவர்தம் இல்லறம் இனிதே நிகழ்ந்தது; வாழ்க்கை இனித்தது. ''இல் லதுஎன் இல்லவள் மாண்பானால்?'' எனவே அக்காளையின் வாழ்க்கை ஈறில் லாப் பேரின்பமாய் இலங்கியது.

இளங் காதலர்கள் ஓர் அருமை மகவுக் குப் பெற்றோர் ஆனார்கள். ''மயக்குறு மக்களை இல்லோர்க்குப், பயக்குறை இல்லை தாம் வாழும் நாளே'' என்று புறம் பாடுகிறது. இது பேருண்மை. தம் குழந் தையின் மழலை மொழிகளிலும் குறும்புச் செயல்களிலும் மதியை இழக்காத பெற் றோர் இம் மானிலத்தில் யார்? ஆகலின் அன்புக் காதலர்களின் வாழ்க்கையில் மேலும் இன்பம் பெருகலாயிற்று.

இல்லறம் தொடர்ந்து இனிதே நிகழ் வதற்குப் பொருள் தேவை. பொருளில் லார்க்கு இவ்வுலகம் ஏது? ஆகையால் பொருள் தேடக் காதலன் எண்ணினான். பொருள் ஈட்ட அவன் அயலூருக்குச் செல்ல வேண்டும்; தன் காதலியைப் பிரிய வேண்டும். பெண்களோடு அயலூருக்குச் சென்று பொருள் ஈட்டும் வழக்கம் பண் டைத் தமிழகத்தில் இல்லை. ஆகலின் அவன் காதலியைப் பிரிந்துதான் செல்ல வேண்டும்; பொருள் பொருட்டுத் தான் பிரியப் போவதாகக் காதலியிடம் அவன் சொன்னால் அவள் அதைக் கேட்டதும் துடிப்பாள்; பதைப்பாள். அச் சொல்லைக் கேட்டவுடனே அவளுயிர் அவள் உடலை விட்டு நீங்கிப் போகவும் கூடும். அவன் பால் அவளுக்கு அத்துணை அன்பு! அவனே அவளுக்கு உயிர் அல்லவா?

''செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்று நின்
வல்வரவு வாழ்வார்க் குரை''

என்று தலையாய காதலின் பெற்றியைத் திருவள்ளுவர் உணர்த்துவதைக் காண்க.

எனவே தன்னுடைய பிரிவைப் பற்றி அவளிடம் சொல்ல அவனுக்கு நா எழவில்லை. தன்னுடைய பிரிவுணர்ச்சி அவனுக்கு அவள்பால் மேலும் அன்பை மிகுவித்தது. அவளை ஆர்வமுறத் தழுவினன்; அன்பு மொழிகளைப் பொழிந்தான்; அவளுடைய அணிகலன்களைத் தானே அவளுக்குத் திருத்தி அணிவித்தான்; அவளுடைய நலங்களை எல்லாம் உளங்கனிந்து பாராட்டினன். சுருங்கக் கூறின் அதற்குமுன் அவன் அத்துணை அன்பும் பரிவும் அவள்பால் செலுத்தியதில்லை எனலாம். இது அவளுக்கு ஐயத்தை விளைவித்தது. தன்னைப் பிரியும்பொருட்டே அவன் தன்பால் அளவுமீறி அன்பைப் பொழிவதாக அவள் உணர்ந்தாள். அவள் உள்ளத்தில் துன்பம் நிறைந்தது. தன் ஆருயிர்த் துணைவன் தன்னைப் பிரிந்தால் தான் தனித்திருக்க வேண்டுமல்லவா? இத்தனிமை உணர்ச்சி அவளுக்கு வருத்தத்தை இன்னும் மிகுவித்தது. அவளைப் பல அன்பு மொழிகளால் காதலன் அழைத்தான். அவ் இன்மொழிகள் ஒன்றும் அவள் செவியில் விழவில்லை. அவள் உள்ள முழுதும் அப்போது பிரிவு உணர்ச்சியால் ஏற்பட்ட துன்பமே குடிகொண்டிருந்தது. எனவே வேறென்றுக்கும் அங்கு இடமில்லை. தன் அருமைக் குழந்தையை அவள் ஆர்வத்தோடு எடுத்துத் தன் மார்பில் அணைத்துக் கொண்டு காதலனை மெல்ல அணுகினள். துன்ப மிகுதியால் அவள் முகம் தரையை நோக்கி இருந்தது. தன் அழகுமிக்க பாதத்தின் கட்டை விரலால் அவள் தரையைக் கீறிக் கொண்டே மெல்ல மெல்ல தன் காதலனைக் குறுகினள். துன்பம் மிகுந்த ஓர் இளம் பெண் தரையைக் கட்டை விரலால் கீறுவது இயல்பே. இங்ஙனம் காதலனை அணுகிய காரிகை துன்பம் நிறைந்த முகத்தோடு அவன்முன் நிற்கவில்லை. காதலன் பொருள் ஈட்டும் நற்செயலுக்காகப் பிரியும் போது காதலி வாடிய முகத்தோடு விடைதருவது பண்புடைமையாகாது. ஆதலால் காதலி தன் கூரிய பற்கள் அழகுடன் விளங்கும் படியாகப் புன்முறுவல் பூத்து அவன் முன் நின்றாள். ஆனல் அப்புன்முறுவல் உண்மையானதன்று; அவள் வலிந்து வரவழைத்ததுவே.

இக்காட்சியினைப் பாலை பாடிய பெருங்கடுங்கோ என்ற புலவர் பெருந்தகை மிக அழகாகச் சித்தரித்துள்ளார்:

''அளிநிலை பொருஅ(து)
அமரிய முகத்தள்
விளிநிலை கேளாள்
தமியள் மென்மெல
நலமிகு சேவடி
நிலம்வடுக் கொளாஅக்
குறுக வந்துதன்
கூரெயிறு தோன்ற
வறிதகத் தெழுந்த
வாயல் முறுவலள்......''

என்பன அப்புலவர் பெருமானின் சுவைபொருந்திய செம்மொழிகளாம்.

காதலியின் வருத்தத்திற்குக் காரணம் தன் காதலன் தன்னைப் பிரியின் தான் தனித் திருக்கவேண்டுமே என்பது மட்டுமன்று. அவன் தன்னைப் பிரிந்து பாலை நிலத்து வழியே செல்லும்போது அவனுக்குப் பல துன்பங்கள் நேரக் கூடுமன்றே? தனக்கு எவ்வளவு துன்பங்கள் நேரினும் காதலி அவற்றைப் பொறுத்துக் கொள்வாள். ஆனல் தன் அருமைக் காதலனுக்கு ஒரு சிறு துன்பம் எய்தினும் அதை அவள் பொறுக்கமாட்டாள். இஃது அரிய கற்பின் திறம். இப்போது தன் இன்னுயிர்த் துணைவன் தன்னைப் பிரிந்து பாலை நிலத்துச் செல்வுழி அவனுக்கு ஏற்படக்கூடிய பல ஏதங்களைத் தலைவி நினைந்து நொந்தனள். தன் தலைவன் நடத்தற்குரிய பாலை நிலம் உயர்ந்த ஓமை மரங்கள் நிறைந்த ஒரு காடு. அக் காட்டில் பல நெல்லி மரங்கள் உண்டு. அம் மரங்களிலுள்ள பளிங்கு போன்ற நெல்லிக்

காய்கள் பல உயர்ந்த பாறைகள் மீது உதிர்ந்திருக்கும். இங்ஙனம் உதிர்ந்திருக்கும் நெல்லிக் காய்கள் சிறுவர்கள் விளையாடுதற்காக ஈட்டிவைத்திருக்கும் வட்டுக் காய்களைப்போல் காட்சியளிக்கும். கடும் வெயிலினால் வழியிலுள்ள பாறைகள் யாவும் சூடேறி அனல் காந்தும். இத்தகைய வழியில் சிறு சிறு பரல் கற்கள் நிறைந்திருக்கும். அக்கற்களின் நுனிகள் தீட்டப்பட்டவை போல் கூர்மையுடையவையாய் வழிச் செல்வோர் கால் விரல்களைச் சிதைக்கும். இத்துணை ஏதம் நிறைந்த வழியினைத் தன் தலைவன் கடந்து செல்ல வேண்டுமே என்று தலைவி நினைத்ததும் அவள் மனம் சொல்லொணா வேதனையுற்றது. அவன் பொருள் ஈட்டுதலாகிய நற்செயலின் பொருட்டுப் பிரியினும் அப் பிரிவுக்கு அவள் மனம் உடன்படவில்லை. இவ்வேதனை உள்ளத்தோடு அவள் அவன் முன் நின்றாள். அப்போது அவளுக்கு அவன் தன்னை முதன் முதலில் சந்தித்துக் கூடியபோது கூறிய சூளுறவு நினைவுக்கு வந்தது. ''என் இன்னுயிரே யான் இனி உன்னைப் பிரியேன். பிரிந்தால் உயிர் தரியேன்'' என்பது அவன் சூளுரை அன்றோ? இங்ஙனம் சூளுறவு செய்தவன் இப்போது பிரிவது அறமாகாது என்று அவள் கருதினாள். ஆனால் அவனிடம் அதை அவள் கூறவில்லை. தன் காதலன் செய்யும் தவறைக் காதலி வெளிப்படையாகக் கூறி அவனுக்கு உணர்த்துவது நாகரிகமாகாது. பண்புடைய ஒரு பெண் அதைக் குறிப்பாகவே உணர்த்த விரும்புவாள். எனவே தலைவன் தன்னை இப்போது பிரிவது அறமாகாது என்ற தன் கருத்து அவள் முகத்தில் தேங்கிக் கிடந்தது. தலைவன் அதை உணர்ந்தான்; இக் கருத்தினைப் பின்வரும் அடிகளால் புலவர் பெருங்கடுங்கோ திறம்படத் தீட்டியுள்ளார்:

''கண்ணிய(து) உணரா
அளவை யொண்ணுதல்
வினைதலைப் படுதல்
செல்லா நினைவுடன்
முளிந்த ஓமை
முதையலங் காட்டுப்
பனிங்கத் தன்ன
பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை
ஈட்டுவட் டேய்ப்ப
உதிர்வன படூஉம்
கதிர்தெறு கவாஅன்
மாய்த்த போல
மழுகுநுனை தோற்றிப்
பாத்தி யன்ன
குடுமிக் கூர்ங்கல்
விரல்நுதி சிதைக்கும்
நிரை நிலை அதர
பரன் முரம் பாகிய
பயமில் கானம்
இறப்ப என்னுதி
ஈயின் அறத்தாறு
அன்றென மொழிந்த
தொன்றுபடு கிளவி
அன்ன வாக
என்னுநள் போல
முன்னம் காட்டி
முகத்தின் உரையா......''

இங்ஙனம் வேதனை நிறைந்தவளாய்த் தன் தலைவன் முன் அசையாமல் நின்றாள் தலைவி. அவள் அங்ஙனம் அசையாமல் நின்றிருந்த காட்சி, கிழியில் தீட்டப்பெற்ற ஓர் அழகிய பாவையின் ஓவியம் போன்று விளங்கியது. தலைவன் தன்னைப் பிரிதலாகிய ஒரே எண்ணமே அவள் உள்ளத்தில் அப்போது குடிகொண்டிருந்தது. அப் பிரிவெண்ணம் அவள் வருத்தத்தை

மேலும் மேலும் மிகுவித்தது; அவள் கண்களில் நீர் பெருகிற்று. ஆனால் அந்நீரைக் கண்களினின்று வெளிப்படுத்தாமல் அடக்கிக் கொண்டாள். தன் அருமைத் தலைவன் பிரியும்போது தான் கண்ணீரும் கம்பலையுமாய் அவனுக்குக் காட்சியளிப்பது கூடாதல்லவா? ஆனால் துன்பத்தைத் தாங்க இயலாது அவள் பெருமூச் செறிந்தாள். துன்ப மிகுதியால் அப்பெரு மூச்சு மிகவும் வெப்பமாக இருந்தது. தன் அருமைக் குழந்தையைத் தன் மார்பின்கண் அவள் அணைத்திருந்தாள் அல்லவா? அக்குழந்தை முடியின்கண் செங்கழுநீர் மலர்மாலை அணியப்பட்டிருந்தது. தலைவியின் பெருமூச்சு அம் மலர் மாலையில் பட்டது. உடனே அம் மூச்சின் வெப்பத்தால் அம்மாலை நிறமிழந்து கரிந்து போயிற்று. இதைக் காதலன் கண்டான்; தலைவியின் அளக்கலாகா அருந்துயரை உணர்ந்தான். தான் அவள் பக்கலில் இருக்கும்போதே இத்துணை வருத்தமெய்தும் தலைவி, அவனைப் பிரியின் அவள் பிழைத்தல் அரிது என்று தலைவன் எண்ணினான்; எண்ணித் தான் பிரிவதில்லை என்று உறுதி கொண்டான், இதை

"ஓவச் செய்தியின்
ஒன்றுநினைந் தேற்றிப்
பாவை மாய்த்த
பனிநீர் நோக்கமொடு
ஆகத் தொடுக்கிய
புதல்வன் புன்தலைத்
தூநீர் பயந்த
துணையமை பிணையல்
மோயினள் உயிர்த்த
காலை மாமலர்
மணியுரு இழந்த
அணியழி தோற்றம்
கண்டே கடிந்தனம்
செலவே ஒண்தொடி
உழையம் ஆகவும்
இனைவோள்
பிழையலள் மாதோ
பிரிதும் நாம் எனினே"

—அகநானூறு 5.

என்று சுவை நிரம்பப் பாடுகிறார் புலவர் பெருங்கடுங்கோ. தலைவியின் பெருமூச்சுத் தலைவன் பொருள் பொருட்டுப் பிரியும் பிரிவைத் தடுக்க வல்லதாயின் உண்மைக் காதலின் பெற்றியை என்னென்று போற்றுவது? உலகம் வாழ இத்தகைய தூய காதல் யாண்டும் நிலைத்து நிலவுவதாக!

—இ—



பாவை

விளக்கு

★

படங்கள்:

திரு. ஏ. வி. ராமமூர்த்தி.

கடற் செல்வம்

திரு. ஆர். இருசப்பிள்ளை, B. A. (Hons.)

*

அகன்ற காடுகளாக, உயர்ந்த மலைகளாகப் பரந்த கடலாக இயற்கையன்னையானவள் தோன்றுகின்றாள். அவ்வன்னை அளிக்கும் பொருள்கள் எண்ணற்கரியன. நில அன்னையின் செல்வத்தின் சேமிப்பு இடம் கடல் எனில் யார்க்கும் வியப்பாகும். கடலிடத்துப் பொருந்தியுள்ள பொருள்கள் எண்ணிலடங்காதவை. அவற்றுள் ஒரு சிலவற்றை எடுத்துக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

மனிதன் சுவையோடு உணவினை ஆக்கவும், ஊறுகாய் போன்றவைகளைக் கெடாது பாதுகாக்கவும் பயன்படுத்தும் பொருள் உப்பு. அவ்வுப்பின் அளவினை ஒருவாறு கணக்கிட்டுள்ளனர்; ஒரு கன கல் (1 cubic mile) அளவுள்ள கடல் நீரில் 166 நூறாயிரம் டன் எடையுள்ள உப்புக் கரைந்துள்ளது என்று கூறுகின்றனர். இத்துணை யளவு உப்பினை அக்கடலில் கொண்டு சேர்த்தவர் யார்? அதுவும் இயற்கையன்னையால் ஆன ஒன்றே. ஆண்டுதோறும் மழை பெய்து நீர் ஓடிக் கடலொடு கலக்கிறது. அப்படி ஓடிவரும் நீர் மலைமீது ஓடி, மணலிற்பாய்ந்து, கல் மேல் தாவி மலையிலும் மண்ணிலும் படிந்துள்ள உப்பினை உடன்கொண்டு சென்று கடலிற் சேர்கின்றது. இப்படி ஆண்டுதோறும் கடலில் கலக்கும் தண்ணீர் 6,500 கன கல் அளவு என ஒருவாறு கணக்கிட்டுள்ளனர்.

கதிரவன் வெப்பம் மனிதனுக்கு எங்கெல்லாம் உறுதுணையா யமைகின்றதோ அங்கெல்லாம் கடல் நீரினைத் தேக்கி நீர் ஆவியாகச் சென்றபின்னர் படிந்துள்ள உப்பினைப் பிரித்து எடுக்கின்றனர். பரங்கிப்பேட்டை, அறந்தாங்கி, தூத்துக்குடி முதலிய இடங்கட்குச் சென்றால் இதனை நன்கு அறிவர். கட்சுத்தீவின் அருகில் ரான் (Rann) என்பது ஒரு சமவெளி நிலப் பகுதியாகும். அதன் பரப்பளவு சுமாராக 11,100 சதுர கற்கள் ஆகும். தென்மேற்குப் பருவக்காற்றுக் காலங்களில் கடல் நிரினை வாய்க்கால்வழி கொண்டுவந்து இப் பகுதியில் தேக்குவர். வெப்பமிக்க வடகிழக்குப் பருவக்காற்றுக் காலங்களில் தேக்கிய நீர் ஆவியாகும்; நீர் ஆவியான பின்பு அடியில் உப்புப்படியும்; படிந்த உப்பினை வாரி எடுப்பர். அப்படிப் படிந்துள்ள உப்பின் ஆழம் பல அடிகள்கூட இருக்கும் எனின் இயற்கையின் துணையால் மனிதன் பெரும் நலன்தான் என்னே!

கடல் நீருள் இன்னும் பல உப்புக்களும் மூலப் பொருள்களும் கலந்துள்ளன. நாம் உணவொடு சேர்த்துக்கொள்ளும் சோடியம் குளோரைடுதான் தலை சிறந்தது என்பதனைக் கண்டோம். அதனுடைய அளவு

77·8 சத விகிதமாகும். அடுத்து வருவது மெக்னீஸியம் குளோரைடு (Magnesium Chloride). அதன் அளவு 10·9 சத விகிதமாகும். மற்றும் மெக்னீசியம் சல்∴பேட் (Magnesium Sulphate), கால்சியம் சல்∴பேட் (Calciam Sulphate), பொட்டாசியம் சல்∴பேட் (Pottasiam Sulphate), முதலான உப்புக்களும் குறிப்பிடத்தக்க அளவில் காணக் கிடக்கின்றன. மற்றைய பொருள்கள் ½ சத விகித அளவே கலந்துள்ளன.

முன்னேற்றம் அடைந்துவிட்டதாகப் பெருமைப்படும் மனிதனாலும் பிரித்தறிய முடியாதவாறு கடல் நீரில் தோன்றியுள்ள பொருள்களைக் கடல்வாழ் விலங்குகளும் செடிகொடிகளும் பிரித்துப் பயனடையும் திறன் பெற்றுள்ளன. கடல்வாழ் ஒரு வகை வியத்தகு உயிரினங்களின் இரத்தத்தில் காணப்படும் 'வெனேடியம்' (Vanadiam) என்ற பொருளைக் கண்ட பின்பே நாம் கடல் நீரில் அவ் வெனேடியத்தின் இருப்பினை அறிய முடிந்தது.

கடலில் கோபால்டும் நிக்கலும் உண்டு. அதனை மனிதனால் பிரித்தறிய முடியாத காலத்திருந்தே கடல்நண்டு கோபால்டினையும் (Cobalt) கடல் வாழ் நத்தை நிக்கலினையும் (Nickel) பிரித்துப் பயன்படுத்தி வந்துள்ளன. அண்மையில்தான் நம்மால் அதனை அறிய முடிந்தது. செம்பும் கடல் நீரில் காணப்படுகிறது. அதனுடைய இருப்பு மிக மிகக் குறைவு; கோடிக்கு ஒரு பங்கு எனக்கூடச் சொல்லி விடலாம். ஆயினும் மனித இரத்தத்தில் இரும்பின் இருப்பு எத்தகை நலன் விளைத்து வருகிறதோ அத்தகைய நலனைச் செம்பானது கடல் வாழ் நண்டுகளின் இரத்தத்தில் உண்டுபண்ணி வருகிறது.

இப்படி இதுவரை கடல் நீரில் ஐம்பது பொருள்கள் உள்ளதாகக் கண்டுபிடித்துள்ளனர். அவற்றுள் மனிதனது உள்ளத்தை, எண்ணத்தை, அவாவினை மிகுதியாகத் தூண்டிவிட்ட பொருள் தங்கமாகும். உலகின் மாபெருங் கடல்களிலெல்லாம் கலந்திருக்கும் தங்கத்தினைப் பிரித்து எடுத்தால் ஒவ்வொரு மனிதனும் நூறுயிரக் கணக்கான ரூபாய்களின் உரிமையாளனாக முடியும் எனக் கடக்கிடப்பட்டுள்ளது — தண்ணீரிலிருந்து தங்கம் கிடைப்பதாயின் அவாவொடு அனைவரும் நோக்குதல் இயல்பு. ஆனால் அதனைப் பிரித்து எடுப்பது எங்ஙனம்?

முதன் முதலில் இதனைப் பிரித்து எடுக்கும் முயற்சியில் உறுதியோடு தலைப்பட்டவர் ஜெர்மன் நாட்டு இரசாயனப் புலவர் பிரிட்ஸ்∴கேபர் (Fritz Haber) ஆவர். ∴கேபர் அவர்கள் ஜெர்மன் நாட்டிற்கு முதல் உலகப்போரில் ஏற்பட்ட கடனை இவ்வகையிலே தொலைத்து விடலாம் என்ற எண்ணத்தினைக் கொண்டு முயன்றார். 1924-லிருந்து 1928-வரை அட்லாண்டிக் பெருங் கடலிலே ஆய்வு நடத்தப்பட்டு முடிவும் அறியப்பட்டது. முடிவில் தங்கம் கிடைத்தது. ஆனால்......? சுண்டைக்காய் காற்பணம் சுமைக்கூலி முக்காற்பணம் என்பது போல் ஆயிற்று. உழைப்பு மிகுதி. பலன் குறைவு. கிடைத்த தங்கத்தின் மதிப்பைக் காட்டிலும் அதனைப் பெற எடுத்த முயற்சியின் மதிப்பு மிக மிக மிகுதி. அக் கணக்கினை ஒருவாறு காண்போம். ஒரு கன கல் அளவுள்ள தண்ணீரை மூலப் பொருளாகக் கொண்டு தங்கத்தினைப் பிரித்தெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டால் $ 9,30,00,000 தங்கமும் $ 85,00,000 வெள்ளியும் கிடைக்குமாம். மிகப் பெரிய அளவுதான்; என்ன செய்வது? அதற்காகும் முயற்சியினையும் காண்போம். இவ்வளவு அளவுள்ள தங்கத்தினையும் வெள்ளியையும் எடுக்க, 500 சதுர அடி பரப்பும் 5 அடி ஆழமும் உள்ள 200 தொட்டிகளை ஓராண்டுக் காலத்திற்கு நாள் ஒன்றுக்கு இரண்டு தடவை நிரப்பி வெளிவிட வேண்டும் என்றால் முயற்சியின் கடினத்

தினை நன்கு உணரமுடியும். இது மனிதனுடைய திறமைக்குச் சற்று உயரியதாகும். ஆகையால் இந்த நிலை கைவிடப்பட்டுள்ளது.

கடல் நீரிலே பெட்ரோல் உண்டு. ஆயினும் அதனைப் பிரித்தெடுக்கும் முயற்சியின் அளவிலும் கிடைக்கும் பயன் மிகக் குறைவாக இருந்தமையின் அதனையும் கைவிட்டுள்ளார்கள். ஆனாலும் மனித ஆற்றல் வளர்ந்து வரும் ஒன்று. ஒருவேளை எதிர்காலத்தில் இதுவும் இயலும் ஒன்றாக ஆயினும் வியப்பில்லை.

வாணிபத்திற்கு வேண்டிய அளவு அயோடின் (Iodine) என்ற பொருள் கடலாலேயே நமக்குக் கிடைக்கின்றது. ஆயினும் கடல் நீரைக் கொண்டு அயோடின் ஆய்வு நடத்தினால் சில சமயங்களில் வெற்றிகூட இல்லாமல் போவது முற் கூறிய கருத்துக்கு மாறுபாடாகத் தோன்றுகின்றதன்றோ? ஆனால் கடல்நீரைக் கொண்டு ஆயாது கடலிற் காணப்படும் கடற்பாசி, பவளம், கடற்பஞ்சு முதலியவைகளைக் கொண்டு ஆராய்ந்தால் அயோடினது இருப்பு வெள்ளம். வெள்ளம் தற்போது வடசில்லியில் கிடைக்கும் சோடா நைட்ரேட் என்ற உப்பிலிருந்து அயோடின் பிரித் தெடுக்கப்படுகிறது.

புரோமின் (Bromine) என்ற பொருளோ கடலின் உரிமைச் சொத்து. 99 சதவிகித புரோமின் கடல்நீரிலிருந்தே கிடைக்கின்றது. அதுவும் இறந்த கடலிலே (Dead Sea) மிகுதியான அளவில் புரோமின் கிடைக்கின்றது. அதனுடைய அளவு 850 நூறாயிரம் டன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

மெக்னீசியமும் (Magnesium) கடல் செல்வமே. கடல்நீரை இரசாயனப் பொருள்களோடு சேர்த்து ஆராய்ச்சி நடத்தி மெக்னீசியத்தினைப் பெறுகின்றனர். ஒரு கன கல் அளவு கடல் நீரிலே 4 நூறாயிரம் டன் எடையுள்ள மெக்னீசியம் கிடைப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. 1941-லிருந்து நேரடியான முறையிலே கடல் நீரினை ஆய்வுநடத்தி பெருமளவிலே மெக்னீசியம் பெற்றுவருகின்றனர். சென்ற உலக யுத்தத்திலே வானில் பறக்கும் வான வூர்திகள் செய்யும் தொழிற்சாலைகளில் மெக்னீசியத்தின் பயன் மிகவும் உயர்ந்ததாக இருந்தது. அதற்குக் கடல் நீர் பெருந் துணை புரிந்தது. அமெரிக்க நாட்டில் செய்யப்படும் ஒவ்வொரு வான ஊர்திக்கும் அரை டன் மக்னீசியம் தேவைப்பட்டது. மெக்னீசியத்தின் பயன் மிகப்பல. அச்சு 'மை' செய்யவும், மருந்துகள் பண்ணவும் பற் பசை ஆக்கவும் வெப்ப எதிரியாகவும் பயன்படுகின்றது.

இப்படி எண்ணிலடங்கா முறையில் பயன்படும் கடலை நோக்கி வாழ்க எனக் கூறுவதைவிட மனிதனால் அக்கடலுக்கு என்ன கைமாறு செய்ய இயலும்?

கம்பரது கவி

"கம்பருடைய கவிகளுக்குத் தனியான ஒரு சுவை உண்டு. செய்யுளினங்கள் பூர்வமானவைதான். ஆனால், இதய பாவத்தை உட்கொண்ட செய்யுள்கள் அடியெடுத்து வைக்கும்போது, தனியான கதிநயங்களைக் காண்கிறோம்... கவிக்கு ஏதோ நவரசம் என்கிறார்கள்; ஆனால், கம்பருடைய கவிகளைப் பார்க்கும்போது, ஆயிரக் கணக்கான ரசங்கள் உண்டென்று சொல்லவேண்டியிருக்கிறது.

—டி. கே. சி.

தமிழில்:
அகிலன்

கடவுளின் சிருஷ்டி ரகசியங்கள் எல்லாமே தமக்குத் தெளிவாய்த் தெரிந்துவிட்டதாக மரியசூசைச் சாமியாருக்கு ஒரு நம்பிக்கை. மரியசூசை உயரமாக ஒல்லியாக இருப்பார். அளவுக்கு மீறிய மத உணர்ச்சி உள்ளவர். தம்மைப்பற்றி மிகப் பெருமையாக நினைப்பார். ஆனால் ஒருகாலும் நியாயத்திற்கு விரோதமாய் நடக்காத நல்ல மனிதர்.

சாமியாரின் நம்பிக்கைகள் அசைக்க முடியாதவை. தாம் கடவுளை முற்றும் புரிந்துகொண்டதாகவும், கடவுளின் ஆசைகள், நோக்கங்கள், லீலா விநோதங்கள் இவற்றில் தமக்குத் தெரியாதது எதுவுமில்லை என்பதும் அவர் எண்ணம். கர்த்தரின் உள்ளத்தையே ஊடுருவிக் கண்டுவிட்டதாகக் கருதுபவர்.

கிராமத்திலுள்ள மாதா கோயில் தோட்டத்தில் குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டே மரியசூசை யோசனை செய்வார்: 'கடவுள், ஏன் அதைப் படைத்தார்?'

பிறகு தாமே கடவுளின் நிலையில் இருந்துகொண்டு தாம் கேட்ட கேள்வியை அலசி ஆராய்ச்சி செய்து விடையும் கண்டுபிடிப்பார். பயபக்தியோடு கண்ணை மூடிக்கொண்டு 'பரம பிதாவே! உமது படைப்பின் மகத்துவம் யாரே அறிவார்!' என்று தாழ்மையுடன் விட்டுக் கொடுப்பவர் அவரல்லர். 'நான் கடவுளின் சேவகன். படைப்பின் ரகசியம் எனக்குத் தெரியவேண்டும். தெரியாவிட்டால் கண்டுபிடிக்க வேண்டியது என் வேலை.'

இயற்கையின் செயல்கள் எல்லாமே பகுத்தறிவுக்குக்கட்டுப்பட்டவை. ஏன், எதற்காக என்கிற கேள்விகளைக் கேட்டு அவரிடம் தப்பமுடியாது. பளீர் பளீரென்று பதில்



துருவ நட்சத்திரம்

எப்போதுமே இடம் பெயராமல் இருப்பதாகக் காணுகின்றோம். மாலுமிகள் திசை தப்பிப் போனால் துருவ நட்சத்திரத்தைக் கொண்டு வடதிசையைக் கண்டுகொண்டனர் என்று பார்க்கிறோம். துருவ நட்சத்திரத்துக்கு இந்தச் சிறப்புக்கள் வந்தது எப்படி? நில உருண்டையின் அச்சு (axis) - க்கு நேராக இருக்கிறது துருவ நட்சத்திரம். உலகம் எப்படிச் சுழன்றாலும் துருவ நட்சத்திரம் உலக அச்சுக்கு நேராகவே இருப்பதால், அதற்கு உதயமும் மறைவும் இல்லை.

திரு. கண்ணபிரான்

‘நெட்டிருப்புப் பாரைக்கு
நெக்குவிடாப் பாறை
பசுமரத்தின் வேருக்கு
நெக்குவிடும்’

சொல்வார். — காலையில் உதய நேரம் உற்சாகமாகக் கண் விழிக்கத் தோன்றுகிறது; பகல் பொழுதின் வெப்பம் பயிர் பச்சைகளுக்கு உயிரூட்டுகிறது; மழை அவற்றுக்கு நீர் பாய்ச்சுகிறது; மாலை நேரம் மாந்தரை நித்திரைக்குத் தயார் செய்யவும், இரவுப் பொழுது நிம்மதியாகத் தூங்குவதற்கும் உதவுகின்றன. இப்படியே மாதங்களும் இளவேனில், கோடை, மாரி, குளிர் என்ற முறையில் மாறி மாறிச் சுழல்கின்றன.

ஆனால் பெண்களிடம் அவருக்கு ஒரே வெறுப்பு; அவரை யறியாத வெறுப்பு— அடிக்கடி அவர் தமக்குள் ஏசுபெருமான் முன்பு ஒருமுறை கூறிய, 'பெண்ணே! உன்னோடு நான் என்ன செய்வது?' என்ற வாக்கியத்தைச் சலிப்போடு சொல்லிக் கொள்வார். இந்த உலகில் பெண்ணைப் படைத்ததற்காகக் கடவுளுக்கே திருப்தியிருக்காது என்பது அவர் முடிவு. 'பெண் பிறவி அசுத்தப் பிறவி! முதல் முதலில் உலகில் தோன்றிய மனிதனை மயக்கிய மாயக்காரி; அன்றிலிருந்து இன்றுவரை அவள் அதே மோசமான வேலையைச் செய்து வருகிறாள். மென்மை, பயங்கரம், ரகசியம், சலனம் இவை எல்லாம் நிறைந்த பொல்லாப் பிராணி!' - பெண்ணின் உடல் அமைப்பை மாத்திரம் அவர் வெறுக்கவில்லை: அந்த அழகான உள்ளப் பாங்கையே வெறுத்தார்.

பெண்மையின் மென்மை அவருக்குள்ளும் சிறிது உறைந்திருப்பதை அவர் அறியாமலில்லை. ஆனால் தம்மை ஒன்றும் அவர்கள் செய்துவிட முடியாது என்ற திடசித்தம். இருந்தாலும் பிற ஆடவரின் காதலுக்காகப் பெண்ணுள்ளம் குறுகுறுப்பதைக் காணும்போது அவருக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது.

இதுதான் சாமியாரின் சித்தாந்தம்: ஆண் மகனை மயக்கவும் சோதனை செய்யவுமே கடவுள் பெண்ணைப் படைத்துவிட்டார். திடீர்த் தாக்குதலை எதிர்பார்க்கும் பாசறைப் போர்வீரனைப்போல எந்த ஆணும் தற்காப்போடும் எச்சரிக்கையோடும் பயத்தோடும் பெண்ணிடம் பழக வேண்டும். ஆண்களை அகப்படச் செய்ய எப்போதும் கண்வலை வீசி, திறந்த இதழ்களும் விரித்த கரங்களுமாய்ப் பெண் பொறிகள் காத்திருக்கின்றன. ஆண் மகனே உஷார்!

மாதா கோயிலைச் சேர்ந்த கன்னிப்பெண்களிடம் மட்டும் அவருக்குக் கொஞ்சம் அனுதாபம் உண்டு. ஆனால் அவர்களையும் அவர் கடுமையாகத்தான் நடத்தினார். என்னதான் புனிதப்படுத்தப்பட்ட இருதயங்களாக இருந்தாலும் அவற்றின் பரிசுத்தமான மென்மையை அவர் கவனிக்காமலிருக்க முடியவில்லை. அந்த மென்மை என்கிற கொடுமைதான் அவருக்குப் பிடிக்காது.

பிரம்மச்சாரிகளான ஆண்களிட மில்லாத ஓர் தனிக் கனிவும், தனிக் குழைவும், தனித் துடிப்பும் பெண்களின் கண்களுக்கு மாத்திரம் எங்கிருந்து வந்தன? ஏசு பெருமானிடம் அவர்கள் செலுத்தும் தூய அன்பில்கூட அந்தப் பெண்மையின் பற்றுதல் மாசுள்ள சிறுமையாய்த் தோன்றுகிறதே. பெண்ணின் அன்பு வெறும் தேக சம்பந்தமானது! பெண்கள் தம்மிடம் பணிந்து நடக்கும்போதும், பக்தியாய்ப் பேசும்போதும், கீழ்நோக்கிப் பயத்துடன் பார்க்கும்போதும் தம் கோபத்துக் கஞ்சிக் கண்ணீர் சிந்தும்போதும், அந்தப் பொல்லாத மென்மை ஏன் வெளிப்படுகிறது?

கன்னி மாடத்தில் பிரார்த்தனைக் கூட்டங்கள் முடிந்து வெளியே வரும்போது, மேலங்கிகளைத் தட்டி விட்டுக்கொண்டு வெகு வேகமாகப் புறப்படுவார். அபாயத்துக் கஞ்சி ஓடுவதுபோ லிருக்கும் அவர் நடை.

84275
0310211K1
NSS

அடுத்த தெருவில் அவருடைய தங்கையின் பெண்ணொருத்தி தன் தாயோடு வசித்துவந்தாள். அவளையும் தூய்மைப் படுத்திக் கன்னிமாடத்தில் சேர்க்க வேண்டுமென்பது அவர் விருப்பம். அவள் நல்ல அழகி; சுட்டித்தனம் நிறைந்த குறும்புக்காரி, சாமியார் அவளிடம் இறைவனின் பெருமையை ஓதும்போது அவள் சிரிப்பாள்; அவர் கோபித்துக் கொள்ளும்போது அவரைப் பற்றிஇழுத்து வேடிக்கையாக முத்தமிடுவாள். அவளுடைய வயது சென்ற மாமா அல்லவா அவர்? சாமியார் அவளிடமிருந்து தம்மை வேண்டா வெறுப்பாக விடுவித்துக்கொள்ளும் பொழுது, அவரை அறியாத ஓர் ஆனந்தம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து விழித்துக்கொள்வதை உணர்வார்.

அடிக்கடி கடவுளைப்பற்றி அவளிடம் பேசினார். வயல் வரப்புகளில் அவளோடு ஒன்றாய் நடந்துபோகும்போது பரமண்டலங்களைப் பற்றித்தான் அவளிடம் பேச்சு. அவள் இதை ஒன்றும் காதில் போட்டுக் கொள்வதில்லை. வானத்தையும் புல் வெளிகளையும், மலர்க் கூட்டத்தையும் ஆனந்தத்தோடு வேடிக்கை பார்த்துக்கொண்டே செல்வாள். சில சமயம் அருகில் பறந்து செல்லும் வண்ணாத்திப் பூச்சியைத் தாவிப் பிடித்துக்கொண்டு ''மாமா, எத்தனை அழகு பாருங்கள்! எனக்கு இதை முத்தமிட வேண்டும்போல் இருக்கிறது'' என்பாள். ஆனால் வண்ணாத்திப் பூச்சியையோ மலர்க் கூட்டத்தையோ இந்த மாதிரிக் குறும்புத் தனமாய் முத்தமிட விரும்பும் பெண்ணுள்ளந்தான் அவருக்கு வேதனையைக் கொடுத்தது. பெண்களுக்கு ஏனோ இம்மாதிரி மெல்லிய ஆசைகள் குபீர்குபீரென்று ஊற்றெடுத்துக் கிளம்புகின்றன! அவருக்குள்ளே வெறுப்பு கோபம் ஆத்திரம் எல்லாம் குமுறத் தொடங்கும்.

ஒரு நாள் முகமெல்லாம் சோப்புத் தடவி அவர் க்ஷவரம் செய்துகொண்டிருக்கும் போது, அவருடைய வேலைக்காரி ஒரு செய்தி சொன்னாள். அவருடைய தங்கை பெண்ணுக்கு யாரோ ஒரு காதலன் இருந்தானாம்!

இதைக் கேட்டவுடன் மரியசூசைக்கு இடி விழுந்தமாதிரி ஆயிற்று. மூச்சுத் திணறிப்போய் பயங்கரமாக நாற்காலியில் சாய்ந்தார். சற்றுநேரம் கழித்த பிறகே சுய நினைவு வந்தது. ''இருக்கவே இருக்காது! பொய் சொல்லாதே!'' என்று வேலைக்காரியின் மீது பாய்ந்தார்.

ஆனால் வேலைக்காரியோ தன் நெஞ்சில் கைவைத்துச் சத்தியம் செய்தாள். ''கடவுளுக்குப் பொதுவாக நான் பொய்சொல்லவில்லை. தினமும்தான் அந்தப் பெண் உங்கள் தங்கை தூங்கிப்போன பிறகு எழுந்து வெளியே போகிறாள். ஆற்றங்கரை ஓரத்தில் அவனும் அவளும் சந்திக்கிறார்கள். நீங்கள் வேண்டுமானாலும் இரவு பத்து மணிக்குமேல் போய்ப் பாருங்கள்'',

க்ஷவரம் செய்வதைப் பாதியில் நிறுத்திவிட்டு, எழுந்து அறைக்குள்ளே குறுக்கும் நெடுக்கும் நடந்தார்; கணத்திற்குக் கணம் சிந்தனைகள் அவரிடம் சூடேறிக்கொண்டிருந்தன. திரும்பவும் கண்ணாடியைப் பார்த்துக் கத்தியை இழுத்தபோது மூன்று இடங்களில் முக வெட்டுக்கள்!

பகல் முழுதும் பல்லைக் கடித்து ஆவேசத்தை அடக்கிக்கொண்டிருந்தார். புனிதமான துறவியின் தூய்மைக்கு எதிராகக் காதல் தன் வலிமையைக் காட்டுகிறதாமே! தம்மை ஒரு தந்தை என்ற ஸ்தானத்திலும்' ஆசிரியர் என்ற பொறுப்பிலும் ஆத்மாவைக் காப்பாற்றும் அறநெறியாளர் என்ற பதவியிலும் வைத்து நிலைமையைச் சீர்தூக்கினார். அற்ப சிறுமி ஒருத்தி திருட்டுத்தனமாய் ஏமாற்றிவிட்டாளே! ஏய்த்துப் பரிகாசத்துக்குள்ளாக்கிவிட்டாளே! - தங்களுக்குப் பிடிக்காத இளைஞனோடு ஓர் பெண் ஓடிப்போனால் அவளுடைய பெற்றோர் எப்படி வருந்துவார்களோ அப்படி வருந்தினார் மரியசூசை.

இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு சற்று நேரம் படிக்க முயன்ருர்; மனம் அதில் ஊன்றவில்லை. நேரம் ஆக ஆகப் பரபரப்பு அவரை ஆட்கொண்டு உலுக்கி எடுத்தது. சரியாகப் பத்துமணி அடித்தவுடன் கையில் கெட்டிப் பிரம்பொன்றை எடுத்துக் கொண்டு எழுந்தார். பிரம்பை நன்ருக வளைத்துப் பார்த்தார். காற்றில் அங்குமிங்கும் கோபமாகச் சுழற்றினர். பல்லைக் கடித்துக்கொண்டு பளீரென்று பக்கத்து நாற்காலியில் வீசினர். நாற்காலி மறுகணமே இரண்டு துண்டாய்த் தரையில் ஒடிந்து விழுந்தது.

வெளியே போவதற்காகக் கதவைத் திறந்தவர் ஏனே பிரமுத்துப்போய் அப்படியே நின்றுவிட்டார். அழகு நிலாவின் ஒளி வெள்ளம் அப்படியே உலகத்தை மெய் மறந்து தழுவிக்கொண்டிருந்தது. எப்போதாவது ஒருமுறை காணக்கூடிய அபூர்வமான நிலவுக் காட்சி!

நிலவின் அழகு அவரது தூய்மையான ஆவியில் கலந்தது கனவு காணும் கவிஞர் நெஞ்சுக்கும் பக்திப் பெருக்கெடுத்தோடும் அவருடைய புனித இருதயத்துக்கும் அப்போது வேற்றுமையே காணேம். மங்கிய நிலவொளியின் மயக்கத்தில் ஆழ்ந்த புறக் காட்சி அவருடைய நெஞ்சையும் திடீரென்று மென்மையாக்கி இளக வைத்தது.

தோட்டத்துப் பாதையில் வரிசையாக கோடிட்டு நின்ற பழ மரங்கள் நிலவில் குளித்துத் தங்கள் நிழல்களைக் கீழே ஒழுங்காய்ப் பரப்பி யிருந்தன. பூங்கொடிகள் வீட்டுச் சுவரேறிக் காற்றில் அசைந்தாடி இன்ப மணத்தைச் சுவாசித்துக்கொண்டிருந்தன. வாசனை நிரம்பிய ஆவி ஒன்று கண்ணுக்குத் தெரியாமல் அந்த நிலவொளியில் அனந்தமாக மிதப்பதுபோல் அவருக்குத் தோன்றியது. மணம் நிறைந்த அந்த மென்காற்றை, குடி வெறியர்கள் மதுக் கிண்ணத்தை உறுஞ்சுவதுபோல் அவர் மனம் கொண்ட மட்டும் உறிஞ்சினர். பிறகு உல்லாசமாக, ஆச்சிரியத்தோடு, மெதுவாக வெளியில் நடந்தார். அந்தப் பெண்ணின் நினைவே அவருக்கு அப்போது எழவில்லை.

கிராமத்தின் ஓரத்திற்கு வந்தவுடன் இயற்கையும் நிலவும் சேர்ந்து களிக்கும் அந்தப் பேரழகைப் பருகி அப்படியே நினைவற்று நின்றுவிட்டார். அந்த நிலவொளியில் ஓர் மென்மை இருந்தது; ஓர் தெளிவான ஏக்கப் பெருமூச்சு இழைந்தது. தவளைக் கூட்டத்தின் ஒன்று சேர்ந்த குரலை அவர் உற்றுக் கேட்டார். நிலவின் கன்னித் தூய்மையைக் களங்கப்படுத்துவது போல் எங்கிருந்தோ ஜோடிக் குயில்கள் ஒன்ருய்க் கூவின. நிலவொளியில் கூவும் குயிலோசை வெறும் நினைவுகளையா எழுப்புகின்றது? இல்லை, அற்புதக் கனவுகளை!

மென்மையான இதயத் துடிப்பை வெளியிடும் அந்தக் குயிலோசை அன்பு முத்தங்களின் எதிரொலி யல்லவா?

சாமியார் மேலே நடந்தார். ஆனல் ஏனே அவரிடம் அந்தப் பழைய துணிவைக் காணேம். சிறிது சிறிதாகக் குறைந்து பின்பு திடீரென்று தைரியமனைத்தும் அவரிடமிருந்து மறைந்துவிட்டது போல் தோன்றியது. கீழே சற்று உட்கார்ந்து நன்ருக யோசனை செய்து கடவுளின் சிருஷ்டி அற்புதங்களை அறிந்து போற்ற விரும்பினர்.

அவருக்கு எதிரில் கிராமத்தின் அந்தச் சிற்ருறு வளைந்து சென்றது. அதன் இரு மருங்கிலும் அடர்த்தியான மரங்கள் வளர்ந்து நிலாவை வடிகட்டி ஆற்றின் மேற் பரப்பில் பொன்னெளியைத் துள்ளச் செய்தன; ஆற்றிற்கு மேல் வெள்ளி நிறப் படலமொன்று தோன்றி நிலாக் கதிரை ஊடுருவிச் சென்று அந்தரத்தில் தொங்கியது.

உட்கார்ந்தபடியே ஆழ்ந்த யோசனையில் முழுகினர். ஏதோ ஒரு தீவிரமான உணர்ச்சி அவரை ஆத்மாவின் அடித்தளத்தையே ஆராய்ச்சி செய்யத் தூண்டியது. திரும்பவும் பழைய சந்தேகம் — அடிக்கடி அவரி

டம் எழும்புமே அந்தச் சந்தேகம், முளைத்து முன்னே நின்றது:— கடவுள் ஏன் இந்த நிலவைப் படைத்தார்?

ஏன் இந்த நிலவு ?

இரவு நேரம், தன்னை மறந்து களைப்பாற வும், ஓய்வு பெறவும், நிம்மதியாய்த் தூங் கவும் மாத்திரம் ஏற்பட்டிருந்தால் கடவுள் ஏன் இந்த பகலைக் காட்டிலும் அழகாக வும், உதய நேரத்தைவிட உயிருள்ளதாக வும், அந்திப் பொழுதைவிட அற்புத மாகவும் படைத்திருக்கிறார்? சூரியனைவிட சந்திரனொளியில் ஏன் ஒரு மயக்கமும், கவிதை உணர்வும், நளின ரகசியமும் கலந்திருக்கின்றன?

இந்த இரவு நேரத்தில் ஏன் இன்னிசைக் குயில்கள் மற்ற உலகத்தைப்போல் நிம்ம தியாய் உறங்கப்போகக்கூடாது? நடுங்கும் மர நிழல்களிருந்து ஏன் இப்படி இன்ப வெறி கொண்டு பாட்டிசைக்கின்றன? உல கத்திற்கு அழகு தரும் இந்த நிலாவின் மெல்லிய முகமூடி இரவுக்கு மட்டிலும் எதற்கு? ஏன் இதயத்தில் இப்போது இத் தனை துடிதுடிப்பு, ஏன் இப்போது ஆத்மா விற்கு இத்தனை உணர்ச்சிப் பெருக்கு, ஏன் உடலுக்குள்ளே இந்தப் புத்துணர்வு!- ஏன் இதெல்லாம்? மனிதன் படுக்கையில் படுத்து உறங்கும் வேளையில், அவன் காண முடியாத இந்தப் பொழுதில், ஏன் இந்த நிகழ்ச்சிகளெல்லாம் நடைபெறு கின்றன? யாருக்காக இப்போது வானத் திலிருந்து இந்தப் புனிதமான கவிதை மழை மௌனமாகத் தரையை நோக்கிப் பாய்கிறது?

சாமியாருக்கு ஒன்றும் சரியாகப் புரிய வில்லை.

அப்போது புதிய காட்சி ஒன்று அவர் கண்ணில் பட்டது. தூரத்து மர நிழல் களின் கீழே ஆற்றங் கரையை ஒட்டினாற் போல் இரு உருவங்கள் ஒன்றாகச் சேர்ந்து நடப்பதுபோலத் தோன்றியது. ஆணும் பெண்ணுமான இளம் ஜோடி அது.

இளைஞன் உயரமாக இருந்தான்; அவ னுடைய வலது கரம் அவன் காதலியின் கழுத்தை வளைத்திருந்தது. அடிக்கடி அவன் அவள் பக்கம் திரும்பி அவளுடைய நெற்றியை முத்தமிட்டான். இதுவரை உயிரற்ற மயக்கத்தில் ஆழ்ந்து கிடந்த அந் தச் சுற்றுப்புற உலகம் திடீரென்று இவர் களது வரவால் புத்துயிர் பெற்றுப் பொங்கி யது. இவர்களுக்காகவே இந்தப் புனிதமான

சூழ்நிலை படைக்கப்பட்டதுபோல் ஒரே பிரமை. அவர்கள் இருவரும் தனித்தனி இரு உயிர்களாகச் சாமியாருக்குத் தென் படவில்லை. ஓருடல்; ஓருயிர்! இந்த அமை தியான இன்ப இரவைக் கடவுள் அவர் களுக்காகத்தான் படைத்துவிட்டார்!

அடிக்கடி சாமியார் கேட்டுக் கொள்ளும் கேள்விக்குப் பதிலாகக் கடவுளே அவர் களைக் கண்முன்னே அனுப்பியதுபோல் தோன்றியது! 'ஏன் இந்த நிலவு?' என்ற கேள்விக்குப் பதிலாக ஆண்டவன் தன் அடியாருக்குச் சொல்லும் நேரடியான பதில் அந்த இளம் காதலர்கள்.

அவர் எழுந்து நின்று பேச்சும் அசைவு மற்று அந்தக் காட்சியைப் பார்த்தார். புனித நூலில் வரும் ஆண்டவனின் அருள் பெற்ற தூய காதலர்களின் காட்சி அவர் மனதில் மிதந்தது. பக்தியும் காத லும் சேர்ந்த புனிதமான கீதங்கள் அவர் நெஞ்சில் மின்னின. உணர்ச்சிப் பெருக் கோடு ஓலமிடும் கவிதைகளின் மென்மை யும் அன்பும் அவரை ஆட்கொண்டன. தமக்குள்ளாகவே அவர் ''கடவுள் மனிதர் களின் காதல் லட்சியத்திற்கு இன்பப் போர்வையாகத்தான் இந்த இரவையும் நிலவையும் படைத்திருப்பார் போலும்'' எனச் சொல்லிக்கொண்டார்.

ஒன்றாக இணைந்து கைகோர்த்துச் செல் லும் காதலர்களுக்கு வழிவிடுவதுபோல் அவர் ஒதுங்கி நின்றார். அந்தக் காதலி வேறு யாருமல்ல; அவருடைய தங்கை மகள். இப்போதுதான் அவருக்குத் தாம் அங்கே வந்து நிற்பது கடவுளின் கட்டளைக் குப் புறம்பானதல்லவா என்ற அச்சம் தலை நீட்டியது. ஆம்: கடவுளே காதலை மன முவந்து அனுமதிக்கிறார்! அதற்காகவே எழில் நிறைந்த இன்பச் சூழ் நிலையை வேறு ஏற்படுத்திக்கொடுத்து, தாமே அதைச் சுற்றிலும் காணாத கண்ணாக விளங்கிக் கண்டு களிக்கிறாரே! என்ன அற்புதம்!

அங்கிருந்து அவர் ஓட்டமும் நடையு மாய்த் திரும்பினார். காதலர்களைத் தண் டிக்க நினைத்த பிரம்பு எங்கோ வழியில் நழுவி விழுந்தது. அவருக்கு ஏதுமே புரிய வில்லை. தாம் நுழைவதற்கு அருகதை யற்ற ஓர் புனிதக் கோயிலுக்குள்ளே, தெரி யாத்தனமாக எட்டிப் பார்த்துவிட்ட உணர்ச்சித் தவிப்போடு, அவர் தம் நடையை எட்டிப் போட்டார்.

வேடிக்கைக் கணக்கு

சபா. குமாரசாமி

தொடர்ச்சியான பல எண்களை, பல வரிசைகளில் நீங்கள் எழுதினுல், அதைப் பார்க்காமலேயே அவற்றின் மொத்தக் கூட்டுத்தொகையை நான் சொல்லிவிடுவேன். ஆச்சரியமாக இல்லையா! ஆனுல், ஒரு நிபந்தனை.

ஒவ்வொரு வரிசையிலு மிருக்கும் முதல் எண்களின் கூட்டுத் தொகையை நீங்கள் சொல்லி, அத்துடன் இத்தனை வரிசைகள், ஒவ்வொரு வரிசையிலும் இத்தனை எண்கள் என்றும் சொல்லிவிடவேண்டும். ஒரு வரிசையில் எத்தனை எண்களை நீங்கள் தொடர்ச்சியாக பயன்படுத்தி இருக்கிறீர்களோ, அத்தனை எண்களையே ஒவ்வொரு வரிசையிலும் பயன்படுத்தவேண்டும். எத்தனை வரிசைகள் வேண்டுமானுலும் எழுதிக்கொள்ளலாம்.

எனது நண்பர் திரு. க. அவர்கள் ஒரு வரிசையில் ஏழு எண்கள் வீதம் நான்கு வரிசைகள் எழுதியிருந்தார். நான்கு வரிசைகளிலும் முதல் எண்களின் கூட்டுத் தொகை 168. எனது நண்பர் 168 என்று சொன்னவுடன், நான் அந்த நான்கு வரிசைகளிலும் உள்ள எண்களின் மொத்தக் கூட்டுத்தொகை 1260 என்று சொன்னேன். அவர் திகைத்துப்போனுர். உண்மையிலேயே அதன் கூட்டுத்தொகை 1260 தான். கீழே உள்ளவை அவர் எழுதிய எண்கள்.

12 +	23 +	15 +	118 =	168
13	24	16	119	
14	25	17	120	
15	26	18	121	
16	27	19	122	
17	28	20	123	
18	29	21	124	
105 +	182 +	126 +	847 =	1260

இந்த நான்கு வரிசைகளிலும் முதல் எண்களின் கூட்டுத் தொகை 168. இதை எனது நண்பர் சொல்ல, நான் இந்த நான்கு வரிசைகளிலும் பயன்படுத்திய மொத்த எண்களின் கூட்டுத் தொகையான 1260 தைச் சொன்னேன்.

இதைப்போன்று ஒரு வரிசையில் எத்தனை எண்கள் வேண்டுமானுலும் எழுதலாம். ஒரு வரிசைக்கு ஐந்து எண்கள் என்ருல், ஒவ்வொரு வரிசையிலும் ஐந்து எண்களையே பயன்படுத்த வேண்டும். எத்தனை வரிசைகள் வேண்டுமானுலும் எழுதிக் கொள்ளலாம்.

விடையைக் கண்டுபிடிக்கும் வழி:

முதல் எண்களின் கூட்டுத் தொகையை ஒரு வரிசைக்கு எத்தனை எண்களோ அந்தத் தொகையால் பெருக்க வேண்டும்.

பெருக்கற் பலனுடன் கீழ்க்கண்டவாறு கூட்டிக்கொள்ள வேண்டும்.

ஒரு வரிசைக்கு 2 எண்கள் என்றால் வரிசை ஒன்றுக்கு 1 வீதம்.

,,	3	,,	3	,,
,,	4	,,	6	,,
,,	5	,,	10	,,
,,	6	,,	15	,,
,,	7	,,	21	,,

இதே மாதிரி ஒரு வரிசைக்கு இத்தனை என்று கண்டு பிடித்து பெருக்கற் பலனுடன் கூட்டிக்கொள்ள வேண்டும். அதுவே விடை யாகும்.

[ஒரு வரிசையில் எத்தனை எண்களோ, அதிலிருந்து ஒன்றைக் கழித்து, அதனுடைய மதிப்பில் பாதியை அந்த வரிசையில் பயன் படுத்திய எண்களால் பெருக்க வேண்டும். இதுவே ஒவ்வொரு வரிசைக்கும் கூட்டவேண்டிய எண்ணாகும்.]

எனது நண்பர் கணக்கில் ஒவ்வொரு வரிசையிலும் 7 எண்களைப் பயன் படுத்தி இருக்கிறார். முதல் எண்களின் கூட்டுத் தொகை 168. முதலில் 168 ஐ 7 ஆல் பெருக்க வேண்டும். பெருக்கற் பலன் $168 \times 7 = 1176$ ஆகும். இதனுடன், $(7-1) \frac{1}{2} \times 7$ வீதம் நான்கு வரிசைகளுக்கும் $(7-1) \frac{1}{2} \times 7 \times 4 = 6 \times \frac{1}{2} \times 7 \times 4 = 84$ ஐக் கூட்ட வேண்டும். $1176 + 84 = 1260$ விடையாகும்.

ஒரு வரிசையில் 10 எண்கள் என்றால், $(10-1) \frac{1}{2} \times 10 = 9 \times \frac{1}{2} \times 10 = 45$ வீதம் ஒவ்வொரு வரிசைக்கும் கூட்டவேண்டும். இதுவே பொதுவழி.

உதாரணமாக:

10 +	15 +	7 +	2 =	34.
11	16	8	3	
12	17	9	4	
13	18	10	5	
14	19	11	6	
60 +	85 +	45 +	20 =	210

இதில் முதல் எண்களின் கூட்டுத் தொகை 34.

எனவே, விடை =

$34 \times 5 = 170$

$(5-1) \frac{1}{2} \times 5 \times 4 = 40$

விடை 210

மேற் கொடுத்த கணக்கில் வரிசைக்கு ஐந்து எண்கள் வீதம், நான்கு வரிசைகள் இருக்கின்றன. முதல் எண்களின் கூட்டுத் தொகை 34. எனவே, விடை 210.

தெரிகின்றதா? நீங்களே இரண்டு மூன்று கணக்குகளை எழுதிப் பாருங்கள். தெளிவாக விளங்கும். பயனுள்ள விளையாட்டு-ஏன்-விளைவிக்கும் ஆட்டமாகும்.

விஞக்களும் விடைகளும்

விஞ்ஞானிகள் தமது முயற்சியினல் பூமி சுழல்வதை நிறுத்த இயலுமா? இயலுமாஞல் கடவுள் என்று ஒருவர் இருக்க முடியுமா?

பூமி கதிரவனைச் சார்ந்தது. தன் சுழற்சியால் கதிரவனின் இழு விசையைச் சமாளித்துத் தனக்குரிய ஒரு பாதையில் அதைச் சுற்றி வருகிறது. பூமியின் சுழற்சி இயற்கையாகவே ஓய்ந்துவந்த போதிலும் இதை நாம் இலகுவில் உணர முடியாது. செயற்கையாக பூமியின் சுழற்சியை ஊக்குவதும் நிறுத்துவதும் இயலும். இதற்கு ஒரே ஒரு வழிதான் புலப்படுகிறது.

பூங்காக்களில் சுழலும் நீர்ப்பீச்சுகளைப் (Fountains) பார்த்திருக்கிருேம். நீர் பீறிடுவதற்கு எதிர்த்திசையில் சுழற்சி ஏற்படுகிறது. சிறுவர் கொளுத்தி விளையாடும் விஷ்ணு சக்கரத்திலும் பொறிகள் கிளம்பும் திசைக்கு மறு திசையில் சக்கரம் சுழல்கிறது. இதே முறையை ஒட்டி, பூமத்திய ரேகையின் மேலுள்ள பல இடங்களில் சமதூரங்களில், ராக்கெட் விமானத்தில் சூடான வாயுக்கள் பீறிடுவது போல மேற்கிலிருந்து கிழக்கு திசை நோக்கிக் கடுமையான வேகத்தில் ஏக காலத்தில் பீறிடும்படியான மாபெரும் அமைப்புகளைப் பூமியோடு உறுதியாகப் பொறுத்த வேண்டும். ராக்கெட் விமானத்தில் பயன்படும் எரிபொருள்களையே உபயோகிக்கலாம்; நம் வசமுள்ள எரிபொருள்கள் அத்தனையும் சேர்த்தாலும் ஒரு சிறு அளவுக்குத்தான் பூமியின் சுழற்சி வேகம் குறைக்கப்படும். அணுச் சக்தியின் துணை நாடிஞல் ஓரளவிற்கு இதைச் சாதிக்கலாம். கடல் நீரையே பீறிடும்படி அமைக்கலாம். ஆனல் இத்தகைய மாபெரும் அமைப்புகளை இயக்க வேண்டிய சக்தி நமக்குக் கட்டுபடி யாகாது. நீரை ஆவியாக்கிப் பீறிடச் செய்வதற்கும் அதிக சக்தி பிடிக்கும்.

பூமியின் சுழற்சி வேகம் பூமத்திய ரேகை அருகே மணிக்குச் சுமார் 1035 மைல்களாகும். சுழற்சி திடீரெனத் தடுக்கப்படும் போது, பூமியின் கதியோடு சுழன்று கொண்டிருக்கும் எல்லாப் பொருள்களுக்கும் அதிர்ச்சி நேரிடும். இதன் விளைவாகப் பெரிய கட்டிடங்கள் சரியாலாம். நில நடுக்கம் ஏற்படும். காற்று மண்டலம், பூமி இவற்றின் வேகத்தில் பேத மேற்பட்டுப் பெரும் புயல்கள் வீசும். இதே போலக் கடல் நீர் நிலத்திலேறி நாடுகளை யழிக்கும். சுருங்கக் கூறிஞல் இது ஒரு விஷப் பரீட்சை.

பூமி தன் பாதையினின்றும் நிலைபிறழ்ந்து சூரியனை நெருங்கிய பாதையை மேற்கொள்ளப்போகும். இதஞல் வெப்பம் மிகும். நாளின் அளவு நீண்டு, ஆண்டின் அளவு குறையும். கால நிலைகளும் பருவங்களும் மிக வேறுபடும். உயிர் வாழ்வு இச் சூழ்நிலைகளைச் சமாளிப்ப தென்பது பெரும்பாடாகிவிடும்.

இயற்கையின் நியதிப்படி உலகம் போய்க்கொண்டிருக்கிறது. அதை மீறி மனிதன் அழிவைத் தேடிக்கொள்ள முடியும் என்பதால் கடவுளைப்பற்றிய பிரச்சினை எழவேண்டிய அவசியமில்லை.

இருள் என்பது என்ன? அதன் இலக்கணங்கள் யாவை?

ஒளி என்பது ஒரு சக்தி; ஒளியற்றது இருள். வெப்பம் ஒரு சக்தி; வெப்பமற்றது குளிர்ச்சி. இருள் என்ற ஒரு சக்தியில்லை; அதே போலக் குளிர் என்றும் ஒரு ஆற்றலில்லை. பனிக் கட்டியின் அருகில் குளிர் உண்டாகிறது என்ருல், சுற்றிலுமுள்ள வெப்பத்தைப் பனிக்கட்டி எடுத்துக்கொள்வதாலேயே குளிர் தோன்றுகிறது.

வெப்பம், மின்சாரம், சுழற்சி முதலிய சக்திகளினின்றும் ஒளிச் சக்தியைப் பெற முடியும். பூமியில் பெறப்படும் எல்லா ஆற்றலுக்கும் ஆதி காரணம் கதிரவன். சக்தி தரும் எரி பொருள்கள் குறைந்து, கதிரவனும் மறைந்து விட்டால் எங்கும் விறைத்துப் போகும் குளிர், எங்கும் இருள், எங்கும் இன்மை மயம்,

—O—

Intelligent WEAVERS NEED BEST QUALITY YARN



OUR YARN

From Counts 20^{s} to 80^{s} (carded) and also 20^{s} to 60^{s} Staple Fibre Yarn suit the best of Weavers.

No. of Spindles installed ... 11,904

No. of Additional Spindles ordered for 6,000

PHONE: 36. SHENCOTTAH. GRAMS: 'BALTEX' SHENCOTTAH. 'BALTEX' COIMBATORE.

THE BALARAMAVARMA TEXTILES LTD.

SHENCOTTAH. (TRAVANCORE-COCHIN STATE)

MANAGING AGENTS:

M/S. KARAYALAR & RANGASWAMY NAIDU SONS CO.

B.P.